# ஆலமரம்

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
55, வெங்கட்நாராயணா சாலை,
தி. நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : ஏப்ரல், 1998
உரிமை : ஆசிரியருக்கு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

விலை : ரூ. 47-00

Pages : 328 + 4
11.6 kg. Cream wove

27911
4347106

ALAMARAM
By : BALAKUMARAN
First Edition : April, 1998

AVAILABLE AT :
THIRUMAGAL NILAYAM
CHENNAI - 600 017

கிடைக்குமிடம் :
திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி. நகர், சென்னை-600 017
Phone : 4342899, Fax : 91-44-4341559

அச்சிட்டோர் : யோகி ராம்சுரத்குமார் பிரிண்டர்ஸ்
13, கஜபதி தெரு, சென்னை-5

சமர்ப்பணம்

என் இனிய நண்பர்
இலக்கிய சகா, பெருமிதமிக்க
பத்திரிகையாளர்
திரு மாலன் அவர்கட்கு.

ஆலமரம்

கல்திரை

வித்யா சுப்ரமணியம்
25/2 வடுகு இடையர் தெரு
மைலாப்பூர்
சென்னை-600 004.

அன்பினிய பாலா,

வீடு, அலுவலகம், குழந்தைகள், எழுத்து என்று ஓயாத பணிகளுக்கிடையில் இந்த ஆலமரத்தின் கீழ் சற்று இளைப்பாற அமர்ந்தேன். ஆலமரத்தின் ஒவ்வொரு இலையாய், விழுதாய், கனியாய் மனம் புகுந்து புறப்பட்ட போது தான் இது வெறும் விருட்சமல்ல என்பது புலப் பட்டது. சடார் சடாரென்று மனிதன் ஒவ்வொரு கதவாய்த் திறந்து மிக மிக உள்ளே ஒளியாய் சூட்சமாய் உறைந்திருக்கும் ஏதோ ஒன்றை தொட்டு மலரச் செய்து குருவாய் அதில் அமர்ந்து உன்னதமான உணர்வுகளை ஏற்படுத்திய போது உச்சியில் சுரந்து உன் நாக்கில் வடியும் அமிர்தத்தை குண்டலினி ஏற்றாமலே சுவைத்து விட்டாற் போலிருந்தது.

வாழ்க்கை என்பது மெல்ல மெல்ல அவிழும் புதிர். வாழ்க்கை பற்றி நான் நிறைய யோசித்திருக்கிறேன். பிறந்த குழந்தைகள் எல்லாமே தெய்வ வடிவம் என்பார் கள். அதற்கு எந்த பேதமும் இல்லை. தெய்வத்தைப் போலவே. எனவே இந்த முதல் நிலையில் தெய்வம் தெய்வமாகவே பிறக்கிறது எனலாம்.

தெய்வத் தன்மை கொண்ட அச்சிசு பல்வேறு பட்ட எண்ணங்களும் குணங்களும் உணர்வுகளும் பெற்று

தெய்வத்தன்மையை மெல்ல மெல்ல தொலைத்து மனிதனாய் வளர்வது இரண்டாம் நிலை. குணங்களின் விகிதாச்சார வேறுபாட்டினைக் கொண்டு சிலரை நல்லோர் என்றும் சிலரை தீயோர் என்றும், சிலரை மிகச் சராசரி மனிதர் என்றும் அழைக்கலாம் அநேகமாய் பெரும்பாலான மனிதர்கள் இந்த இரண்டாம் நிலை தாண்டி அடுத்த நிலை என்ன என்பது பற்றி யோசிப்பதில்லை யோசிக்கும் வெகு சிலரே தன்னை உற்றுப் பார்த்து, தான் யார் என்று அறிய முற்பட்டு தனக்குள் இருக்கும் குப்பைகளை முழுக்க அகற்றி மறுபடியும் தன்னை தெய்வ நிலைக்கு உயர்த்திக் கொள்கின்றனர்.

இப்படி மகா யோகிகளாய் தெய்வத்தின் பிரதிநிதிகளாய் உயர்ந்து ஆன்ம தரிசனம் பெற்றிருப்போர் பலரைக் கண்ட நாடு இது. ஆதிசங்கரர், ராமகிருஷ்ண பரமஹம்சர், அரவிந்தர், விவேகானந்தர், காஞ்சிப் பெரியவர் ரமண மகரிஷி, யோகி ராம்சுரத் குமார் என்று பல பேரை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் பாடகச் சேரி ராமலிங்கம் எனக்கு புதியவர் இதுவரை அறிந்து கொள்ளாததற்காக வெட்கப் பட்டேன். அறிமுகப் படுத்திய உங்களை கை கூப்பி வணங்குகிறேன்.

கேவலம் தெருநாய் தானே என்று இனி இளப்பமாய் பார்க்கத் தோன்றாது. இந்நாவல் படித்த பிறகு நாய்கள் எல்லாரும் நல்லவர்களாய் வாழ்ந்து, சிறு சிறு தவறுகளுக்கு கடன் கழிக்க வந்திருக்கும் ஆத்மாக்கள் என்ற உண்மை என்னை சுளீரென்று தாக்கி திகைக்க வைத்தது. இது போல் தெரியாத உண்மைகள் இன்னும் எத்தனை எத்தனை இருக்கின்றனவோ என்று பதைக்கிறது மனசு. யார் கற்றுத் தருவார்கள்.

பிறந்த சிசுவிற்கு முன்னே நீண்டு கிடக்கும் வாழ்க்கை என்ன தெரியும் அதற்கு? எதையும் ஆரம்பிப்ப



தற்கு முன்னால்பிரம்மிப்புதான் ஆனால் அதனைக் கடந்து நின்று பார்க்கும் போது ச்சட்... இவ்வளவுதானா... இதற்கா பிரம்மித்தோம் என்று தோன்றும் ஆனால் ஆத்ம தரிசனம் என்பது அவ்வளவு சுலபமல்ல என்று தோன்றுகிறது. இதற்கு, மிகுந்த கேள்விகளும், பதில்களும், மனோபலமும் வேண்டும்.

தன்னையறிய நினைப்பவருக்கும், உங்களைத் தெரியாமலேயே நீங்கள் உதவி செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் நாவல் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு கேள்வியை எழுப்பி படிப்பவரை எதற்கோ தயார் செய்து வருகிறது என்பது நிஜம் அப்படித்தான் ஆலமரமும். இனி நாயைப் பார்த்தால் வா பைரவா சாப்பிட வா என்று அழைக்கத் தோன்றும்.

இந்நாவல் படித்து முடித்ததும் ஏதோ ஒரு அமைதி என்னைச் சூழ்ந்தது. எனக்குள் நான் ஆழமாக போய்க் கொண்டிருந்தேன். இப்பிறவியில் நான் இதுவரை செய்திருக்கும் சிறு சிறு குற்றங்கள் என்ன என்று பட்டியல் போட்டுப் பார்க்க, அம்மாடா! அந்த அளவுக்கு பெரும் குற்றம் எதுவும் இதுவரை செய்யவில்லை என்று ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. இனி கண்டிப்பாய் தெரியாமல் கூட தவறு செய்யத் தோன்றாது. மொத்தத்தில் உள்ளுக்குள் ஒரு சந்தோஷம் கலந்த ஆவல் குபுக்கென்று முகிழ்க்கிறது. அடுத்த ஜென்மத்தில் நான் நாயாகப் பிறப்பேனா? பிறந்து என் மிச்ச கடனைத் தீர்ப்பேனா? தீர்க்க வேண்டும்.

அன்புடன்

**வித்யா சுப்பிரமணியம்**
*13-2-98*

அன்பு

வி. சாந்தி, 20—2—98
H-C 8, பெரியார் நகர், ஈரோடு

அன்புள்ள ஐயா,

சுகம்.

பெண்ணாசை—நல்லாருக்கு

மிகவும் எளிமையான நடையிலிருந்து மாறுபட்டு, வெகு ஆழமான கருத்துகளை, வெகு அழகாக சொல்லியிருக்கிறீர்கள்.

மாறி வரும் உலகில் இலக்கியமோ, இதிகாசமோ, புராணமோ மக்களுக்குப் புரிய வேண்டியதில்லை. பாலகுமாரனின் எழுத்துக்கள் புரிந்தால் போதும்.

பவிஷு—அழகாய் வாழ்ந்து, அழகாய் சாவதுதான் பவிஷு.

அது நீயல்லவா? அது நீதானே.

மனம் முழுக்க நிறைந்துவிட்டாய்.

என்றும் அன்புடன்,
வி. சாந்தி.

27911
4347106

# ஆலமரம்

"நாளைக்கு உங்களுக்கெல்லாம் விருந்து...சாப்பிட வந்திருங்க. ஐயா பெரியவரே நீங்களும் வரணும்.

அம்மா உங்களால வர முடியுங்களா. உடம்பு தேவலையாங்கம்மா. நாளைக்கு அவ்வளவு தூரம் உங்களால நடந்து வரமுடியுங்களா? முடியும்...உங்களால முடியும். உங்களோட பத்து வருஷப் பழக்கம் எனக்கு. எம்மேல கொள்ளைப் பிரியம் வச்சிருக்கேள். நீங்க வரலேன்னா விருந்து நல்லாயிருக்காது.

வெய்யிலும், மழையுமா மாறி மாறித் தாக்கறதால கொஞ்சம் சிரமப் படறீங்க. நாளைக்கு மழையுமிருக்காது, வெய்யுலுமிருக்காது. குளு குளுன்னு மந்தாரமா இருக்கும்.

ஒருவேளை வர முடியலைன்னு வச்சுக்கங்க. கவலைப்பட வேணாம், சாதம் குழம்பெல்லாம் அடைச்சின்டு நான் உங்க ஊருக்கு வர்றேன்.

டேய் கருப்பா...இந்த அம்மாவை மெல்ல கூட்டிண்டு வரப் பாரேன். நீ மட்டும் வந்து சேராதே. உனக்கும் வயசாகும். ஞாபகம் வச்சுக்க.

அப்ப நான் வரேன். நாளைக்கு கார்த்தால எட்டு மணிக்கு டாண்னு இலை போட்டுருவேன்.''

அவர் வேஷ்டியை மடித்துக் கொண்டு மேல் துண்டை தலைப்பாகையாக்கிக் கட்டியபடி அறுவடையான வயல் தாண்டி நடந்தார்.

வழியில் அங்கங்கே நின்று இதே விதமான தகவலை உரக்கச் சொன்னார்.

ஊர் மக்கள் அவர் உரக்கப் பேசுவதை வியப்போடு பார்த்தார்கள். அவர் கடந்து போகும் போது கையெடுத்து கும்பிட்டார்கள்,

''ஏங்க யாருக்கு விருந்துன்னு சொல்லிட்டுப்போறாரு இந்த ஆளு...''அந்தப் பகுதிக்கு புதிதாய் வந்தவர் வியப்போடு கேட்டார்.

''ஆளா... அவரையா ஆளுன்னு சொன்ன. அவரு சாமி. சித்த புருஷர்.''

''யாரை சாப்பிடக் கூப்பிடறாரு. மனுஷாளைப் பார்த்து கூப்பிட்ட மாதிரித் தெரியலையே.''

''யாரைக் கூப்பிட்டிருப்பாருன்னு நினைக்கற.''

''காத்து, கருப்பு, பேய், பிசாசு மாதிரி எதுனா கூப்பிட்டு இருப்பாரோ...''

''அவரு உரக்க கூப்பிடுற போது என்னா பார்த்திட்டு இருந்த.''

''அவரையே பார்த்திட்டிருந்தேன்.''

''வேற எதையும் பார்க்கலையோ...''

''இல்லை.''

''ஒண்ணு செய்யுங்க. அவரு கிழக்காலதான் போயிருக்கார். வேட்டிய இறுக்கிக் கட்டிக்கிட்டு அவரு பின்



னாடியே தபதபன்னு போங்க. இதே மாதிரி முச்சந்தி லயோ, நாற்சந்திலயோ நின்னு பேசுவாரு. சுத்தி என்ன நடக்குதுன்னு பாருங்க. அது கண்கொள்ளாக் காட்சி. மனுஷனாப்பிறந்தவன் பார்த்தே ஆகவேண்டிய காட்சி.''

''எதுக்கு நீங்க அவரைப் போய் விரட்டிக்கிட்டு.''

''பார்க்கட்டுங்க. பண்ணையார் போனா, பணக்காரன் போனா பின்னாலேயே போய் பார்க்கறாங்களே. கூத்தாடற பொம்பள, சாமி கும்பிட வந்தா இவங்களும் அவ பின்னாடியே கோயிலுக்குப் போறாங்க. சாமிகூடக் கும்பிடாம அவளையே பார்க்கறாங்க. அந்த பாவமெல்லாம் போகணும்னா இதைப் போய் பார்க்கட்டும்.''

இத்தனை நேரம் கேட்டுக் கொண்டிருந்தவர் விசுக்கென்று எழுந்தார். தபதபவென்று கிழக்கு நோக்கி ஓடினார்.

அந்த ஊருக்குப் பிறகு நாற்சந்தியோ, முச்சந்தியோ வரவே இல்லை. வெகு தூரம் வரை வயற்காடுதான் இருந்தது ஒரு சிறிய தோப்பு இருந்தது. அந்த தோப்புக்குள் அந்த மனிதர் நுழைந்தார்.

அங்கே கண்ட காட்சி அவரைத் திகைக்க] வைத்தது.

கழுத்து வரை வளர்ந்த முடியும், நாற்பது நாள்தாடியுமாய் இருந்த, கிராமத்தில் நின்று விருந்துக்குக் கூப்பிட்ட அந்த மனிதரைச் சுற்றி நாற்பது ஐம்பது நாய்கள் நின்றிருந்தன. ஒற்றை வேட்டியைக் கழுத்திலும், இடுப்பிலும் சுற்றிக் கொண்டிருந்த அந்த மனிதர் ''என்னா'' என்னா'' என்று அந்த நாய்களோடு] பேசிக் கொண்டிருந்தார்.

சின்னச் சின்ன முனகலாய், உறுமலாய், வேகமான வாலாட்டலாய் அந்த நாய்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தன.

முப்பது நாய்களை ஒரு சேர அவர் இதுவரை பார்த்ததேயில்லை. நாய்கள் கூட்டமாய் வசிக்கும் குணமுடையவை அல்ல. எனினும் ஒன்றுக்கொன்று சண்டையிடும் பிராணியாதலால், அவைகள் எப்போதாவதுதான் ஒன்றாக இருக்கும். அப்படி ஒன்றாய் கூடிய நேரத்திலும் கடுமையாய் சண்டையிட்டுக் கொள்ளும். முப்பது நாய்கள் இப்படி அமைதியாய் ஒரு மனிதனைச் சுற்றி இருப்பது வியப்பாய் இருந்தது.

அவர் தொலைவில் இருந்து அந்த மனிதரை, நாய்களை உற்றுப் பார்த்தார். மாந்தோப்புக்குள் இருந்த ஆசாமி சட்டென்று திரும்பினார். வந்தவரை நோக்கி நாய்களுக்கு கை காட்டினார். நாய்கள் உடனே வந்தவரைச் சுற்றிக் கொண்டன. வந்தவர் இதை எதிர்பார்க்கவில்லை. உடம்பு ஒடுக்கி ஒரு பயத்தோடு தன்னைச் சுற்றிக் கொண்ட நாய்களைப் பார்த்தார்.

நாய்கள் வேகமாக வந்தாலும், அவரைத் தொடாது சுற்றி நின்று கொண்டன. முகர்ந்து பார்த்தன, லேசாய் வாலை ஆட்டிவிட்டு மறுபடியும் தோப்புக்குள் நின்றவரிடமே போய்விட்டன.

''நாய் வளர்க்கறீங்களா'' வந்தவர் இருந்தவரைக் கேட்டார்.

ஏதோ கேட்க வேண்டுமே என்ற கேள்வி போல் அது அமைந்தது.

''யார் யாரை வளர்க்கறது...இந்த பூமில இருக்கற எல்லாத்தையும் மேலே ஒருத்தன் வளர்க்கிறான். அழிக்கிறான், மறுபடி வளர்க்கிறான், பெரிய லீலை அது.''

தோப்பில் நின்றவர் பதில் சொன்னார்.

''நீங்க யாருங்க?''

வந்தவர் உள்ளே நின்றவரைக் கேட்டார்.



''நான் ராமலிங்கம், பாடகச்சேரி ராமலிங்கம்.''

''எந்த பாடகச்சேரி, வலங்கைமான் கிட்ட இருக்குங்களே... அந்த பாடகச்சேரியா.''

''ஆமா... நீங்க யாரு.''

''என் பேர் லட்சுமணன்க.''

''என்ன தொழிலு...''

''தொழிலுன்னு ஒண்ணும் இல்லீங்க. நிலம் நீச்சுன்னு வச்சிருந்தோம். குத்தகைக்கு விட்டு நெல்லா, பணமா வாங்கிட்டிருந்தோம். இப்ப விளைச்சலும் சரியில்லை, இருந்தாலும் தர மாட்டேங்கறான். குடியானவங்க முன்ன மாதிரி இல்லீங்க. எதுத்து பேச ஆரம்பிச்சுட்டாங்க.

எம்பொண்ணுக்கு கல்யாணம் வருது. அடுத்த வருஷம்கூட போட்டு கொடுடான்னு கேக்கறேன் முடியாதுன்றான். நிலத்தை வித்துருவேன்னு சொன்னேன். எவன் வாங்க வந்தாலும் பொலி போட்டுருவேன்னு அரிவாளைக் காமிக்கறான். நீயாவது வாங்கிக்கடான்னு எம்பொண்டாட்டி கெஞ்சினா. அடிமாட்டு விலைக்கு கேக்கறான். அதுவும் கொஞ்சம் கொஞ்சமாதான் தருவானாம்.

எங்க தோப்புல ஒருத்தர் ரெண்டு பேர் குடிசை போட்டிருந்து இப்ப நாப்பது குடும்பங்க குடிசை போட்டிட்டுருக்கு.

வாடகை குடுங்கன்னா மாட்டேங்கறான். எங்கப்பா காலத்துல பன்னெண்டு வேலி நிலம் இருந்தது. எங்கப்பாரு எல்லாத்தையும் வித்து முழுங்கிட்டாரு. இப்ப மூணு வேலி நிலம்தான் இருக்கு. அதுவும் எங்களுக்கு பயன்படலை. அடிச்சு புடிச்சு நெல்லு வாங்கிட்டு வந்து அரை வயித்துக் கஞ்சியா சாப்பிடறோம்.''

''உங்க மூதாதையருக்கு என்ன தொழில்.''

''சரியா தெரியலை. வளையல் வியாபாரம்னு சொல்லக் கேள்வி. அரக்கு வளையல்ல கண்ணாடி ஒட்ட வச்சு ஊர் ஊரா வித்துருக்காங்க. இதைச் செய்யறதுக் குன்னே அந்த காலத்துல ஆந்திராவுலேர்ந்து வந்திருக் காங்க.

நான் சொல்றது பதினைஞ்சு தலைமுறைக்கு முன் னாடி. இப்ப அந்த வேலையெல்லாம் தெரியாது. ஏதோ ராணி குடுத்த நிலமும், நாங்களா வாங்கின நிலமுமா நல்லா அனுபவிச்சுட்டு வந்தோம். எங்கப்பாவோட எல்லாம் முடிஞ்சு போச்சு.''

''அது அவ்வளவுதான்.'' பாடகச்சேரி ராமலிங்கம் பிள்ளை உரக்கச் சிரித்தபடி சொன்னார். ''அந்த அனு போகம் முடிஞ்சு போச்சு. ராஜாக்கிட்ட இருந்த நிலம் வியாபாரிக் கிட்ட போய், வியாபாரிக்கிட்ட இருந்த நிலம் குடியானவன்கிட்ட போயிடுச்சு. இது வேளாளன் காலம். அவன் கொட்டமும் அடங்கும்.''

''வேளாளனுக்குப் பிறகு யார் வருவாங்க.''

''பாரு... பாரு... இருந்து பார்த்துட்டு போ. யார் வருவா, யாரு கொடி பறக்கும்னு இருந்து பார்த்து சகல மும் தெரிஞ்சுக்கிட்டு போ.'' மறுபடியும் அந்த பாடகச் சேரி மனிதர் உரக்கச் சிரித்தார்.

''இத்தனி நாய்ங்க ஒன்னா இருக்கறதப் பார்க்க அதிசயமா இருக்குங்க.'' லட்சுமணன் சற்று முன்னே நகர்ந்தார்.

ஒரு நாய் குறுக்கே வந்து அவரை பல் காட்டி சிறுத் தியது.

''அப்பா...அவரை சிறுத்தாதடா அவர் ஒரு நல்ல



மனுஷர்'' அருகில் வந்த நாயோடு அந்தப் பாடகச்சேரி மனிதர் பேசினார். அது உடனே வழிவிட்டது.

''அடடா...நாயா இருந்தாலும் டக்குன்னு சொன்ன பேச்சு கேக்குதுங்களே.''

''அது நாய் இல்லீங்க, இங்க இருக்கறது எதுவுமே நாய் இல்லை.'' அந்த பாடகச்சேரி மனிதர் உரக்கப் பேசினார்.

''அப்ப இவங்கள்ளாம் மனுஷான்னு சொல்றீங் களா.''

''மனுஷாளா இருந்தவங்க.''

''புரியலீங்களே.''

''புல்லு, புழு, பூச்சி, மீன், ஆமை, பறவைன்னு ஒரு வரிசை இருக்கு...கேள்விப்பட்டிருக்கீங்களா.''

''ஆமாங்க. ஒரு உயிரு இப்படி ஒவ்வொரு ஜென் மமா எடுத்து வருதுன்னு சொல்வாங்க.''

''அந்த வரிசைல நாய் இல்லை.''

''ஏங்க...''

''பசு, குரங்கு, மனுஷன்னு போகுமே தவிர நாயா ஒரு ஜென்மம் வராது.''

''புரியலீங்களே.''

''மனுஷனா பொறந்ததுல நல்லவன் அந்த ஜென் மத்துல பண்ண சில கெட்ட காரியங்களால ஒரு பத்து பன்னெண்டு வருஷம் நாயா பொறப்பான். ஒரு கடன் தீர்க்கற மாதிரி பிறவி அது. அதுலயே நல்ல மனுஷன் வீட்டு நாயா பொறக்கமாட்டான். தெரு நாயா பொறப் பான். எங்க வேணா சாப்பிட்டு, எங்க வேணா தூங்கி ஆனந்தமான பொறப்பு அது.''

''வாங்க...இப்படி உட்காருங்க.'' அந்த பாடகச்சேரி மனிதர் லட்சுமணனை அருகே அழைத்து உட்கார வைத்துக் கொண்டார்.

''கருப்பா... கருப்புசாமி இப்படி வா...'' மற்ற எல்லா நாய்களையும் விட உயரமாகவும், வலுவாகவும் இருந்த அந்த நாய் பாடகச்சேரி மனிதரின் எதிரே வந்து நின்றது.

''இவரு கும்பகோணத்துல நல்லபடியா வாழ்ந்தவரு. பட்டு ஜவுளி வியாபாரம் பண்ணிட்டிருந்தாரு. நிறைய தானதருமம் செஞ்சவரு. மாட்டேன்னு சொல்ல மாட்டாரு ஒரு நல்ல விஷயத்துக்கு யார்போய் கேட்டாலும் அள்ளி கொடுக்கற புத்தி. ஆனா எதுனாலயோ பொண்டாட்டி மட்டும் புடிக்காத போயிடுச்சு நாயே நாயேன்னு அவளை எப்பவும் திட்டிட்டு இருந்த இவரு இப்ப நாயா அலைஞ்சுக்கிட்டிருக்காரு. ஆனாலும் பட்டு வாசனை இன்னும் விடலை. இவரு தூங்கற இடத்துல பார்த்தா பட்டு கந்தையா இருக்கும் எச்சல் சோறு சாப்பிடறதேயில்லை. எங்கயாவது யாராவது தட்டு நிறைய சோறு வைக்கறாங்க.

கருப்பும் வெள்ளையுமா இருக்காரே... இவரு கோவில் ஐயரு நல்ல மனுஷன்தான். பட்டை சாதத்தை ஜாதி பார்த்து கொடுப்பாரு. நாலாவது வர்ணம்னா எவ்வளவு கெஞ்சினாலும் கொடுக்க மாட்டாரு. கோவில் பிரசாதம் கொடுக்கக் கூடாதாம். அதான் இந்தப் பிறவில நாயா அலையறாரு.

நாய்க்குப் போட்டாலும் போடுவேனே தவிர உனக்கு போட மாட்டேன் அப்படீன்னு ஒரு நல்ல மனுஷனைப் பார்த்து கத்த, அவன் பசியோட ஹூம்முன்னு ஒரு மூச்சு விட்டான். இவரு சாகற நேரத்துல இவரு சொல்லும், அவனுடைய பெருமூச்சும் ஞாபகத்துக்கு வந்துடுச்சு.



அடடா...அடடா...இப்படி அநியாயமா ஒரு காரியத்தை செஞ்சுட்டமே. மனுஷாளுக்குள்ள ஜாதியிருக்குன்னு முட்டாள்தனமா நம்பிட்டமே...குல தாழ்ச்சி செய்துட்டமே அப்படீன்னு தொந்து அழுதாரு. அப்படியே உயிர் போயிடுச்சு. பதினோராம் நாள் தான் வெள்ளையுமில்லை, கருப்புமில்லை உசத்தியுமில்லை, தாழ்ச்சியுமில்லைன்னு புரிஞ்சுக்கிட்டு போறந்தாரு.''

லட்சுமணன் ஆச்சரியமாய் பாடகச்சேரி சுவாமிகளைப் பார்த்தார்.

''எப்படீங்க இது...எல்லாத்தையும் பக்கத்திலேருந்து பார்த்த மாதிரி சொல்றீங்க.''

''சிலருக்கு சிலது தெரிஞ்சிடும்.''

''கத்துக்கிட்டீங்களா.''

''ஆமா ரெண்டு மூணு ஜென்மமா இதான் பாடம்.''

''புரியலீங்களே.''

''மனுஷான் ஆசைப்படணும். பொறப்புன்னா என்னா அப்படீன்னு தெரிஞ்சுக்க ஆசைப்படணும். எது உண்மை அப்படீன்னு தெரிஞ்சுக்க ஆசைப்படணும். ஆசை எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமா இருக்கோ, அவ்வளவுக்கு அவ்வளவு சீக்கிரமா கத்துக்கலாம். கால் மேலேயே கவனமா இருந்தா உச்சிக்கு சீக்கிரம் சேர்ந்துடலாம்.''

''கால்னா இந்தக் காலா'' லட்சுமணன் தனது வலது காலைத் தொட்டுக் காண்பித்தார்.

''இல்லை. கால்னா மூச்சு. மேலேயே கவனமா இருந்தா மனசு புத்தி எல்லாம் விரிவாயிடும். மனசு புத்தியெல்லாம் விரிவாயிட்டா என்னென்னவோ தெரிய ஆரம்பிச்சிடும்.

''மூச்சு மேலயே கவனமா இருக்கறதுக்கு என்னங்க பண்றது.''

''இது நல்ல கேள்வி. அன்னதானத்துல ஆரம்பிக்க ணும்.''

பாடகச்சேரி மனிதர் கைதட்டி பேசினார்.

''மந்திரம், தியானம், ஜெபம், யாகம் எல்லாத்துக் கும் ஆரம்பம் அன்னதானம், அன்னதானம் செய்யச் செய்ய மூச்சு மேல கவனம் உன்னையறியாது நிக்கும். அன்னதானம்கறது ஆனை விட்டு போடச் சொல்றது இல்லை. ஐயருங்களை விட்டு டான்ஸ் ஆடச் செய்யறது இல்லை. இறுக்கிக் கட்டிக்கிட்டு நீ இறங்கணும்.

தயிர் சோறோ, கதம்ப சோறோ அள்ளி அள்ளி இலைல போடு. அப்ப மனசு சோத்துலயே நிக்கும். சோறு போடறதுலயே நிக்கும். மனசு நின்ன இடம் தான் மூச்சு நின்ன இடம். மூச்சு நிறுத்தற இடம்தான் மனசு ஆடற இடம். மனசுக்கும், மூச்சுக்கும் சம்பந்தத்தைப் புடிச்சிட் டேன்னு வச்சுக்க...நீ ஒண்ணாம் வகுப்பு பாஸ். அடுத்த ஜென்மத்துல அட்டகாசமா பொறப்ப. ஏன்னா நீ சாவற போது உன் மனசு மூச்சு பாக்க ஆரம்பிச்சிடும். மூச்சு நின்னு போன பிறகும் மனசு அந்த உடம்பு கிட்டக்கயே நிக்கும்.''

''அடடா...இதுதானா வாழ்க்கையின் ரகசியம். இது தானா தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம். அப்படின்னு மனசு யோசிச்சு தெளிந்து பூமில இன்னொரு இடத்துக்கு போய் பொறக்கும். உன்னுடையசெயல்களுக்கு தகுந்தாப் போல ஒரு இடத்துல பொறக்கும். உன் செய்கைகளுக்கு தகுந்தாப்போல பத்து வயசோ, பதினைஞ்சு வயசோ டக்குன்னு ஒரு தெளிவு வந்துரும். மூச்சு பாக்கற புத்தி ஏதோ ஒரு வகையில் ஏற்பட்டுடும்.''



''இப்ப நீ ரெண்டாங்கிளாஸ். இந்த வகுப்புல நீ படிக்கிறதைப் பொறுத்து உன்னைச் சுத்தியிருக்கிற விஷ யங்கள் புரிய ஆரம்பிக்கும்.''

''ஐயா எத்தனையாவது வகுப்புங்க'' லட்சுமணன் ஆவலோடு கேட்டார்.

''அது என்னாத்துக்கு...உன்படிப்பை பாரு கண்ணு.''

''நான் போன ஜென்மத்துல என்னங்க.''

''மனுஷாதான்.'

''அப்ப நான் இந்த ஜென்மத்துல நாயல்ல பொறந் திருக்கணும்.''

''நான் எல்லா மனுஷங்களுமா நாயா பொறப்பாங் கன்னு சொன்னேன்.''

' நல்ல மனுஷங்கதான் நாயா பொறப்பாங்கன்னு சொன்னேன். பிறவி இல்லாம போறதுக்கு முன்னாடி கைவிருப்பை கழிச்சிட்டு போறவங்கதான் நாயா பொறப் பாங்கன்னு சொன்னேன்.''

''இவங்களைப் பாருங்க, லட்சுமணன். இந்தம்மா பேரு ராணி. போன ஜென்மத்துலயும் ராணிதான். இப்ப நெய் வியாபாரி வீட்ல இந்தாம்மால வளர்க்கறாங்க. ஒரு நாளும் கட்ட மாட்டாங்க. காலைல அவங்க குடிக் கற கஞ்சிய இவங்களுக்கும் ஊத்தறாங்க. பகல்ல அவங்க சாப்பிடற சாப்பாட்டை இவங்களுக்கும் போடுவாங்க. நல்லா கவனிச்சிங்கன்னா தெரியும். ஒரு தடவை கூட குரைச்சதேயில்லை வெறும் முனகல்தான். எதுவும் கேக்கறதேயில்லை.''

''கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க லட்சும ணன். என்ன அற்புதமான வாழ்க்கை. இந்த நாய் வாழ்க்கை. உழைப்பே இல்லை. வேளா வேளைக்கு

சாப்பிட்டுட்டு சும்மா சுத்தி வர வேண்டியதுதான். அதாவது கர்மாவே இல்லை. சாப்பிடறது. தூங்கறது. ஊர் சுத்த வேண்டியது.''

''இதுக்கெல்லாம் காமம் உண்டுங்களா...காமம் ஒரு வினை இல்லீங்களா.''

''இது நல்ல கேள்வி. காமம் வினை இல்லை. காமத்தினால வினை உண்டு. வரும்போது அனுபவிச்சா எதிலயும் லம்பே இல்லை. அனுபவத்துக்கு ஆளா பறந்து போய், புனைசுருட்டு, அடிதடி ரகளை பண்றபோது தான் வினை வருது.

இந்தம்மா நாலு பேரோட கூடி நாலு தடவை பெத்துட்டாங்க. எல்லாம் போன ஜென்மத்து சம்பந்தம். அப்ப ஆம்பளைய பார்த்து அடடான்னு ஆசைப்பட்டது இப்ப இடுப்பு நோக ஏத்துக்க வேண்டியதாயிடுச்சு. ஆனாலும் ராணி ராணிதான்.

சும்மா கைய தூக்கி ராணிய அடிக்கிற மாதிரி பண்ணுங்க.'' பாடகச்சேரி சுவாமி சொல்ல லட்சுமணன் கை தூக்கினார். ஹொய்... என்று அதட்டினார்

அந்த ராணி மிரட்சியுடன் பின்வாங்கியது. பத்துப் பதினைஞ்சு நாய்கள் உறுமி பல் காட்டி எழுந்தன லட்சுமணனைப் பார்த்து குரைத்தன.

''தமாஷ். தமாஷ்... சும்மா தமாஷ்'' பாடகச்சேரி மனிதர் நாய்களைக் கையமர்த்தினார். அவை அமைதியாயின.

''செட்டிக்காரங்க வீட்ல சாப்பாடு. காவேரிக்கரைல சாப்பாடு கும்பேஸ்வரர் கோயில்ல தூக்கம். சுத்தி காவலுக்குப் பதினைஞ்சு பேர். அடடா...எனக்கு இந்த பொம்பளையப் பார்த்தா பொறாமையா இருக்குய்யா. என்ன சுகமான வாழ்க்கை பாருய்யா.''



''கும்பேஸ்வரர் கோயில்ல ராணி தூங்காது. கோபுரத்துக்குக் கீழே கல்லுத்தரையில படுத்து வானத்தைப் பார்த்து பேசிக்கிட்டிருக்கும். உனக்கும் எனக்கும் இருக்கற கவலைகள் எல்லாம் இதுங்களுக்கு இல்லை. மாடு போல இதைக் கட்டிப் போடறதில்லை. யானை மாதிரி அடக்கி வைக்கிறதில்லை. பூனை மாதிரி இழுத்துப் பிடிக்கிறதில்லை. உடம்புல வேகம், பயமில்லாத குணம், விருப்பப்பட்ட நேரத்துல விருப்பப்பட்ட இடத்துக்குப் போற புத்தி...நமக்குத்தான் நாய்களைப் பார்த்தா அலையறதா தெரியறது. ஆனா அதுங்க சந்தோஷம் கொள்ளை சந்தோஷம். எந்த கல்மிஷமும் இல்லாத சந்தோஷம்.

நல்லவங்களுக்கு நடுவுல இருக்கறது நல்லது இல்லையா லட்சுமணன். அதனாலதான் நான் எப்பவும் நாய்ங்களுக்கு நடுவுலயே இருக்கேன்.''

''ஏங்க ஒரு சந்தேகம்.''

''கேளுங்க லட்சுமணன்.''

''என் பேரு உங்களுக்கு எப்படி தெரிஞ்சுது.''

''என்னைப் பத்தி நீங்க பேசிக்கிட்டிருந்தது கேட்டுது. யாருடா நம்மளைப் பத்தி விசாரிக்கறதுன்னு உத்துப் பார்த்தேன். அப்ப உங்க பேர் தெரிஞ்சுது.''

''இருந்த இடத்துல இருந்தபடியே இதெல்லாம் தெரியுங்களா.''

''தெரியும்.''

''என்னைப் பத்தி வேறென்னங்க தெரியும்.''

''உங்களைப் பத்தி தெரிஞ்சுக்க கேக்கறீங்களா... அல்லது எனக்கு என்னா தெரியும்னு சோதிக்க கேக்கறீங்களா.''

லட்சுமணன் தயங்கினார். ரெண்டுந்தான் என்றார்.

''என்னை சோதிக்காத லட்சுமணா. ஒருவேளை போல ஒருவேளை இருக்காது. உன்னைப் பத்தி நான் தேவைப்பட்டபோது சொல்றேன்.''

''பொழப்புக்கு ஒருவழி சொல்றதா சொன்னீங்க.''

''அதான் சோத்துக்கடை போடுன்னு சொன்னேனே''

''நாங்க வளையல் வியாபாரிங்க. எனக்கு சோத்துக் கடை சரியா வருமா.''

''வளையல் எல்லாம் முடிஞ்சுபோன கதை. விக்கற துக்காக சோறு பண்றபோது தினம் ரெண்டு கவளம் தானமாகவும் கொடுக்கலாமில்லையா. அந்த புண்ணியம் உங்களை ஓஹோன்னு கொண்ணாந்துடும். இருக்கற காசெல்லாம் போட்டு பாத்திர பண்டம் வாங்கி நல்ல சாப்பாடு பிரியமா போடுங்க. அன்னிக்கு ஆக்கின சோறுல முதல் தட்டு தெரு நாயைக் கூப்பிட்டு பைரவரே, பைரவரேன்னு போடுங்க. பலன் ரொம்ப பெரிசா இருக்கும். அன்னிக்கு ராத்திரி வியாபாரம் முடிஞ்சு மிச்சம் மீதிய இலையால வச்சு சாப்பிடறதிடத்துலேர்ந்து கொஞ்சம் தள்ளி இதே மாதிரி இலைய கீழே வச்சு பைரவரே, பைரவரேன்னு கூப்பிடுங்க. நாலு நாள்ள அதுங்க பழகிக்கும்

உன்னுடைய எல்லா ஆசைகளையும் அதுங்க நல்லா புரிஞ்சுக்கும். உன்னைச் சுத்தி இருக்கறவங்க யாரு என்னான்னு தெரிஞ்சுக்கும். உனக்குத் தெரியாமலேயே உனக்கு உதவி செய்ய தெரு நாய்களுக்குத் தெரியும். நீ முதல்ல சோத்துக்கடை ஆரம்பி.

நீ சோத்துக்கடை வச்ச மூணாவது மாசம் அங்க ஒரு மாரியம்மன் கோயில் வரும். மூணு வருஷத்துல அந்த கோயிலுக்கு பெரும் கும்பல் வர ஆரம்பிச்சிடும். நூறு பேர் சாப்பிட்டா மூணு பேருக்கு சாப்பாடு இலவசம்கற கணக்குல சோறு பண்ணி இறக்கு.



''ஆமா...உனக்கு கல்யாண வயசுல புள்ளை இருக்கா னில்ல...''

''ஆமாங்க...தஞ்சாவூர்ல தமிழ் படிக்கிறான்.''

''சபாஷ். புடிச்சு படிக்கிறானோ.''

''ஆமாங்க. வாத்தியாரா போகணும்னு ஆசை அவனுக்கு. எட்டு மைல் தினம் நடந்து போய் படிச்சான். அதனால நம்மஊர்லயே பள்ளிக்கூடம் ஆரம்பிக்கணும்னு அவனுக்கு எண்ணம்.''

''அடடா...நல்ல எண்ணங்கள் தாமதமானாலும் நிச்சயம் நிறைவேறும்.''

''நாங்க பள்ளிக்கூடம் கட்டுவோங்கறீங்களா.''

''பள்ளிக்கூடம் கட்டுவீங்க.''

''சாமி, எனக்குப் புரியலியே.'' லட்சுமணன் கை கூப்பினார்.

பாடகச்சேரி ராமலிங்கம் வாய்விட்டுச் சிரித்தார்.

''சாமின்னு கூப்பிடாதியா. நல்லா இருன்னு யார் சொன்னாலும் நம்மூர் ஆளுங்க கால்ல விழுந்து சாமி யாக்கிடுவாங்க. எப்படியாவது நல்லா இருக்கணும்னு ஆசை. அதுல ஒன்னும் தப்பில்லை. ஆனா நான் ஒன்னும் சாமி இல்லை. ஆசாமிதான்.''

''இல்லீங்க. எங்களுக்கு தெரியாததெல்லாம் சொல் றீங்களே.''

''எனக்குத் தெரிஞ்சு சொல்றேனான்னு தெரிஞ்சுக்க. அதுக்கப்புறம் சாமின்னு கூப்பிடு. இப்ப வெறுமனே ராமலிங்கம்னு கூப்பிடு.''

''இல்லீங்க. எனக்கு மனசு வரலை. நான் சாமின்னே கூப்புடறேன். என்னையும் என் குடும்பத்தையும் ஆசிர் வாதம் பண்ணுங்கய்யா.''

''சாமின்னு கூப்பிட்டுட்டியே... ஆசீர்வாதம் பண்ணாத முடியுமா. ரொம்ப சௌக்கியமா இருப்பே. இப்ப இருக்கற மாதிரி பத்துமடங்கு பெரிய ஆளா இருப்பே. வசதியோட இருப்பே. இப்ப இருக்கறதைவிட வலுவோட இருப்பே. பைரவருங்களை மறந்துடாதே. நாய் தானேன்னு நினைக்காதே. நாம யாரும் நாய்ங்களை உத்துப் பார்த்ததில்லை. அதுங்க அனுபவிக்கிற சந்தோஷத்தைக் கவனிச்சதில்லை.''

''எல்லாம் சரி சாமி. கார்த்திகை மாசம் ஆணும், பொண்ணுமா நடுரோட்டில அசிங்கம் பண்ணிட்டிருக்கும்.''

''டேய்... அது பிரம்மதிலை. மனுஷாளால அப்படி கூட முடியாது. அதைப் போய் அசிங்கம்னு சொல்லாதே.'

''சரிங்கப்பா, இனிமே சொல்லலை. என் புள்ளையப் பத்தி ஏதோ கேட்டீங்களே.''

''அவன் தமிழ் படிச்சுட்டு வந்தவுடனே அவனையும் சோத்துக் கடையிலயே இழுத்து போடு. அவன் வேற ஜாதிப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னா சரின்னு சொல்லு.''

''ஐயோ...எம் பொண்டாட்டிஒத்துக்கமாட்டாளே''

''முதல்ல சிணும்புவா. அப்புறம் சரியாயிடுவா. என் மருமக மாதிரி உண்டான்னு கொண்டடா ஆரம்பிச்சுடுவா. உன் பொண்ணுக்கும் வேற ஜாதி ஆளுங்க முறையா பொண்ணு கேட்டு வருவாங்க. சரின்னு ஒத்துக்க. சோத்துக் கடையும், ஜாதி மாத்தமும் தொடர்ந்து நடக்கும்.

இப்ப போயிட்டு வா. நாம அடிக்கடி பார்ப்போம்.'

அந்த சாமி கைகாட்டிய இடத்துக்கு லட்சுமணன் மனைவியோடு போனார்,



''ரோடே இல்லை. இங்க போய் கடை போடச் சொன்னா...''

''ரோடு வருதாம்.''

''என்னவோ கோயில் இருக்குன்னாரு. அதுவும் காணம்...''

''அதுவும் வருதாம்.''

அவர் கை காட்டிய இடம் தவிர மற்ற இடங்கள் வேலிக்காத்தான் புதராய் இருந்தன. சில இடங்களைத் தாண்டிப் போகக் கூட முடியாதபடி இறுக்கமாய் அந்தச் செடிகள் முளைத்திருந்தன.

''இந்த இடம்தானா. இன்னொரு தடவை கேட்டுக்கங்க.'' மனைவி சந்தேகப்பட அவர் தெளிவாய் இருந்தார்.

மாட்டு வண்டியில் சவுக்கு மரம் ஏற்றி வந்த பந்தல்காரர்கள் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

காட்டுல கொட்டாய் போடறவனை இப்பத்தான் பார்க்கறோம் என்று சொல்லி சிரித்தார்கள்.

அரைநாளில் ஒரு பெரிய கூரையும், தட்டுப் பந்தலும் இறுக்கக் கட்டிக் கொடுத்துவிட்டு போனார்கள்.

இருட்டியபோதுதான் மிகக் கலவரமாய் இருந்தது.

ஆனால் இருள் விழும் சில நேரங்களுக்கு முன்பாக ஆறேழு நாய்கள் வந்து தட்டுப்பந்தல் கீழ் உட்கார்ந்து கொண்டன.

அவருக்கும், மனைவிக்கும் சமைத்த சோற்றில் கால் பகுதியை எடுத்து ஆறாகப் பிரித்து வைக்க வாலை ஆட்டி சாப்பிட்டு விட்டு படுத்துக் கொண்டன.

மறுநாள் லட்சுமணன் மேடை கட்டினார். மண்ணால் அடுப்பு செய்தார். சாப்பிடும் இடத்தை சாணத்தால் மெழுகி மழமழப்பாக்கினார். மற்ற இடத்தை திமிசு போட்டு கெட்டிப் படுத்தினார். பாத்திரங்களும், மளிகை சாமான்களும், மளிகைசாமான்கள் வைக்க மரப் பெட்டிகளும் கொண்டு வந்து இறக்கினார்.

ஜோஸ்யரிடம் நாள் குறித்து வந்து ஊரில் தனக்கு தெரிந்தவருக்கெல்லாம் கடை திறப்பதாகச் சொன்னார்.

இதற்கென வந்திருந்த மகளைக்கூடவே அழைத்து வந்தார். மகளைக் கோலம் போடச் சொன்னார்.

எந்த ஊருக்கும் போகாத வழியில் எந்த பாதையும் சந்திக்காத ஒரு இடத்தில் அந்தக் கடை இருந்தது.

''லட்சுமணா, உனக்கென்னா பைத்தியமா பிடிச்சு போச்சு, ஒரு பழைய கடைய வாங்கி நடத்த மாட்டே... அந்த ராமலிங்கம் பேச்சைக் கேட்டு ஆரம்பிச்சிருக் கியே...அறிவிருக்கா உனக்கு. அவன் திருடனப்பா. அரைப் பைத்தியம். உன்னை ஏமாத்தணும்னு முடிவு பண்ணிட்டான். அவன் நாய்களுக்கு சோறு போட ணும்னு உன்னை கடை திறக்கச் சொல்லியிருக்கான். சோறு மீந்தாதான நாய்க்கு போடுவே. இங்க கடை போட்டா சோறு மீதமாகத்தானே செய்யும். வித்த சோறு கா பங்கு, மீந்த சோறு முக்கா பங்குன்னு வண்ணமா நாயும், தானும் திங்கறதுக்கு ஏற்பாடு பண்ணிட்டான். அப்படியே கடைய வேற இடத்துக்கு மாத்திடு.''

லட்சுமணன் [illegible] முகத்தைப் பார்த்தார்.

''இல்லப்பா, நம்மூர் ஆளுங்க பேசறது சரியில்லை. காரணமில்லாம அப்படி ஒரு ஆள் சொல்லியிருக்க மாட் டார். ஒருத்தர் எத்தனை நாள் ஏமாறுவாங்க. மூணு நாள். இல்லை நாலு நாள். மூணு நாள் சோத்துக்கு



ஒருத்தர் இத்தினி பெரிசா ஏமாத்த முடியுமா. இதே இடத்துல ஓஹோன்னு வியாபாரம் நடந்தா நீ அவருக்கு வாழ்க்கை பூரா சோறு போடமாட்டியா. நான் அவரைப் பார்க்காதயே இவ்வளவு நம்பிக்கையா பேசறேனென்னு பார்க்கறியா. என்னை பார்க்காதயே அவர் என்னைப் பத்தி சொன்னாரே. நான் ஒரு பொண்ணை தேடிக்கிறேன். அவங்க நம்ம ஜாதி இல்லை. ஆனா அவங்க ரொம்ப கெட்டிக்காரங்கபட்டு நூல்காரங்க. அவங்கம்மா வேற ஒரு ஜாதில கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. அதனால இவங்க கல்யாணம் கொஞ்சம் பிரச்சினையாயிடுச்சு. நான் கூட்டிட்டு வரேன் பாக்கறீங்களா.''

''எனக்கு ஒன்னும் இல்லடா. உங்க ஆத்தா என்ன சொல்வாங்களோன்னு ஒரு பயம். ஏற்கனவே சாமியார் பேச்சைக் கேட்டு நான் காசு செலவு பண்ணிட்டேன்னு அவ கோவத்துல இருக்கா. இப்ப போய் சௌராஷ்ட்ரா பொண்ணு பத்தி சொன்னா ஏத்துக்குவாளா.''

''நீங்க ஏத்துக்கிட்டாலும், ஏத்துக்காட்டாலும் நான் ஏத்துக்குவேப்பா.''

''அப்படின்னா துணிஞ்சு இறங்கிடு. அழகா போய் பொண்ணு பாக்கறதுக்கு ஏற்பாடு பண்ணு. உன் தங்கச் சிக்கும் இப்படித்தான் கல்யாணம் ஆவும்னாரு. அத்த சொன்னா அவ இன்னும் கத்துவா.''

''நம்ம புவனாவும் ஒரு ஆளை தேடிக்குதுப்பா. என்னைப் பத்தி நான் சொன்னதும் அதப்பத்தி என்கிட்ட சொல்லிச்சு.''

''என்னடா குண்டைத் தூக்கிப் போடுற.''

''அவரு ஐயரு பையன். போஸ்ட் ஆபீஸ்ல வேலை பாக்கறாருப்பா. அவரு விருப்பத்தை சொல்லியிருக்காரு இது பாக்கலாம்னு சொல்லியிருக்கு. தினம் பார்த்து

ஒரிச்சுக்குவாங்களாம். அதிகமா பேசிக்கறது கூட கிடையாது.''

''இதை எப்படிடா ஊர்ல நின்னு நடத்தறது. ரொம்ப மானக்கேடாச்சேடா.''

''அப்பா நம்ம உறவுக்காரங்கக்கிட்ட ஒரு அஞ்சாயிரம் கடன் கேளு. ஒரு வருஷத்துல அடைச்சிடறேன்னு கேளு. தரானான்னு பாரு. எவனும் தர மாட்டான். இப்படி உதவாதவன் வேறு எது பேசவும் லாயக்கில்லாதவன்.''

''அறுத்துக்கவாடா சொல்ற.''

''சேர வேண்டியவங்க சேருவாங்கப்பா. வெறும் வெத்துப் பசங்க தேவையில்லை.''

''ஆனா கடன் ஒண்ணும் தேவையில்லையேடா.''

''சும்மா கேளுங்க. தரானுங்களா பார்ப்போம்.''

காசு கேட்டதும் உறவுகள் சடேரென்று ஓடி ஒளிந்தன.

''கடன் தரலாம். எத்த நம்பி தர்றது. ஏதோ சாராயம் காய்ச்சறாப்பல காட்டுல குடிசை போட்டிருக்க. கன்னு வியாபாரம் போல ஒதுக்குப்புறமா ஹோட்டல் போட்டிருக்க. இது இப்படி சரியா வரும். எதுனா உருப்படியா செய். நான் கடன் தரேன். ஆனா உனக்கு புத்தி கெட்டுப் போச்சு. நீ செய்ய மாட்டே.''

''நாய் பின்னாடி ஒரு பைத்தியக்காரன் அலையறா னாம். அவன் பின்னாடி இந்த லட்சுமணன் அலையறான். இதெல்லாம் சரியா வருமா.''

''சரி சாமியார் பின்னாடி போறதுல தப்பில்லை. அவன் தங்கம் பண்றான். வெள்ளி பண்றான்னா போலாம். மருந்து மாயம் பண்றவனா இருந்தாலும் போலாம். பைரவரைக் கும்புடு. பைரவரைக் கும்பு



டுன்னா. நாயைக் கும்பிட நாம எப்ப்பா மனுஷனா பொறக்கணும். இதெல்லாம் பைத்தியக்காரத்தனம். அவனாண்ட பேச்சு வார்த்தை இல்லாத இருக்கறதே நல்லது.'' வேகமாய் விமர்சனம் செய்து உறவுகள் விலகின.

லட்சுமணன் எப்போதும் கலவரமாகவே காணப் பட்டார். எதிலும் பதட்டமாகவேயிருந்தார்.

வாழையும், மாவிலையும் கட்டின அன்று பாடகச் சேரி ஸ்வாமி வந்து உள்ளே நுழைந்து அடுக்களையில் நாலாபக்கமும் சுற்றி உணவுகளை முகர்ந்து பார்த்து எச்சில் ஒழுகச் சிரித்து எல்லா திசைகளையும் நமஸ்கரித் தார். அடுக்களையிலேயே உட்கார்ந்து இலை போட்டு இட்லி சாப்பிட்டார். இன்னும் பத்து இட்லியும், குழம் பும் வாங்கி பிசைந்து நாய்களுக்கு உருட்டிப் போட்டார்.

''பயப்படாதே. நிச்சயமா இந்தக் கடை நல்லா நடக்கும். இங்க கல்லுக் கட்டிடம் நிக்கும். பளிங்கு மாளிகை வரும். உன்னைப் பார்த்து சிரித்தவன் அழு வான். உன்னைப் புறங்கூறியவன் பணிவான். உன்னை எதிர்த்தவர்கள் தோற்பார்கள். உன்னை ஆதரித்தவர்கள் வாழ்வார்கள். நாய்க்கு சோறு போடு. நல்ல சோறாய் போடு. நாய்கள் மனிதரிலிருந்து பிறந்தவை. நல்லவர்கள் கருமம் தீர நாயாய் பிறக்கிறார்கள். நாய்க்கு சோறு போடு. உன் கருமம் தொலையும்.''

அங்கிருந்த எல்லோருக்கும் கேட்கும்படி உரக்கச் சொன்னார்.

''கடை ஆரம்பிச்சாச்சு. இனி எங்கயும் வெளிய போக முடியாது. உன் தங்கச்சி ரொம்பச் சின்னவ. அவளுக்கு பின்னாடி கல்யாணம் செய்துக்கலாம். உனக்கு பார்த்துடலாம். அவங்களை முதல்ல வந்து பார்க்கச் சொல்லு. நம்ம யோக்கியதையை வந்து நேரா பார்த்

ஜுட்டு அப்புறம் பொண்ணு கொடுக்கதறா இருந்தா கொடுக்கட்டும்.''

லட்சுமணன் பிள்ளையின் முதுகு தடவி பேசினார்.

இருட்டறையில் விளக்கு நுழைந்தது போல் அந்தப் பெண் வரவு இருந்தது. அந்தப் பெண் ஒரு சுடர் விடும் அழகாக இருந்தாள்.

தாயும், வயதான தாய் மாமனும் உடன் வந்திருந் தார்கள். அவர்களுக்கு இலை போட்டு உட்கார வைத்து விட்டு மனைவியை உணவு பரிமாறச் சொல்லிவிட்டு லட்சுமணன் பாடகச்சேரி சாமியை நோக்கி ஓடினார்.

சாமி நாய்களுக்கு நடுவேபடுத்துக் கொண்டிருந்தது. தடக்கென்று எழுந்தது.

''அந்தப் பொண்ணுதான். அந்தப் பொண்ணுதான். அடுத்த ஜென்மம் அவனுக்கு நாய் ஜென்மம். கவலைப் படாம கூப்பிட்டுக்க.''

லட்சுமணன் வந்த வழியே திரும்பவும் ஓடினார்.

அங்கே, வந்த பெண் பெரிய ஆட்டுக்கல்லில் சட்டினி அரைத்துக் கொண்டிருந்தாள். தாய்மாமன் விறகு பிளந்து கொண்டிருந்தார். பெண்ணின் தாயார் தேங்காய் துருவிக் கொண்டிருந்தார்.

''யாரோ மலைக்கு போறவங்க பதினைஞ்சு பேர் வந்தாங்க. பாத யாத்திரையா கேரளா போறாங்களாம். இது குறுக்கு வழியாம். மூனு சாப்பாடா பதினைஞ்சும், ராத்திரிக்கு தூக்கு சாப்பாடா புளியோதரையும் செய்து தர சொன்னாங்க, ஒரு சாப்பாடு ரெண்டு ரூபான்னு சொன்னேன். சரின்னாங்க. இந்தப் பொண்ணு வந்த வேளை முதமுதலா ஒரு பெரிய வியாபாரம் உங்களைக் காணமேன்னு தவிச்சேன். இவங்களாவே வேலைல இறங்கிட்டாங்க.''



குளித்துவிட்டு ஒரு கூட்டம் கொட்டகைக்குள் வந் தது. கைதட்டி பாட்டு பாடியது. கொண்டு வந்த ஸ்வாமி படத்தை கோலம் போட்டு வைத்தது. சாப்பிட்டு விட்டு அங்கேயே இளைப்பாறியது.

குரியன் சரிய, படத்தை எடுத்து தலை மேல் வைத் துக் கொண்டு வேல் வேல் என்று கோஷமிட்டுபோனது.

சாப்பாடு ரொம்ப அருமை என்று கூட காசு கொடுத்தது

அவர்கள் போன பிறகு லாந்தரை வைத்துக் கொண்டு அந்தப் பெண்ணின் வீடும் இவர்கள் வீடும் பரஸ்பரம் தங்கள் கதையைப் பரிமாறிக்கொண்டார்கள்.

நடுநிசியில் தொலைவே இடி இடித்தது. விடியலில் குளிர்க்காற்று அடித்தது விடியும் நேரத்தில் பெரிய மழை பெய்தது. பகல் முழுவதும் மழை தொடர்ந்தது.

ஒரு லாரி மூன் செடிகளையெல்லாம் மிதித்துக் கொண்டு வருவதை எல்லோரும் வெளியே வந்து பார்த் தார்கள்.

''அந்தப் பக்கம் மழையில ரோடு உடைச்சுக்கிடுச் சுப்பா. முப்பதடி தூரத்துக்கு பள்ளம் எதுவும் போக முடியாது இப்படி ஒரு வழி இருக்கணும்னு எனக்கு ஒரு எண்ணம். போயிடலாமில்லையா.''

அவன் இறங்கி உப்புமாவும், காபியும் குடித்து விட்டு போனான்.

''நான் வண்டி ஓட்டிட்டு வர்றதை நிறைய பேர் பார்த்தாங்க. நான் திரும்பி வரலேன்னா அவங்களும் இதே பாதைலதான் வருவாங்க. முப்பது, நாப்பது மாட்டு வண்டி நிக்குது. ரெண்டு பஸ் நிக்குது, எல்லாம் இப்படித்தான் வரணும். கூடவே காபி தண்ணி போட்டு வைச்சுக்கங்க.''

அவன் சொன்னது உண்மையாயிற்று. வாகனங்கள் திசைமாறி ஒற்றையடிப் பாதையைக் குலைத்து மண்ணை உழுது கொண்டு வந்தன. அவர்கள் இடத்தில் நின்று இளைப்பாறி போயினர். சோற்றுக்கடை களை கட்டத் துவங்கியது.

அது மழைக்காலம். பருவமழை மிகப் பெரிதாய் மூன்று வாரங்களுக்கு நீடித்தது. அந்தச் சாலையை அறவே புறக்கணித்துவிட்டு இந்த மண்சாலையை வண்டிகள் தேர்ந்தெடுக்கத் துவங்கின. வண்டி போகும் பாதைதான் பாதுகாப்பான பாதை என்று கருதி பாதசாரியாய் போகிறவர்கள் நின்று ஏதேனும் வாங்கி மென்று விட்டு போனார்கள்.

தண்ணீரை ஜீரகம் போட்டு கொதிக்க வைத்து லட்சுமணன் சுத்தமாகக் கொடுத்தார். தனியே போகிற பெண்பிள்ளைகளிடம் காசு வாங்காமல் இருந்தார்.

மகனின் திருமணத்தை உத்தேசித்து மண் சுவர் எழுப்பி இன்னொரு விசாலமான குடிசை போட்டார். கேணி வெட்டினார். காலையும் இரவும் இடைவிடாமல் நாய்களுக்கு சோறு போட்டார்.

காட்டுக்கு நடுவே இருந்த சோற்றுக்கடை, அதனால் காட்டுக்கடை என்று மாறியது. வியாபாரம் குறைவில்லாமல் நடந்தது.

ஒருநாள் காலை பாடகச்சேரி சாமியைத் தேடிப் போனார். மகனுக்கு திருமணம் நடத்தி வைக்க வேண்டும் என்று விவரம் சொன்னார். எந்த ஊர் கோவிலில் வைப்பது என்று வினவினார்.

''நம்ம ஊர்தான் கோவிலு. இதுக்கு வேற கோவிலுக்கு போவானேன். நம்ம காட்டூர்லயே நடத்தலாமே.''



''எதுங்க காட்டூர்?''

''நீ கடை போட்டிருக்கிற இடம்தான். அங்கயே கல்யாணம் நடத்து. ஓட்டலுக்கு முன்னால வெட்ட வெளில தாலி கட்டச் சொல்லு. நிறைய பேர் வருவாங்க. அன்னிக்கு நடுநிசி வரைக்கும் எல்லாருக்கும் சக்கரைப் பொங்கல் கொடு. இலவசமா கொடு. அதான் சாப்பாடு. ஓட்டல் மூடாதே. ஓட்டலும் நடத்தணும், கல்யாணமும் நடத்தணும்.

''மாப்பிள்ளையும், பொண்ணும் பரிமாறணும். அன்னிக்கு உங்க வீட்ல இருக்கற எல்லாரும் கூட வேலை செய்யணும், உறவுக்காரங்களைக் கூப்பிடு. ஆனா எவனும் வரமாட்டான். அவங்க உங்களைத் தேடிட்டு வரும்போது நல்ல வண்ணமா கேட்டுக்கலாம்.

''கல்யாணமான அன்னிலேருந்து கார்த்தாலயும், ராத்திரியும் உன் மருமகளை நாய்களுக்கு சோறு போடச் சொல்லு.''

''கடையும் நல்லா வரும். அவளும் நல்லா வருவா.''

அந்த முறை குளிர் மிக அதிகமாக இருந்தது. குளிர் அதிகமாக இருந்ததால் வெய்யிலும் கடுமையாக இருக்கும். ஹோட்டலுக்கு இன்னொரு பக்கம் தட்டுப் பந்தல் போட்டு ஆற்றுமணல் கொட்டி தலைக்கு வைத்துக் கொள்ள மணைப் பலகைகள் அடுக்கி வைத்தார். பெண்களுக்காக மறைப்பான இடம் கட்டினார். ஜனங்கள் இரவு தங்கிப் போனார்கள்.

மருமகளின் தாய்மாமனும், தாயாரும் அங்கேயே தங்கிக் கொள்ள விருப்பம் தெரிவித்தார்கள். இருவரும் முன் செடிகளை வெட்டி தரையை சமன் செய்து குடிசை கட்ட இடம் ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

அந்த சம்பந்தியம்மாள் கை வளையல்களையும், காது தோடுகளையும் விற்று நல்ல பனைமரக்கட்டைகள் வாங்கி

உறுதியான கூரை வீடு எழுப்பினார். அந்த கூரை வீட்டுக்குள்ளே இரண்டு மூன்று அறைகளாகத் தடுத்துக் கொண்டார். அவர்கள் வீடு கட்டிக் கொண்ட விதத்தைப்பார்த்து அவருக்கும் தரை போட்ட சுவர் தடுப்புகளுள்ள வீடு வேண்டுமென்று தோன்றியது.

பாடகச்சேரி சாமியைத் தேடினார், கிடைக்கவில்லை. கருப்பு நாய் வந்து நின்றது.

''எங்கே வீடு கட்டலாம் சொல்லு. ஒட்டல்லயே தூங்கறது புடிக்கலை. எங்கே வீடு கட்டலாம் சொல்லு.''

கருப்பன் நாலு புதர் தாண்டி ஓடிப்போய் சற்று மேடான இடத்தில் நின்றான். மேடு தென்திசையில் சரட்டென்று இறங்கி முடிந்தது.

இத்தனை நாள் இந்த நல்ல இடம் தெரியாமல் போயிற்றே என்று ஆச்சரியப்பட்டார். மற்ற இடங்களைக் காட்டிலும் அங்கே சற்று கூடுதலாய் காற்றடித்தது. ஆட்களை வைத்து முள் செடிகள் வெட்ட ஆரம்பித்தார். அவரும் கூட இருந்து செப்பனிட்டார்.

கும்பகோணம் போய் கருங்கற்களுக்கும், செங்கற்களுக்கும் காசு கொடுத்து விட்டு வந்தார். வளைவு ஓடுகள் ஆயிரக்கணக்கில் வாங்கினார். மரத்துக்கு காசு குறைய மருமகள் கழுத்தில் மஞ்சள் கயிறுகட்டிக்கொண்டு தாலிக்கொடியைக் கழற்றி மாமனாரிடம் கொடுத்தாள்.

லட்சுமணனுக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது.

''எம் பொண்ணு நகையை எடுத்திருப்பேம்மா. தட்டுன்னு வரன் தவைஞ்சா என்ன பண்ணுவோம்னு பயம். நீயா தாலிக்கொடி கொடுத்தது ரொம்ப சந்தோஷம். ஒத்தைக்கு ரெட்டையான எடையிலே உனக்கு தாலிக் கொடி அமையும். எங்க பாடகச்சேரி ஐயாவை நான் பிரார்த்தனை பண்ணிக்கறேன்.



காரைச் சாந்து இல்லாமல் சிமெண்ட் என்கிற விஷயம் வாங்கி பூச ஆசைப்பட்டார்.

''நீங்க கட்டற கட்டடம் நூறு வருஷம் இருக்கும்.'' சிமெண்ட் வாங்கின இடத்தில் காக்கி பேண்ட்டும், வெள்ளைச் சட்டையும் போட்ட ஒரு பார்ப்பன இளைஞன் உரத்துப் பேசினான்.

''எவ்வளவு சிமெண்ட் வேணும்'' என்று அவர் கேட்கப்போன இருந்தா கொடுங்கோ என்று அவன் கேட்டான்.

''காகிதமா இல்லீங்க. மனசுல ஒரு கணக்கா இருக்கு.''

''காகிதத்துல எழுதி வச்சுக்க வேண்டியது தானே. என்ன கட்டப் போறீங்க.''

அவர் விவரிக்க விவரிக்க அந்தப் பையன் மளமளவென்று மேல் நோக்கிய பார்வையாய் ஒரு படம் போட்டான்.

''இதுல வாஸ்து சாஸ்திரப் பிரகாரம் நிறைய தப்பு இருக்கே. நான் மாத்தி வரைஞ்சு தரட்டுமா.''

''அப்படி செய்யப் போறீங்கன்னா சிரமம் பார்க்காத இடத்தையும் போய் பார்த்துட்டு வந்துருங்க தம்பி.''

''கும்புகோணத்திலிருந்து பன்னெண்டு மைலா. மேறகென்னா வெறும் கரம்பு இல்ல... குடிக்க ஜலமே கிடைக்காதே.'' அவன் வருவதற்கு தயங்கினான்.

வந்து பார்க்க, வரைபடம் செய்ய பதினைந்து ரூபாய் என்று சம்பளம் பேசினார்.

அவன் உற்சாகமாய் ஒத்துக் கொண்டான்.

நல்ல பிரிட்டிஷ் அளவு டேப்பும், டாணா ஆணிகளும் ஒரு மரப்பெட்டி நிறைய கண்ணாம்பு பவுடரும் எடுத்துக் கொண்டான்.

அந்த இளைஞனை வண்டியிலேற்றி அனுப்பி விட்டு கொஞ்சம் காசு கடன் வாங்க நகைக்கடைப் பக்கம் போனார். மருமகளின் தாலியை அடகு வைத்து காசு வாங்கினார்,

''ஒரு பையனை வண்டில ஏத்தி அனுப்பிச்சிரே... யாரவன்.'' காசுக்கடைச் செட்டியார் கண் சுருக்கி கேட்டார்.

''சரியா தெரியாது. இரும்புக் கடைல பார்த்தேன், கட்டிட வேலை தெரிஞ்ச இஞ்சினியர் போல பேசினாரு. இடம் பார்க்க அனுப்பிச்சிருக்கேன்.''

''மாதிரிதான், இஞ்சினியர் இல்ல. கேட்டா இஞ்சினியர்னுவான். அவங்கப்பா ரெண்டாவது உலக மகாயுத்தத்துல சிங்கப்பூர் போய் அங்க சீனாக்காரியோட தனியா குடித்தனம் வச்சிருக்கான். இங்க இவங்கம்மா பாவம் சோத்துக்கு திண்டாடி தெருவுல நின்னா, நல்லவேளை உடம் பொறந்தான் ஒரு சின்ன வீடு வாங்கிக் கொடுத்து கொஞ்சம் காசை வட்டிக்கு எங்கிட்ட விட்டிருக்கான். நான் மாசம் நாப்பது ரூபா வட்டி தரேன்' அதலதான் காலட்சேபம்.

அந்த அண்ணா இந்த புள்ளைக்கு தாய்மாமன் இவனை சமையல் வேலைக்கு கூப்பிட்டான். இந்த பாப்பாரக் குரங்கு போ மாட்டேனுடுச்சு. உங்ககிட்ட நான் இஞ்சினியர் அது இதுன்னு புருடா விடுவான். நம்பா தீங்க. சும்மா காக்கி போட்ட பேண்ட்டும், காக்கி தொப்பியுமா இங்கிலீஷ் பேசுவான். பேச்சுதான் பிரமாதமா இருக்கும். வேலை தெரியாது. ஒரு அப்பன் சரியில்



லைன்னா பிள்ளைங்க எப்படி சீரழிறாங்கறதுக்கு இவன் ஒரு உதாரணம்.''

''தாளிக்கொடி வரைக்கும் வச்சு கட்டிடம் கட்ட றீங்க. அது தப்பா போகக்கூடாது. அதனால சொல்றேன்.

லட்சுமணன் கவலையோடு, காடு நோக்கி நடந்தார்.

வழியில் ஆள் இல்லாத ஒரு குளக்கரையில் அவன் முகத்துக்கு கையை முட்டுக் கொடுத்து உட்கார்ந்திருந்தான். அவனருகே கருப்புசாமி என்கிற நாய் இருந்தது. அவன் உட்கார்ந்திருந்த விதம் அவன் மிகுந்த கவலையோடு இருக்கிறான் என்பதைக் காட்டியது.

அவர் காலடி சப்தம் கேட்டு அவன் திரும்பினான். உச்சி வெய்யிலில் சட்டையில் மண்பட அவர் கால்களில் விழுந்து வணங்கினான்.

''நான் ஊருக்கு திரும்பறேன். நான் இஞ்சினியர் இல்லை.''

''நீ இஞ்சினியர்ன்னு என்கிட்ட சொல்லலேயில்ல யேப்பா.''

''அப்படி தெரிஞ்சா மாதிரி நான் பால்லா காட்டினேன். ஆனா நான் இஞ்சினியர் இல்லை.''

''அதனால என்ன. வாஸ்து சாஸ்திரம் பத்தி சொல்றியே.''

''வேண்டாம் சார், நான் சொன்னா யாரும் கேட்க மாட்டா.''

''நான் கேக்கறேன். நீ வா.''

''எனக்கு கேள்வி ஞானம்தான் சார்.''

''அது போறும் வா.''

"இதுவரைக்கும் கட்டிடமெல்லாம் கட்டினதே யில்லை சார்."

"நாம ரெண்டு பேரும் சேர்ந்து கட்டுவோம் வா."

"ஏதாவது தப்பாயிடுத்துன்னா."

"தப்பு பண்ணாத கட்டுவோம் வா. நம்ம கூடசாமி இருக்கார். தப்பு வராது வா."

"உங்க காதல விளையாடறதுக்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை சார்."

"அட...நான்தானே கூப்புடறேன். தைரியமா வா"

"எங்கப்பா என்னைக் கை விட்டுட்டார் சார் ஊர்ல எங்கம்மாவுக்கு ரொம்ப அவமானம். அவளை சந்தோஷப் படுத்தறதுக்கு நான் சில பொய்யெல்லாம் சொல்லிண்டுருக்கேன் சார்."

"என்ன பொய் சொன்னே."

"மெட்ராஸுக்கு போய் சிவில் இஞ்சினியரிங் படிக்கிறேன்னு பொய் சொல்லிட்டு நூறு ரூபா வாங்கிண்டு போனேன் சார் ஹோட்டல்ல சர்வரா வேலை பார்த்தேன்."

"இஞ்சினியரிங் படிக்கலியோ."

"அது அஞ்சு வருஷப் படிப்பு சார். அதுக்கு நிறைய காசு வேணும். எங்கம்மாவை விட்டுப் பிரிஞ்சிருக்கணும். எங்கப்பா சிங்கப்பூருக்கு ஓடிப்போனதிலிருந்து எங்கம்மா எம்மேல ரொம்ப பிரியமாயிட்டாங்க சார். தினம் என் தலையைத் தடவி விட்டு ஏதாவது புலம் புவா அப்படி ஒருநாள் புலம்பலேன்னாலும் நானும் வுட்டுட்டு போயிடுவேனோன்னு அழுவா கத்துவா சார். மெட்ராஸ் வேலையை விட்டுட்டு வந்ததற்கும் அவ போட்ட கூச்சல் தான் காரணம்."



"அம்மாகிட்ட உண்மை சொல்லலியா."

"சொல்லலை சார். சொன்னா அழுவா. நான் சமையக்காரனா போறது அவளுக்குப் பிடிக்கலை சார். எங்கம்மாவோட அப்பா சமையல் எங்கம்மாவோட அண்ணா தம்பி ரெண்டு பேருமே சமையல். எங்கம்மாவோட அத்திம்பேர் சமையல். நான் எங்கம்மாவுக்கு ஒரே புள்ளை சார்."

"நான் சமைக்கப் போகக்கூடாதுன்னுதான் நான் மட்டும் போறும்னு நிறுத்திண்டானாம். இந்தக் கட்டுப்பாடு தாங்காமதான் எங்கப்பா சீனாக்காரிகிட்ட போயிட்டாராம்."

"ஒவ்வொரு சமயம் செத்துப் போகலாம்னு தோணறது சார்."

பேசும்போதே அவன் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது.

அவர் அவனை அணைத்துக் கொண்டார்.

"இந்த இரும்புக் கடைல ஒரு தச்சன் இருப்பார். அவர் வேதாகமக்காரர். கடவுள் ஒரு ஜன்னலை மூடினால் பல ஜன்னல்களைத் திறப்பார் அப்படீன்னு நம்பிக்கையா சொல்வார். மரம் இழைக்கறதுக்கு முன்னால மண்டி போட்டு பிரார்த்தனை பண்ணுவார்."

ஆகவே இந்த நிலைப்படி நிலையாக இருக்கட்டும்.

இந்தக் கட்டிடில் உறங்குபவர்கள் நோயற்று இருக்கட்டும். இந்த நாற்காலியில் அமர்பவர்கள் நீதிமான்களாக இருக்கட்டும். இந்த மேஜையில் வைத்து எழுதப்படும் எல்லா விஷயமும் சத்தியத்தை சொல்லட்டும் அப்படீன்னு சொல்லுவார். அவர் தச்சர்தான் ஆனா படிப்பேயில்லை. அவரோட பத்து நிமிஷம் உக்காந்திருந்தா போதும் ரொம்ப நம்பிக்கை வந்துடும்."

''நமக்கும் அந்த மாதிரி நம்பிக்கை இருக்கணும் அப்பா இல்லேன்னா என்ன...அம்மாவுக்கு நீ இருக்க றியே. வா. வந்து கட்டிக்கொடு. நான் எப்பேர்ப்பட்ட இடத்துல இருக்கேன்னு பாரு.

எங்க இடத்தைச் சுத்தி கோயில் குளம். கூத்து மேடைன்னு எதத செலவும் இல்லை. அதனால எந்நேர மும் வேலைதான். வேலை செய்யறதுதான் பொழுது போக்கு. அதனால வேலை செய்யறதே தெரியாது. ஆமா...இங்க ஏன் உக்காந்த...''

''ஒரு பெரியவரு எதிர்கரையில நாற்பது நாயோட தண்ணீர் குடிச்சிட்டு இருந்தாரு. நாற்பது நாய்களும் தண்ணீர் குடிச்சு முடிச்சுது. அப்புறம்தான் அவரு சாப் பிட்டாரு.''

''அட...நம்ம பாடகச்சேரி சாமி.''

''உங்களுக்குத் தெரியுங்களா.''

''என் குருநாதர். ரொம்ப விசேஷமான ஆசாமி.''

''என்னாங்க விசேஷம்.''

''பேசிப்பாரு தெரியும்.''

''அவரு பேசினாருங்க.''

''எப்ப?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி எதிர்கரையில என்னமோ கத்தினாரு.''

''என்னா.''

''ஒழுங்கா இரு மகனே. அப்பன் மாதிரி கெட்டுப் போவாதேன்னாரு. நான் ஆடிப்போய் அப்படியே உட்கார்ந்துட்டேன். இந்த நாய்கிட்ட ஏதோ சொல்லி அனுப்பிச்சாரு இது வந்து பக்கத்துல உட்கார்ந்துச்சு.''



''இதுவும் ஒரு விசேஷமான அம்சம். நாயா நினைக் கக் கூடாது. வா தம்பி போலாம்.''

''நீங்க என்ன ஜாதி ஐயர்.''

''மனுஷான் தான்.''

''ஏங்க ஜாதி சொல்லக் கூடாதா.''

''எதுக்கு சொல்லணும். உன் ஜாதி வேலையை நீ செய்யலை. என் ஜாதி வேலையை நான் செய்யலை. அப்புறம் எதுக்கு ஜாதி.

''தப்புதான். மன்னிச்சிருங்க ஐயர்.''

''உனக்கு சமையல் வேலை புடிக்குமா.''

''நல்லா செய்வேன். மௌண்ட் ரோடுல நான் போடற காபிக்கே பத்துப் பதினைஞ்சு பேர் இருக்காங்க. சாமிநாதனை காபி போடச் சொல்லு. சாமிநாதனை காபி போடச் சொல்லு அப்படீன்னுவாங்க. காபி மெஷின் வச்சிருக்கீங்களா.''

''இல்லை. வாங்கணும்.''

''பெரிசா வாங்கிடுங்க, நான் வறுத்து அரைச்சு தரேன். எனக்கு அந்த பக்குவம் தெரியும்.''

''அப்ப நீ இன்ஜினியர் இல்ல.''

''கடவுளே...நான் இன்ஜினியர் இல்லை விட்டுடுங்க.''

அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

''நாம எல்லாம் தான். எல்லா வேலையும் செய்து பழகிக்குவோம் வா.''

''அந்த சாமியைக் கிட்ட பார்க்க முடியுங்களா.''

''நிச்சயமா முடியும்.''

''எப்பங்க.''

''உள்ள நினைச்சுக்கிட்டேல்ல, அவருக்கு தெரிஞ்சிடும். தானே வந்து நிப்பார். ரொம்ப அவசரமா இருந்தா கருப்புசாமிக்கிட்ட சொல்லி அனுப்பினா வந்துருவார்.''

''இந்த நாய்கிட்டயா.''

''அது நாய் இல்ல கருப்புசாமி.''

''எனக்கு ஒரு கனவு வந்துச்சுங்க.''

''என்ன கனவு.''

''நான் வேற உலகத்துக்கு பறந்து போற மாதிரி. இப்ப அது பலிக்கறது.''

அவர்கள் ஊர் போய் சேர மாட்டு வண்டியிலுள்ள பொருள்களை அவர் மகன் பத்மாவதி இறக்கிக் கொண்டிருந்தாள்.

காய்கறிக் கூடைகளைத் தலையில் தூக்கி அவள் நடப்பதைப் பார்த்ததும் சாமிநாதனுக்கு ஆசை அதிகரித்தது.

''அடா...என்ன அழகு. இந்த மாதிரி அழகு நமக்கு பொண்டாட்டியா கிடைச்சா எவ்வளவு நல்லா இருக்கும்...'' அவன் மனம் எண்ணியது.

திரும்பி கருப்புசாமியைப் பார்த்தான்.

கருப்புசாமி இரண்டு முறை தும்மியது. நாய் தும்மினால் நல்ல சகுனம்.

அவன் அந்த சாமிநாதன் லட்சுமணனுக்கு வலது கையானான்.

லட்சுமணனுடைய பிள்ளை சொன்னதைத்தான் செய்வான். மருமகனும் வேலையில் பணுவை வாங்கிக் கொள்வானே தவிர தீர்மானிக்கும் இனம் இல்லாமல் போயிற்று.



அந்த சாமிநாதன் மகா கெட்டிக்காரனாய் இருந்தான். முதலில் அந்தக் காடு பார்த்து மிரண்டான்.

''நிறைய பாம்பு இருக்குமா'' என்று கேட்டான்.

''நாய்களைக் கண்டா பாம்புக்கு பயம். பாம்புங்க சுருண்டு படுத்துக்கிட்டிருந்தாலும் நாய்ங்க பார்த்துட்டு தொந்தரவு பண்ணும். தூங்கவிடாது. அதனால நாய்ங்க புழங்காத இடமாதான் பாம்பு இருக்கும்.'' லட்சுமணன் விளக்கி சொன்னார்.

அவன் வேகமாக இறங்கினான்.

''இந்த மேட்டுல வீடு கட்டலாம்.''

''அதைத்தான் நாய் சொல்லிச்சு.''

''நாய் சொல்லிச்சா. நான் சொல்றேங்க. வாஸ்து சாஸ்திரப் பிரகாரம் இந்த மேடு நல்ல இடம். தெற்கே பூமி சரியறது. நீருள்ள இடம்னு அர்த்தம். வடக்கே கொஞ்சம் மறைச்சு கட்டினம்னா காத்து அலைகழிகாம இருக்கும். ஓடு வேண்டாம் தளம் போட்டுரலாம். மரம் வாங்கலாம். நடுவுல திறந்த இடம் விட்டு ஒரு பக்கம் கல்லா, ஒரு பக்கம் ஸ்டோர் ரூம், ஒரு பக்கம் பத்தின்னு பிரிச்சிருவோம். வடக்கே ஸ்டோர் ரூம். வடகிழக்கே கல்லா இருக்கும். தென் கிழக்குல அடுப்பு இருக்கும். தெற்கே வழிவச்சு கொல்லைப்புறம் விறகு, பத்து தேய்க்கறமாதிரி இடம் இருக்கும்.

கிழக்கே என்ட்ரன்ஸ். தெற்குப் பக்கம் முழுக்க சலவைக்கல் பெஞ்ச் போட்டு சாப்பிடற இடம். மேற்கேயும் வழி. அங்கு லேடீஸ் சாப்பிடற இடம்.

ஹோட்டலை உயர்த்திக் கட்டிருங்க. வீடு மொன்ன மொன்ன கட்டிக்கலாம். கொஞ்சம் சலவைக்கல்லா கட்டலாம்.''

அவனுக்கு படிப்பாய் எந்த தகுதியும் இல்லை. ஆனால் எல்லா வேலையும் அவனால் செய்ய முடிந்தது.

பாத்திரங்களை வெந்நீரில் கழுவ வேண்டுமென்றும் வெண்ணை எடுத்த பாலில் காபி போட வேண்டும் என்றும் கடலைப் புண்ணாக்கை தேங்காய் சட்னியில் சேர்க்கலாம் என்றும் மீந்த பஜ்ஜியை, வடையை வடைகறியாய் செய்வது எப்படி என்றும் அவன் சொல்லிக்கொடுத்தான்.

பட்டு நூல்காரப் பெண்ணின் தாய்மாமனை வெற்றிலைப் பாக்கு, வடையம், வாழைப்பழம் கோலி சோடா என்று கடை போட்டு அமர்த்தினான்.

வாரத்திற்கு ஒரு முறை கும்பகோணம் போவான். அம்மாவைப் போய் பார்த்துவிட்டு வருவான்.

வரும்போது ஹோட்டலுக்கு என்னவெல்லாம் தேவையோ அவையனைத்தையும் வாங்கி வருவான், புதிய இயந்திரக் கல் எடுத்துவர வண்டி அனுப்பிய போது அவன் அம்மா அந்த வண்டியில் வந்துவிட்டாள். சிறிய உருவம், கூர்மையான மூக்கு, நன்கு நரைத்த தலை, அழகான முகவாய், இளம் வயதில் மிக அழகாக இருந்திருப்பாள் என்று அங்க அமைப்புகள் சொல்லின. ஒரு குழந்தைத்தனமான வியப்பு அவளிடம் நிரந்தரமாக இருந்தது.

துணி மூட்டையும். கெட்டி அலுமினியத் தட்டும் சில பித்தளை, வெங்கல டம்ளர்களுமாக அவள் ஹோட்டல் வாசலில் வந்து நின்றாள்.

''நான் சாமியோட அம்மா'' என்று சடேரென்று பேச ஆரம்பித்தாள்.

சாமி என்றதும் லட்சுமணனுக்கு பாடகச்சேரி சாமி தான் ஞாபகத்துக்கு வந்தது. வேஷ்டி அவிழ கல்லாவிலிருந்து வேகமாக எழுந்தார்.



''நம்ம பாடகச்சேரி சாமி ஐயர் ஜாதியா? அவருக்கு இவ்வளவு அழகான அம்மாவா!' வியந்து அருகில் போய் கை கூப்பினார்.

''நான் இங்கயே இருந்துடலாம்னு இருக்கேன்.''

''இருங்கம்மா. இது உங்க இடம்'' பாடகச்சேரி சாமி நினைப்பிலேயே பதில் சொன்னார்.

''சாமிநாதன் எங்கே இருக்கான்?'' அந்த அம்மாள் பிள்ளை பெயரை முழுசாய் உச்சரிக்க அவருக்கு தன் தவறு தெரிந்தது.

''சாமிநாதன் தாயாரா...!வாங்க வாங்க... உள்ளே வாங்க...''

''எனக்கு எதாவது வேலை போட்டு கொடுங்கோ. நான் தின்பண்டங்களெல்லாம் நன்னா பண்ணுவேன். ஸ்வீட் போடுவேன். மோதகம், பொரி உருண்டையெல்லாம் நன்னா பண்ணுவேன். அதிரசம் பண்ணினா நாலஞ்சு நாள் ஜம்முன்னு வச்சுக்கலாம். வேர்க்கடலை உருண்டை பத்து நாள் நிக்கும். கும்பகோணத்துல எல்லாக் கடையிலயும் கண்ணாடிப் பெட்டி வந்துடுத்து. தெருவில போறவ வரவா பாக்கற மாதிரி திங்கற பண்டத்தை அடுக்கி வச்சிருக்கா. தூசபடாம, காத்துப் படாம பண்டமும் நன்னா இருக்கு''

அவள் அதிகம் பேசினாள்.

யாரும் கேட்காத போதும் தன் வீடு பற்றிய தகவல்கள் சொன்னாள். தன் வாழ்க்கை பற்றி விளக்கம் சொன்னாள். அவள் பேச்சிலிருந்து யாரும் சட்டென்று விடுபட முடியாது

அவளுக்கு எதையும் கதை போல சொல்லத் தெரிந்தது. அதிகம் அபிநயங்கள் இல்லாமல் பெரிதாய் குரல் உயர்த்தாமல் இறந்துவிட்ட குழாய் போல இடைவிடாது அவள் ஏதேனும் கதை சொல்லிக் கொடுத்தான்.

பெண் என்பவளின் வாழ்க்கை வேதனை அவன் பேச்சில் தெளிவாய் விடைபெற்றது.

"நான் பரவாயில்லை, ஓரளவுக்கு அதிர்ஷ்டம் பண்ணிலேவா. இவன் அப்பாவோட பத்து வருஷம் குடித்தனம் பண்ணிருக்கேன் எங்கம்மா வேதனை பட்டிருக்கா பாருங்கோ, சொல்லி மாளாது.

எங்கம்மாவுக்கு அப்பா இல்லை. அம்மாவும், எங்கம்மாவும் அவ்வளவுதான். பதினாறு வயசில் வயத்துல பொண்ணு கொடுத்து, பதினெட்டு வயசுல எங்க தாத்தா செத்துப் போய்ட்டார்.

அதாவது எங்க பாட்டியோட பதினெட்டு வயசுல. பெரிய அக்ரஹாரம் எல்லாம் ஒன்னுக்குள்ள ஒன்னா இருந்தவாதான். இவாத்தில அரிசி, அவாத்தில பருப்பு அப்பளன்னு...இட்லிக்கு மாவரைச்சா ரெண்டனாகாசு, விசேஷத்துக்கு முறுக்கு சுத்தினா, ஒரு பழம் புடவை இல்லேன்னா ஒரு ரவிக்கைத் துண்டு, பழம் இப்படி தருவா, ஒரு பழைய வீடு இருந்தது. ஆனா வாசக் கதவை சரி பண்ணக் கூட காசு இல்லை, கதவை சாத்தி கல்லு வைப்போம். கல்லுதான் பூட்டு.

ங்கம்மா பாவம் நடீர்னு எழுந்து ராத்திரி பச்சைத் தண்ணில குளிக்கும் கடப்பாரையால வயத்துல குத்திண்டு செத்துப் போயிடலாம் போல இருக்குடின்னு அழுவா. எனக்கு ஒன்றும் புரியாது. வேண்டாம்மா வேண்டாம்மான்னு அழுவேன். அவளும் என்னைக் கட்டிண்டு அழுவா.

அப்போ மழையில்லாம ஊர்ல பஞ்சம் வந்தது. உலகத்துல பெரிய யுத்தம் வந்தது. யார்கிட்டேயும் காசு இல்லை யாராத்திலயும் அரிசி இல்லை. குடிக்க தண்ணி இல்லாம மாடெல்லாம் செத்துப் போச்சு.



பணக்காராளே தவிக்கிறபோது இந்த ஏழைகள் எத்தனை பாடுபட்டிருக்கும். வெறும் முருங்கைக் கீரையை மசிச்சு திம்போம்னு அம்மா சொல்வா.

அம்மாவுக்கு பதிமூணு வயசு. எதிர்வீட்டுக் கிழவர் ரெண்டாவது பெண்டாட்டிக்கு திவசம் பண்ணிண்டிருக்கார். எங்கம்மா கார்த்தாலேருந்து அந்த வீட்டைச் சுத்தி சுத்தி வந்திண்டிருக்கா.

எங்கம்மாவை திவசம் பண்ற கிழவர் உத்துப் பார்த்தாராம். திவசம் முடிஞ்ச பிறகு பத்து அதிரசமும், இருபது எள்ளுருண்டையும் எடுத்துண்டு திண்ணைக்கு வந்தாராம்

எங்கம்மாவை விரல் சொடுக்கி கூப்பிட்டாராம் அந்தக் கிழவருக்கு அறுபத்திரெண்டு வயசிருக்கும்.

ஏண்டி குட்டி என்னைக் கல்யாணம் பண்ணிக்கற யான்னு கேட்டாராம்.

எங்கம்மா மலங்க மலங்க முழிச்சாளாம்.

என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதா இருந்தா இத்தனை பட்சணமும் உனக்குத்தான்னாராம்.

சரி பண்ணிக்கறேன்னு எங்கம்மா சொன்னாளாம். பசி தாங்கலை அவளுக்கு.

வீட்டுக்குள்ளே கூடத்துக்கு கூட்டிண்டு போய் எல்லா சாமி படத்துக்கு முன்னாலயும் சத்தம் போட்டு சத்தியம் பண்ணச் சொல்லி அதுக்குப் பிறகு பக்ஷணங்களைக் கொடுத்தாராம்.

எங்கம்மா ஏதோ விளையாட்டுன்னு நினைச்சிருக்கா. தான் சத்தியம் பண்ணினதை தன் அம்மாகிட்டே அதாவது என்பாட்டிக்கிட்ட சொல்லலை.

பத்து நாள் கழிச்சு எதிர்வீட்டுக்கிழவர் நிஜமாகவே பெண் கேட்டு ஆள் அனுப்பிச்சிருக்கார்.

என் பாட்டி பதறி முடியாதுன்னு சொல்லியிருக்கா.

எங்கம்மா முன்னால வந்து இல்லம்மா நான் சத்தியம் பண்ணியிருக்கேன்னு சொல்லியிருக்கா.

ஏண்டி சத்தியம் பண்ணினேன்னு அடி அடின்னு அடிச்சானாம்.

எங்கம்மா எல்லா அடியும் வாங்கிண்டாளாம்.

ரெண்டுதான்பொறுத்து எங்கபாட்டியோட முதுகுதடவி 'கோவப்படாதம்மா, இப்படி நான் தலநாம அரைப் பட்டினி, கால் பட்டினி கெடக்கறதுக்கு எதிர் வீட்டுக் கிழவன் கூட இருந்து வயிராற ரெண்டு பேரும் சாப்பிடலாமோன்னோ.

என்னால பசி தாங்க முடியலேம்மா. யார் ஆம்படையானா இருந்தா என்ன? பசி இல்லாம இருக்கணும். அதான் முக்கியம், அப்படின்னாளாம்.

ஒரு மாசம் பொறுத்து கல்யாணம் நடந்தது.

எப்பவும் கந்தலும் கிழிசலும் தானே எங்கம்மா கட்டிண்டிருப்பா. பட்டுப் புடவை, ஒட்டியாணம், அட்டிகையெல்லாம் போட்ட பிறகு மகாலட்சுமி மாதிரி இருந்தாளாம்.

அடடா... இந்தப் பொண்ணை நாங்க பார்க்காத போயிட்டோமே அப்படின்னு ஊர்ல பல பேர் வருத்தப் பட்டாங்களாம்.

எங்கம்மாவுக்கு ரொம்ப சந்தோஷமாம்.

எங்கப்பா அதான் எதிர் வீட்டுக் கிழவர் மொத்த சாவியும் அம்மாகிட்ட கொடுத்துட்டாளாம்.

நான் என்ன சொன்னாலும் கேட்கணும். நான் எப்ப கூப்பிட்டாலும் வரணும் அப்படிங்கறதுதான் கண்டிஷன்.



அறுபத்திரண்டுல கல்யாணம் ஆனவர் அறுபத்தெட்டுல செத்துப்போயிட்டார். கடைசி ரெண்டு வருஷம் படுக்கையிலதான் கிடந்தார்.

இப்ப செத்துப் போயிடுவார், அப்ப செத்துப் போயிடுவார்னு ஊர்ல சொல்லிண்டே இருப்பாளாம். எங்கம்மா அதுபத்தி கவலையே படலையாம்.

கடைசி வரைக்கும் புருஷனைக் கிழவன்தான்னு சொல்லிட்டிருப்பா. கிழவன் எழுந்திருச்சா பாரு. கிழவன் சாப்பிடறதா கேளு. இப்படித்தான் சொல்லிட்டிருப்பா.

ரெண்டு வேளை டிபன். ஆறு வேளை காப்பி. மூணு வேளை சாப்பாடு. தோணின போதெல்லாம் தூக்கம். அம்மாவும் பொண்ணும் ரொம்ப சந்தோஷமா இருந்திருக்கா.

எங்க பாட்டி சாகறதுக்கு அரைமணி முன்னாடி கூட பூரி மசாலா சாப்பிட்டுட்டுதான் செத்துப் போனா.

ஒருத்தர் எத்தனை பூரி சாப்பிடுவா. ரெண்டு இல்ல நாலு. அதிக பட்சம் போனா ஆறு எங்க பாட்டி பதினேழு சாப்பிட்டிருக்கா. ஒரு சொம்பு நிறைய காபி குடிச்சுட்டு எழுந்தவ, தலை சுத்தி கீழே விழுந்தா. அப்படியே பிராணன் போயிடுத்து.

அப்ப எனக்கு மூணு வயசு. அடுத்த வருஷம் எங்கப்பா. அதான் அந்தக் கிழம். அதுவும் போயிடுத்து.

எங்கம்மா எங்கப்பா சாகறதுக்கு முன்னாடியே நிலம் நீச்செல்லாம் சிறுக சிறுக வித்து காசா மாத்திண்டா.

வீட்ல அரிசி, பருப்பு, சர்க்கரை, வெல்லம் எல்லாம் எப்பவும் இருக்கும் கொல்லைல ஒரு கீரை போட மாட்டா ஒரு மாடு வாங்க மாட்டா. எல்லாமே காசு கொடுத்துதான் வாங்குவா.

வாங்கறதுனா குறைச்செல்லாம் இல்லை. ஒரு தார் மலை வாழைப்பழம், ஒரு மூட்டை வெல்லம், ஒரு கூடை காய்கறி.

மொட்டை அடிச்சிண்டு, நார்மடி கட்டிண்டு உலகம் என்ன சொல்லித்தோ அந்த சம்பிரதாயத்துக்கு கட்டுப்பட்டா. அவ கட்டுப்படாதது நாக்குக்கு மட்டும்தான்.

சுண்ட காய்ச்சின பாலா ரெண்டு சொம்பு சாப்பிடுவா. இருபது பூவன் பழம் திம்பா. காப்படி கண்டலை மடில கட்டிண்டு மென்னு அரைச்சிண்டே இருப்பா. இது தான் ஒரு பொழுது அவளுக்கு.

குழம்பு, ரசம், மோர், மறுபடி குழம்பு, ரசம் மோர்னு ரெண்டு தடவை சாப்பிடுவா.

அவக்கிட்ட இன்னொரு நல்ல குணம் இருந்தது. பசின்னு யார் போய் கேட்டாலும் உடனே எதாவது கொடுத்துடுவா.

ஜாதி வித்தியாசம் கடுமையா இருந்த நாள் அது. ஆனா அவ ஜாதி வித்தியாசம் பார்க்கவே மாட்டா. எல்லா ஜனங்களுக்கும் கொடுப்பா.

தேன் வாங்கிண்டு வரச் சொல்லி குடிசைல இருக்கற குழந்தைகளுக்கு கரண்டி கரண்டியா கொடுப்பா. ஒரு கை தேன் குடிச்சா ரெண்டு நாள் பசி தாங்கலாமாம். அத்தனை சக்தி அதுல இருக்காம்.

தானும் சமைப்பா. என்னையும் சமையல் நன்னா பழக்கிருக்கா.

எங்காத்துக்காரர் என்னைப்பெண் பார்க்க வந்துட்டு என்னை ரசம் பண்ணச் சொன்னார். வாங்கி குடிச்சுட்டு கல்யாணத்துக்கு ஒத்துண்டார். தினம் கார்த்தால இன்னிக்கு என்ன சமைக்கணும்னு சொல்வார். பெசரெட்டும்



பார், சேவைப்பார், இளம் தோசை, கல் தோசைன்னு சொல்வார்.

சோத்தால அழிஞ்ச குடும்பம் எங்களது. எல்லா சொத்தையும் தின்னு குசப்பியாயிடுத்து.

என்னைக் கல்யாணம் பண்ணிக்கும் போது எங்காத்துக்காரருக்கு ரயில்வேல வேலை. ரெண்டாவது கார்டு. மாயவரம், கும்பகோணம் ரயில்.

ஒவ்வொரு ஸ்டேஷனா இறங்கி உளுந்து வடை, ஆமை வடை, மசால் தோசை அப்படீன்னு திம்பார்.

நன்னா இருந்தா தட்டிக் கொடுப்பார்.

பயணிகள் கேன்டின் போய் சாப்பிட்டு வர்றவரைக்கும் விசில் கொடுக்க மாட்டார். நன்னா சாப்பிடுங்கோ நன்னா சாப்பிடுங்கோன்னு உற்சாகப்படுத்துவார்.

வண்டி எங்கயாவது வழில நின்னுடுத்துமனுஷனுக்கு பசி பொறுக்காது.

ஸ்லீப்பர் கட்டை மாத்தணும். ஒரு மணி நேரம் ஆகும்....அப்படீன்னு இன்ஜின் டிரைவர் சொல்ல இவர் ரயில்வே லைன் ஓரமாவே நடந்து வந்து அடுத்த ஸ்டேஷன் போய் புளியோதரை, தேங்காய் சாதம் சாப்பிட ஆரம்பிச்சுட்டாராம்.

இதுக்காக காகிதம் கூட வாங்கினாராம்.

ரெண்டாவது மகாயுத்தம் வந்தது. வெள்ளைக்காரன் அரசாங்க உத்தியோகஸ்தனை ராணுவ சேவைக்குக் கூப்பிட்டான். இது கிளம்பி சிங்கப்பூருக்கு போயிடுத்து.

சிங்கப்பூர்ல மசால் தோசை கிடைக்குமா... மாமிசம் திங்க ஆரம்பிச்சுடுத்து.

மாமிசம் தின்னா புத்தி மாமிசத்துலதான் போகும்.

அங்கேயே ஒரு சினாக்காரிய பார்த்து சேர்த்துண்டுடுத்து. வரவேயில்லை இன்னி வரைக்கும்.

இது தான் என் கதை....''

லட்சமணனைச் சார்ந்த அத்தனை பேரும் அவள் கதையைக் கேட்டு அதிர்ந்து போயிருந்தனர்.

அவள் மீது அங்குள்ள எல்லோருக்கும் பிரியம் படர்ந்தது.

லட்சமணனின் மகனும் மருமகனும் அந்த பார்ப்பனக் கிழவியிடம் மாமி மாமி என்று ஒட்டிக் கொண்டார்கள்.

''எப்பவாவது தெரியாம மேல பட்டா ஒண்ணும் தப்பில்லையே...''

''வந்து கட்டிக்கோடி. உனக்கு தலை பின்னிக்க தெரியலை, தினம் நான் உனக்கு பின்னி விடறேன். விதம் விதமா நான் உனக்கு கொண்டை போட்டு விடறேன். வெள்ளிக்கிழமை என்கிட்ட எண்ணெய் தேய்ச்சுக்கோ.

எண்ணெய் தேச்சுண்ட அன்னிக்கு பகல்ல ஒரு நல்ல தூக்கம் போட்டுரு. நாலு மணிக்கு எழுந்து ஒரு காபி குடிச்சேனா உன் உடம்பு உனக்கே மதமதன்னு இருக்கும். உன் உடம்புலேர்ந்து வர்ற வாசனைக்கு உன் புருஷன் இறங்கிப் போவான்.''

''மாமி, நீங்க என் ஜாதி பாக்கறதில்லை,''

''தொழில் வகையா பிரிஞ்சது தானே ஜாதி. நீயும் நானும் இப்ப ஒரே தொழில் தானே பண்றோம். அப்புறம் என்ன தீண்டாமை. என்னை ஏத்துக்க முடியாதுன்னு நீங்க சொல்லலையே. வாங்க வாங்கன்னு வாய் நிறைய கூப்பிட்டீங்களே. அதுக்கப்புறமும் ஒருத்தர் ஜாதி பார்க்கலாமா...



புருஷன் செத்துப் போய் பன்னெண்டு வருஷம் ஒரு வேளை சோத்துக்கு நாயா அலைஞ்சிருக்கேன். எங்க கல்யாணம் எங்க கருமாதின்னு போய் நிப்பேன். டம்ளரைத் தூக்கிண்டு வீதி வீதியா கிராமம் கிராமமா அலைவேன். இந்த பன்னெண்டு வருஷம் சாப்பிட வாங்கோன்னு யாரும் என்னைக் கூப்பிட்டதில்லை. நன்னா சாப்பிட்டேளான்னு கேட்டதில்லை. ஐயோ சண்டாளி சாப்பிட வந்துட்டாளேன்னுதான் காது நிறைய கேட்டிருக்கேன்.''

''சோறு கிடையாதுன்னு யாராவது சொல்லியிருக்காளா மாமி'' மருமகள் கேட்டாள். அவள் கண்களில் நீர் தளும்பியது.

''நல்லவேளை நம்ம ஊர்ல யாரும் அப்படி சொல்றதில்லை. ஆனா சோறு திங்க வந்துட்டாளேன்னு ஆத்திரத்துல நிறைய அவமானப்படுத்துவா. இங்க நிக்காதே அங்க நிக்காதேன்னு அவமானப்படுத்துவா. இலையில சொத்துன்னு சோறு போடுவா. சோறு போடறவன் யாரோ ஒரு புண்ணியவான். விரட்டறவன் எவனோ ஒரு பைத்தியமா இருப்பான். நல்லவா சோறு போடறபோது கோச்சுக்க மாட்டா. எழுந்திருன்னு அதட்ட மாட்டா. அப்படி அதட்டினவன் பாதி சாப்பாட்டுல ஆனை எழுப்பினவன் உடனே அழிவான்.

நீ என்ன தப்பு வேணா பண்ணு. சாப்பிடறபோது யாரையும் எழுப்பாதே. அது தூங்கறபோது கல்லைத் தூக்கிப் போடறதுக்கு இணையானது''

கிழவி அந்த சோற்றுக்கடை ஜோதியில் கலந்தாள்.

ஒரு தந்திரம் பண்ணுங்கோ. ரெண்டு இட்லி போறும்பா. சட்னி சாம்பார் ஊத்தி ரெண்டு இட்லி போடுங்கோ. கடைசி வில்லை திங்கறபோது கொத்ஸு இருக்கேன்னு சொல்லுங்கோ. வெங்காய சட்னி இப்பத்

தான் அரைச்சேன். புதினா சட்னி கூட இருக்குன்னு சொல்லுங்கோ. ஆறு இட்லி வியாபாரம் ஆகும், அப்பு நம் மசால் தோசை சொல்லட்டுமான்னு கேளுங்கோ... நாம பரிமாறதில இருக்கு அவா சாப்பிடறது.''

அந்த பார்ப்பனக் கிழவி ஏகப்பட்ட சூட்சமங்கள் சொல்லிக் கொடுத்தாள்.

இட்லியின் வடிவைச் சிறிதாக்கினான். ருசியைப் பெரிதாக்கினான். நிறைய காய்கறிகள் நறுக்கிப் போட்டு உப்புமா செய்தான். வெங்காய அடையில் வெங்காயம் வதக்கிய பிறகு போட்டான்.

அந்த வழி முக்கியமான வழியாயிற்று. இந்தச் சோற்றுக் கடைக்காகவே அந்த வழியாகப் பல பேர் வந்தார்கள்.

அங்கே இரண்டு ஃபர்லாங் தாண்டி இருந்த காவிரி ஆற்றின் குறுக்கே அரசாங்கம் மதகு கட்ட ஆரம்பித்தது. அந்த இடத்துக்கு அணைக்கரை என்று பெயர் வந்தது. பனிரெண்டு கதவுகள் உள்ள பெரிய மதகு நாலு வருடத்தில் கட்டப்பட்டது. மதகின்மீது சாலை போடப்பட்டது. அது கும்பகோணம் போகும் வழியாயிற்று. அணைக்கு வேலை செய்ய வந்த ஆட்களை வைத்துக் கொண்டு சாமிநாதன் மாடி ஹோட்டல் கட்டி முடித்தான்.

தண்ணீர் போகும் வாட்டம், காற்று வீசும் வசதி வெளிச்சம் வருகிற விதம் என்று பலதும் யோசித்து பிரியத்துடன் கட்டினான். இரண்டு நாள் பகல் சோற்றுக்கு வராமலேயே இருந்தான். சோற்றுக்கடை இதற்கு வேதனைப்பட்டது. லட்சுமணனுடைய மகன் சோறு எடுத்துக் கொண்டு போய் அங்கேயே பரிமாறினான்.

அந்தக் கட்டிடம் அணைக் கரையிலிருந்து ஐம்பது கஜ தூரத்திலிருந்தது.



பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் ஒரு நாள் இரவு முழுவதும் வேலை நடந்தது. அவன் அம்மாவைத் தவிர எல்லோருமே அவன் உதவிக்கு ஓடினார்கள்.

அதற்கு பதினைந்து நாளைக்குப் பிறகு கட்டிடம் பூர்த்தியாயிற்று. வெள்ளை வெளேர் என்று வெய்யிலில் மின்னியது. நீல பார்டர் உச்சியில் போட மாளிகை போல மாறியது.

''பேர் வைக்கணுமே.'' மருமகள் பேசினாள்.

''சாமி ஹோட்டல்'' லட்சுமணன் ஒரேவார்த்தையில் முடிவு செய்தார்.

பெயர் பலகை அவ்விதமே எழுதப்பட்டது.

மேலே பிள்ளையார் சுழி. அடுத்து சிவமயம். சிவமயத்துக்குக் கீழே அதே அளவில் பாடகச்சேரி. அதற்குக் கீழே சாமி ஹோட்டல். பாடகச்சேரி சாமி ஹோட்டல் என்று தெளிவாக எல்லோருக்கும் புரிந்தது.

லட்சுமணன் சாமியைத் தேடிக் கொண்டு போனார். நாலு நாட்கள் சாமியைத் தேடி ஊர் ஊராய் சுற்றினார். தெருவில் போகிற வருகிற நாயெல்லாம் உற்றுப் பார்த்து மானசீகமாகக் கெஞ்சினார்.

ஐயா எங்கே இருக்காங்கன்னு சொன்னீங்கன்னா உங்க எல்லாரையும் கூப்பிட்டு வச்சு நல்ல சோறா போடறேன்'' நாய்களிடம் பிரியத்துடன் பேசினார்.

மத்தியானம் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது பாடகச்சேரி சாமி லட்சுமணனை உலுக்கி எழுப்பினார்.

''என்னடா ஓட்டல் கட்டிட்டியாடா... நாலைஞ்சு பேர் வந்து சொன்னாங்க. நான் மலை மேல தூங்கப் போயிருந்தேன். பாவம், இவன் ரெண்டு நா ஓடி வந்து மூச்சு முட்ட நிக்கிறான்'' வெள்ளையும் கறுப்புமாய்

27911
4347106

நின்ற நாயைக் காட்டினார். "அப்புறம் நான்தான் சோர்ல போட்டுட்டு வந்தேன். வா, போலாம்."

அவர்கள் நடந்தும், லாரியில் ஏறியும் இரண்டு மணி நேரத்தில் ஊர் வந்து சேர்ந்தார்கள்.

"எப்படிடா இருக்கு வியாபாரம்" ஹோட்டல் வாசலில் நின்று கேட்டார்.

"ஓஹோன்னு இருக்கு, ஐயா."

"ரொம்ப சந்தோஷம். இன்னும் ஓஹோன்னு வரும். உம் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிட்டியா."

"இல்லீங்க."

"பண்ணிடு."

"இது யாரையோ போஸ்டாபீஸ் பையனை நேசிக்கிறாப் போல. ஐயர் ஜாதி போல."

"வேணாம். அந்த பாப்பான் சரியா வர மாட்டான். உன் கூடவே ஒரு ஐயர் பையன் இருக்கானே. அவனுக்கு கொடுத்துரு."

"பொண்ணு என்ன சொல்லுமோ தெரியலையே."

"நான் சொல்றேன். அவ எம் பேச்சு கேப்பா."

அவர் உள்ளே வந்தார். நடுக் கூடத்தில் நின்று கை தட்டினார். நாலு புறமும் கைகளை வீசி ஆசீர்வதித்தார். எல்லா இடங்களையும் சுற்றி சுற்றி வந்தார்.

லட்சுமணன் மருமகளின் உச்சந்தலையில் கை வைத்தார். ஒரு ஜாங்கிரியைப் பாதி கடித்து அவள் கையில் கொடுத்தார்.

லட்சுமணன் மகனைக் கட்டிக் கொண்டார்.

'நான் இருக்கேன். ஒன்னும் கவலைப்படாதே' என்று முதுகு தட்டிக் கொடுத்தார்.



அங்கே பொங்கின முதல் உணவுப் பண்டத்தை தான் கொஞ்சம் சாப்பிட்டார். கொல்லைக்கு எடுத்துக் கொண்டு போய் நாய்களைக் கூடி அழைத்துப் போட்டார்.

"நல்லாருக்கும். எல்லாம் நல்லாருக்கும். எதுவும் நல்லாருக்கும். எப்பவும் நல்லாருக்கும்."

"லட்சுமணா, எங்க நண்பர்களுக்கெல்லாம் நான் தவறாத சோறு போட்டே போயிருக்கு. ரொம்ப சந்தோஷம்கறாங்க. தொடர்ந்து போடு லட்சுமணா."

"ஐயா, நீங்க வாங்க" அவர் கை தட்டி லட்சுமணனின் மகனை அழைத்தார்.

"அங்க தொலைவா நிக்கிறாங்க பார் தயக்கப்பட்டுக்கிட்டு. இலையோடு எடுத்துக்கிட்டுபோய் அங்க வைங்க. மரியாதையான பெரியவர்கிட்ட பேசறாப் போல அவரை சாப்பிடச் சொல்லுங்க. அப்பத்தான் அவரு சாப்பிடுவாரு. நீயும் உங்க வீட்டுக்காரர் கூட போம்மா" மருமகளையும் கூட அனுப்பினார்.

லட்சுமணனின் மகளை அழைத்தார். அவளிடம் இலையில் வைத்து நாலு இட்லி கொடுத்தார்.

"நான் சொல்றவனைக் கட்டிக்கிறியா. ஏன் முழிக்கற? நான் உனக்கு கெடுதல் பண்ணுவேனா. நீ பார்த்து வச்சிருக்கற பாப்பான் சரியில்லை. அவன் கண்ட இடத்துல மேயறவன். துட்டக் கொடு துட்டக் கொடுன்னு உன்னை ரொம்ப இம்சைப்படுத்திருவான். உனக்கு எதுனா ஆச்சுன்னா உங்கப்பா ஆடிப் போயிடுவார். அதனாலதான் சொல்றேன்."

அவர் அவன் முகத்தையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். அவன் அழத் துவங்கினான். ஏதோ முணு முணுப்பாகச் சொன்னான்.

''அதெல்லாம் மறந்துரு. இதெல்லாம் மேட்டரே இல்லை. இதைப் போய் வெளியே பேசிட்டிருக்காத. எல்லா மனுஷாளும் முன்ன பின்ன இருக்கறதுதான்.

சாமிநாதனைக் கட்டிக்கிறியா. ரொம்ப நல்ல பையன். அவங்கம்மா அவனுக்கு எல்லாம் கத்துக் கொடுத்துருவா.'

''என்னா லட்சுமணரே. அப்பா இல்லாத பையனுக்கு அப்பனா நின்னு கேக்கறேன். அவனுக்கு உம் பொண்ணைக் கொடுக்கறியா...?''

''சாமி, நீங்க என்னா சொன்னாலும் செய்யறேன்.''

அங்கே சிறிது நேரம் ஒரு மௌனம் நிலவியது.

''அவங்க கேக்க காணமே'' லட்சுமணனின் மனைவி மெல்ல முணுமுணுத்தாள்.

''அட... இதோ போட்டாங்கடா ஒரு அனுகுண்டு. நான் கேக்க வைக்கிறேன். டேய் தம்பி, இங்க வாடா.''

அவர் சாமிநாதனைக் கூப்பிட்டார். சாமிநாதன் திடு திடுவென்று ஓடிப்போய் அவர் காலில் விழுந்து எழுந்தான்.

அவர் எதிரே கை கட்டி தலை குனிந்து நின்றான்.

'உலகத்துல ஜாதியெல்லாம் கிடையாதுப்பா. நம்ம மனசுக்கேத்த ஆளுங்களோட நாம சேர்ந்துக்கணும் அது தான் நல்லது. நம்ம வட்டம் எதுன்னு பார்த்து உட்கார்ந்துக்கணும். அதான் மரியாதை. நீ உலகம் தெரிஞ்சவன். இந்தப் பொண்ணு ரொம்ப கெட்டிக்காரி. நீங்க ரெண்டு



பேரும் ஒன்னா சேர்ந்திருக்கன்னா ஓயாது உழைக்கிற லட்சுமணனுடைய பிள்ளைக்கும் மருமகளுக்கும் உதவியா இருக்கும். நீ போய் உங்கம்மாவையும் ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டு வா.''

''தெய்வம் தீர்ப்பு சொன்ன பிறகு மனுஷா பேசவாளா'' சாமிநாதன் அம்மா பதறினாள்.

''அப்ப இந்தாங்க தாயே. நீங்களும் பைரவருக்கு சாப்பாடு வைங்க.''

அவளிடம் ஒரு இலை தயிர் சாதத்தைக் கொடுத்தார்.

''எந்த நாய்க்கு போடணும்.''

''நீங்க எதுக்கு நினைக்கறேளோ அதுக்கு.''

கெப்பாய், வயதானதாய் நிற்க முடியாமல் தடுமாறுகிற ஒரு நாய்க்கு சாமிநாதனின் அம்மா சோறு வைத்தாள்.

ரொம்ப சந்தோஷம். அதுக்கு மோட்சம். நல்லவங்க கைச் சோறுக்கு தான் காத்திருந்தது. இந்தாம்மா நீ சாப்பிட்டுட்டு போய் சேரு. அப்புறம் பார்ப்போம்.,'

அந்த நாய் தயிர்ச்சோறு முழுவதும் சாப்பிட்டு விட்டு அந்த இடம் விட்டு வேகமாய் வெளியேறியது.

''இந்தக் காவேரிக் கரை மண்ணு இருக்கே. ரொம்ப இழுப்பு. நாயா பொறந்தாலும் இங்கதான் பொறக்கணும்னு இவங்களுக்கெல்லாம் ஒரு சங்கல்பம். நாமெல்லாம் கூட அடுத்த ஜென்மத்துல இங்கதான் பொறப்போம்.''

''நாயாவா'' சாமிநாதன் அம்மா பயந்தபடியே கேட்டாள்.

''ஆமா'' அதான் கடைசி ஜென்மம். காவேரிக் கரைல பார்க்க வேண்டிய இடங்கள்ளாம் பார்த்துட்டீ

உட்கார வேண்டிய இடங்களெல்லாம் உட்கார்ந்துட்டு பரம திருப்தியா மேல போயிடலாம்.''

''தாய்க்கு கர்மா கிடையாதா.''

''கிடையாது. நோக்கமிருக்கும் போதுதான் ஒரு வேலை கர்மாவாப் போகுது அதாவது நல்லது கெட்டதுன்னு பிரிக்கும் போதுதான் தவறும் சரியும் வருது. வேணும் வேணாங்கற போது வந்தாதான் பாவம் புண்ணியம் வருது. நாய் எந்தத் தொழிலும் பண்றதில்லை. அதாவது எந்த நோக்கமும் இல்லை. அதனால நேர மேலதான்.

''இங்கயேதான் பொறப்போமா.''

''இதைவிட, இந்த சோழ தேசத்தைவிட உலகத்தில் சொர்க்கம் ஏதாவது உண்டா. கண்ணுக்கெட்டின வரைக்கும் பச்சை. எந்நேரமும் பூ, காய், பழம். மழை தப்பினா கொஞ்சம் தடை பிசகும். பன்னெண்டு வருஷத்துக்கு ஒரு தடவைதான் மழை தப்பும். அதுவும் பூமி நல்லா காயணும்னு தப்பும். அப்படி தப்பினா நல்லது. மத்தபடிக்கு மழை பெஞ்சிருச்சு...ஊரு ஊரா பாடிட்டு போலாம். அத்தினி சுகம். அத்தினி வளம்.

இந்த தடவை உளுந்து கூட வரும். துவரை பழுதில்லாம முளைக்கும். அரிசிக்கும் குறைவிருக்காது கரும்பு சாறு கம்மியா இருக்கும்.

மாமி, நாமெல்லாம் தஞ்சாவூர்ல நாயா பொறக்கப் போறோம். கவலையே படாதீங்க. ஒரு நாயா பொறந்து சோழ தேசத்தைப் பார்க்கணும். அப்பதான் முழுமையா பார்க்க முடியும்.

''கல்யாணத்தை எப்பங்க வச்சிக்கலாம்.''

''நாளைக்கே வச்சுக்க.''



''அம்மா, உங்களுக்கு சம்மதங்களா'' லட்சுமணன் மாமியைக் கேட்டார்.

''உங்ககிட்ட எல்லாத்தையும் ஒப்படைச்சாச்சு. இனிமே நீங்க என்ன சொன்னாலும் சரிதான்.''

மறுநாள் காலை சாமிநாதன் புவனாவின் கழுத்தில் மங்கள நாண் பூட்டினான். அன்று தோட்டத்துக்கு வந்த எல்லோருக்கும் தொன்னை நிறைய பால் பாயசம் தரப்பட்டது.

பாடகச்சேரி சாமி சாப்பிடுவதும், படுத்து தூங்குவதும், பாட்டுப் பாடுவதுமாய் மூன்று நாள் பொழுதைக் கழித்தார்.

''ஒட்டலை வீட்ராதீங்கடா, சோறு போடறது தான் சந்தோஷமான தொழில். அன்னக் குத்தம் ஏற்படாம நல்ல சோறா போடுங்க. நல்ல பண்டமா போடுங்க. அப்ப நான் போறேன்''

''என்ன சாமி போறேன்றீங்க'' லட்சுமணன் கவலையோடு பின் தொடர்ந்தார்.

''மெட்ராஸ் போறேன்டா.''

''என்னாங்க இவ்வளவு தொலைவு.''

''சோழ தேசம் பிடிக்கலை போலிருக்கு'' மாமி நடுவே ஒரு வார்த்தை போட்டாள்.

''மெட்ராஸ் என்ன சாதாரண இடமா. தர்மமிகு சென்னை இல்லையா. இப்படி பசேல்னு இருக்காதே தவிர கை ரிக்ஷாவும், ஜட்கா வண்டியும் ஜனோபரமா இருக்குமே தவிர, அதுவும் நல்ல இடம்தான் நமக்கு அங்கதான்னு எழுதியிருக்கு.''

''சாமி அப்பப்ப வருவீங்கல்ல...''

"இனி நான் வந்து என்னடா செய்யப் போறேன். எல்லாம் நல்லபடியா வளர்ந்துட்டிங்களே."

"நீங்க பேசறது ஒண்ணும் நல்லால்ல" லட்சமணன் கவலையோடு பேசினார்

"அட இவனைப் பாருடா. என்னென்னமோ நினைச்சுக்கறான் உன் புள்ளையும் மெட்ராஸ் வரத்தான் போறான். நம்ம பக்கத்துல இருக்கத்தான் போறான். மெட்ராஸைவிட ஒட்ட ஊருக்கு நல்ல இடம் உண்டா."

"சோழ தேசம் சொர்க்கம்னு சொல்வீங்க" லட்சமணனின் மருமகள் கேட்டாள்.

"அட...உங்க மாமனாருக்காக சொன்னேம்மா. அவனுக்கு இதுதான் சொர்க்கம்னேன்."

"நீங்க பேசறது யாருக்கு விளங்குது."

"விளங்கலைன்னா கம்மா இரு" சாமி லட்சமணனை அதட்டிற்று.

"சாமிநாதா நல்லதாய் இன்னும் ரெண்டு கட்டிடம் கட்டிட்டு மெட்ராஸ்க்கு வந்துடு மெட்ராஸ் பக்கம் அடையாறுன்னு கேட்டுட்டு வா. பச்சைப் பசேல்னு தஞ்சாவூர் மாதிரியே இருக்கும். அங்க குடி வந்துடு."

சாமிநாதன் தலையில் பாடகச்சேரி சாமி கை வைத்து ஆசிர்வதித்தார்.

இருமிக் கொண்டே திரும்பிப் பார்க்காமல் ஹோட்டலை விட்டு வெளியேறினார்.

"வழில ஏதனா சாப்பிட்டுண்டா. ஒண்ணும் கொடுக்காம அனுப்பறியே."

சட்டினி தூக்கில் இருபது இட்லியும், கைக்கு கிடைத்த வடைகளையும் அள்ளிப் போட்டு லட்சமணன் மகன் பின்னால் ஓடினான்.



"சாமி, போற வழிக்கு... சாப்பிட வச்சுக்குங்க" மரியாதையாய் நீட்டினான்.

"ரொம்ப சந்தோஷம். ரொம்ப சந்தோஷம். உன் புள்ளைங்களையும் ஓட்டல்லயே வுடு."

"சரி சாமி."

"என்ன படிச்சாலும் இதிலேயே இருக்கட்டும்."

"சரி சாமி."

"சாமிநாதன் மெட்ராஸ் வரது உனக்கு நல்லது. அங்க ராஜாங்கம் பண்ண ஆரம்பிச்சான்னா உனக்கு இங்க காசு நல்லா புரளும். மெட்ராஸுக்கு வந்தா இதே மாதிரி சட்டினில இட்லி போட்டு கொடுடா."

"சரி சாமி."

"ஏண்டா அழுவுற."

"என்னவோ தெரியல்ல. சாமி. உன்னைப் பிரியற மோன்னு ஒரு பயம் இருக்கு."

"ஆமா. அப்படித்தான். நாம என்னா பண்ண முடியும்."

"அதான் சொன்னேனே... நாமல்லாம் சோழ தேசத்தல நாயா சுத்துவோம்னு. நீயும் அடுத்த ஜென்மத்துல பாடகச்சேரிக்கு வந்துடு. மிழி, செம்மங்குடி எங்கயா வது பொறப்போம். ஒண்ணா ஊர் சுத்துவோம் கோயில் கோயிலாப் போவோம். நாம வச்ச மரத்துல நாமளே படுத்து தூங்குவோம் அது ஒரு அருமையான காலம்டா. சொல்லாமல் சொல்லி, பேசாமல் பேசி, எல்லாரும் எல்லாமும் புரிஞ்சுக்குவோம். நம்ம கண்ணுக்கு சகலமும் தெரியும், தேவதையும் தெரியும். பிசாசும் தெரியும். சகலமும் தெரியும். எமனும் தெரியும். அது ரொம்ப அருமையான காலம். அப்ப அங்க பார்ப்போம்டா."

"சாமி" லட்சுமணனின் மகன் ஓடிப்போய் கை களைப் பற்றிக் கொண்டான்.

"உங்கப்பன் கிட்ட சொல்லாத. அவன் ஒடிஞ்சிரு வான். உனக்குள்ளயே வச்சுக்க இங்க வரது போறது எல்லாம் பெருங் கணக்கு. புரிஞ்சுட்டா ரொம்ப சந்தோஷம்."

"ஒரு தடவை கும்புட்டுக்கறேன் சாமி," அவன் தன் நெற்றியை அவர் புறங்காலில் வைத்து அவர் கால்களைக் கெட்டியாய் பற்றிக் கொண்டான்.

அவர் அவன் முதுகில் தட்டி அவனை எழுப்பி ஆரத் தழுவிக் கொண்டார்.

"திரும்பிப் பார்க்காதே ஓட்டலுக்கு போ." அவனைப் புரட்டினார். தள்ளினார்.

அவன் அவ்விதமே செய்தான்.

ஹோட்டலில் பாடகச்சேரி சாமிகளின் படம் மாட் டப்பட்டது. தினம் நாய்களுக்கு சோறு போடப்பட்டது. இரவில் மீந்தவைகளையும் அலைகளை உரக்க அழைத்து அதற்காக உண்டான நீண்ட பலகையில் பரிமாறப் பட்டன.

சாமிநாதன் அணைக்கு மறுபக்கம் நிலம் வாங்கி தோட்டத்தோடு கூடிய அழகான பங்களா கட்டினான்.

லட்சுமணனின் மகனுக்கு மூன்று குழந்தைகளும், சாமிநாதனும் ஒரு பொண்ணும்,பையனும் பிறந்தார்கள்.

இரண்டாவது குழந்தைக்கு மூன்று வயதானபோது காவிரியில் நீராட எல்லோரும் போனார்கள். லட்சுமண னின் மகன் சாமிநாதனின் மகனுக்கு காவிரியில் நீச்சல் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தான். குழந்தைகள் கும்மாளம் போட்டன.



இடுப்பாழம் என்றாலும் காவிரி அடித்துக் கொண்டு போயிற்று. கொள்ளிடத்தில் முழங்கால் தண்ணீர் சுக மாக இருந்தது.

சாமியைப் பற்றி அவ்வப்போது தகவல்கள் வந்து கொண்டிருந்தன.

சாமி சென்னையில் திருவொற்றியூர் என்ற இடத்தில் வாழ்வதாகவும், அங்கே நிறைய பிரபுக்களும், தலைவர்க ளும் சாமியை ஆதரிப்பதாகவும், சாமியால் அதிகம் நடக்க முடியவில்லை என்றும், சாமி இருக்கும் இடத்தில் பெரிய வள்ளலார் மடம் கட்டியிருப்பதாகவும், அங்கே தான் தவறாது திருஅருட்பா பாராயணம் நடப்பதாகவும், சாமி முன்னைவிட ஜொலிப்பாக இருப்பதாகவும், உடம்பு தான் தள்ளாமையொழிய ஏகப்பட்ட அன்பு லீலைகள் செய்வதாகவும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

கும்பகோணத்துக்கு கார்ல போனா நம்ம ஓட்டல்ல தின்னு சாப்பிட்டு போங்கடா. சாப்பிடறதோட நிறுத்தி டாதிங்க. அந்தப் பக்கத்து பைரவருங்களுக்கு வாங்கிப் போங்க. பெரியவங்களுக்கெல்லாம் சோறு போட்டிட எங்க லட்சுமணன் நல்ல நிலைமைக்கு வந்துட்டான்.

எங்க லட்சுமணன் என்று சொன்னது அந்த உரிமை. ஆனந்தப் பிடிப்பு மிகப் பெரிய அழுகையை லட்சுமண னுக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

"இது போறும்டா சாமி இந்த சந்தோஷம் போறும். இனிமே அதை பார்க்கணும்னு அவசியமில்லை. இனிமே நான் சாமியப்பார்த்து பேசறதுக்கு எதுவுமில்லை. வாழ்ந் ததும், வளர்ந்ததும் எனக்கு நிறைவா போயிடுச்சு.

உலகத்துலயே ரொம்ப அற்புதமான வேலை சோத் துக் கடைதான், எல்லா மனுஷனும் சோறு சாப்பிட்டு தான் ஆவணும்.சோறு சாப்பிட்டாதான்மனுஷா காசுக்கு தான் சோறு விக்கிறம். ஆனா நடுவுல பத்து பேருக்குப்

பொங்கற சோத்துலயே தானம் பண்ணிட முடியும், சாமி சொல்ற மாதிரி ஆனந்தமா பொங்கி அன்போட பரிமாறினா ஒவ்வொரு நாளும் யாகமா தான் இருக்கும். இந்த மாதிரி யாகத்தை சாமி துணையில்லாம யாரும் பண்ண முடியாது.''

ஒவ்வொரு தடவையும் கற்பூரத்தைப்போட்டு அடுப்பு மூட்டறப்போ நல்ல பக்குவத்தோட நீது வராதபண்டமா எனக்கு மாத்திக் கொடுன்னு அக்னி பகவானை வேண்டறேன். முறத்துல அரிசி அள்ளி கரு தண்ணில சாய்க்கறப்போ சிவோஹம்னும் தான் சாய்க்கிறேன். என்னால ஓட்டலுக்கு லீவு விட முடியலை. குறைந்த பட்சம் ரெண்டு பேராவது சாப்பிட்டாலனும். ஒருத்தருக்காவது தானம் பண்ணியாகனும். இது செய்யாத எனக்கு சோறு இறங்காது.

இப்படி செய்யறதுல எனக்கு கர்வம் கிடையாது. கர்வம் வந்தா சோதனை வந்துடும்.

ஓட்டல் வேலை கம்பில நடக்கிற வித்தை. ஒருத்தன் ஒரு நாள் குமட்டி வாந்தி எடுத்தாலும் ஐயய்ய...அந்த ஓட்டலான்னு வாங்க, வளைச்சு வழிச்சு தின்னதும் மறந்து போயிடும்.

கடையை மூடி பானையைக் கவுத்து வைக்கறப்ப அப்பாடான்னு இருக்கும்.

நான் என் சாமர்த்தியத்துலயே ஓட்டலை. அது பாட கச்சேரி சாமி அருள். என் புள்ளை, என் மாப்பிள்ளை இந்தத் தொழில்லதான் இருக்கணும்னு நினைக்கிறேன். வேற எந்தத் தொழில் வேணா ஏறலாம்—இறங்கலாம், இந்தத் தொழிலுக்கு அழிவே கிடையாது. நாம சத்தியமா இருந்தா இந்தத் தொழில்ல தோல்வியே கிடையாது.

''சாமிநாதா, என்னவோ பேசணும்னு சொன்னியே



பேசு.'' லட்சுமணன் முகத்தில் அன்பும், நன்றியும், கருணையும் மிதந்தன,

''நான் மெட்ராஸ் போலாம்னு இருக்கேன்மாமா.''
''சாமியை பார்க்கவா.''

''ஆமாம். அதுவும் ஒரு காரணம். நான் மெட்ராஸ்ல ஹோட்டல் போடலாம்னு இருக்கேன்,''

''உங்கம்மாகிட்ட சொன்னியா.''

''உங்ககிட்ட சொல்லச் சொன்னாங்க. நீங்க சரின்னுட்டா போகச் சொன்னாங்க.''

ஏன் மெட்ராஸ்...கும்பகோணத்துல போடேன்.''

''கும்பகோணத்துல இருக்கறவங்கல்லாம் மெட்ராஸுக்கு வேலைக்கு போறாங்க, மெட்ராஸ் பெரிசா வருது ஒவ்வொரு வருஷமும் நிலம், வீடு, விலை ஏறிட்டே இருக்கு. சாமி சொன்ன மாதிரி நான் அடையாறு பக்கம் போகப் போறேன். தங்கற வசதியோட அதாவது லாட்ஜோட ஹோட்டல் கட்டப் போறேன். கடன் வாங்கித் தான் செய்யப் போறேன். ஒரு வருஷம் ஆவும். உங்க ஆசீர்வாதம் வேணும்''

''காசு என்ன வச்சிருக்கே.''

''உங்க பொண்ணு கழுத்துல நீங்க போட்ட நகை என் கையில முப்பதாயிரம். இதான்காக ஒரு லட்ச ரூபா கடன் கொடுத்தீங்கன்னா மாசம் பத்தாயிரமா திருப்பி கொடுத்துருவேன்.''

''அதுக்கொன்னும் அவசரமில்லை. ஆனா லட்ச ரூபா உனக்கு கொடுத்தா இங்கன தொழில் முடங்கிப் போவுமோன்னு பயமா இருக்கு. சுத்தமா வழிச்சு கொடுக்க வேண்டியிருக்கும். ஐம்பது ரூபா பத்தாதா?''

''நான் கேட்டதே குறைச்சல் மாமா, உங்க நிலைமை தெரிஞ்சு குறைச்சலா கேட்டேன்.''

''கடவுளே... நீ கேட்டு நான் கொடுக்கலைன்னா தப்பா போவுமேப்பா.''

''தயவு செய்து அப்படியெல்லாம் நினைக்காதீங்க. அப்படி காசு புரட்டமுடியலைன்னா ஹோட்டல் லீசுக்கு எடுத்துக்கறேன்.''

''நிலம் விலை ஏறிட்டேயிருக்குன்றியே. ஓட்டல் நடத்தி சொந்தமா நிலம் வாங்க நாளாயிடுமே.''

''அப்பா, நீங்க சாமிநாதனுக்கு காசு கொடுங்க. நாம எப்படியாவது சமாளிச்சுக்கலாம்.''

''எப்படி சமாளிப்ப.''

''எங்க மாமியார் பட்டுநூல்காரம்மா ஏதோ வீடு வித்து தரேன்னாங்க. இருபதாயிரம் வரும்னாங்க. அதை வச்சு புரட்டிக்கலாம். நீ சாமிநாதனைக் காசோடு அனுப்பு.''

''உங்க மாமியார் வீடு வித்த பிறகு அனுப்பலாமா?''

''முதல்ல அவரை அனுப்புப்பா. கையில காசு வந்தாத்தானே அவருக்கு தெம்பா இருக்கும்.''

மனைவியை அங்கேயே விட்டு விட்டு சாமிநாதன் மட்டும் வண்டி ஏறினான். வங்கியில் காசோலையை வைத்து கணக்கு திறந்தான். நிலத்துக்கு அலைந்தான். அடையாறு தென்னந்தோப்பாக இருந்தது. மந்தை வெளி புன்னைவனக் காடாக இருந்தது. நடுநடுவே கீரை தோட்டம் தெரிந்தது. மௌன்ட்ரோடுதான் ஜனங்கள் கூடும் இடமாகக் காட்சி அளித்தது. திருவல்லிக்கேணியில் கடற்கரைக்குப் போகும் வழியில் ஒரு ஓட்டு வீடு கிடைத்தது. ஆனால் இடத்தை விற்க மறுத்து விட்டார்கள்.



இடித்து கட்டிக் கொள்ளச் சொல்லி ஐம்பது வருடம் லீசுக்கு விற்றார்கள். இருபதாயிரம் முன் பணம் கேட்டார்கள்.

சாமிநாதன் திருவெற்றியூருக்கு ஓடினான். கடற்கரைச் சாலையிலிருந்து பிரியும் ஒரு குறுக்குச் சாலையில் சத்திய ஞான சபை என்று உயரமான கட்டிடம் ஒன்று இருந்தது.

சுவாமி நடுஹாலில் சரிவான நாற்காலியில் சிம்மம் போல் உட்கார்ந்திருந்தார்.

''அடேய்...சாமிநாதா...எங்கப்பா, என் ராஜா ஓடியாடா'' என்று உட்கார்ந்தபடியே கை விரித்து கூப்பிட்டார்.

சாமிநாதன் ஓடிப்போய் அவரைக் கட்டிக் கொண்டான். அவர் மடியில் குழந்தை போல் தேம்பி தேம்பி அழுதான்.

பாடகச்சேரி சாமிகளின் கண்ணிலிருந்து கண்ணீர் ஆறாய் பெருகியது. இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் தழுவியபடி வெகு நேரம் அமைதியாய் உட்கார்ந்திருந்தார்கள்.

''இதுக்கு பேர்தான் அன்பு. இப்படி அன்பு பொங்கும் போது என்னத்த பேச... அப்படி பேசினாதான் தீர்ந்துடுமா.''

''சாமிநாதா, என்னை எதுனா கேட்க வந்திருக்கியா. நீ எது பண்ணாலும் சரியா வரும்டா உன்னால தப்பா ஒரு காரியம் பண்ண முடியாது. எதிர்க்கரைல நின்னு நடுவுல குளம் இருக்க என்னைப் பார்த்து கை கூப்பி அழுதே பார்...பத்து வருஷம் முன்னாடி. அப்பமே நீ சரியாயிட்டே. இருந்தாலும் சக்தி இருக்கிற நம்ம

தோழர்களுக்கு நீ யாருன்னு தெரியவேண்டாமா. அடேய் வாசல்ல நிக்கிறவங்களே, உள்ளவாங்கப்பா.''

ஏழெட்டு நாய்கள் தயங்கி உள்ளே நுழைந்தன. வாலாட்டின. சாமிநாதன் அவைகளைப் பார்த்து கை கூப்பினான். அவைகள் அவனை முகர்ந்து பார்த்து நகர்ந்து போயின. ஒரு நாய் மட்டும் ரொம்ப சந்தோஷம் என்பதாய் ஊளை விட்டது.

''உன்னைத்தெரியுமாம் அவனுக்கு'' சாமி அந்தப்பெண் நாய் பார்த்து சந்தோஷமாய் கை கொட்டினார்.

''என்னா தெரியுமோ...எந்தஜென்மத்துல தெரியுமோ. அதுங்களுக்கு இருக்கிற அறிவு நமக்கு இல்லை. அதுங்க கண்ணுக்குப் படறது நம்ம கண்ணுக்குப்படறதில்லை. என்னா நான் சொல்றது.''

''ஆமாசாமி.'

''சரி, நீ சொல்ல வந்ததைச் சொல்லு.''

சாமிநாதன் தன் நிலைமையைச் சொன்னான்.

''லட்சருபாயில இருபது போச்சுன்னா மிச்சம் எண்பது வச்சிருக்க இல்ல...''

''ஆமா சாமி திருவல்லிக்கேணி பாதி அடையாறுல பாதி போடு. ரெண்டு வருஷத்துல எல்லாம் வளர்ந்துடும். திருவல்லிக்கேணியை பிடிமான வச்சுக்கிட்டு அடையாறில கட்டிடம் கட்டு. நேரம் பார்த்து டக்குன்னு அடையாறுக்கு தாவிடு.''

''சரி சாமி.''

'' மறுபடி சொல்றேன் உன்னால தப்பா யோசிக்க முடியாது. தப்பா எதுவும் செய்ய முடியாது. நீ எது செய்தாலும் சரியா வரும்.''



''இல்லீங்க. மனசு நல்லாவேயில்லை. கெட்ட கெட்ட கனவா வர்றது.''

''உனக்கு என்னடா கெட்ட கனவு.''

''நான் பீச்சுல உட்கார்ந்திருக்கறேன். ஒரு இமிங்கலம் கரையேறி நடந்து வர்றது. நான் எழுந்து ஓடறேன். என் பின்னாலேயே துணி பறக்க துரத்திட்டு வர்றது. மீன் எப்படி ஓடும், மீனுக்கு எப்படி துணி பறக்கும். எனக்கு ஒண்ணும் புரியலை. ஆனா பயம். கனவுலகூட உங்களைத்தான் நினைச்சுக்கறேன் உங்களைத்தான் சொல்றேன்.''

''அப்புறம் என்னடா பயம். நீ எது வந்தாலும் சமாளிப்பே.''

''எதுனா வரப் போவுதா சாமி.''

''உங்கப்பா வருவாரோ?''

''இருக்கும். சாமி...''

''உங்கப்பா உங்கம்மாவைத் தேடிக்கிட்டு வருவாராயிருக்கும்.''

''அப்பாவா, எங்கப்பாவா வந்தா நான் என்ன செய்யட்டும் சாமி.''

''எத்துக்கடா. இத்தோட அது ஒண்ணு பத்தோட பதினொன்னு அவர் நாய்களைச் சுட்டிக் காட்டினார்.

''அவர் ரொம்ப ஆத்திரமான மனுஷன் சாமி.''

''ஆத்திரமெல்லாம் சிங்கப்பூர்லயே செலவாயிப் போச்சு. ஆமா உன் பொண்ணு எங்கே?'

''தாத்தாகிட்டே இருக்கா.'

''குழந்தையை இங்கே இட்டாந்து படிக்கலைடா.''

''சரி சாமி. என் மாமனார் லட்சுமணன் பத்தி நீங்க ஒண்ணுமே பேசலையே.''

''தினம் பேசிட்டுதானே இருக்கேன். அப்புறம் உன் கிட்ட என்ன சொல்றது...?''

''நான் கடை திறந்தா வருவீங்களா.''

''பைரவருக்கு சோறு போடறதுன்னா வரேன்.'

''இதை நீங்க சொல்லணுமா. மெட்ராஸ் இறங்கின தும் முத வேலையா அதான் செய்தேன். ஒரு தாய், நாலு குழந்தைகளுமா கண்ணுல பட்டுது நல்ல நெய் ரோஸ்ட் ஒண்ணு ஆர்டர் பண்ணி சட்னி சாம்பாரோட அவங்க ளுக்கு கொடுத்தேன்.

'சொன்னாங்க. சொன்னாங்க. இனிமே அப்படி செய்யாதே.''

''ஏன் சாமி.''

''மெட்ராஸ் ஒரு போக்கிரித்தனமான ஊர். எது செஞ்சாலும் குறை சொல்ல இருபது பேர் நிப்பான். நம்மகிட்ட சோறு தின்னுட்டு நம்மளையே வைத்தியம் னுவான். வபடு சாஸ்தி. வெட்டிப் பேச்சு அதிகம். வேலை இருக்கிற மாதிரி நடிக்கிறாங்களே தவிர ஒரு, வேலையும் கிடையாது.

நாட்டுப்புறத்தான் பக்கத்துல வந்தா ரெண்டு ஐயருங் களும் இங்கிலீஷ் பேசிக்கிறாங்க.''

''உங்ககிட்ட அப்படிப் பேசினாங்களா சாமி.''

''நான் விடுவேனா... ப்ரெஞ்ச்ல பேசினேன், பயந்துட் டானுங்க. தர்மத்தை இந்த ஊர்ல கொஞ்சம் அடக்கமா செய். நெய் ரோஸ்ட் வாங்கி தாய்க்கு போட்டா ரெண்டு ஐயருங்க வந்து இது தப்பும்பான். அகத்திக் கீரை பசு மாட்டுக்குத்தான் போடணும். எருமைக்கு போடக் கூடாதும்பான். அவருக்கு கொடுக்கலாம். இவருக்கு கொடுக்கலாம்னு பார்க்காதே. எல்லாருக்கும் கொடு. இது



தான் ஹோட்டல் காரனோட குறிக்கோளா இருக்க ணும்.''

''உங்கப்பா வந்தா பயப்படாதே சாமிநாதா. அது செத்து சுண்ணாம்பாய் வருது. உங்கம்மாவை நினைச் சுட்டு வருது. ஓரமா உட்கார வச்சு சோறு போடு. எல் லாம் தெரிஞ்ச மாதிரி உனக்கு புத்தி சொல்ல வரும். சரி சரின்ற மாதிரி கேட்டுக்க. உனக்குத் தெரியும் என்னா செய்யணும்னு. உன்னால தப்பு பண்ண முடியாது.''

''டேய் சாமிநாதா''

''சொல்லுங்க சாமி.''

''உன் பையனை என்னடா படிக்க வைக்கப்போற...''

''நீங்க சொல்லுங்க சாமி.''

''வெளிநாட்டுக்கு அனுப்பி ஒட்டல் தொழிலுக்கு படி[illegible]க வை. உங்கப்பன் அதுக்கு உதவியா இருப்பான்.''

''எங்கப்பாவ சேர்த்துக்கச் சொல்றீங்களா.''

'' சிறு துரும்பும் பல் குத்த உதவும்.''

''பயமா இருக்கே சாமி.''

''[illegible]ாக்கடைக்கு எது போக்கிடம். அது உங்கிட்ட தான் வ[illegible]ரும். உன் கூடவே நான் இருக்கேன். பயப்படாத போய் வா[illegible].''

சாமி நான்[illegible] உங்களுக்கு ஏதாவது செய்யணுமா.''

''வேணும்ன[illegible]ா கேட்கறேன் போ.''

சாமிநாதன் [illegible]அவரைப் பலமுறை நமஸ்கரித்து திரு வல்லிக்கேணி திரும்[illegible]னான். ஒப்பந்தம் முடித்தான். கும்பகோணத்து சமை[illegible]யற்காரர்களைக் கடிதம் போட்டு

சென்னைக்கு வரவழைத்து பத்தே நாளில் முகப்பை மாற்றிக் கட்டி உள்ளே உயரப் புகைப்போக்கி வைத்து அடுப்புகள் கட்டி நல்ல நாள் பார்த்து ஹோட்டல் துவங்கினான்.

ஊரிலிருந்து அம்மாவும், மனைவியும், லட்சுமணனும் அவர் மனைவியும் சென்னை வந்திருந்தார்கள். ஹோட்டலைப் பார்த்து லட்சுமணன் ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

சலவைக்கல் கல்லாவையும், பித்தளை பிடி போட்ட தடுப்பு வரிசையையும் பார்த்து வியந்து போனார். பெரிய பெரிய நிலைக் கண்ணாடிகளின் முன் போய் நின்று தடவிக் கொடுத்தார். மேடை அடுப்புகளை ஆச்சரியத்தோடு பார்த்தார்.

திதாய் இறக்கி வைத்த ரோஸ்மில்க், பாதாம்கீர் குளிர்ப் பெட்டியைக் கண்டு ஆனந்தப்பட்டார். நாற்காலியில் உட்கார்ந்து காகிதக் குழாயில் நாலைந்து கப் ரோஸ்மில்க் உறிஞ்சிக் குடித்தார்.

சாமி ஹோட்டலுக்கு வருவது தெரிந்து ஒரு ஓரமாய் போய் நின்று கொண்டார். சாமி வந்ததும் போய் காலில் விழுந்தார்.

அவர் எழுந்து நிற்க இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் உற்றுப் பார்த்துக் கொண்டார்கள்.

"சந்தோஷம்தானா" சாமி கேட்டது.

"ரொம்ப" பதிலளித்தார்.

"வேறென்ன வேலை..."

"உம்பேரைச் சொல்றதுதான்,"

"சொல்லிக்கிட்டிரு."

"நீங்க நல்லா இருக்கீங்களா..."



"இந்த நாய்க்கு ஒரு குறைவுமில்லை. நானும் உன்னை மாதிரி ஒவ்வொரு தெருவா பாத்துக்கிட்டிருக்கேன்"

"உனக்குத்தான் எல்லாம் தெரியுமே சாமி."

"தெரிஞ்சாலும் காத்துக்கிட்டிருக்கணும்."

லட்சுமணன் சிரித்தார்.

சாமியும் சிரித்தது.

லட்சுமணன் கையைப் பிடித்துக் கொண்டு சாமி அடுக்களைக்குள் புகுந்தது. கற்பூரம் ஏற்றி அடுப்பில் போட்டது.

புவனா பால் பாத்திரத்தை அடுப்பில் வைத்தாள்.

சமையற் கலைஞர்கள் இட்லிப் பானையைத் தூக்கி வைத்தார்கள். ஒரே நேரத்தில் நாற்பது இட்லி என்று பெருமை பொங்க கூறினார்கள்.

சாமி ஹோட்டலின் எல்லா மூலைகளுக்கும் சென்று கை வீசியது. எல்லா மேஜைகளையும் தொட்டு ஆசீர்வதித்தது. கல்லாவில் உட்கார்ந்து காபி சாப்பிட்டது.

முதல் நாற்பத்தோரு இட்லிகளை திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் வாழையிலை போட்டு அடுக்கி சட்னியும் சாம்பாரும் ஊற்றி வாங்க வாங்க என்று கூப்பிட்டது.

நிறைய நாய்கள் தாவி ஓடி வந்தன. சுற்றி நின்று கொண்டன.

பாடகச்சேரி சாமிகள் எல்லா நாய்களையும் உற்றுப் பார்த்தார். சாப்பிடுங்க என்றார்.

அவைகள் பரிவோடு மிக வேகமாக உண்ணத் துவங்கின.

சாமி சந்தோஷத்தில் கை கொட்டினார்.

"நாம போட்டா நாய் சாப்பிடணும். நம்ம போட்டதை நாயும் சாப்பிடலைன்னு வச்சுக்க,நமக்கு கதி மோட்சமே கிடையாது."

சாமி எல்லோரிடமும் விடை பெற்று நகர்ந்தது.

போகும்முன் மறுபடி உள்ளே வந்து லட்சுமணனைக் கட்டிக் கொண்டது.

"அப்ப பார்ப்பம்" என்று உரக்கச் சொன்னது.

லட்சுமணன் சிரித்தார். சரி என்று தலையாட்டினார். இரண்டு பேரும் ஒருவரையொருவர் உற்றுப் பார்த்துக் கொண்டனர். சாமி வாய்விட்டுச் சிரித்தது. லட்சுமணனும் சிரித்தார்.

அன்று இரவு மெயிலில் லட்சுமணன் ஊருக்குக் கிளம்பினார்.

அம்மாவும் மனைவியும் சாமிநாதன் பார்த்த வீட்டில் சாமான்களை அடுக்கத் துவங்கினார்கள்.

ஹோட்டல் வாசலில் ஒரு ஜட்கா வண்டி வந்து நின்றது. ஆறேழு தகரப் பெட்டிகளுடன் சாமிநாதனின் அப்பா வந்து இறங்கினார்.

சமையல் சாமா ஐயரை சாமிநாதன் கல்லாவில் போய் உட்காரச் சொன்னான்.

"இது உம்ம ஹோட்டல் மாதிரி நடந்துக்கும்" என்று சொல்லிவிட்டு ஒரு டேபிளில் போய் பாதாம்கீர் சாப்பிடுவது போல் உட்கார்ந்து கொண்டான்.

"வேர் இஸ் மை ஸன் சாமிநாதன்" அந்த மனிதர் உள்ளே நுழைந்து இடுப்பில் கை வைத்து அதிகாரமாய் கேட்டார்.

"இங்க யாரும் வெள்ளைக்கார இல்லையே. இங்க



இருக்கறவா எல்லாரும் கும்மோணம்தான்." சாமா ஐயர் அடக்கமாய் பேசுவது போல் பதில் சொன்னார்.

"சாமிநாதன்கறவர் இங்க இருக்காரா..."

"நீங்க யாரு."

"நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும். சாமிநாதன் எங்கே."

"எல்லாரும் கேக்கற கேள்விக்கு பதில் சொல்லவா நான் ஓட்டல் வச்சிருக்கேன். இட்லி, வடை, பூரி, பொங்கல் எல்லாம் இருக்கு. சாப்பிட்டு போங்க."

"இது சாமிநாதன் ஹோட்டல்தானே."

"நீர் யாரு?"

"அவனுடைய அப்பா."

"அவன் அப்பா பத்தி எங்கிட்ட சொன்னதேயில்லையே. அவன் அம்மாவத் தெரியும்."

"அவ இங்கதான் இருக்காளா?"

"எவ..."

"என் வொய்ஃப்."

"நீங்க யாரு...உங்க பேர் என்ன...?"

"என்பேர் கிட்டப்பா. கிருஷ்ணமூர்த்தின்னு பேரு. கிட்டப்பான்னுதான் கூப்பிடுவா."

"எங்கயாவது பஜார்லேர்ந்து வரேளா. நிறைய டிரங்குப்பெட்டியா இருக்கு."

"நான் சிங்கப்பூர்லேர்ந்து வரேன்."

"அப்படியா. வெள்ளைக்காரன் பின்னாடி போனவாளா."

கிட்டப்பா அதற்கு பதில் சொல்லவில்லை. ஹோட

டலுக்குள் நுழைந்து சுற்றுமுற்றுப் பார்த்தார். சாமிநாதன் மீது பார்வையை ஒரிரு கணங்கள் நிறுத்தினார்.

''ஒரு மசால்தோசை, ஒரு காபி'' என்று கல்லாவில் உத்தரவிட்டு உள்ளேபோய் மின்விசிறி கீழ் இருக்கும் நாற்காலி பார்த்து உட்கார்ந்து கொண்டார். அவர் சாப்பிட்டு முடிக்கும்வரை சாமிநாதன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பாடகச்சேரி சாமியின் கட்டளையால்தான் இவரை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். முடிவு அவனுடையதாக இருந்தால் நிச்சயம் மறுத்திருப்பான். எங்க வேணா போ. இங்கே வராதே என்று சொல்லியிருப்பான் இப்போது வேறு வழியில்லை. குருவின் பேச்சை மீறுவது சரியில்லை. காரணமில்லாமல் சாமி சேர்த்துக் கொள்ளச் சொல்லியிருக்காது.

''திருவல்லிக்கேணிக்கு இந்த ஹோட்டல் அதிகம் தான். இந்த சலவைக்கல் டேபிள்ளாம் ரொம்ப நாள் வரும்.''

அவர் தனக்குத்தானே உரத்துப் பேசிக்கொண்டார்.

சாமிநாதன் எழுந்து அவருக்கு முன்னால் போய் அமர்ந்து கொண்டான் அவர் வாய்க்குள் மசால்தோசையைத் திணித்துக் கொள்ளும்வரை காத்திருந்தான்.

''நான்தான் சாமிநாதன். உங்க பிள்ளை.'' கையைக் கட்டிக்கொண்டு பேசினான்.

அவர் திகைத்தார். அவசரமாக தின்றார். விழுங்கிவிட்டு எழுந்து நின்றார். இடது கையால் அவன் தோளைத் தொட்டார். அழத் துவங்கினார்

அவர்கள் இரண்டுபேர் மனக்கொதிப்பும் அடங்கி அரைநாழி பிடித்தது.



அம்மாஜுரம் வந்தாற்போல ஆகிவிட்டாள். சிறிது நேரம் அழுதுவிட்டு உள்ளேபோய் கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

புவனாவுக்கு மாமியாரின் வேதனை புரிந்து விட்டது. அருகே போய் அமர்ந்து தலையைத் தடவி, முதுகைத் தடவி ஆறுதல் சொன்னாள்.

அம்மாவுக்கு அந்த அன்பு பிடித்திருந்தது. அந்த அரவணைப்பு தேவைப்பட்டது.

''ஜாதி என்னடி ஜாதி. உலகத்துல ரெண்டே ஜாதி தான். நல்லவா கெட்டவான்னு ரெண்டே பிரிவுதான். ஆறின புண்ணைக்கிளறின மாதிரி இவன் எதுக்கு இப்ப வந்து நிக்கறான்னு புரியலை.''

திகைப்போடு பேசினாள்.

ஆனா அப்பா சாமர்த்தியசாலி. ''நீ இருக்கிற திசை பார்த்து மன்னிப்பு கேட்டுக்கறேன். நேர பார்த்துப் பேசினா உனக்கு கூச்சமாயிருக்கும். தர்மசங்கடமா இருக்கும். நீ எத்தனை கஷ்டப்பட்டிருப்பேன்னு நன்னா எனக்கு தெரியறது.''

''போன இடத்துல உடம்பு சரியில்லாம விஷஜுரம் வந்து பிழைக்கறதே பெரும் பாடாயிடுத்து.''

தொடர்ச்சியாய் நிறைய பொய் சொன்னார். அந்த சினாக்காரியைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. ஆனால் மிகப் பெரிய ஹோட்டலில் காபி மேனேஜராய் இருந்ததாய் சொன்னார்.

ஹோட்டல் மேல் மாடியில் உள்ள அறையைத் தன் அறையாய் எடுத்துக் கொண்டார்.

ஒரு மாதம் எல்லாவற்றையும் மிகக் கூர்மையாகக் கவனித்தார். எவரோடும் அதிகம் பேசாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார்.

சாமிநாதன் உள்ளே வந்தால் எழுந்து நின்று வணக்கம் சொன்னார்.

"கல்கத்தா ஸ்வீட் போடலாமே. வெறும் கோதுமை அல்வாவும், குலோப்ஜாமூனும் தானே விக்கறது. ஜாங்கிரி சீக்கிரம் கெட்டுப் போறது. மைசூர்பாக் கெட்டுப் போகலை. பாதாம் ஹல்வா அடிக்கடி போட முடியாது. இது எதுவுமே பார்வைக்கு நன்னா இல்லை. சிவப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளைன்னு பாலைத் திரிச்சு சின்ன உருண்டையா பண்ணி ஜீராவுல தோய்ச்சு எடுத்துருவான் பார்க்க நன்னாயிருக்கும். வாங்கத் தோணும். ஒரு தடவை வாங்கிட்டா திரும்பத் திரும்ப வருவான். சௌகார் பேட்டைல இது பண்ற ஆட்கள் இருக்கா நான் கூட்டிண்டு வரட்டுமா."

அவர் ஆட்களோடு அவர்கள் செய்த இனிப்பு வகைகளையும் இரண்டு வீசை எடுத்து வந்தார். இரவு கடை பரப்பினார்.

ஹோட்டல் ஆட்கள் சூழ்ந்து கொண்டு நின்றார்கள் பேஷ் பேஷ் என்று பாராட்டினார்கள்.

கல்லாவின் இடதுபுறம் அதை ஒட்டி ஒரு கண்ணாடி அலமாரி செய்யப்பட்டது. பின்பக்கமும் மேலும் நிலைக் கண்ணாடிகள் பொருத்தப்பட்டன.

ஒரே விதமான இனிப்பை விதம்விதமான வடிவங்களில் செய்து வித விதமான பெயர் சூட்டப்பட்டது.

திருவல்லிக்கேணி முழுவதும் இப்படி இனிப்பு இருப்பது துண்டு பிரசுரம் மூலமாய் தெரிவிக்கப்பட்டது.

கூட்டம் அலைமோதியது. இனிப்போடு தோசை அதிகம் போயிற்று. விசேஷ நாட்களில் முப்பது கிலோ இனிப்பு விற்பனையாயிற்று.



கிட்டப்பாவா கொக்கா என்று அப்பா கொக்கரிக்க ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் தட்டு எடுக்கிற பையன்களை அதட்ட ஆரம்பித்தார். பிறகு மெல்ல மெல்ல முன்னேறினார்.

சாமிநாதன் அடையாறில் நிலம் வாங்கினான். அப்பாவை அருகே குடி வைத்தான். நகரத்தார்களிடம் கடன் வாங்கி உடனே கட்டிட வேலை ஆரம்பித்தான்.

அவன் கட்டிட வேலை ஆரம்பித்த மூன்றாம் நாள் கும்பகோணத்திலிருந்து செய்தி வந்தது.

லட்சுமணன் மாரடைப்பால் காலமானார் என்று தந்தி வந்தது.

கொதிக்கிற எண்ணெய்ச் சட்டி கவிழ்ந்தது போல வீடு அலறித் தவித்தது. சாமிநாதன் கார் ஏற்பாடு செய்தான். அப்பாவை மட்டும் விட்டு விட்டு மனைவி குழந்தைகளோடு அம்மாவையும் அழைத்துக் கொண்டு கும்பகோணம் ஓடினான்.

அவர்களைப் பார்த்ததும் அந்தக் குடும்பம் தவித்தது. லட்சுமணனின் மகன் இரண்டு கைகளையும் விரித்து அழுதான். சாமிநாதன் இறுகத் தழுவிக் கொண்டான்.

"அனாதையாயிட்டோம் சாமிநாதா. காலைல ஆறேழு நாய்களுக்கு சோறு போட்டுட்டு அதுங்களுக்கு நடுவுல அசையாத உட்கார்ந்திருந்தார்.

காத்தால எம்ப்பா உக்காந்துருக்க. உள்ள போன்னு சொன்னேன். பாத்ரூம் பக்கம் போயிட்டு கைகால் கழுவி சுத்தம் செய்துட்டு வந்தார். நெத்தி நிறைய விபூதி இட்டுக்கிட்டாரு. என் பொண்டாட்டியக் கூப்பிட்டு நான் தூங்கப்போறேம்மா. என்னை எழுப்பாதேன்னாரு.
உக்கார்ந்து சிவபுராணம் சொல்லிட்டேயிருந்தாரு. பாட்டு கேட்டுட்டே இருந்தது. திடீர்னு சத்தமே இல்லை.

பாட்டு நின்னுருந்தது. சரி தூங்கிட்டார் போலிருக்குன்னு கண்டமரையே கவனிச்சிட்டிருந்தேன்.

என்னமோ தப்பு பண்றேன். எதையோ மறக்கிறேன். எதுவோ சரியில்லை அப்படின்னு உள்ள ஒரு உதைப்பு. கலவரம். பால் திரிஞ்சிடுச்சான்னு பாக்கறேன். அடுப்பு சரிஞ்சிடுச்சான்னு பாக்கறேன். சாமி வந்துருக்காரு. நாம கவனிக்காம இருக்கிறமோன்னு வாசலுக்கு ஓட றேன். குழந்தைகளுக்கு ஏதோ கஷ்டம். அதான் நம்மளை புரட்டறதுன்னு பசங்க தூங்கற இடத்துக்கு பாக்கறேன்.

ஞாயிந்துக்கிழமை, பசங்க நல்லா தூங்குது. உனக்குத்தான் ஏதாவது கஷ்டமா. புவனாவுக்குத்தான் ஏதாவது பிரச்சினையா, சாமி விளக்கு தூண்டிவிட்டு ரெண்டு ஸ்பூன் எண்ணெய் விட்டேன்.

வழக்கமாக படத்துல சிரிச்சிட்டிருக்கிற பாடகச்சேரி சாமி அன்னிக்கு உர்ருன்னு இருக்கற மாதிரி பட்டுது.

படத்துலேர்ந்து திரும்பற போது ஒரு குரல்,'' போய் அப்பாவைப் பாருடா...'' அப்படின்னு சாமி குரல் அப்பா கையை மார்ல வச்சுட்டு காலை ஒண்ணா சேர்த்து வச்சுகிட்டு இப்ப எப்படி இருக்காங்களோ அப்படியே இருந்தாரு. தலை மட்டும் இடதுபக்கம் சாய்ந்திருந்தது. அரைக் கண் திறந்திருந்தது. பஹேர்னுச்சு. உலுக்கினேன். நெஞ்சுல தட்டிப் பார்த்தேன். சாமி சாமின்னு அவரை நினைச்சுத்தான் அழுதேன். சரியா நாலு பேருதான் சாப்பிட்டிட்டிருந்தான்.''

''வாசக்கதவை இழுத்து மூடச் சொன்னேன். மத்தியானம் உச்சி வேளைக்கு சமைச்ச எல்லாத்தையும் நாய்களுக்குத்தான் போட்டேன். எண்பத்தி நாலு நாய். நானும் என் பொண்டாட்டியும் எண்ணினோம். இதோ இன்னும் கூட பத்துப் பதினைஞ்சு படுத்திருக்கு.''



''சாமிக்கு சொல்லிட்டு வந்தியா...சாமிக்கு தகவல் அனுப்பிச்சியா...''

''இல்லை. சாமி திருவொற்றியூர்லயும் இல்லைன்னு சொன்னாங்க எங்கயோ போறாரு வராரு. ஒரு இடமா இருக்கறதில்லைன்னு சொன்னாங்க.''

''இப்ப என்ன செய்யறது. சாமிக்கு ஆள் அனுப்பி தேடறதா...தேடற வரைக்கும் வச்சிருக்கிறதா...இல்லே சட்டுபுட்டுன்னு எடுத்துடறதா. குழந்தைகளுக்கு மட்டும் தோசை வார்த்துப் போட்டோம். நாங்க காபி மட்டும் குடிச்சோம்,

''எடுத்துடலாமே. அழுது முடிஞ்சாச்சு. அப்புறம் என்ன இந்நேரம் அவர் சாமிக்கு முன்னாடி கைகட்டி உட்கார்ந்திருப்பார். சாமி அவர்கிட்ட பேசிட்டிருப்பாரு. நீ ரொம்ப சோர்ந்து போயிருக்க. ஒரு ஓரமா உட்கார்ந்துக்க. மோட்டர் சைக்கிள் வாங்கினியா. அதைக் கொடு.''

சாமிநாதன் வேலையில் இறங்கினான். மூன்று மணி நேரத்தில் தகனம் முடிந்தது. காட்டுக்குப் போய் திரும்பி ஈரத்தோடு ஆண்கள் உள்ளே நுழைய லட்சுமணனின் மனைவி சாமிநாதனின் கால்களில் விழுந்தாள்,

சாமிநாதன் பதறி அவளைத்தூக்கி நிறுத்தினான். உட்கார வைத்தான். அவளருகே தானும் உட்கார்ந்து அவளை அணைத்துக் கொண்டான்.

''புள்ளை பண்ணித்தாம்பா ஆகணும். அதுல பாராட்டறதுக்கு ஒண்ணும் இல்லை. ஆனா நீ மாப்பிள்ளை. பிரமாண ஜாதி. நீ நின்னு எங்கய்யாவைக் கரையேத்தினயே, உன் காலுக்கு செருப்பாகணும்.'' கரைந்து கரைந்து அழுதாள்.

அத்தனை தூக்கத்துக்கு நடுவில் தன் மகள் புவனா வாளிப்பாக இருப்பதையும் புருஷனுக்கு இணையாக இருப்பதையும், புருஷனைப் பத்தி பயமின்றி இருப்பதையும் கண்டு கொண்டாள்.

இரண்டு நாட்கள் கழித்து இந்த சொத்துல உனக்கு ஒரு பங்கு இருக்கு புவனா என்று அண்ணன் ஆரம்பித்தார்.'

"அதெல்லாம் அவர்கிட்ட பேசிக்க. உன் பிள்ளையை மட்டும் என் பொண்ணுக்குக் கொடு. அவனைக் கும்போணத்துல படிக்க வைக்காதே. ஊட்டி, கொடைக்கானல் எங்கியாவது ஹாஸ்டல்ல போடு."

"நீங்க அணைக்கரையை விட்டுட்டு கும்மோணத்துன்ன போயிடுங்களேன். லாட்ஜு கட்டுங்களேன்."

"நானும் அப்படித்தான் யோசிக்கறேன். சாமிக்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுசெய்தோம்னா சந்தோஷமா இருக்கும்."

"நீ சாமியப் புடிக்கறது கஷ்டமா இருக்கும்."

அவர்கள் பேசிக் கொண்டேயிருக்கும் போது கொல்லைப்புறத்தில் நாலைந்து நாய்கள் குரைத்தன. அந்தக் குரைப்பில் ஒரு குதூகலம் தெரிந்தது. குழந்தைகள் தலைதெறிக்க ஓடி வந்தன.

"சாமி வந்திருக்காரு, சாமி வந்திருக்காரு. தாடி மீசையெல்லாம் இல்லை. மொட்டையடிச்சு ஷேவ் பண்ணி என்னமோ மாதிரி இருக்காரு."

வீடு கொல்லைப்புறம் ஓடிற்று.

கண்களின் ஒளியைத் தவிர வேறெதிலும் அடையாளம் தெரியவில்லை. முற்றிலும் சாமி மாறியிருந்தது.

"என்னடா லட்சுமணன் போய் சேர்ந்துட்டானா."



சாமியின் குரலில் அன்பு பொங்கிற்று.

பெரிய அழுகை எதுவும் வரவில்லை. சாமியைப் பார்த்த திகைப்பு அழுகையைக் குறைத்துவிட்டது. ஆனால் எல்லோரும் மௌனமாய் லட்சுமணன் நினைப்பில் இருந்தார்கள்.

"என்னை கண்டு பிடிச்சவன்டா அவன். ஏதோபோன ஜென்மத்து தொடர்பு எங்களுக்குள்ள. நான் என்ன சொன்னாலும் மீற மாட்டான். என்னைக் கேட்காம எதுவும் செய்யமாட்டான்."

குரு அமையறது போல சிஷ்யன் அமையறதும் பாக்கியம். அவன் அடி நெஞ்சலேர்ந்து பேசுவான். அவன் பொழுப்புக்கு குறைவை வச்சக்கலைடா. புண்ணியம் தேடறதுக்கு வச்சுக்கிட்டான்.

எத்தினி நிதானமா எத்தினி கம்பீரமா போயிருக்கான் பார். வேதம் படிச்சவனெல்லாம் ஐயோ சாகறேனென்னு அழுதழுது சாகற காலத்துல அவன் துண்டு நழுவின மாதிரி போயிட்டான் பார்.

அவன் முக்தி அடைஞ்சாச்சு. அவனுக்கு ஒண்ணும் பிரமாதமா பண்ண வேண்டாம், அவனை நினைச்சு பத்து நாள் நாய்க்கு சோறு போடுங்க. தோசை வார்த்து காக்காய்களுக்கு பிச்சுப் போடுங்க. பதிமூணாம் நாள ஏழைங்களுக்கு கதம்ப சாதம் போடுங்க.

டேய் தம்பி, இந்த ஓட்டலை வித்துட்டு நீ வேணா கும்மோணத்துக்குள்ள போயிடுடா. நீ போய் காவிரிக்கு தெற்கே பழைய வீடுங்க வாங்கி ஒரு பக்கம் ஓட்டல் ஒரு பக்கம் லாட்ஜுன்னு நடத்து.

இனிமே என்னைத் தேட வேண்டாம்டா, உங்கக்கூட லட்சுமணன் இருக்கான். அவனுக்கு சாமிநாதன் மேல பிரியம். மறுபடி பூமிக்கு வந்து அஞ்சு வருஷம் உங்க வூட்டுல சுத்திட்டுதான் போவான்."

''முக்தி அடைஞ்சாச்சுன்னு சொன்னீங்களே.''

''ஆமா. அவனுக்கு முதல் வகுப்புல இடம் கெடைச்சாச்சு. கைல டிக்கெட் இருக்கு. பொட்டி படுக்கையெல்லாம் உள்ள வச்சாச்சு. இருந்தாலும் பிளாட்பாரத்துல இறங்கி வேண்டாமல்ல ஒரு ரசவடை சாப்பிடறதில்லையா. அந்த உப்புக் காரத்தோட ஒரு டோஸ் வெத்தலை பாக்கு போடறதில்லையா. பத்து வெத்தலை பாக்கு பதமான வாய்க்கு ஒரு சிகரெட் குடிச்சா நல்லாயிருக்காதா. சுகமா பயணப் படப் போறோம் அப்படீங்கற சந்தோஷத்திலேயே இதெல்லாம் அனுபவிக்கிறதில்லையா. அப்படித்தான் இது. அவன் டிக்கெட் வாங்கிட்டான். இடம் கிடைச்ச பொட்டி படுக்கையெல்லாம் வச்சுட்டான். ரசவடை சாப்பிடறதுக்கு வருவான்.''

''எப்போ...''

''உனக்குத் தெரியும். உன் மனசுக்குப் புரியும். அப்ப நான் கிளம்பறேன்டா. எல்லாம் நல்லா இருங்க.''

''சாமி ஏதோ கட்டிடம் கட்டுறீங்களாமே. நான் காசு தரட்டுமா.''

''காசு இருக்குடா. மனுஷாதான் இல்லை. அடுத்த படி, அடுத்த படின்னு தூக்கிட்டு ஓடறவன்தான் இல்லை. குரு கிடைச்சா குருவை ஏமாத்தணும். சாமி கிடைச்சா சாமியை ஏமாத்தணும். பொண்டாட்டியை ஏமாத்தணும், பிள்ளையை ஏமாத்தணும். உடன் பிறந்தானை ஏமாத்தணும்னு அலையறவங்கதான் அதிகம். என் கட்டிடம் மொள்ளத்தான் முடியும். தெரியும்.''

''நாங்க என்ன செய்யணும்னு சொல்லிட்டுப் போங்க சாமி.''

''சொந்தத்துல, சுயஜாதில கல்யாணம் பண்ணாதே. அன்னதானத்தை விடாதே. தினமும் பைரவருக்கு சோறு போடு. இது மூணும் போதும்.



தொழிலை வச்சு ஜாதி. யார் வேணா என்ன தொழில் வேணா பண்றபோது இதுல பிரிவு என்ன பிரிவுல ஏற்றத்தாழ்வு என்ன...ஜாதி கலந்து கல்யாணம் பண்ணாத்தான் ஒழியும். ஜாதி கர்வம் போச்சுன்னாதான் சாமி பத்திய ஞானம் வரும். அன்னதானம்னு ஒருத்தன் ஆயுசு முழுக்க செய்ய முடியாது. பெரிய பிரபுவா இருந்தாலும் முடியாது. அப்பப்ப பண்ணலாம். சாப்பாட்டுக் கடைன்னு ஆரம்பிச்சா நூறு பேர்ல மூணு பேருக்கு தினம் பண்ணலாம். தானம் பண்ற கர்வமே இல்லாத அது பாட்டுக்கு நடத்தலாம்.

அன்னதானம் பண்றதுக்கு சாப்பாட்டுக்கடை ஒரு நல்ல வழி. அடுத்த ஐம்பது வருஷத்துல...அம்பது என்ன நூறு வருஷத்துக்கு சாப்பாட்டுக் கடைக்கு பெரிய மரியாதை இருக்கு. ஓட்டல் பெரிய விஷயமா போயிடும். ஆனா ஓட்டல் வச்சா உழைக்கணும் ஒழுக்கமா இருக்கணும். ஓட்டல் வச்சு உழைச்சவன் தாழ்ந்ததா சரித்திரமில்லை. தூங்கினா ஓட்டல் புடுங்கிக்கும். நாய்க்கு சோறு போடறது உன் போன ஜென்மத்துப் பாவத்தைக் குறைக்கும்.

கும்பகோணமோ, மெட்ராஸோ பசங்களையும் ஓட்டல்லயே விடுங்க. சின்ன வயசிலேர்ந்து பழகுங்க. ஊட்டியோ கொடைக்கானலோ எங்க வேணா படிக்கட்டும். லீவு நாளில அவனைக் கல்லாவுல உட்கார வை. கைல கல்டல் கொடுத்து வித்துட்டு வரச்சொல். பொட்டப் புள்ளங்களை அடுப்படில போடு, காய் நறுக்கச் சொல்லு. கணக்கு வழக்கு பார்க்கச்சொல்லு. கட்டிடம் நடக்கிற இடத்துக்கு அதுகளையும் கூட்டிட்டு போ. அந்த வரவு செலவைக் காட்டு. நீ அண்ணாண்ட போயிட்டு அதுகளை மேற்பார்வை பார்க்க விடு.

எல்லாரும் நல்லாருங்கப்பா.'' அவர் நகர்ந்து போனார்.

குழந்தைகள் சிறிதுநேரம் அவரோடு ஓடிவிட்டு திரும்பி வந்தன.

மறுபடியும் வாழ்க்கை துரிதகதியில் ஓடிற்று.

சாமி ஒரு நல்ல நாளில் செத்துப்போனார்.

ஒரு பக்கம் நாய்களுக்கும், ஒரு பக்கம் மனிதர்களுக்கும் அன்று முழுவதும் அன்னதானம் நடந்துகொண்டிருந்தது.

''ஏங்க இந்த சாப்பாடு தீட்டு இல்லீங்களா.''

''டேய்... இது சாவே இல்லைடா. அப்புறம் தானே தீட்டு. இது நெருப்பு. நெருப்போட சேர்ந்தது. நல்லா சாப்பிட்டு போ.''

அந்த குடும்பம் முழுவதும் பரிமாறிற்று.

சாமிநாதனின் அப்பா மறுபடியும் சிங்கப்பூருக்கு போகிறேன். அங்கே ஹோட்டலில் கூப்பிடுகிறார்கள் என்று கிளம்ப, சாமிநாதன் தன் மகனையும் அவரோடு அனுப்பி வைத்தான்.

லட்சுமணனின் பேத்தியை ஒரு பெங்களூர் ஹோட்டல்காரர்கள் வந்து பெண் கேட்டதாகவும், பேசுவதற்கு சாமிநாதன் வரவேண்டும் என்று போன் வந்தது.

''நன்கு படித்த நல்ல குடும்பத்தைச் சார்ந்த ஹோட்டல் வேலை தெரிந்த அந்த வேலையில் ஆர்வமுள்ள மணமகன் தேவை. ஜாதி முக்கியமில்லை.''

சாமிநாதன் விளம்பரம் கொடுத்தான். விளம்பரம் வந்த அந்த காலை அவனுடைய மகன் வாசலிலிருந்து கத்தினான்.

''அப்பா காருக்கு கீழே ஒரு நாய்க்குட்டி படுத்திட்டிருக்குப்பா. ரொம்ப அழகா இருக்குப்பா..''

அந்த வீடு முழுக்க நாய்க்குட்டியைப் பார்க்க தடதடவென்று ஓடி வந்தது.

——முற்றும்——

# கல்திரை

## 1

**மின**ம் செக்கச் செவேரென்று வினோதமான சிகப்பாய், காவி போர்த்திக் கொண்ட துறவியாய், யுத்த களத்தை நினைவூட்டும் வர்ணமாய், பிரபஞ்சத்தின் மிகப் பெரிய போக குண்டமாய், யாகத்தீயாய், சூரியன் என்கிற கனிந்த பழத்தை யாரோ பிழிந்து போட, சிதறிய சாறாய் காட்சியளித்தது.

காயல்பட்டினக் கடற்கரையில் நின்று பார்க்கும் போது, ஆடிய பொற்பாதத்திற்கு வானத்தின் விஷயங்கள் வினோதமாக இருந்தன.

எவ்வளவு பெரிய வானம், என்ன அற்புதமான நிறச்சேர்க்கை.

எங்கோ இருக்கிற சூரியன், எங்கோ இருக்கும் மேகங்களின் மீது பட்டு, எங்கோ ஒரு புள்ளியாய் இருக்கின்ற எனக்கு முன் எத்தனை ஜாலங்கள் காட்டுகிறது.

கணத்திற்கு கணம் இந்த நிறச் சேர்க்கை மாறிக் கொண்டே இருக்கிறது. மிக முக்கியமான விஷயம் நடக்கும் போதுதான், வானம் இப்படி ரத்தம் பூசிக் கொண்டு தவிக்குமாம். அந்திவானத்தை உற்றுப் பார்த்து விட்டு அடுத்த நாள் எப்படி இருக்கும் என்று சொல்லி விட முடியுமாம்.

தரைக்குத் திரும்பும் நாரைகள் பூமியிலுள்ளோர் தலையெழுத்தை உரக்கப் படித்துக் கொண்டு போகுமாம். வானத்தின் அசைவை வைத்து பூமியில் நடக்கும் பெரிய சம்பவங்களைக் கண்டு பிடித்து விட முடியுமாம்.

பிறையின் வடகோடு உயர்ந்திடின் மழை. தென் கோடு உயர்ந்திடின் வறட்சி என்று சொல்லலாமாம். புயலை நிலவின் கோட்டையும், பூகம்பத்தை பறவைகளின் விரைவையும் வைத்து கண்டு பிடித்து விடலாமாம். எறும்புகள் ஏறிடின் மழை. இறங்கிடில் காற்று, தரையை ஒட்டிய சுவரோடு போனால் சாதாரண விஷயம். அமைதியான நாள்.

ஆடிய பொற்பாதம் கிழக்குக்கரை ஓரமாக நடந்து கொண்டே, மேற்கு வானத்தைப் பார்த்து வியந்தான்.

ஆடிய பொற்பாதத்திற்கு முப்பது வயது தேற்றோடு முடிந்து விட்டது.

ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை, ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று பலபேர் துளைத்தெடுத்தார்கள். தன் பெற்றோருக்குப் பிறந்த பன்னிரெண்டு பேரில் தான் ஒருவன் திருமணம் செய்யாது போனால், எந்தக் குறையும் வந்து விடாது என்று அவன் விளக்கினான். இறைபணி செய்யப் போவதாய் சொன்னான்.

"அப்படியானால் துறவா?" கேட்டவர்கள் வியந்தார்கள்.



"இல்லை. துறவு இல்லை. என் தாய் உயிரோடு இருக்கும் வரை, என்னை துறவு கொள்ள அனுமதியாள். ஒரு வேளை என் தாயை என் சகோதர சகோதரியர் பதினோரு பேரும் புறக்கணிக்க அவளை கரையேற்ற நான் திருமணம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வந்தால் என்ன செய்வது?

நான் திருமணமாகாதவனே தவிர துறவியல்ல. என் தாய் இறந்த பிறகு நான் துறவியாகலாம். அதுவரை தனிக்கட்டை, இறைபணி.

"இறைபணி என்றால் அதென்ன தொழில்?"

"இறைவனை எனக்குள் தேடுகிற பணிதான்."

"இதற்கு என்ன செய்ய வேண்டும்"?

"ஜப தப யம நியமங்கள்தான்."

"அதாவது ப்ரும்மச்சார்யமா? அதுதான் நியமமா?"

"ப்ரும்மத்தைச் சார்ந்திருப்பதே ப்ரும்மச்சார்யம் மற்றேதுமில்லை."

"ப்ரும்மத்தை சார்ந்திருப்பது என்றால் என்ன?"

"மனம் இயங்குவதற்கு எங்கிருந்து சக்தி கிடைக்கிறதோ. எந்த இடத்தில் அந்த சக்தி தோன்றுகிறதோ அந்த இடத்திற்கு ப்ரும்மம் அல்லது உயிர் என்று பெயர், அந்த உயிர் சக்தி மீதே எந்த உணர்வுமற்ற அந்த பலத்தின் மீதே கவனமாய் இருப்பதற்குப் பெயர்தான் ப்ருமத்தோடு இருத்தல்."

"ஏன் அப்படி நிற்க வேண்டும்?"

"அப்போது செயல்கள் மனதின் கட்டளையாக இல்லாமல். உயிரின் கட்டளையாக; ப்ருமத்தின் வெளிப்பாடாக இருக்கும். அதாவது விருப்பற்று, வெறுப்பற்று இருக்கும்."

ஆடிய பொற்பாதம், இந்த நிலை உனக்கு கைவந்து விட்டதா?"

"வருகிறது போகிறது. நிரந்தரமாக இல்லை."

"அடாடா...எவ்வளவு அழகாகப் பேசுகிறாய்,ஆடிய பொற்பாதம். பொய்யில்லாமல் இருக்கிறாய். உன்னோடு பேசுவதே சந்தோஷமாக இருக்கிறது. நீ காமத்தை வென்று விட்டாயா?"

"இல்லை முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்."

"காமத்தைத் தடுக்க வழிகள் ஏதுமுண்டோ?"

"முரட்டு வழிகள் பல உண்டு. சரக்கோமணம் உடுதல். உணர்வு தோன்றும் போது உபவாசம் இருத்தல். அடிக்கடி குளிர்நீரில் குளித்தல். கைகால்களில் சூடு இழுத்துக் கொண்டு மிகுந்த வேதனையை ஏற்படுத்தல் என்பதாய் முரட்டு வழிகள் உண்டு. ஆனால் காமம் தோன்றும் போது அந்த எண்ணத்தை நான் உற்றுப் பார்க்கிறேன். பல சமயங்களில் அந்த எண்ணம் கலைந்து விடுகிறது.

"கலையாதபோது என்ன செய்கிறாய் ஆடிய பொற்பாதம்?"

"காமத்தை மனசுக்குள் நிகழ்த்திக் கொள்கிறேன்"

"இதுதான் வேலையா? அல்லது இதைத்தவிர வேறு பணிகள் ஏதுமுண்டா?"

"ஹிமாச்சலம் வரை நடந்து போய் திரும்புவது என்று ஒரு ஸங்கல்பம் வழியில் எவருக்கு உதவி தேவைப்படினும் தங்கி செய்து விட்டுப் போவதே விருப்பம்."

"எவ்வளவு நாள் தங்குவாய்?"

"அதிகபட்சம் ஒரு மாதம் அதற்குள் இறைவன் பிரச்சனையை தீர்த்துவிடுகிறான். என்னை வடக்கு நோக்கி நடக்க வைக்கிறான்.



"ஆடிய பொற்பாதம். பாண்டிய சாம்ராஜ்ஜியம் சரிந்து போய்விட்டது வடக்கே ஒய்சாளர்கள். போசளர்கள் என்று யாருமில்லை. இன்னும் வடக்கே காவிக்கொடி கீழ் ஆட்சி செய்துகொண்டிருந்த ரஜபுத்திரர்களும் அழிந்து போய் விட்டார்கள். பாலைவனங்களிலிருந்து வந்த யவனர்களின் கடுமையான ஆட்சி அங்கங்கே நடைபெறுகிறது.

ஒரு மாதம் பாலைவனக்காரர்களின் கை ஓங்குகிறது. மறுமாதம் யாரோ அங்கு தாக்கிக் கொள்ளையடிக்கிறார்கள். யவனர் படை திரும்பவும் அந்த இடத்தில் குவிகிறது. தண்டிக்கிறது. சிலசமயம் தண்டனைகள் மிக அநாகரிகமாய் நடக்கின்றன. மிகக் கொடூரமாய் நிறைவேற்றப்படுகின்றன. இந்த நேரம் பார்த்து தனி ஆளாய் ஹிமாச்சலம் நோக்கி நடக்கிறேன் என்கிறாயே...?" அவனை விசாரித்து வருத்தப்பட்டார்கள்.

ஆடிய பொற்பாதம கண்மூடி அவர்கள் அக்கறையை வாங்கிக் கொண்டான். பரத கண்டத்தின் லட்சணத்தை வெகு அழகாய் சொல்லிவிட்டார்கள்.

பசுமையான இந்த தீபகற்பத்தைத் தேடி பல்வேறு நதிகள் பாயும் இந்த பச்சைப் புல்வெளியைத் தேடி இமயமலை தாண்டி மலையேறாமல் இமயமலைக்கு நடுவேயுள்ள சந்து வழியைக் கண்டு பிடித்து, வெப்பம் மிகுந்த பாலைகளின் வழியாக ஒட்டகங்களையும் குதிரைகளையும் ஏற்றி வந்து. நீருக்குத் தவித்து நாளை உயிரோடு எழுந்திருப்போமா என்ற கவலையில் சிக்கி ஆயிரம் பேரில் ஐநூறு பேரை பலிகொடுத்து மெல்ல மெல்ல உள்ளே நுழைந்து விட்டார்கள்.

ஈச்சமரமும், முழங்கை நீளக் கிணறும், மணல் காற்றும் புதைகுழியும் உள்ள தேசத்திலிருந்து வந்து, பச்சைப் பசேலென்ற புல்வெளியைப் பார்த்தும் பரவசத்தில் அதிர்ந்து போனார்கள் காய்களையும், கனிகளையும்

பார்த்து விட்டு குதூகலமடைந்தார்கள். அள்ள அள்ளக் குறையாத கிணறுகளையும் ஏரிகளையும் பார்த்து இறைவனைத் தொழுதார்கள். கங்கையைப் பார்த்துவிட்டு விக்கி விக்கி அழுதார்கள்.

இந்தப்பக்கம் பூமியை இவ்வளவு வளமாகச் செய்து விட்டு, எங்கள் பகுதியை ஏன் பாலைவனமாக்கினாய் இறைவா என்று கதறினார்கள்.

அந்தப் பாலைவனக்காரர்களுக்கு எல்லாம் அதிசயமாக இருந்தது. ஆற்றங்கரை நாகரீகம் பற்றி அவர்களுக்குத் தெரியாமலிருந்தது.

உணவை ஒட்டியும், உணவு விளையும் சூழ்நிலையை ஒட்டியும்தான் நாகரீகம் அமைகிறது. உடை மொழி கடவுள் வழிபாடு. கவிதை இல்லறம் எல்லாம் வேறுபடுகின்றன.

பரதகண்டத்து மக்களை பார்க்கப் பார்க்க பாலைவனக்காரர்கள் ஆதங்கமடைந்தார்கள். இந்த பாரத தேசம் தனக்கு வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள்.

குதிரை வியாபாரிமாய்வந்த அந்த பாலைவனக்காரர்கள், ஊர் சுற்றிப் பார்த்த அந்த அரேபியர்கள். பெரும் படையோடு உள்ளே நுழைந்து பாஞ்சாலர்களையும், ரஜபுத்திரர்களையும் ஓட ஓட விரட்டி தங்கள் பச்சைக் கொடியைப் பறக்க விட்டார்கள்.

பரத கண்டத்தின் நாகரீகம் முற்றி முதிர்ந்து கிழப் பருவத்தை அடைந்த நேரமது.

பிராணிகளைக் கொல்லாதே என்று அஹிம்ஸைத் தத்துவத்தை சிலர் போதிக்கத் துவங்க அது பெரிய மதமாயிற்று. அஹிம்ஸைக்கு ஆயிரம் காரணங்கள் சொல்லப் பட்டன.



க்ஷத்ரியர்கள் மென்மையானார்கள். பாட்டும் கூத்தும் முக்கியமாயின. நாட்டியமாடும் அரசகுமாரர்கள். இடைவிடாது சாப்பிடும் அரசிளங்குமரிகள் என்று வாழ்க்கை முறை தவறாகப் போயிற்று

அரை நாழிகைக்கு ஒரு முறை மது அருந்தாவிட்டால் கை நடுங்குகின்ற இளவரசனை. ஆறு நாள் சாப்பிடாமல் நீர்மட்டும் குடித்து பாலைவனம் தாண்டிய வீரன் ஒரே அறையில் தரையில் தள்ளினான்.

அரேபியக் குதிரை பரத கண்டத்து ஆடு மாடுகளை மிதித்துப் போட்டது.

க்ஷத்திரியர்கள் சண்டை செய்து பழக்கமானவர்கள் தான். மிகப் பெரிய வீரர்கள்தான். ஆனாலும், நாகரீக முதிர்ச்சியில் மென்மையான மதங்களின் புத்திபூர்வமான பேச்சால், அடிதடி ரகளையைத் தாங்கமுடியாமல் போனார்கள். ஆண்களுக்கு வலிதாங்கும் வலுவில்லாமல் போயிற்று.

மனோபீதி மிகுந்த வீரர்கள் பொய்யான வீரம் காட்டினார்கள். புறமுதுகிட்டு ஓடினார்கள். கத்தியைக் கீழே போட்டுவிட்டு பாலைவனக் காரர்களிடம் சரணடைந்தார்கள்.

பசுக்கூட்டத்திற்கு நடுவே சிங்கம் போலும் யவனர்கள் என்று பாரத தேசத்தாரால் அழைக்கப்பட்ட அந்த பாலைவனக்காரர்கள் மதுரை வரையிலும் வந்து தங்களை நிலைநிறுத்திக் கொண்டார்கள்.

இரண்டு வெவ்வேறு கலாச்சாரங்களும் மோதின.

உண்மையை தேடுவதில் இது ஒருவழி. அதுவொரு வழி. தேடிக்கண்டவர்கள் அதிலும் உண்டு. இதிலும் உண்டு. தேடாதவர்களும் தேடுதல் என்றால் என்ன

வென்று தெரியாதவர்களும் இது சரி அது தவறென்று குறை சொன்னார்கள்.

பரதகண்டம் ரணப்பட்டது. கடும் குழப்பத்தில் சிக்கித்தவித்தது.

காலம் காலமாகப் போற்றி வந்த கலாச்சாரச் சின்னங்கள் தாக்கப்பட்டன, அந்தச் சின்னங்களை கட்டிக் காத்தோர் கடுமையாக தண்டிக்கப்பட்டார்கள்.

எக்காளம் ஊதி மேளமடித்து நடந்த பூஜைக்கு தடை விதிக்கப்பட்டது. அது கடவுளா இல்லை கல் என்று கால் வைக்கப்பட்டது.

ஜாதியாலும் பணத்தாலும் பிளவுபட்டுக் கிடந்த பரதகண்டத்து ஜனங்கள். ஒற்றுமையாக முடியாமல் இளைத்தார்கள். ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்தார்கள்.

அண்ணன் தம்பி சண்டையில் தென்திசை நாட்டின் கடைசி எச்சமான பாண்டியர்கள். அந்தப் பாலைவனக்காரர்கள் உள்ளே வர பாதை வகுத்துக் கொடுத்தார்கள்.

அண்ணனை தம்பியும், தம்பியை அண்ணனும் காட்டிக் கொடுத்தார்கள். பாலைவனக்காரர்கள் அவர்கள் இருவரையும் கொன்றுவிட்டு தங்கள் ஆட்சியை நிலைநாட்டினார்கள்.

சிராப்பள்ளியிலிருந்து முப்பது காதத்தொலைவிற்கு அவர்கள் ஆட்சி பரவியிருந்தது. மதுரையை மையமாக்கி பத்துகல் சுற்றுவட்டாரத்தில் அவர்கள் ஆட்சி நடந்து வந்தது.

ஆனால், தெற்கே பலபேர் ஆண்டார்கள். ஆண்டவர்கள் அத்தனை பேரும் தன்னை பாண்டியன் என்று சொல்லிக் கொண்டார்கள்.



மதுரையில் உதைபட்ட அதிகாரிகள் குதிரை ஏறி கடற்கரை பட்டினங்களில் சரணடைந்தார்கள். மதுரையில் உதை வாங்கியதை மறைத்துவிட்டு அந்நியர்களிடமிருந்து உங்களைப் பாதுகாக்க அரசர் அனுப்பினார் என்று பொய் சொன்னார்கள்.

ஆனால் காயல் பட்டினத்தில் நிலைமை வேறாக இருந்தது. மன்னர்களின் போக்குவரத்து இல்லாததால் வியாபாரிகளே ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஒரு குழுவாக சேர்ந்து காயல்பட்டினத்து நகரத்தையும் சுற்றியுள்ள கிராமங்களையும் ஒரு சிறு படையோடு ஆட்சி செய்தார்கள்.

காயல்பட்டனம் ஒரு துறைமுக நகரம். பல்வேறு தேசத்தவர்கள் அங்கு வந்து இறங்குவார்கள் பொருட்களை வாங்குவார்கள். விற்பார்கள். மரக்கலங்களை பழுது பார்ப்பார்கள். பெரிய தேவதாரு மரங்களை வாங்குவார்கள்.

கப்பல் வேலை செய்யும் தச்சர்களுக்காக காத்திருப்பார்கள். மரம் அறுத்து பலகைகளாக்கி கொடிமரம் இழைத்து நிறுத்த பலமாதங்களாகும். காந்தளமோ கடாரமோ கம்போடியமோ, சிங்களமோ, சீனமோ அல்லது பாலைவன யவனரோ அங்கு தங்கி இளைப்பாறி விருந்துண்டு மொழி கற்று தன் மொழியை சொல்லிக் கொடுத்து இங்கிருந்து முத்து, சந்தனம், ஏலம், லவங்கம், குறுமிளகு, வெல்லம், தேன், தேர்சக்கரங்கள், இரும்புத் தாதுகள், தாமிரபாத்திரங்கள் நவரத்தினக் கற்களோடு தங்கமும் வாங்கிப் போவார்கள்.

பாலைவன யவனர்களுக்கு தங்கம்தான் முக்கியமான பொருள். முந்நூறு கழஞ்சு பொன்னுக்கு ஒரு குதிரையை விற்பார்கள். நூற்றுக்கணக்கில் குதிரையைக் கொண்டு வருவார்கள். மூட்டை மூட்டையாக பொற்கழஞ்சுகளை அள்ளிப்போவார்கள்.

இந்த அந்தி சாயும் நேரத்தில் ஒரு வியாபாரம் முடித்து ஒரு கப்பலிலிருந்து குதிரைகள் இறங்கத் துவங்கி விட்டன.

திருநெல்வேலிச் சீமையை ஆண்ட ஒரு குறுநிலமன்னன் நூறு குதிரைகள் வாங்கியிருக்கிறான். ஒரு மாதமாகப் பேசி ஒரு குதிரை இருநூற்று இருபது கழஞ்சு பொன்னுக்கு என்று பல குதிரைகள் வாங்கப்பட்டன. இரண்டு குதிரைகளை கயிறு பிடித்து அடையாளத்திற்காக கொடுத்துவிட்டு பட்டியை திறந்துவிட்டு விடுவார்கள்.

திருநெல்வேலிச் சீமை வீரர்கள் உள்ளே பாய்ந்து அவரவருக்கான குதிரைகளை தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். அந்த குதிரை தேர்ந்தெடுப்பதில் அடிதடி சண்டையே நடக்கும்.

வீரர்களின் பேய் கூச்சல் கேட்டு குதிரைகள் மிரளும் குதிரைகளை மிரட்ட சவுக்குகள் கொடுக்கப்படும், குதிரைகள் பெரிய கனைப்புடன் எட்டி உதைக்கும்.முன் கால் தூக்கி முரண்டு செய்யும்.

அந்த குதிரைகளை களைக்கும்வரை கரையோரம் ஓட்டுவார்கள். அலைகளின் திமிர் அடங்கவேண்டும் என்று கண்மண் தெரியாமல் விரட்டுவார்கள். கடிவாளமில்லாத குதிரைமீது பிடரியை கெட்டியாய் பற்றிக் கொண்டு கால்களால் குதிரையை இடுக்கிப்போல் பின்னிக்கொண்டு அதுவே திரும்பும்வரை ஓட்டுவார்கள். சில சமயம் காடுகளுக்கு நடுவே போய்விடுவார்கள்.

குதிரையை அடக்கி திரும்பிவர இரண்டு நாளாகும் அப்படி அடக்குவதில் சிலசமயம் மரணமும் ஏற்படும். கடற்கரையோர புதை குழிகளில் குதிரைகள் சிக்கிக் கொள்ளும் சவாரி செய்தவனை உள்ளே தள்ளி அதுவும் விழி பிதுங்கி நிற்கும்.



அங்கே சவாரி செய்தவனைவிட குதிரை முக்கியம்.

இரண்டு வெள்ளைக் குதிரைகள் கயிற்றால் கட்டப்பட்டு கைமாற்றிக் கொடுக்கப்பட்டன. மரப்பெட்டிகளிலுள்ள பொற்காசுகள் கப்பலுக்கு தலைச்சுமையாய் ஏற்றப்பட்டன.

நல்ல குடிபோதையுடன், முதுகில் தோள்பையுடன் இடுப்பில் இறுகக்கட்டிய வேட்டியுடன் எண்ணெய் பூசி முடித்து நூல்கட்டிய குடுமியுடன், அதற்குமேல் சாயத் தலைப்பாகையுடன் ஏகப்பட்ட வீரர்கள் குதிரைகள் அடைத்து வைத்திருந்த பட்டியை சுற்றிக் கொண்டார்கள்.

குதிரைப்பட்டியை திறக்கப் போகிறார்கள் என்ற. கமுக்கு ஒலித்தது. ஒரு சிறு பறை அதிர முழங்கியது நங்கூரம் அடித்து தங்கியிருந்த கப்பல்களிலிருந்து வெங்கல மணியை அசைத்து ஒலி எழுப்பினார்கள். தொலை தூர கிராமங்களையும் எச்சரித்தார்கள்

பொதுமக்கள் சுவர்களிலும் மரங்களிலும் ஏறிக் கொண்டு குதிரைகளின் ஓட்டத்தை கவனிக்கத் தயாரானார்கள் துணிச்சலுள்ள போர்வீரர்கள் மணலில் காலூன்றி குதிரைகளின் வருகைக்காக காத்திருந்தார்கள்.

குதிரைகள் இந்த ஒலிகள் கேட்டு திகைத்துப் போயிருந்தன.

பட்டியின் மூங்கில் கதவைத்திறந்து இரண்டுபேர் உள்ளே போக சுற்றி நின்ற குதிரை வீரர்கள் உள்ளே தாவி குதித்தார்கள்,

ஏற்கனவே பார்த்து வைத்திருந்த அவரவருக்கு பிடித்தமான குதிரைகளை நோக்கி ஓடினார்கள். ஒரே தாவலில் முதுகில் உட்கார்ந்து. குதிரையை இறுகப் பிணைத்துகொண்டு, வாயால் பிடரியைக்கவ்வி குதிரை

யின் நெற்றி உச்சி மயிரை இடதுகையால் பிடித்துக் கொண்டு, வலது கையிலுள்ள புளியமிளாறால்குதிரையை சுளீர் சுளீரென்று அடித்தார்கள்.

குதிரைகள் திறக்கப்பட்ட கதவு வழியே வெளியே பாய்ந்து ஓடிவந்தன. புல்லும், சேறும் மணலும் கலந்த பாதை வழியே ஓடத் துவங்கின.

நூற்றுக்கணக்கான குதிரைகள் ஆயிரக்கணக்கான மக்கள் பார்க்க ஓடுவது ஒரு வினோத உணர்வை ஊட்டியது.

ஆடிய பொற்பாதம் காலியாய் இருந்த ஒரு மர மேடை மீது ஏறி நின்று கொண்டான். அங்கிருந்த ஆரவாரங்களை உற்றுப்பார்த்தான்.

அவன் மேலே ஏறிய சில விநாடிகளில், தலையில் துண்டுபோட்டு கட்டியிருந்த ஒரு யவன வணிகன் தாவி ஏறினான். கைப்பிரம்பு நீட்டி குதிரை வீரர்களை அதட்டினான். தலையில் அடித்துக்கொண்டான். கால் உதறினான். வெறிபிடித்தவன்போல் வானத்தை நோக்கிக் கூவினான்.

சோழதேசத்தைச் சேர்ந்த முன்குடுமி அந்தணனை கைதட்டிக் கூப்பிட்டான்.

அந்த அந்தணனுக்கு அந்த வணிகன் பேசும் மொழி புரிந்தது.

குதிரைகள் எல்லாம் நெடுந்தொலைவு போய் விட்டன.

அந்த அந்தணன் வாய் பொத்திச் சிரித்தான்.

அந்த யவனவீரன் அந்தணனை நோக்கி கோபமாகப் பேசினான்.

''என்ன பிரச்னை?'' ஆடிய பொற்பாதம் ஆவலோடு அந்தணனைக் கேட்டான்.



''மாபார் நாட்டு போர்வீரர்களுக்கு குதிரை ஓட்டவே தெரியவில்லை. குதிரையைப்பற்றி எதுவுமே தெரியவில்லை. குளம்புகள் அடிக்காமல் குதிரையை வேகமாக ஓட்டுவது மகாபாவம் மிருகவதை என் குழந்தைகளைப்புளியமிளாறால் அடிக்கிறார்களே என்று வருத்தப் படுகிறார். பொற்காசுகளை திருப்பிவிடுகிறேன் குதிரைகளைக் கொடுத்துவிடுங்கள் என்று கத்துகிறார்.

ஏதோ ஒரு குதிரை மணலில் கட்டுமரம் தடுக்கி குப்புற விழுந்தது. குதிரை ஓட்டி எகிறிப்போய் தண்ணீரில் விழுந்தான். குதிரை இரண்டு மூன்று சரணங்கள் அடித்து தரையில் விழுந்து எழுந்தது.

அந்த யவனன் மறுபடி கத்தினான்.

''காட்டுமிராண்டி என்று அந்த யவனன் கத்துகிறான். குதிரை கீழே விழவே கூடாதாம். விழுந்தால் கால் ஒடிந்துபோகுமாம் கால் ஒடிந்தால் குதிரைக்கு மரணம் தானாம்.

தலையைச் சுற்றி நீண்ட வெள்ளைத் துணி போட்டு அதன் மீது கருப்புக் கயிறு கட்டி இடுப்பில் ஒரு துண்டும் மேலே ஒரு துண்டுமாக இருந்த அந்தப் பாலைவன யவனன் மேடைவிட்டு இறங்கி குதிரை நோக்கி ஓடினான் குதிரையின் காலை பரிசோதித்தான் குதிரை ஓட்டியவனை முதுகில் அடித்து எட்டி உதைத்தான் இடுப்பில் இருந்த சிறிய கட்டாரியால் குதிரையின் நெஞ்சில் ஓங்கிக் குத்தினான். சுருண்டு விழுந்து துடித்த குதிரையை வணங்கினான். சில நொடிகளில் குதிரை செத்துப் போயிற்று மற்ற குதிரைகள் ஒருவாறு அடக்கப்பட்டன. படைத்தலைவர்கள் ஆணைப்படி வரிசையாக்கப் பட்டன. கணக்கர்கள் குதிரையின் அடையாளங்கள் பற்றி கணக்கெடுத்துக் கொண்டார்கள். குதிரைவீரன் பெயரைக் குறித்துக் கொண்டார்கள். திருநெல்வேலிச்

சீமைத்தாக்குப் போக கட்டளை ஓலையும் பொற்கழஞ்சும் கொடுத்தார்கள். மூன்றுநாள் பயணத்தில் திருநெல்வேலிச் சீமையை வந்தடையும்படி உத்திரவிடப்பட்டார்கள். குதிரைகள் மறுபடி பட்டிகளில் அடைக்கப்பட்டன. வீரர்கள் மதுபானக் கடைகளுக்குப் போய் உட்கார்ந்து கொண்டார்கள். பெரிய தேசத்தை வென்றது போல் அலட்டலும் ஆரவாரமுமாய் பேச ஆரம்பித்தார்கள்.

சிகப்பு வெளிறி கடலிலிருந்து நிலவு மேலே எழுந்தது.

காயல்பட்டினம் எல்லா ஆரவாரமும் ஓய்ந்து வேறொரு முகத்தை எடுத்துக் கொண்டது. ஏதோ ஒரு மரக்கலத்திலிருந்து தானத்தோடு சோகமாய் பாட்டு கேட்டது.

நிலவைப் பார்த்து ஒரு யவன மாலுமி பாட்டுப் பாடுகிறான் போலும். என்ன பாடுவான்?

'எங்கோ இருக்கும் என் மனைவியே இந்த நிலவை நீ பார்க்கிறாயா? நான் பார்க்கும் நிலவு உன் கண்ணுக்குத் தெரிகிறதா? பிரியமுள்ளவளே...என் நினைவு உனக்கு இருக்கிறதா?' என்று பாடுவான் போலிருக்கிறது.

எல்லா மொழியிலும் சோகப்பாட்டு உண்டு. நிலவு விடு தூது உண்டு.

சில மாலுமிகள் துண்டு விரித்து தொப்பி அணிந்து மேற்கு நோக்கி வணங்கத் துவங்கினார்கள்.

தம்பூர் மீட்டி சில நாயக்கர்கள் பாட்டுகள் பாடத் துவங்கினார்கள் தெருப்பு வளர்த்து நடனமாடத் துவங்கினார்கள். பட்டணத்திற்கு உள்ளடங்கிய கோயில்களில் மெல்லியதாய் மணியொலியும்,பறையொலியும் கேட்டன.

கடற்கரை மணலில் துணிமறைப்புகள் கட்டப்பட்டன. தீப்பந்தம் தாங்கி வேலைக்காரர்கள் முன்னே



வர, பொதுமகளிர் மிக அழகாக அலங்கரித்துக்கொண்டு, மணல் பகுதிகளில் அலைந்தார்கள். தேவையில்லாமல் சிரித்தார்கள். யவனவீரர்கள் வேடிக்கை பார்ப்பதைப் பார்த்துவிட்டு, அவர்கள் பார்க்குமிடத்திற்குப் போய் சோம்பல் முறித்தார்கள். அந்த மாலுமிகளின் ஆசைகளை கிளறிவிட்டார்கள்

ஒரு பொதுமகளிர் குழு மதுபானக் கடைக்குள் புகுந்தது. குதிரைவீரர்களைச் சீண்டியது.

'பாண்டியரே...,பாண்டியரே...' என்று எல்லா குதிரை வீரர்களையும் அழைத்தார்கள்.

ஆடிய பொற்பாதம் சிரித்தான். ஊருணியில் போய் குளித்தான். மெல்ல கடற்கரை வழியே நடந்தான்.

துணி மறைப்புகளுக்குள் விளக்கேற்றி வைத்து பொதுமகளிர் வீரர்களோடு சல்லாபிக்கத் துவங்கினார்கள். அவர்கள் நிழல் துணியில் தெரிந்தது. தொட்டுத் தொட்டு சிரிப்பதை நிழற்படமாக காண முடிந்தது

காசு கொடுத்தவன் கூட வர முயன்றபோது, விசிறியை மணலில் நட்டு விளக்கொளியை மறைத்தார்கள்.

ஆடிய பொற்பாதம் ஒரு உணவுவிடுதிக்குள் நுழைந்து சோறு சாப்பிட்டான்.

மறுநாள் காலை குடிப்பதற்குக் கூழும், கறியும் தயார் செய்யச் சொன்னான்.

காற்று வரும் திசையாய் உட்கார்ந்து பதிகங்கள் பாடத் துவங்கினான். மான் தோல் பையை தலைக்கு வைத்துக்கொண்டான். உறங்கிப் போனான்.

அந்த சத்திரத்தின் தொலைவே யாரோ அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் தூங்கியதும் அந்த உருவமும் சுருண்டு தூங்கியது.

காயல்பட்டினத்தில் நடுநிசிவரை கழுதைகள் கை மாறிக் கொண்டிருந்தன.

# 2

"அரையரே..." யாரோ அந்தக் கிழவனின் கனவுக் குள் கூவினார்கள்.

"அரையரே...எங்களைக் காப்பாற்றுங்கள்." யாரோ கெட்டியாய் காலைப் பற்றிக்கொண்டார்கள்.

"அரையரே...எங்களை கைவிட்டுவிட வேண்டாம்" யாரோ தலைவிரிகோலமாய் ஒரு பெண் வழியை மறித் தாள்.

ஆனால், உடையார் வீரபாண்டிய காளிங்கராயர் குதிரையை உதைத்து முன்னேறிக் கிளம்பினார்.

குதிரை பொதுமக்களை இடித்துக் கொண்டு ஓடிற்று.

அவர் பின்னால் நூறு குதிரைகள் தொடர்ந்தன.

எல்லா குதிரைகளும் பொதுமக்களை இடித்துக் கொண்டு ஓடின.

தடுக்க முயன்ற பெண்களை குதிரைச் சவுக்கால் வீரர்கள் அடித்தார்கள். குதிரையிலிருந்தபடியே முகத்தில் கால் வைத்து எட்டி உதைத்தார்கள். குழந்தைகள் தலை யில் சவுக்கின் பின்பக்கத்தால் பட்டென்று அடித்தார்கள். ஆண்களின் கழுத்தில் சவுக்கால் சுற்றி தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் சாலையோரம் விசிறித் தள்ளி னார்கள்.

அப்படித் தள்ளப்பட்டவர்கள் எழுந்தபோது, சுளீர் சுளீர் என்று அடித்தார்கள்.



ஊருக்குள்ளே கொள்ளைக்காரன் வரும்போது இப்படி ஓடுறியே... நீயெல்லாம் ஆம்பளையாடா...?" காது தொங்க பாம்படம் அணிந்திருந்த கிழவி உரக்கக் கத்தி னாள்.

காளிங்கராயனுக்கு கோபம் வந்தது. ஒரு வீரனைப் பார்த்து 'உம்'மென்று உறுமினான். குத்திக் கொல்லும் படி செய்கையில் உத்தரவிட்டான்.

"கொல்லுலே...குத்திக் கொல்லும். வேத்து ஆம்பளை தொட்டு சாகறதைவிட, எம்புள்ள, எங்க ஊர்க்காரன், என் மொழி, என் பாண்டிய ராசா...என்னைக் குத்திக் கொன்னான்னு சந்தோஷமா சாவேன். குத்திக் கொல் லும்." கைவிரித்து நெஞ்சு நிமிர்த்தினாள்.

கூட்டம் தொடர்ந்து, போக வேண்டாம் என்று மன்றாடிக் கொண்டிருந்தது.

அந்தக் கிழவியின் பதினைந்து வயதுப் பேரனும், பத்துவயது பேத்தியும், கிழவியை குத்த வேண்டாம் என்பது போல் கைகூப்பி மன்றாடினார்கள்.

காளிங்கராயனின் படைவீரன் தயங்கினான். திரும்பி காளிங்கராயனை, குத்தவா என்பது போல் பார்த்தான்.

மறுபடி முறைப்போடு காளிங்கராயன் உத்தரவு கொடுக்க, அந்த படைவீரன் பல்கடித்தபடி கிழவியின் நடுமார்பில் கத்தி சொருகினான்.

முழங்கை நீளமுள்ள கத்தி. முதுகு வழியே வெளியே வந்தது.

கிழவி 'சொக்கநாதா...' என்று உரக்கக் கத்தினாள்.

ரத்தம் நாலாபுறமும் பீய்ச்சியடித்தது.



2791

ஜனங்கள் விலகினார்கள். தலையிலடித்துக் கொண்டு கதறினார்கள். அழுதார்கள். 'த்தூ...' என்று தரையில் துப்பினார்கள். இரண்டு கையில் மண்வாரி, வானத்தை நோக்கி வீசினார்கள். அவலக்குரல் எழுப்பினார்கள். எல்லா வீரர்களையும் பார்த்து சாபக்குரல் கொடுத்தார்கள். குதிரையின் ஆசனவாயில் குச்சியால் குத்தி மிரள வைத்தார்கள்.

''உனக்கு எதற்கடா கத்தி?'' என்று இழித்துப் பேசினார்கள். பொட்டை என்றார்கள். பேடி என்றார்கள்.

'''கிழவியை குத்திச்சாய்க்கத்தான் வீரமா? கோயிலை விட்டுவிட்டுப் போகிறாயே... மதுரையை பெண்டாளக் கொடுத்து விட்டு, நீ புறமுதுகு காட்டுகிறாயே...'' என்றெல்லாம் பழிச்சொல் இறைத்தார்கள்.

எல்லா குதிரை வீரர் முதுகிலும் தோல்பை இருந்தது. அவைகள் நிரம்ப கனத்த பொற்காசுகள் இருந்தன. முத்துப் பெட்டிகள் யானைமீது முன்பே போய்விட்டன.

நூற்றுக்கணக்கான வருடங்களாக சேமித்து வைத்த முத்துக்கள் அந்தப் பெட்டிகளில் இருந்தன. சில முத்துக்கள் நெல்லிக்காய் அளவு இருந்தன.

அந்தப் பெட்டிகளுக்கு காவலாய் தென்னவன் ஆபத்துதவிகள் என்கிற படைவீரர்கள் போனார்கள்.

இந்த சொத்து முழுவதும் பாண்டிய மன்னன் மாறவர்மன் வீரபாண்டியன் என்பவருக்கு சொந்தமானது.

பாண்டியமன்னர் மதுரையைவிட்டு வெகு நாளைக்கு முன்பே வெளியேறிவிட்டார். அந்நியரை எல்லையில் தடுத்து நிறுத்த போர்க்கோலம் பூண்டு, ஒரு மாதம் முன்பே திருச்சிராப்பள்ளிக்கு பயணப்பட்டுவிட்டார்.



அரசர் திருச்சிராப்பள்ளிக்குப் போகும் முன்பே, உய்யக் கொண்டான் திருமலை அந்நியர்களால் கைப்பற்றப்பட்டு விட்டது. மலைக்கோட்டையும், உறையூரும், தென்னூரும், சமயபுரமும், ஸ்ரீரங்கமும் அந்நியர் வசமாயின. எல்லா ஊர் பொதுச் சொத்தும் கோயில் சொத்தும் கொள்ளையடிக்கப்பட்டன.

எந்த ஊரிலும் நடக்காத, உலகத்தின் எந்தப் பகுதியிலும் நடக்காத, அசிங்கம் பாண்டிய மண்ணில் நடந்தது.

மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் மதுரையை தலைநகராகக் கொண்டு சோழதேசம் உள்ளிட்ட பாண்டிய தேசத்தை ஆண்டு வந்தார். அவருக்கு பல மனைவிகள்.

பட்டமகிஷியின் மகனுக்குப்பெயர் சுந்தரபாண்டியன் வேறொரு மனைவிக்குப் பிறந்த மகனின் பெயர் வீரபாண்டியன்.

வீரபாண்டியனின் அறிவையும், அமைதியையும் கண்டு வியந்து, மன்னர் குலசேகரபாண்டியன் அவனையே அரசனாக்க முயற்சி செய்தார்

பட்டமகிஷிக்குப் பிறந்த சுந்தரபாண்டியன் வெகுண்டான். தந்தையை கொலை செய்தான். தானே முடிசூடினான்

தஞ்சைப் பகுதியில் அரசுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வீரபாண்டியன் இதை கேள்விப்பட்டு, சுந்தரபாண்டியனை சிறுபடையோடு வந்து தாக்கினான்.

மதுரைக்கு அருகேயுள்ள மாங்குளம் என்ற ஊரில் சுந்தரபாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் சண்டை நடந்தது.

தயார்நிலையில் இல்லாத சிறு படையோடு வந்த

வீரபாண்டியன், இப்போரில் தோற்றுப் போனான். படு காயமுற்று தப்பித்துப் போனான்.

குத்திக் கொல்லப்பட்ட குலசேகரப் பாண்டியனின் பெண் வயிற்றுப்பேரன் மானர் பெருமான் கரூர் பகுதியை ஆண்டு வந்தான். அவன் வீரபாண்டியனுக்கு பெரும்படை கொடுத்து உதவ, சுந்தரபாண்டியன் வீரபாண்டியனுக்கு பயந்து வடக்கு நோக்கி ஓடினான்.

கர்நாடகத்தில் முகாமிட்டிருந்த டில்லி நவாப் அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக்காபூர் கால்களில் விழுந்தான், மதுரைக் கோயிலில் பெருஞ்சொத்து இருக்கிறது என்று காட்டிக் கொடுத்தான். தன்னை அரசனாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தான்

மாலிக்காபூர் படை மாபார் என்று அழைக்கப்பட்ட தமிழகத்தை நோக்கி ஆவலோடு நகர்ந்தது.

அந்நியர் படையெடுத்தால் அண்ணன் தம்பி ஒற்றுமையாகி அந்நியரை எதிர்ப்பார்கள். தங்கள் வேற்றுமையெல்லாம் களைந்து விட்டு ஒற்றுமையாவார்கள். தமிழகத்தில் மட்டும் அண்ணன் தம்பி சண்டை அந்நியரை வரவழைத்தது.

எங்கோ பாலைவனத்தில் பிறந்து கோலாரில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு படைத்தலைவனை, ''என் தம்பியைக் கொன்று, ஆட்சியை எனக்குக் கொடுத்து, வேண்டுமென்ற செல்வத்தை எடுத்துப் போ'' என்று ஒரு பாண்டிய அரசன் நடைபாவாடை விரித்தான்

அவனால், அவன் கேவலமான செய்கையால், அவன் கயநலத்தால், வஞ்சனையால் மதுரை மக்கள் சொல்லொண்ணா துயரம் அனுபவித்தார்கள்.

லட்சோப லட்சம் வீரர்களுடன் பலபோர்கள் கண்ட பயிற்சியுடன், கணக்கற்ற செல்வங்களைக் காணும் பேரா



வலுடன் உள்ளே நுழைந்த மாலிக்காபூரிடம், மதுரை செக்கச் சீரழிந்தது. சூறையாடப்பட்டது.

ஐநூறுப் பன்னிரெண்டு யானைகளும், ஐயாயிரம் குதிரைகளும், ஐநூறு மணங்கு பொற்குவியலுடன் மாலிக்காபூர் தில்லி நோக்கித் திரும்பினான்.

மாலிக்காபூர் வரும் முன்பு படைத்தளபதிகள் கஜானாக்களை கொள்ளையடித்துக் கொண்டு மதுரை விட்டு ஓடினார்கள்

முப்பது வயது காளிக்கராயன் மிகப் பெரும் செல்வத்தோடு, மதுரை மக்களை நிர்கதியாக விட்டு, கடற்கரை வழியாக தொண்டை மண்டலம் நோக்கிநகர்ந்தான்.

மாலிக்காபூருக்குப் பிறகு பலமுறை மதுரை அந்நியர்களின் தாக்குதலுக்கு உண்டாயிற்று. அங்கே சுல்தான்களின் ஆட்சி நிரந்தரமாயிற்று.

பாண்டிய தளபதிகள் அந்நியரையும் தடுக்கமுடியாது மக்கள் மீது அதிகாரமும் செலுத்த முடியாது. வேட்டை நாய்களைப் போல் அலைந்தார்கள்.

அந்நியர்களின் ஆதிக்கம் எங்கு பரவவில்லையோ, அங்கே தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயற்சி செய்தார்கள்.

ஆனால், பெண்டாள முடியாதவன் எப்படி புருஷனாக இருக்க முடியும்? வீரனாய் இல்லாதவன் எப்படி அதிகாரியாய் இருக்க முடியும்?

பொதுமக்களுக்கு வீரர்கள் என்றால் கேலியாக இருந்தது.

இதுவே, சோழர்கள் ஆட்சியாக இருந்தால், இந்த அவலம் நேர்ந்திருக்காது என்ற பேச்சிருந்தது.

அந்நியர்கள் மதுரையை ஆட்சிசெய்வதால் பாண்டிய அரசர்கள் எங்கோ பதுங்கியிருப்பதால், சிற்றரசர்கள் தலை தூக்கி வரி கேட்பதால், மக்கள் குழப்பமடைந்தார்கள்.

ஊர் மக்கள் தங்களைத் தாங்களே நிர்வாகம் செய்து கொண்டார்கள் பாதுகாப்புக்கு ஊரார் பொறுப்பேற்று கொண்டார்கள்.

நீதி விசாரணைகளுக்கு சபை என்றழைக்கப்படும். பிராமணர்கள் அமர்ந்த சபை பொறுப்பேற்றுக் கொண்டது.

அந்நியர்கள் சிற்சில இடங்களை ஆள, மூலைக்கு மூலை பல பாண்டிய அரசர்கள் தோன்றி, தங்கள் அதிகாரங்களைக் காட்டினார்கள்.

தெற்கத்திச் சீமைகள், கடற்கரைப் பட்டினங்கள், தொண்டை மண்டலங்கள் இன்னும் அந்நியர் வசப்படாமலிருந்தன.

எப்போது அந்நியர் வசப்படுவோம் என்கிற பீதியிலும் ஒருவேளை அந்நியர் வசப்பட்டால் என்னாகும்என்கிற கற்பனையிலும் அந்நியரால் ஏற்பட்ட கொடுமையை நேரேபார்த்த சிலரின் அனுபவங்களைக்கேட்டு திகைத்துப் போயும் பொதுமக்கள் காலம் கடத்தினார்கள்

நாட்டின் எல்லாத்தொழில்களுமேசோர்ந்துபோயின.

"எதற்கு நாற்று நடுகிறாய்? ஏன் பயிர் செய்கிறாய்? என் நெற்பயிர் முழுவதும் அந்நியரின் குதிரை மேயப் போகிறது. யானைகள் கரும்புத் தோட்டத்தை நசுக்கப் போகின்றன. மாங்கொல்லையை மனிதர்கள் சூறையாடப் போகிறார்கள்."

மக்களே மக்களை அச்சுறுத்துவார்கள்.



"எதற்கு துணி நெய்கிறாய்? அரசர்களே கோவணத்தோடு அலைகிறார்கள். அந்நியர்கள் காசு கொடுத்து வாங்குவதில்லை. கத்தி முனையில் கொள்ளையடிக்கிறார்கள். வாங்குவோர் இல்லாத போது வேலை செய்வானேன்? எதற்கு சிற்பத் தொழில்? எதற்கு மர வேலை? எதற்கு யாகம்? ஏன் பூஜை?"

மக்கள் வெறுமே கிடந்தார்கள். சோம்பித்திரிந்தார்கள் சிறிய விஷயங்களுக்கும் சண்டையிட்டுக் கொண்டார்கள். பழைய அரசர்களின் மேன்மைகளை பாடிப்பாடி நொந்து போனார்கள்.

வீரபாண்டியன் காளிங்கராயன் என்கிற அந்தகளபதி எந்த இலக்குமின்றி ஒவ்வொரு ஊராய் தங்கி, தன் அதிகாரம் செலுத்த முயற்சித்தான்.

அவன் கொள்ளையடித்த பொற்காசுகளை அவன் வீரர்கள் அவனிடமிருந்து கொள்ளையடித்தார்கள். அவனை மது போதையில் மூழ்கடித்து விட்டு மயிலை திருவல்லிக்கேணிப் பக்கம் ஓடிவிட்டார்கள்.

தாங்கள் பாண்டியர்களே இல்லை போலவர்கள். ஒச்சாணர்கள் என்று பொய் சொல்லிக்கொண்டார்கள். தமிழ் அதிகம் பேசத் தெரியாதவர் போல் நடித்தார்கள்.

இருபத்து ஐந்து வயதில் மதுரையை விட்டு நீங்கிய காளிங்கராயன் பெரும்பாலான வீரர்களையும், செல்வத்தையும் இழந்த காளிங்கராயன், ஒரு சிறிய மூட்டை பொன்னோடு கிராமம் கிராமமாய் பயணம் செய்து கொண்டிருந்தான்.

சோம்பித் திரிந்த தஞ்சை விவசாயிகள் சிலரை அரையர் பட்டம் கொடுத்து படைவீரனாய்மாற்றினான்.

எங்கெல்லாம் எவ்விதமெல்லாம் ஏமாற்ற முடியுமோ அங்கெல்லாம் விதம்விதமாக ஏமாற்றினான்.

ஒரு சிறிய கிராமத்திற்குப் போய், அந்த கிராமத்துக் காவலை, தான் மேற்கொள்வதாகக் கூறி பணம் கேட்பான்.

''பாதுகாக்க எதுவுமேயில்லாத போது, காவல் எதற்கு? அப்படியே ஏதும் இருந்தாலும் காவலுக்கு கொடுக்க, காசுக்கு எங்கே போவது?''

மக்கள் தயங்கினால் அன்றிரவே நடுநிசியில் காளிங்கராயன் வீரர்களில் ஒரு பகுதியினர் கிராமத்தை கொள்ளையடிப்பார்கள், மற்றொரு பகுதியினர் எதிர்த்து நிற்பார்கள். அவர்களை விரட்டித் துரத்துவது போல் நடிப்பார்கள்.

ஒருசில இடங்களில் காளிங்கராயன் ஆட்கள் கோயில் நகைகளைக்கூட கொள்ளையடித்தார்கள்.

நாடு வெட்கக்கேடான நிலையில் இருந்தது. உயிர் வாழ மக்கள் எல்லா வேதனைகளையும் அனுபவிக்க வேண்டியிருந்தது.

காளிங்கராயன் திருவாண்மையூருக்கு அருகேயுள்ள திருக்கடல்மல்லை என்கிற கடற்கரைப்பட்டணத்தில் வந்து தங்கினான். அவன் மதுரையை விட்டு வந்து முப்பத்திமூன்று வருடங்களாகிவிட்டன.

தலை நரைத்துவிட்டது. தளர்ச்சியால் கை கால்கள் குடைய ஆரம்பித்துவிட்டன.

மதுரையில் விட்டுவந்த மனைவி மக்களெல்லாம் என்னவானார்கள் என்பதே தெரியவில்லை.

கை காசு கரைந்துகொண்டே வந்தது.

அவனுக்கு மதுரைக்குப் போகவேண்டும் என்ற ஆசை இருந்தது. மதுரை வரை குதிரையில் போய் அதன் எல்லையிலிருந்து ஒரு விவசாயியைப் போல வேஷமணிந்து



நடந்து போய்விடவேண்டும். தான் பிறந்து வளர்ந்த பூமியிலேயே இறந்துவிட வேண்டும் என்ற ஆசை அவனுக்கு வந்தது.

தன்னுடைய மகன்களும், மனைவியும், மகளும் மதம் மாறிவிட்டார்கள் என்கிற செய்தி வெகுகாலம் முன்பே வந்துவிட்டது. அது உண்மையா என்று தெரிந்து கொள்ள ஆசையிருந்தது.

ஆனால், மதுரைக்குப் போக காசு வேண்டும். காசு இருந்தால்தான் நல்ல குதிரை வாங்க முடியும்.

மாறவர்மன் வீரபாண்டியன் திருநெல்வேலிச் சீமையிலிருந்து மறுபடி பெரும்படை திரட்டுகிறார் என்ற செய்தி வந்தது.

அவர் எழுதிய ஓலையைப் பிரதி எடுத்துக்கொண்டான்

முப்பத்துமூன்று வருடங்களுக்கு முன்பு மதுரையிலிருந்து எடுத்துவந்த முத்திரை மோதிரத்தை விரலில் அணிந்து கொண்டான்.

ஒரு நாளைக்கு ஒரு பொன் என்று வாடகை கொடுத்து பத்து கூலியாட்களை தயார் செய்து கொண்டான்.

வழியில் திருவிடந்தை கிராமம் நோக்கித் திரும்பினான்.

அந்த கிராமம் கடற்கரைக்கு அருகே இருந்தாலும் சுவையான நீர் நிறைந்த பெரிய குளத்தோடும் நன்செய் நிலங்களோடும் மிகப்பெரிய ஏரியோடும் அடர்ந்த தோப்புகளோடும் அமைதியாய் இருந்தது.

தன் கிழக் குதிரையுடன் காலாட்படை வீரர்களுடன் காளிங்கராயன் அந்த கிராமத்திற்குள் நுழைந்தான்.

கோயிலின் பெயர் திருவிடந்தை.

எந்தை அதாவது திருமால் திருவை அதாவது மகாலெக்ஷ்மியை இடப்பக்கம் ஏந்தி நிற்கிறான் என்பது பொருள்.

அந்த ஊரின் பெயர் அரசகுல நல்லூர். நல்லூர் என்று முடியும் பெயர்கள் எல்லாமே அந்தணர்கள் அதிகமாய் வாழ்ந்து ஆட்சி செய்யும் ஊர் என்று அர்த்தம்.

பாண்டியர் காலத்தில் வைணவத் தலங்களுக்கு மதிப்பு அதிகமாகி அவைகளுக்கு மானியங்கள் அதிக அளவில் கொடுக்கப்பட்டன.

இந்த நல்லூர்கூட, தேவதானமாக கொடுக்கப்பட்ட ஊர்தான். பாண்டியர்கள் செழிப்பாக இருந்த காலத்திலேயே இது தேவதானமாக மாற்றப்பட்டு விட்டது.

இந்த ஊர் அரசனுக்கு வரி செலுத்தவேண்டிய அவசியமில்லை. மாறாய் அரசனுக்கு செலுத்த வேண்டிய வரியை கோயிலுக்கு செலுத்திவிட வேண்டும். பணமாகவோ நெல்லாகவோ கொடுத்து விடவேண்டும்.

ஊரார் வசூலித்த அந்த வரியைக் கொண்டு சபை எனப்படும் அந்தணர்கள், கோயிலை சீராக பராமரித்து, நான்கு கால பூஜைகளும் செய்து ஊருக்கு வேண்டிய வசதிகளையும் செய்து தருவார்கள்.

இந்தக் கோயிலும் ஊரும் பாண்டிய தேசத்திற்குள் இருந்தாலும் தங்களைத் தாங்களே நிர்வாகம் செய்து கொண்டு சிறப்பாக இருந்தார்கள்.

அந்நியர்களிடமிருந்து இந்த கிராமத்தை காக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலொழிய இந்த ஊரார் அரசனைப் பார்க்கவேண்டிய அவசியமில்லை.

இது ஒரு சுயநிதிக்கிராமம்.

அரசனே இல்லாத இந்த நேரத்தில் அந்நியர்கள்



படையெடுப்பு அடிக்கடி நிகழும் காலகட்டத்தில் இந்த கிராமத்தை வளைத்துப் போடுவது நல்லது.

தேவதானமாக கொடுக்கப்பட்ட இந்த கிராமத்தை மறுபடியும் வெள்ளான் வகை கிராமமாக மாற்றிவிட வேண்டும்.

அதாவது இனி சபை என்கிற அந்தணர்கள் ஆட்சி செலுத்த மாட்டார்கள். இங்கு வேளாளர்களே முதல் குடிமக்களாவார்கள். அவர்களிடமிருந்து பல்வேறு விதமான பொருள்களாக வசூலித்துக் கொள்ளலாம்.

தேவதானமாக கொடுக்கப்பட்ட கிராமத்தில் வரி வசூல் குறைவு. வெள்ளான் வகையில் வரிவிதிப்பு பங்கு அதிகம்.

மதுரையை விட்டு ஓடிய மன்னர் மாறவர்மன் வீரபாண்டியன் திருநெல்வேலிச் சீமையில் இருக்கிறார். படை திரட்டுகிறார்.

அந்நியர்களை எதிர்த்து மதுரையை மீட்டுக்கொள்கிறார். அதற்கு பெரும் பணம் செலவாகும். எனவே பாண்டிய மன்னரின் அதிகாரத்திற்கு உட்பட்ட சேர சோழ தொண்டை மண்டலங்கள் எல்லா இடத்திலும் எல்லா தானங்களும் மாற்றப்பட்டு மன்னனுக்கு வரி கொடுக்கும் வெள்ளான் வகை நிலமாக மாற உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அவசரகாலம் என்பதால், உத்தரவு வாய்வழியாக சொல்லப்பட்டு முத்திரை மோதிரம் தரப்பட்டது.

அந்த முத்திரை மோதிரம் சரிபார்த்து, அரசர் படை திரட்டும் உரிமையை எனக்குக் கொடுத்த ஓலையும் படித்து இந்த அகரகுல நல்லூர் என் ஆணையை ஏற்று நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

நான் உடையார் வீரபாண்டியகாளிங்கராயன், பாண்டியர்களின் சேவகன்."

அந்தக் கிழவனின் மனம் கொக்கரித்தது. தொடர்ந்து திட்டமிட்டது.

அதிகாரமில்லாத அதிகாரிகள் ஆபத்தானவர்கள். அவர்கள் மற்றவர்கள் அதிகாரத்தை திருடப்பார்ப்பார்கள். வீரமில்லாத வீரர்கள் பயங்கரமானவர்கள் அவர்கள் குறுக்கு புத்தியை கையாள துடித்து நிற்பார்கள்.

விவேகமில்லாத வீரனும் அதிகாரத்தை எப்போதோ தொலைத்துவிட்ட அதிகாரியுமான காளிங்கராயன் வயலில் புகுந்த எருமைபோல் அந்த கிராமத்திற்குள் நுழைந்தான். கூடவந்தகூலிப்படையை எக்காளம்போடச் சொன்னான்.

இடுப்பில் மறைத்து வைத்திருந்த சிறிய எக்காளத்தை ஒரு கூலிக்காரன் எடுத்து பலமாக ஊத அந்த சிறிய கிராமம் திடுக்கிட்டு எழுந்தது.

## 3

"ஸ்வாமி ஒரு சந்தேகம்" நாச்சி குரல் கொடுத்தாள்.

நரசிம்மபட்டர் குரலுக்குத் திரும்பவில்லை.

"ம்ம் கேள்" என்று பதில் குரல் மட்டும் கொடுத்தான்.

சாம்பிராணித் தைலத்தை திரவிடத்தை வராகமூர்த்தியின் மீது கவனமாக தடவிக் கொண்டிருந்தார்.



இந்த வராகமூர்த்தி கற்சிலையல்ல கதை சுண்ணாம்புக் காரையால் செய்யப்பட்ட சிற்பம் சுவரோடு ஒட்டி வைக்கப்பட்ட சிற்பம்.

வராகமூர்த்தி நின்ற திருக்கோலம் வலதுகால் உறுதியாக நிற்க இடதுகாலை உயர்த்தி முழங்கால் மடித்து ஆதிசேஷன் தலையில் வைத்திருக்கிறார் அவருடைய இடது பக்கம் ஆதிசேஷனின் மனைவி வாசுகிக்கு அருகே இருக்கிறது.

முகம் பன்றி முகம், ஆனாலும் இதழ்கடையில் ஒரு புன்சிரிப்பு இருக்கிறது. கண்களில் ஒரு கருணை மிளிர்கிறது.

அந்த இடது தொடையில் வராகமூர்த்தி லக்ஷ்மியை தூக்கி அமர்த்திக் கொண்டிருக்கிறார்.

லக்ஷ்மி கனகம்பீரமாய் எல்லாவற்றிற்கும் உயர்ந்தவனான தன் புருஷன் தன்னை தன் தொடை மீது பிரியத்துடன் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறான் என்கிற பெருமை பொங்க அமர்ந்திருக்கிறாள்.

பெண்களின் கர்வம் நடையில் தெரியும். நடக்காத போது அமர்ந்து கால் நீட்டுவதில் தெரியும்.

இங்கே மகாலெக்ஷ்மி அமர்ந்து காலைத் தொங்க விடாமல் தன் இருகால்களையும் உரிமையோடு நீட்டி புருஷன் இடுப்பு வரை படரவிட்டிருக்கிறாள்.

மிகவும் ஒடுக்கமாக உட்காராமல் உல்லாசமாக உட்கார்ந்திருக்கிறாள். அவளது வலது முழங்கையிலிருந்து விரல் நுனிவரை புருஷன் தோளை தடவியிருக்கிறது. புருஷனுடைய கைகளோ ஒன்று இடுப்பை வளைத்துப்பிடித்திருக்க மற்றொன்று புஜத்தைப் பற்றியிருக்கிறது.

எந்தக் கணத்தில் வேண்டுமானாலும் மனைவியை இழுத்து மார்போடு அணைத்துக் கொள்ளும் உத்வேகத்தில் அந்த வராகச் சிற்பம் இருக்கிறது.

உல்லாசம் மிகுந்த மனைவி உற்சாகம் மிகுந்த கணவன் என்று அந்தக் கோயில் மூர்த்திகள் காட்சியளித்தார்கள்.

வராகரின் உதடு லக்ஷ்மி நெற்றிக்கருகே இருக்கிறது. குழந்தையை உச்சி முகர்வதுபோல. இங்கே புருஷன் மனைவியை உச்சி முகர்கிறான்.

கன்னத்தில் முத்தமிடுவது காதல்
கனிரச உதட்டைக் கவ்வியிழுப்பது காமம்
உச்சியில் முத்தமிடுவது... ஆசீர்வாதம்.

இது சரணாகதித் தத்துவம். தன்னைசரணடைந்தவர்களைப் புருஷனான நாராயணன் தனக்கு மிக அருகே இருத்தி இறுகப்பற்றிக்கொண்டு உச்சி முகர்கிறான்.

அவனை நெருங்கிவிட உல்லாசம்தான் முழுதும். அவனேயென்று சரணடைந்துவிட அந்த சரணாகதியை அவன் ஏற்றுக்கொண்ட பின்னர் பணிவோ மரியாதையோ தேவையில்லை. கைகூப்புவதோ காலில் விழுவதோ அவசியமேயில்லை.

அவன்மீது கால்போட்டுக் கொள்கிற உல்லாசியாய் கூட அவனைச் சரணடைந்தவர்கள் இருக்கலாம்.

புருஷனிடம் பயமேயில்லாத மனைவியும் கடவுளிடம் சரணடைந்தோரும் ஒன்று.

ஏன் வராக முகம்? கடவுள் தன்னை எப்படித் தேட வேண்டும் என்று பக்தனுக்கு ஒரு கோடி காண்பித்திருக்கிறார்.



பன்றி மண்ணைக் குடைந்து கிழங்கு தேடுவது போல தன்னைக் குடைந்து தேடு என்று குறிப்பால் உணர்த்துகிறார். மனதைக் குடைந்து கொண்டு போ என்கிறார்.

இது இல்லை, இது இல்லை என்று ஒதுக்கிவிட்டு உண்மையைத் தேடிக்கொண்டு போ என்று கட்டளையிடுகிறார்.

தன்னைத்தான் குடைந்து கொள்வது என்பது சாதாரண செயலல்ல. உலகத்தின் எல்லா வேலைகளையும் விட அது மிகக் கடினமானது. அதற்கு மிகுந்த பொறுமையும், அதிக வலிவும், அழகு சுகம், சொகுசு பற்றிய அலட்சியமும் வேண்டும்.

பன்றி மிக பலசாலியான மிருகம். போராடும் குணமுள்ள மிருகம். விடாப்பிடியான குணமுள்ள மிருகம்.

ஒரு பூனைபோல் தன்னை நக்கிக் கொள்ளவோ, ஒரு குதிரையைப்போல் சிலுப்பிக் கொள்ளவோ, ஒரு சிங்கத்தைப்போல் கர்ஜித்துப் பேசவோ ஆவலில்லாத மிருகம்.

கடவுளைத்தேடுவதில் பன்றியாய் இருப்பதே நல்லது. குடைந்து குடைந்து தனக்குள் போக கற்றுக் கொள்வது சிறந்தது.

நரசிம்மபட்டர் மிக கவனமாய் தைலத்தை மகாலெக்ஷ்மியின் மீது ஊற்றி, சிலையின் எல்லா இடங்களிலும் தடவினார். வேலை பூர்த்தியானதும் திரும்பினார்.

"ம்ம்...கேள்... என்ன சந்தேகம்?" நாச்சி என்கிற பிள்ளை மறைப்போர் மாணிக்கத்தை வினவினார்.

நாச்சி ஒரு தேவரடியார். இந்த திருவிடந்தை கோயில் தாசி.

கோயிலுக்கு அவன் தன்னைக் கொடுத்து மூன்று வருடங்களாகின்றன.

இந்தக் கோயில் மீது மிகுந்த பிரியமும் ஈடுபாடும் இளவயதிலிருந்தே அவனுக்கு வந்துவிட்டது.

நாச்சியின் தாய் ஆயிரவன் மாணிக்கமும் ஒரு தேவரடியார். இதே கோயில் தாஸி தான் விலகிக் கொண்டு இந்தக்கோயில் சேவையை அவள் தன் மகனுக்கு கொடுத்து விட்டாள்.

நாச்சிக்கு பதினெட்டு வயது. இளமையான தேகம். மாந்தளிர் போன்ற நிறம். அடர்த்தியான சற்று சுருட்டையான கூந்தல், பெரிய விழிகள், சிறிய மூக்கு, குழிவிழும் முகவாய், வளைந்த மேலுதடு. கனிந்த கீழ் உதடு. சரிவான தோள்கள், அளவான முலைகள், பகத்தான் படர்ந்த வயிறு, உருளையான பிருஷ்டம், வழித்து விட்டது போன்ற தொடைகள், உதைத்து ஆடி நடித்த கால்கள், குறைவான அலங்காரம், நிறைய பேச்சு.

திருவான்மியூர், திருமயிலை, திருஅல்லிக்கேணி போன்ற ஊர்களில், விசேஷ நாட்களில் இவனுடைய சதிர் விமரிசையாய் நடக்கும்.

குறிப்பாய், மார்கழி மாதங்களில் ஆண்டாள் போல் அலங்காரம் செய்துகொண்டு, இவன் பாசுரம் பாடுவான்.

இவனைக் காணவும், கேட்கவும் பெருங்கூட்டம் கூடும்.

மார்கழி, தை மாதங்களில் பயணம் செய்வான். மற்ற நாட்களில் திருவிடந்தை கோயிலே முக்கியமாக இருப்பான்.

கோயிலின் ஒவ்வொரு பகுதியையும் வாரம் தவறாமல் சுத்தம் செய்வான். கோலமிடுவான்.



சிறிய கோயில். ஒரே தாஸி. அவனுக்கு வேலைகள் அதிகமிருந்தன

வாழ்க்கை எந்நேரமும் அவனுக்கு இறை பற்றிய சிந்தனையாகவே கழிந்தது.

இந்த ஐப்பசி மாதம், அவனுக்கு முப்பத்திரண்டு வயதாகப் போகிறது. நடனமாடுவதை மெல்ல மெல்ல குறைத்துக் கொண்டிருக்கிறான்.

கூட்டம் அதிகமில்லாத போது, ஏதேனும் சில பிரபந்தங்களுக்கு சன்னதியருகே நின்று அபிநயம் பிடிப்பான். அதிகம் ஆடாமல், துள்ளிக் குதிக்காமல் பின்னல் வீச சுற்றி வந்து துள்ளல் நடை போடாமல், பாசுரத்தின் பொருளை முத்திரைகளில் கொண்டுவர முயற்சி செய்வான். சுற்றிநின்ற சிலர் அவன் காட்டும் பொருளுணர்ந்து 'ஆஹா...' என்று வாய்விட்டுப் பாராட்டுவர்.

'சாரம் உதைத்த சர மழைபோல்' என்கிற ஆண்டாள் பாசுரத்திற்கு, பூமியை நோக்கி வருணனைப் போல அம்பு தொடுப்பான். சட்டென்று அபிநயம் மாற்றி, மேலேயிருந்து மழை அம்பு தாக்குவதாய் நடிப்பான். ஒரு வரிக்கு இரண்டு அபிநயங்கள் வேகமாக பிடித்துக் காண்பிப்பதில் திறமைமிக்கவனாக இருந்தான்.

அவன் தாஸியாய் பொட்டு கட்டிக் கொண்ட காலகட்டத்தில் மதுரையும், திருச்சியும் அந்நியர் வசப்பட்டிருந்தன. மிகப் பெரிய கொள்ளை நடந்து முடிந்திருந்தது. மக்கள் நிலைகுலைந்து போயிருந்தார்கள். கடவுள் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை. அரசன் நீதி சொல்வான் என்கிற நம்பிக்கை எல்லாம் பொய்த்துப் போயிருந்தது.

மக்களில் பலபேர் அந்நியர்களுக்கு பயந்து காடுகளில் ஒளிந்து வாழ்ந்தார்கள். அந்நியர்கள் இன்னும் படையெடுக்காத கடற்கரை கிராமங்களில் தஞ்சம் புகுந்தார்கள். குடும்பத்தைப் பிரிந்து, கௌரவத்தை இழந்து, ஜாதி சமய சடங்குகளெல்லாம் தூள் தூளாக தனித்துவிடப்பட்ட நிலையில் வெறும் கோவணதாரியாய், சடாமுடியராய், எலும்பும் தோலுமாய் அலைந்தார்கள். ஏதோ ஒருவிதமாய் உயிர் வாழ்ந்தார்கள்.

அப்படி அலைந்தவர்களின் கதைகள் படுபயங்கரமாய் இருந்தன.

''உணவின்றி நடுக்காட்டில் சாகக் கிடந்த என்னை, ஒரு வேட்டுவச்சி முலைப்பால் ஊட்டி காப்பாற்றினாள். வேடன் அருகிலிருந்தான். நான் மெல்ல எழுந்து இருவரையும் நமஸ்கரித்தேன்.

பஞ்சமர்கள் என் வீட்டு நாய்களைக் கூட தொடக்கூடாது என்ற எண்ணம் கொண்டவன் நான். என் வாழ்க்கை இப்போது திசை மாறிப் போயிற்று. இனி நான் எந்தக் கடவுளையும் நம்பத் தயாராக இல்லை. அப்படி நம்புகிறவனை மதிக்கவும் போவதில்லை'' என்று நடுவீதியில் கத்தி விட்டுப் போனான்.

அவனை எதிர்த்துப்பேச, அவனுக்கு சமதானம் சொல்ல எந்த அந்தணரும் முன்வரவில்லை. ஊரிலுள்ள பெரிய மனிதர்களெல்லாம் வாயடைத்துப் போய் நின்றார்கள்.

அடுத்த ஐப்பசியிலும் சாரம் உதைத்த சரமழை பூமியைத் தாக்கியது. ஆனால், அது கடவுளை ஞாபகப்படுத்தவில்லை. மாறாய் யாரோ அலறி அலறி அழுவது போலிருந்தது.

அப்படியானால் இந்த இந்துமதம் மொத்தமும் பொய்யா? கடவுள் யவனர் பக்கமா? முடிவில்லாமல் மதுரைக்கு வந்து கொண்டே இருந்தார்களாம். மூன்று



நாட்களாம் இரவு பகல் காணாது ஜனக்கூட்டமா... எங்கே உணவு எங்கே உணவு என்று அலைந்தார்களாம். கன்றுகளையும், கர்ப்பிணி ஆடுகளையும் வெட்டிக் கொன்று உணவு சமைக்கச் சொன்னார்களாம். வீடுகளில் கோயில்களில், மடங்களில், மண்டபங்களில், அரண்மனைகளில் கும்பல் கும்பலாக குடியேறினார்களாம்.

திடீரென்று வெறிபிடித்தது போல் ஜனங்களைத் தாக்குவார்களாம். ஒரு பயத்தை ஏற்படுத்த வரிசையாய் நிற்க வைத்து தூக்கிலிடுவார்களாம்.

மழை பொழிவதையே யுத்தம் போல நடக்கட்டும் என்று வேண்டிக் கொண்ட இந்த பூமியில், வில் உதைத்த கணை போல வேகமாக மழைத்துளி விழ வேண்டும் என்று பாட்டுப்பாடிய நாகரீகத்தை காலம் முறித்துக் கொண்டது.

அரக்கர்களை வதம் செய்த ராமர், அவருக்குத் துணையான லெட்சுமணர், மலையைத் தூக்கிய கிருஷ்ணர், திரிபுரம் எரித்த சிவன், வேலோடு களம் புகுந்த முருகன் என்கிற வர்ணனைகளெல்லாம் பொய்யாய் போயின.

யாரும் யவனர்களை எதிர்க்கக் காணோம். எவராலும் அவர்களைத் தடுக்க முடியவில்லை.

அப்படியானால் இந்த மதம் பொய்யா? இவ்வளவு நான் சொல்லி வந்த கதைகள் பொய்யா?

நல்லவர்களை கசையாலடித்து தோலுரித்த போது, ஏன எவரும் வரவில்லை? பெண்களை துரத்தி துரத்தி கற்பழித்தபோது ஏன் பூமி பிளக்கவில்லை? ஏன் பிரளயம் ஏற்படவில்லை? நாம் நல்லவர்கள் இல்லையா? நம் பக்கம் கடவுள்கள் இல்லையா?

இந்த பூமியில் ஏன் இத்தனை வேதனை? இந்த நாகரீகத்திற்கு ஏன் இத்தனை எதிர்ப்பு? இந்த மதத்தை

ஏன் இன்னொரு மதம் அழிக்க முயற்சிக்கிறது? ஏன் பின்னப்படுத்தியிருக்கிறது?

எல்லோரும் கைகட்டி நிற்கும் கர்ப்பக்கிரகத்தில் கால் செருப்போடு யவனர்கள் நுழைந்தார்களாமே... கயிறு கட்டி மூலவரை அப்புறப்படுத்தி விட்டு வைத்திருந்த வைர வைடூரியங்களை எடுத்துக் கொண்டார்களாமே... இவை கடவுளல்ல என்று யவனர்கள் கத்தினார்களாமே...

எத்தனை பேர் நம்பிக்கை பொய்த்துப் போயிற்று? எவ்வளவு பேர் காலத்திய நம்பிக்கை உடைந்து போயிற்று?

''ஐயன்... மிக பவ்யமாய், மிருதுவாய், சாம்பிராணித் தைலம் தடவிக் கொண்டிருக்கிறீர்களே... இதெல்லாம் கடவுளா? கல்லெனில் எதற்கு விலையுயர்ந்த சாம்பிராணி தைலம். கடவுளெனில் ஏன் மதுரையை, திருச்சிராப் பள்ளியை இவர் காப்பாற்றவில்லை. இவரை நம்பிய பல்வேறு குடும்பங்கள் ஏன் யவனர் கைபடாமல் தடை செய்யவில்லை?

குறைந்த பட்சம் நம்மையாவது நம் ஊரையாவது வராகர் காப்பாற்றுவாரா?''

நாச்சி குத்திட்டு உட்கார்ந்தபடி வராகமூர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனச்சலனம் அந்தணருக்குத் தெரிந்தது. ஏனெனில் அவருக்கும் அந்தக் கேள்வி இருந்தது.

''நாச்சி...இதை கல்லென்று நினைத்தால் கல். கடவுளென்று நினைத்தால் கடவுள்.

ஒருவீரன் கையிலே கத்தி வைத்திருக்கிறான். அந்த கத்தியா அவனைக் காப்பாற்றும்? அந்த கத்தியை அவன் செயலாற்றும் விதம்தான் அவனைக் காப்பாற்றும்.



ஆயுதமில்லாமல் போரிட முடியாது. வெறும் ஆயுதமும் வெற்றியைத் தேடித் தந்துவிட முடியாது. இந்தச் சிலை ஒரு உபாயம்' இதை கடவுளென்று பார்க்கும் போது என்னைக் காப்பாற்று என்று இறைஞ்சுகிறபோது உன்னே உன் மனம் ஒருமுகப்படுகிறது. சக்தி திரண்டெழுகிறது. அந்த சக்திதான் உன்னை இயக்குகிறது. வெறுமே அந்த சக்தியை நீ பார்த்துவிட முடியாது. உன்னை உருவமாக நீ கொண்டுள்ளவரை உருவமில்லாததை வழிபட முடியாது.

நான் தாஸி. நான் அந்தணன். நான் போர் வீரன் என்கிற நினைப்பு நமக்கு இருக்குமானால் இது கடவுள் என்கிற உருவமும் தேவைப்பட்டு விடுகிறது.

இதை கடவுளென்று சொன்னால் கடவுள். கல்லென்று சொன்னால் கல்.

நாச்சி... இவர் ஏன் நம் குலத்தோரை காப்பற்றவில்லை என்று அழுகிறாயா? நானும் அழுகிறேன் நாச்சி- நாம் தண்டிக்கப்பட்டிருக்கிறோம். மிக பயங்கரமாக தண்டிக்கப்பட்டிருக்கிறோம். எல்லா ஜாதியினரும் ஒட்டு மொத்தமாய் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறோம். ஏடாக் கணக்கில் நாம் செய்த பாவங்கள் கூடிக் கொண்டு போய் தலைமுறை தலைமுறையாய் தடித்துப் பெருத்துப் போன நம் களைகள் கிள்ளி எறியப்பட்டிருக்கின்றன.

ஒற்றுமையில்லாத க்ஷத்ரியர்கள் ஊழல் செய்யும் அரச அதிகாரிகள். ஊரை ஏமாற்றும் வைசியர்கள். அலட்டலும் அகம்பாவமும் நிறைந்த அந்தணர்கள் சோம்பித் திரிந்த நான்காவது வருணத்தினர் எல்லாருக்குமே தண்டனை கிடைத்து விட்டது. பிரிவினைகள் பெரிதாகி, பேதமையான பிரிவுகளை அதிகமாக்கி எதுபற்றியும் தெளிவில்லாத இந்த கும்பலை காலம் தண்டித்திருக்கிறது.

நம்மிடையே ஒற்றுமையில்லை. உழைப்பில்லை. உண்மையில்லை. இவைகளுக்கு அடிப்படையான அன்பில்லை அன்பு பற்றி நமக்கு அடித்து சொல்லித்தரப்படுகிறது.

அன்பு இல்லாததால் அறிவு தவறாக பயன்படுத்தப் பட்டுவிட்டது. அழிவுக்கு அழைத்துப்போய்விட்டது. இது உனக்குப் புரியும்போது இந்த ஊருக்குத் தெரியும்போது கடவுள் வருவார்.

வெள்ளைக் குதிரையில் ஏறி வடகிழக்குப் பக்கத்திலிருந்து தென்திசை நோக்கி மிகப்பெரிய சைன்யத்துடன் வருவார்.

நாச்சி...அன்பாய் இருப்பதற்கு உண்மையாய் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் பொய்யர்களாகி விட்டோம்.''

பட்டர் கைகளை கழுவிக்கொண்டார். திரைச்சீலையை விலக்கி வெளியே வந்தார்

கோயிலுக்குள் பெரிய மீசைவைத்த வயதான அதிகாரி நுழைந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் சிரிப்பும் கேலியுமாய் ஒரு ஆண்கள் கூட்டம் வந்து கொண்டிருந்தது.

வந்தவர்களில் ஒருவன்கூட சரியான ஆணில்லை என்று பட்டருக்குத் தெரிந்துவிட்டது கவலையானார்.

''நாச்சி...சீக்கிரம் வா வெளியே வா.'' திரைச்சீலையை நோக்கி குரல் கொடுத்தார்.

அவர் குரல் கோயில் பிரகாரம் எதிரொலித்து வாசலுக்கு எட்டியது. உள்ளே வந்து கொண்டிருந்தோரின் காதுகளில் விழுந்தது.

தைலப் பாத்திரத்துடன் நாச்சி வெளியே வந்தாள். வெளியே நிறைய ஆண்கள் இருப்பார்களென்று நாச்சிக்



குத் தெரியவில்லை. இரண்டு கைகளிலும் தைலப்பாத்திரம் இருந்ததால் உடையை சரிசெய்ய முடியவில்லை.

திரைச்சீலையை விலக்கி ஆணும் பெண்ணுமாய் அவர்கள் வெளிவந்ததைப் பார்த்து கூட்டத்தில் கடைசியில் நின்றிருந்த ஆண் வாய்விட்டுச் சிரித்தான்.

அவன் எதற்கெடுத்தாலும் சிரிக்கிறவன். சிரித்துச் சிரித்து எல்லோரையும் ஏமாற்றுகிறவன்.

எந்தக்காரணமுமின்றி அவன் சிரிக்க அவனைத் தொடர்ந்து இரண்டு மூன்றுபேர் சிரித்தார்கள்.

அப்படி சிரிப்பதற்கு எதிர்ப்புவராமல் போகவே மற்றவர்களும் சிரித்தார்கள்.

கூடவந்த ஆட்கள் சிரித்ததால் அவர்களை உற்சாகப் படுத்த அந்த அதிகாரியும் சிரித்தான்.

ஏதோ காணாததைக் கண்டதுபோல கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

''என்ன...தைல அபிஷேகமா?'. அந்த அதிகாரி அதட்டலாய் கேட்டான்.

''ஆமாம்.'' அந்த அந்தணர் பதில் சொன்னார்.

''பார்த்தாலே தெரிகிறதே''

''அந்த அந்தணர் கையெல்லாம் தைலம். அந்த அம்மாளின் தோளெல்லாம் தைலம்'' பின்னால் நின்றவன் சுட்டிக்காட்டினான்.

கூட்டம் மீண்டும் சிரித்தது.

''நீங்கள் யார்?'' அந்தணர் அதட்டினார்.

''நீர் யார்?''

பதிலுக்கு அதிகாரியும் அதட்டினார்.

''இது எங்கள் இடம். இங்கே நீர் அன்னியம். இங்கே உங்கள் அறிமுகம்தான் தேவையே தவிர, என் அறிமுகமல்ல.''

''எமக்கு சின்னங்கள் இருக்கின்றன. படிக்கத் தெரிந்தவரெனில் படித்து தெரிந்து கொள்ளலாம்'' அந்த அதிகாரி நெஞ்சில் தொங்கிய பதக்கத்தைக் காட்டினார். வலது கையால் அணிந்திருந்த முத்திரை மோதிரத்தைக் காட்டினார். அவை பாண்டிய அரசின் தரைப்படை அதிகாரி என்பதை வெளிப்படுத்தின.

''நீங்கள் இன்னாரென்று தெரிந்துவிட்டது. ஆனால் உங்கள் பெயர் தெரியவில்லை. எதற்கு இங்கு வந்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. நரசிம்மப்பட்டர் மிருதுவாகப் பேசினார்.

'என்னை யாரென்று கேட்கிற நீங்கள் யார்?' காளிங்கராயன் அதட்டினான்.

''நான் இந்த ஊர்க்காரன். நீங்கள் விருந்தினர். உள்ளே நுழைந்தவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதுதான் முறை''

''நான் உள்ளே நுழைந்தேனா, நீங்கள் உள்ளே நுழைந்திருக்கிறீர்கள். சோழர் காலத்தில் கங்கைக் கரையிலிருந்து மெல்ல மெல்ல தமிழ்போகம் மண்ணில் குடியேறிவிட்டீர்கள்,

ராஜராஜசோழன் என்கிற மூர்க்கன் முட்டாள் அரசன் எங்கள் ஊர் கோயில்களையெல்லாம் உங்களுக்கு குத்தகை கொடுத்துவிட்டான். உழைப்பவர்களுக்குண்டான நிலத்தைப் பிடுங்கி, உழைக்காதவருக்கு வாரிக் கொடுக்கின்ற வழக்கம் அப்போதுதான் நடைபெற்றது அந்தணரே...இது உங்கள் தேசமல்ல. நான் இப்போது உரையாடுவது உங்கள் மொழியில் அல்ல. நீங்கள் அதட்டினால் தமிழ் பேசுவீர்கள். அணைத்துக் கொண்டால்



வடமொழி பேசுவீர்கள். ஒருசமயம் நண்பரென்பீர்கள் மறுசமயம் அந்நியம் என்பீர்கள்,

எனவே எங்கள் தேசத்திற்கு குடிபெயர்ந்த நீங்கள் உங்களை யாரென்று அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கர்ப்பக்கிரகத்தின் திரைமூடிக்கொண்டு கோயில் தாளியோடு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று விளக்குங்கள்.''

எந்த காலத்திலும் அரசியலில் முதல் விஷயம் வாய் பேச்சுத்தான், பிறர் அதிரப் பேசுகிறவன்தான் அரசியல் வாதி ஆகமுடியும். எதிரியை சிந்திக்க வொட்டாமல், சப்தம் போடுகிறவன் தான் வெற்றிபெறமுடியும். பிறர் பேசுவதற்கு முன்தான் பேசி, தன்னைப் பற்றி ஒரு பூதாகாரத் தோற்றத்தைக் காட்டுபவன் தான் அரசியல் அதிகாரம் செய்ய முடியும்.

பாமரர்களை ஏமாற்றி படித்தவர்களை மிரட்டி, வணிகர்களை நைச்சியம் செய்து, வீரர்களை தன் விருப்பத்திற்கேற்ப வளைப்பவன் தான் அரசியலில் காலந்தள்ள முடியும், இவையனைத்திற்கும் அவர்கள் கைகொள்கிற ஆயுதம் பேச்சு. இடையறாத பொய், நாகூசாமல் சொல்லுகின்ற அபவாதங்கள். பிரித்தாளும் சூழ்ச்சி சமயோஜிதம்,

சட்டென்று ஒரு உருளைக் கட்டையை எடுத்துக் கொண்டு நரசிம்மபட்டர். காளிங்கராயனை முழங்காலில் அடித்து, துரத்த முடியும். கழுத்தில் கப்பு கொடுத்து தெட்டித்தள்ள முடியும்.

அப்படித் தள்ளினால் காளிங்கராயன் அலறி கை கூப்புவான். அந்தணரே...பொறுமை பொறுமை என்று தாழ்பணிவான். மகா விஷ்ணுவைப் போல் காட்சியளிக்கிற நீர் கோபப்படலாகாது. நான் சாதாரண அரசு

ஊழியன். என்னை தாக்குதல் முறையாகாது என்று கனிவோடு பேசுவான். குளிர்விப்பான்.

அப்போதும் பேச்சே துணை செய்யும். அவனை கண்டிப்பாய் காப்பாற்றும்.

ஒருவர் பேசுவதற்கு முன் எதிராளி முகபாவங்களை வைத்து, அவர் மனோ நிலையை எடை போட வேண்டும். எதிராளியின் எந்த தகர்வுக்கும் தன்னை தயார் செய்து கொள்ள வேண்டும், இது அரசியல்வாதியின் இரண்டாவது பாடம்.

நரசிம்மபட்டர் ஒரு படித்த முட்டாள்.

எல்லாம் தெரிந்த கோழை.

படித்தவர்கள் முக்கியமான நேரத்தில் முட்டாளாய்த் தான் போய்விடுகிறார்கள். ஏதும் செய்வதறியாது திகைக்கிறார்கள் சின்ன மிரட்டலுக்குக் கூட உள்ளே பதபதைத்து விடுகிறார்கள்.

இது படிப்பு கொடுக்கிற நல்ல குணத்தால் ஏற்படுவது. படிப்பு ஒரு அஹிம்சை குணத்தை ஏற்படுத்திவிடுகிறது. அந்த அஹிம்சை குணம் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கிறது. அந்த திகைப்பைத்தான் அரசியல்வாதிகள் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்.

''நீங்கள் யாரென்று எனக்குத் தெரியும்,'' காளிங்கராயன் அடுத்த ஆயுதத்தை எடுத்து வைத்தான். ''உங்கள் ஊர், பெயர் எல்லாம் நானறிவேன்.'' உங்களை சந்திப்பதற்காக திருவிடந்தை வந்திருக்கிறேன், சந்திக்கச் சொல்லி மேலிடத்து உத்தரவு வந்திருக்கிறது. தற்போது காயல் பட்டினத்தில் முகாமிட்டிருக்கும் பாண்டியமன்னர் இப்போது உங்களிடம் என்னை அனுப்பி வைத்திருக்கிறார். உங்களோடு சில அரசாங்க ரகசியங்கள் நான் பேச வேண்டும்.



ஒரு அதிகாரி கேட்டு பெயர் சொல்ல மறுப்பது பிரஜையின் குற்றம். இருப்பினும் பல்வேறு சூழ்நிலையை மனதில்கொண்டு உங்கள் அந்தஸ்தை நினைத்துப்பார்த்து உங்கள் அவமரியாதையை நான் பொறுத்துக் கொண்டேன்.

நீங்கள் நரசிம்மபட்டர். இந்தக் கோயிலின் தேவகன்மி. இந்த ஊரின் முதன்மையானவர். ஊர்சபையின் தலைவர். நீங்கள் தானிவுடன் கோயிலில் இருக்கிறீர்கள் என்று சேதி வந்தது. வேறு சமயமாக இருப்பின் தொந்தரவு செய்திருக்க மாட்டேன். இது அரசாங்க அவசரம். உங்கள் சந்தோஷத்தை நான் கெடுக்கும்படியாகி விட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள்.''

காளிங்கராயன் பேசிக்கொண்டிருக்கும் போது, அவன் பேச்சுக்கு பின்னே நின்றிருந்த பேடி மறுபடி வாய் விட்டுச் சிரித்தான்.

நரசிம்மபட்டர் அவமானத்தால் துணுக்குற்றார். எதிரேயுள்ள அதிகாரி தன்மையாகப் பேசினாலும் சுற்றியுள்ள ஆட்களிடையே ஒரு அகங்காரமும், அவமதிப்பு செய்யும் ஆவலும் அதிகமிருப்பதை உணர்ந்து கொண்டார்.

அப்படி அவமதிப்பு செய்வதை அந்த அதிகாரி அடக்கவில்லை. அது மட்டுமில்லாது, அவர்கள் அவமரியாதையை மெல்ல சிரித்து ஆமோதிப்பதாகவும் தெரிந்தது.

இது அரசியல்வாதிகளின் மற்றுமொரு தந்திரம். தன்மையாய் பேசுபவராக அரசியல்வாதி நடிக்க அவரைச் சுற்றியுள்ளவர்கள் அடங்காமல் எகிறி ஆடுவார்கள். அப்படி ஆடுபவரை லேசாய் ஒற்றை வார்த்தையில் அந்த அரசியல்வாதி அடக்குவான். நல்லபெயர் வாங்கிக் கொண்டு போவான்.

அரசியல்வாதியினுடைய ஆட்கள் அந்த அரசியல்வாதியின் இன்னொருமுகம் என்பது பழகிப் பார்த்தவருக்கே தெரியும்.

நரசிம்மபட்டருக்கு இந்த இரட்டைவேடம் புரிந்து விட்டது. ஆயினும், இந்த அதிகாரியை ஊர்சபை முன் நிறுத்தி மெல்ல உரித்தெடுப்பதுதான் நல்லது.

இவன் அசைவுகள் இவன் துர்குணத்தைக் காட்டுகின்றன. இவன் அங்கலட்சணங்கள் கடைந்தெடுத்த அயோக்கியன் என்று சொல்லுகின்றன. இவன் மூக்கின் நிறம் முகத்தின் நிறத்தைவிட வித்தியாசமாக இருக்கிறது. கன்னமேடுகள் கறுப்பும் பழுப்புமாய் கிடக்கின்றன. முக முடியில் சீரான வளர்ச்சியில்லை திட்டுத்திட்டாய் முடி முளைக்கிறவன் யாருக்கும் எந்த இடைஞ்சலும் செய்ய வல்லவன். தர்மத்தின் மீது நம்பிக்கையில்லாதவன் பதட்டமுள்ளவன். பதட்டத்தில் கொலையும் செய்பவன்

மாட்டிற்கு கொம்பு முளைத்ததுபோல் நெற்றிமேடு புடைத்துக் கொண்டிருக்கிறது. இப்படி இருப்பவர்கள் பேராசைக்காரர்கள். தன் நலத்திற்கு யாரையும் பலியிடுவார்கள். ஒரு மனிதரின் குணத்தை நெற்றியழகை வைத்துக் கொண்டு சொல்லிவிடலாம், இவன் நெற்றி பாழ் நெற்றி.

திருச்சின்னம் இல்லாததால் மட்டுமல்ல தெளிவு இல்லாததை நெற்றி சொல்லும். நெற்றி மட்டும் அதிகம் வேர்க்கிறவனுக்கு நேர்புத்தி இருக்காது. இவனுக்கு வியர்த்து வழிகிறது. அதையும் தவிர இவன் கண்களில் ஒரு அமைதியின்மை இருக்கிறது கால் சதா அசைந்து கொண்டே இருக்கிறது. கைகள் எதையாவது பற்றிக் கொண்டே இருக்கின்றன

இவன் கழுத்தில் வலியுள்ள மனிதன். அதனால், வலிக்கு இதமாய் கழுத்தை திருப்பி வேகமாய் அசைத்து சொடக்கு எடுத்துக் கொண்டிருக்கிறான்.



கழுத்துவலி உள்ளவனுக்கு நிம்மதியாய் தூங்க முடியாது. புரண்டு புரண்டு தூங்கத்தான் முடியும். அவ்விதம் ஆழ்ந்த தூக்கமில்லாதவன். எரிச்சலுள்ளவனாக இருப்பான். அவன் பேச்சில் செய்கையில் அந்த எரிச்சல் இடைவிடாது வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும்.

இந்த அதிகாரி சுகப்படாதவன் பிறர் சுகப்படுவதை பார்க்க விரும்பாதவன்.

காளிங்கராயனை ஊர்சபைக்கு அழைத்துப்போக நரசிம்மபட்டர் நகர்ந்தபோது அதை அலட்சியம் செய்து விட்டு காளிங்கராயன் கர்ப்பக்கிரகம் நோக்கி நடந்தான். கையிலுள்ள வேல்கம்பால் திரை விலக்கினான். திடுக்கிட்டான்.

''கல்திரை'' எழுப்பவில்லையா?'' கடிந்துகொள்வது போல் கேட்டான்.

''கல்திரையா... எதற்கு?'' நரசிம்மபட்டரும் கோபமாய் கேட்டார்.

''எதற்கா... யவனரிடம் கோயில் மூர்த்திகள் என்ன பாடுபடும் என்று நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? மூர்த்திகளுக்குக் கீழே விலையுயர்ந்த கற்களை புதைத்து வைத்திருக்கிறீர்கள். என்று அவர்களுக்கு தெரிந்துவிட்டது. யவனர்களுக்கு தங்கத்தின் மீதும் நகைகள் மீதும் விலையுயர்ந்த கற்கள் மீதும் மிகப்பெரிய மோகமுண்டு. அவைகளை அடைவதற்காக அவர்கள் எது செய்யவும் துணிகிறார்கள்.

ஆயிரக்கணக்கான வருடங்களாய் வழிபட்டுவரும் மூர்த்திகள் உடையாமலிருக்க ஒரேவழி கருவறையைச் சுற்றி கல்திரை எழுப்பிவிடுவதுதான்.''

''யவனர்கள் இந்தப்பக்கம் வருவதாக தெரியவில்லையே.''

''யார் சொன்னது? யவனர்கள் கால்படாத பூமியே இந்த தமிழகத்தில் இருக்கப் போவதில்லை. அவர்களை தடுத்து நிறுத்தும் ஆற்றல் இங்கோந்த வீரனுக்குமில்லை. மதுரையும் சீராப்பள்ளியும் சுத்தமாய் கொள்ளையடிக்கப் பட்டுவிட்டன தெற்கேபலசீமைகள் தாக்கப்பட்டுவிட்டன இனி அவர்கள் கடற்கரைப்பக்கம் திரும்புவார்கள் காயல் பட்டினத்திலிருந்து கோடு கிழித்ததுபோல் திருவெற்றி யூர் வரைக்கும் படையெடுத்துவந்து தங்கள் அதிகாரத்தை ஸ்தாபிப்பார்கள் அப்படி அவர்கள் படையெடுக்க முயற்சிக்கிற போது அவர்களைத் தடுத்து பலங் கொண்ட மட்டும் தாக்க பாண்டிய மன்னா முடிவு செய்திருக்கிறார்.

வாழ்வா சாவா என்கிற போராட்டம். நமது மொழியை, தேசத்தை, நமது கோயில்களை நாம் காப் பாற்றித்தான் ஆகவேண்டும்.

யவனர்களை எதிர்க்க படைதிரட்டுவதும் கோயில் களுக்கு கல்திரை எழுப்பி பாதுகாப்பு அளிப்பதும் முக்கியவேலையாக இருக்கின்றன.

உத்தரவு எங்கே, ஓலை எங்கே என்று கேட்கவேண் டாம் இது போர்க்காலம் உத்தரவுகள் வாய்மொழி யாகத்தான் வரும். முத்திரை மோதிரம்தான் பேசும்.

மன்னரை நான் சந்தித்து ஆறு மாதங்களாகி விட்டன. ஆயினும் தொடர்ந்து இப்பணியை செய்து கொண்டிருக்கிறேன், தொண்டை நாட்டிலிருந்து வீரர் களைத் திரட்டியனுப்பிக் கொண்டிருக்கிறேன் பொற் காசுகள் வசூலித்து உதவிக் கொண்டிருக்கிறேன். எனக்கு அறுபது வயது. ஆனது பாண்டியர்களாக இருப்பின் எனக்கு பொற்பதக்கம் அணிவித்து வீட்டிற்கு அனுப்பி யிருப்பார்கள். ஓய்வெடுக்கச் சொல்லி கிராமப்புறத்திற்கு மாற்றியிருப்பார்கள்



அல்லது போர்பயிற்சி கடிகைக்கு ஆசிரியராக நிய மித்திருப்பார்கள் ஆனால் நிலைமை மாறிவிட்டது நிலம் நீச்சு வீடுவாசல் எதுவுமில்லை. வெறுமே படை திரட்டும் அதிகாரியாய் வரிவசூல் செய்யும் கணக்கனாய் மன்னருக்காக செயல்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

திருவிடந்தையிலிருந்து குறைந்தபட்சம் இருபது ஆட்கள் வேண்டும் இரண்டாயிரம் பொற்காசுகள் எவ்வளவு விரைவில் தரமுடியுமோ அவ்வளவு விரைவில் தரவேண்டும் பாண்டிய மன்னரின் கட்டளையாக திரு விடந்தை ப்ரும்மதேய சபைக்கு இதை விண்ணப்பித்துக் கொள்கிறேன்.''

நரசிம்மபட்டர் திகைத்துப்போனார். ஊர்சபை கூட்டினார்.

நாட்டார் என்று அழைக்கப்படும் நாடு ஆள்பவரான அரசு அதிகாரி காளிங்கராயனின் சிறுபடை வேளாளர் தெருவில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க அந்தத் தெருவி லிருந்து ஊரார் என்றழைக்கப்படும் முக்கியஸ்தர்கள். நிலபுலன்களுள்ள வேளாளர்கள் நரசிம்மபட்டரின் வீட்டு வாசலில் சூழ்ந்துகொண்டார்கள்.

நரசிம்மபட்டரின் வீட்டுத் திண்ணையில் அவர் களுக்கு மரப்பலகை ஆசனம் அளிக்கப்பட்டது. மயிலாபுரி யிலிருந்து வந்த கொழுந்து வெற்றிலை கொட்டைப் பாக்கு மரத்தட்டில் வைத்து தரப்பட்டது.

அவர்கள் பேசத்துவங்கினார்கள்.

# 4

அரசன் யாரென்று தெரியாத போது ஒரு தேசத்திற்கு ஏற்படும் குழப்பம் சொல்லத் தரமன்று.

தினசரி வாழ்க்கையை இந்தக் குழப்பம் கடுமையாக பாதிக்கும். இடையறாத அவநம்பிக்கையை பரஸ்பரம் கொடுத்துவிடும்.

அரசன் இருந்தால்தான் வேளாளனுக்கு உழுது பயிர் பண்ணத்தோன்றும். அரசன் இருந்தால்தான் வணிகனுக்கு பொருட்களோடு வேறு ஊர் பயணப்பட ஆசை வரும். அரசன் இருந்தால்தான் போர் வீரனுக்கு மரியாதை இருக்கும், யாருக்காக வேல் தாங்கியிருக்கிறோம் என்று தெரியாமல் ஒருவன் படையிலிருப்பது நல்லதல்ல.

நாலுபேர் கட்டளைக்கு ஒரு படைவீரன் பணிப்புரிய முடியாது.

முப்பது வருடங்களுக்கு முன்பு மாலிக்காபூர் என்ற யவனன் மதுரையை கொள்ளையடித்த பிறகு அரசனைப் பற்றிய குழப்பங்கள் அதிகமாகி விட்டன.

மதுரையில் ஒரு பாண்டிய அரசன் ராமநாதபுரத்தில் ஒரு பாண்டிய அரசன் சீராப்பள்ளியில் ஒரு பாண்டிய அரசன் திருநெல்வேலிச் சீமையில் ஒரு பாண்டிய அரசன். வடக்கே திருவெற்றியூரில் ஒரு பாண்டிய அரசன் என்று தலைக்குத்தலை ஆட்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

ஒரு அவசரத்திற்கு அழைத்தால் விரைவில் வருவதாகச் சொல்லி வேறுபக்கம் பயணப்பட்டார்கள்.

மதுரையும் சீராப்பள்ளியும் மறுபடி மறுபடி கொள்ளையடிக்கப்பட்டன. அப்படி கொள்ளையடிக்க



யவனர்கள் வந்தபோதெல்லாம் மன்னர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒளிந்து கொண்டார்கள்.

வேடர்களைப்போல மரத்தடியில் தூங்கி பழந்தின்னி வௌவால்களை கொன்று தின்று கிழங்குகளைத் தேடி அலைந்தார்கள்.

கூ என்றும் ஆவ்...ஆவ் என்றும் பறவைகள் பாஷையில் தங்கள் நடமாட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

பெண்கள் சாமரம் வீச சிம்மாசனத்திலிருந்து தமிழ் பேசியகாலம் மறைந்து ஐம்பதாண்டுகாலம் ஆகிவிட்டன.

அரியணைக்கான சகோதரச் சண்டையில் அரசவை கூட்டப்படவேயில்லை. யார் அரசரென்று மக்களுக்குத் தெரியவுமில்லை.

முன்பெல்லாம் அரசருக்கும் மக்களுக்கும் நெருங்கியத் தொடர்பு இருக்கும் அரசரை அங்கிருந்து நன்கு கவனித்த கூத்தாடிகள் அரசனைப் பற்றி மக்களுக்குச் சொல்லுவதற்காக அரசனின் வாழ்வியல் செய்திகளைப் பரப்புவதற்காக அரசனைப் போல் உடுத்திக் கொண்டு வருவார்கள். பகல் வேஷம் போடுவார்கள். மிகச்சாதாரண மக்களுக்கு அரசன் யார், அவன் பெயர் என்ன. அவன் உணவு எப்படி உடை எவ்விதம் மனைவியர் எத்தனை, மக்கள் யார் யார் என்று கூத்தாடிகள் மூலமே சொல்லப்பட்டு வந்தது. அரசன் எதிரே எப்படியிருக்க வேண்டும் எப்படிப் பேச வேண்டும் என்பது கூட மக்கள் கூத்துக்கலைஞர்கள் மூலமே தெரிந்து கொண்டார்கள். அரசனும் ஆட்டிடையனும் பேசிக்கொள்வதை நகைச் சுவையாக கூத்துக் கலைஞர்கள் நடித்துக் காண்பிப்பார்கள்.

ஒருவரையொருவர் புரிந்து கொள்ள ஆகப்பத்தில் சிரமப்பட்டாலும் அறுபத்தி ஒன்பது ஆடுகள் அரசன்

கருணையுடன் வழங்குவான். ஆடுகள் பார்த்த சந்தோஷம் தாங்காமல் ஆட்டிடையன் கும்பிடக்கூட மறந்து ஆடுகளோடு அலைவான்.

இரவு ஆடுகளெல்லாம் பட்டியில் அடைக்கப்பட்டு அமைதியாய் அசைபோட்டுக் கிடக்கையில் திடீரென்று ஆட்டிடையனுக்கு அரசன் ஞாபகம் வரும். எங்க ராசா எங்க ராசா...என்று அவன் அரண்மனை இருக்கும் திக்கு நோக்கி ஊளையிட்டு அழுவான்.

தொலைதூரத்திலுள்ள அரசனுக்கு இந்த அழுகை கேட்கும். அரசன் இன்னொரு இருபது ஆடுகளனுப்பக் கட்டளையிடுவான்.

இது பகல்நேரக் கூத்தாக நடைபெறுகிற போது அந்த பரம்பர அன்பில் கூத்துக் பார்க்கிற மகாஜனங்கள் கனிந்துபோய் கண்ணீரை துடைத்துக் கொள்வார்கள்.

அந்த கூத்தாடிகளுக்கு அரசனும் வாரிக்கொடுப்பான். ஜனங்களும் சோறு கொடுப்பார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் மாதக்கணக்கில் தங்கி அவர்கள் போய்வந்த ஊர்களை விவரித்து சந்தித்துப் பேசிய ஜனங்களின் கதை சொல்லி விஷக்கடிக்கு வேர் விற்று சந்தனக்கட்டைக்கு அரிசி வாங்கி மிக சந்தோஷமாக அந்த கூத்தாடிகள் வாழ்வார்கள்.

இப்போதெல்லாம் கூத்துக்கலைஞர்கள் வருவதேயில்லை.

வாழ்க்கை சந்தோஷமாக இருந்தால்தான் நாடகம் பார்க்க முடியும். பாட்டுக்கள் பாட முடியும்.

ஒரேயொரு கூத்துக்கலைஞர் மட்டும் ஒற்றைத்தந்தி வாத்தியத்தை மீட்டி பவனர் கையில் மதுரை எப்படி சீரழிந்தது என்பதை ஒப்பாரியாய் பாடினான். அவன்



பெண்டுகளை பவனர்கள் வடக்கே தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள்.

சனி ஒழுகும் துர்வாசனை விசுர் ஒட்டகை என்மல் விளைத் தோட்டத்தை மேய்ந்து போய்விட்டது என்று அவன் பாடினான். அவன் பாடித்தான் மதுரையில் நடந்த குரூரம் அந்த தொண்டைநாட்டு மக்களுக்குத் தெரிய வந்தது.

சபை கூடியபோது சபையிலுள்ளவர்கள் இவையனைத்தையும் பேசி ஞாபகப்படுத்திக் கொண்டார்கள்.

''மன்னர் பெருமான் திருவிடந்தையிலிருந்து பணம் கேட்டு அதிகாரியை அனுப்பியிருக்கிறாராம்.'' நரசிம்ம பட்டர் பேசத் துவங்கினார்.

''மன்னரென்றால் யார் திருவிடந்தை யார் ஆட்சியின் கீழ் இருக்கிறது? தொண்டை மண்டலம் இப்போது பாண்டியர்களிடமா அல்லது தனித்து இயங்குகிறதா? இப்போது இவர்கள் கேட்பது யாசகமா அல்லது வரி வசூலிப்பா?

''யாசகமென்றால் நாம் அத்தனை வளமானவர்களில்லை. வரிவசூலிப்பு என்றால் யார் வசூலிக்கிறார்கள் என்று தெரிய வேண்டும். வரிகொடுக்க மறுத்தால் என்னாகும் என்று தெரிய வேண்டும்.''

''அதுவும் தவிர பாண்டிய மன்னரென்று இந்த நேரம் ஆறேழுபேர் தங்களை சொல்லிக் கொள்கிறார்கள். அந்த பேருக்கும் வரிகொடுத்து மாளாது. வந்திருப்பவர் யாரென்று நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''வந்திருப்பவர் பெயர் உடையார் காளிங்கராயர்.''

''கையில் தடி வைத்திருப்பவரெல்லாம் தன்னை உடையாரென்றும், ராயரென்றும் சொல்லிக் கொள்கி

னார்கள். அவருக்கு வசூலிக்கிற அதிகாரம் இருக்கிறது என்பதை எப்படி அறிவது?''

''மீன் இலச்சினை பொறித்த முத்திரை மோதிரம் வைத்திருக்கிறார்.''

''உங்களுக்கு எத்தனை முத்திரை மோதிரம் வேண்டும் பலவர்கள் அதிகாரிகளைத் தேடி அடிக்கிறார்கள் என்று தெரிந்த பிறகு யாருமே விரலில் முத்திரை மோதிரம் போடுவதில்லை. பலநூறு அதிகாரிகள் தலையைச் சுற்றி, முத்திரை மோதிரங்களை வீசிவிட்டார்கள். அவிழ்த்து அரைஞாண் கயிறில் கோர்த்துக் கொண்டார்கள். மீன் இலச்சினை முத்திரை மோதிரத்திற்கு எந்த மரியாதையுமில்லை.''

''எந்த உதவியும் இல்லையென்று சொல்லி விடட்டுமா? எங்கள் ஊர் ப்ரும்மதேயசபை உங்கள் பதவியை அங்கீகரிக்கவில்லை. உங்கள் வேண்டுகோளை ஏற்கவில்லை, உங்கள் வரவை விரும்பவில்லை என்று சொல்லிவிடலாமா?''

''சொல்லி விடலாம்'' சபையிலுள்ள ஒரேயொரு இளைஞன் மட்டும் அதட்டலாய் பேசினான். அவன் பெயர் ராமப்பன் ஊரார் என்றழைக்கப்படும் வேளாளர் குடியிருப்புகளுக்கு உபதலைவன்.

''ராமா... எதிர்ப் பேசுதல்கூடாது. உண்மையிலேயே காளிங்கராயன் மன்னர் அனுப்பிய ஆளாக இருந்தால் நாம் முகத்தை எங்கே வைத்துக் கொள்வது?''

''காளிங்கராயன் யாரோ அனுப்பித்தான் இங்கு வந்திருக்கிறார். அதில் சந்தேகமில்லை. ஆனால் யார் அனுப்பினார்கள். ஏன் அனுப்பினார்கள் என்பதுதான் கேள்வி இருக்கிற எல்லா ஊரையும் விட்டுவிட்டு. இந்த திருவிடந்தையை நோக்கி ஒருவர் வரக்காரணமென்ன?



இரண்டாயிரம் பொற்காசுகள் எங்கு எதைக் கேட்க வேண்டுமென்று வகை தெரிந்தவன் இப்படிக் கேட்பானா? இந்தத் தொகையை இன்று தஞ்சாவூரில் கூட ஒருவன் வசூலித்து விட முடியாது. திருக்குடந்தையிலோ மயிலாடுதுறையிலோ கூட வாங்கி விட இயலாது. காளிங்கராயன் சிறிதும் நம்பத் தகுந்தவனல்லன் என்பதற்கு வாய்கூசாது கேட்ட வரிவசூலிப்பே காரணம்.''

''இருபது போர் வீரர்கள் வேண்டுமென்று கேட்பது இன்னொரு முட்டாள்தனம். இது வேளாளர் குடியிருப்பு. பரதவர்கள் தான் படையில் சேர ஆர்வம் காட்டுவார்கள். திருவான்மியூர் முதலிகள்தான் படை திரட்டலுக்கு போர் போனவர்கள். நமது ஊருக்கு எதிரேயுள்ள பரதவர் குடியிருப்பிற்குப் போகாமல், போர் தளபதிகளான முதலிகளையும் கலக்காமல், நெல்லும் கரும்பும் பயிர் செய்யும் ஊருக்கு வந்து ரெண்டாயிரம் பொற்காசு கேட்பவன் நிர்மூடனாகத்தான் இருக்க முடியும். இப்படி நான்கு அதிகாரிகள் இருந்தால் போதும் பாண்டிய மன்னரை யார் வேண்டுமானாலும் ஓட ஓட விரட்டலாம். இவரிடம் எதுவும் பேசுவதற்கு முன்னால் இவரைப்பற்றி விபரங்கள் சேகரிப்பது நல்லது.''

''ராமப்பன் சொல்வது சரி.'' வேறொரு வேளாளர் கைதட்டிச் சொன்னார்.

''நான் இன்னொரு காரியம் செய்திருக்கிறேன். சபைக்கு அதை தெரிவிக்க விரும்புகிறேன். காளிங்கராயன் மீது எனக்கும் சந்தேகம் வந்திருக்கிறது. அவன் கூட்டத்தில் அங்கம் வகிக்கின்ற ஒரு ஆளை என் வீட்டிற்கு தனியே அழைத்து வந்து சோறு போட்டு கொல்லையில் கட்டிலில் படுக்க வைத்திருக்கிறேன். ஆள் கச்சலாக இருந்தாலும், அரைப்படி பழையமுது சாப்பிடுகிறான். உறங்கி எழுந்த பிறகு மீண்டும் பசிக்குமாம். அப்போது சூடாய் புளிக்

குழம்பு சோறு போட வேண்டுமாம். புளிக்குழம்பு தயாராகிக் கொண்டிருக்கிறது.''

''அவன் எதுவும் பேசினானா?

''பேசினான். உடையார் காளிங்கராயன் தனிப்படையில் சேர்ந்து எட்டுதினங்கள்தான் ஆகின்றதாம். அவன் சொந்த ஊர் நாகை. சோழ தேசத்து கைக்கோளர் படையில் அவன் மூதாதையர் நல்ல பதவியில் இருந்திருக்கிறார்கள் ஆனால் இவன் தகப்பனாருக்கு குதிரை வியாபாரம். இவன் குதிரைசவாரியை பார்த்து வியந்து காளிங்கராயன் தன் தனிப்படையில் சேர்த்துக் கொண்டாராம். அவனிடம் பேச்சு கொடுத்துக் கொண்டே இருக்கிறேன். அவ்வப்போது சபைக்கு தெரிவிக்கிறேன்.''

''இது நல்ல உத்தி காளிங்கராயனைப்பற்றி தெரிந்து கொள்ள நாம் வேறு சில உபாயங்களையும் செய்தாக வேண்டும்.''

''காளிங்கராயன் சொன்ன இன்னொரு தகவலையும் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். கோயில் மூலவருக்கு கல்திரை எழுப்ப வேண்டுமென்று காளிங்கராயன் திரும்பத் திரும்ப சொல்கிறார். யவனர்கள் படையெடுப்பு எப்போது வேண்டுமானாலும் நடக்குமென்று சொல்கிறார்.''

சபை நரசிம்மபட்டரின் பேச்சைக் கேட்டு திடுக்கிட்டது முகம் கருங்கியது.

அதேசமயம் யவனர்கள் படையெடுப்புநடந்தால்ஊர் கோயில் படும் அவஸ்தையை எண்ணி மனம் மருகினார்கள் ''கல்திரை எழுப்பத்தான் வேண்டுமா'' என்று கலங்கினார்கள்.

கல்திரை எழுப்புவது போல் அமங்கலமான விஷயம் ஒரு ஊருக்கு எதுவுமில்லை.



அழகான கோயில், அமைதியான ஊர், கண்ணுக்கு குளுமையான மூர்த்தி அந்த மூர்த்திக்கு பழமையான ஒரு சரித்திரம் இது எங்களூர் கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இவரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது என்று கோயிலை சுற்றிக் காட்டும்போதே அகல்விளக்கில் ஆரத்தி எடுக்கும் போதே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பாடப்பட்ட பாடலையும், அடி பிறழாமல் ஒப்புவிக்கும்போது தனி கர்வம் ஏற்படத்தான் செய்யும்.

மங்களாசாசனம் என்பது வெறும் பாட்டில்லை. அதுவொரு வரலாற்று முத்திரை மக்கள் வாழ்ந்து மகிழ்ந்த பூமி என்பதற்கான சாட்சி அது ஒருவிதமான குலப்பெருமை.

மிகப்பெரிய நாகரீகமுள்ள பூமி ஒரு வம்சத்தில் நாங்களும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று மார்தட்டிக் கொள்ளும் கர்வம் யாராலும் பாடப்பெறாத ஊரில் எவ்வளவு பெரியகோயில் இருந்தாலும் சிறப்பில்லை.

இதோ அருகே திருக்கடல்மல்லை இருக்கிறது. அங்கே மிகப்பழமையான கோயில்கள் இருக்கின்றன. கடல் தின்ற மிச்சமாய் பல அழகிய கலைச்சின்னங்கள் இருக்கின்றன. மிகப்பெரிய துறைமுகம் இருந்ததற்கான தடயங்கள் தென்படுகின்றன. மனிதர் வாழ்ந்த வரலாறு கல்வெட்டாகவும் இருக்கிறது.

ஆனால் கடல்மல்லை ஒரு சந்தோஷமான பூமியில்லை ஒரு அழிவுற்ற பிரதேசம் போலத்தான் அது காட்சியளிக்கிறது எத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும் அது இழிபாடுகள் நிறைந்த பிரதேசம்தான்.

கடல்மல்லை ஒரு சபிக்கப்பட்ட பூமி. போர்கள்

நடந்த இடம் எல்லாத் துறைமுகப்பட்டினங்களும் தாக்கப்பட்டு தகர்க்கப்பட்ட இடமாகத்தான் இருக்கின்றன.

பல்லவர்களின் மிக பலமான அந்த பாசறையை சோழர்கள் மிக மோசமாக தாக்கியிருக்கிறார்கள். துரத்தித் துரத்தி வீரர்களை கொன்றிருக்கிறார்கள். தூக்குத் தண்டனையும் கழுவேற்றலும் தான் தவறாமல் நடந்திருக்கின்றன. பெண்கள் சிறைபிடிக்கப்பட்டு சீரழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நேற்று அவர் மனைவி இன்று என் மனைவி நாளை நீ எவர் மனைவி என்று கேலி செய்யப்பட்டிருக்கிறார்கள். தாயின் அவலமான நிலையை குழந்தைகள் திகைத்துப் போய் பார்த்திருக்கின்றன. தனியே தேம்பித் தேம்பி அழுதிருக்கின்றன.

குழந்தைகளும் பெண்களும் அழுத இடம் சுடுகாடாகத்தான் போகும். புலவர்களும் நீதிமான்களும் விரும்பிய இடம் விளைச்சலில்லாமல் போகும்.

அற்ப ஆயுளில் இறந்த மனிதர்களின் ஆவிகள் அழுகையுள்ள இடத்தில் குடிபுகும்.

இனி எத்தனை கொண்டாடினாலும் திருக்கடல்மல்லை மக்கள் வாழும் இடமாக மாறாது. துறைமுகப் பட்டினமாக சிறக்காது வளம் கொழிக்கும் பூமியாக விளங்காது.

இங்கே இத்தனை பேரை வெட்டினார்கள். அங்கே அத்தனை பேரை தூக்கிலிட்டார்கள் என்று விவரம் கூறும் வரலாற்று பூமியாகத்தான் இருக்கும். கடல் அங்கே ஓலமிட்டு அழுது நெஞ்சிலடித்துக் கொண்டு அழும். பெண் பிள்ளை போல புலம்பி மெல்ல மெல்ல எல்லாக் கோயில்களையும் விழுங்கும். குடைந்து குடைந்து பொம்மைகள் செதுக்கப்பட்ட பாறைகளிலெல்லாம் நாய்கள்



தூங்கும் அணில்கள் குஞ்சு பொரிக்கும். நண்டுகள் நகரும். பாம்புகளும் பல்லிகளும் ஒண்டிக் கொண்டிருக்கும்.

இதோ இந்த திருவிடந்தைக் கோயிலின் ஸாந்நித்யம் ஒருநாளும் கடல்மல்லைக் கோயில்களில் இருக்காது. மகிஷனோடு போர் புரியும் துர்க்கை ஒரு கலையற்புதம். ஊர், பொம்மையைப் பார்த்து வியக்குமே தவிர விழுந்து வணங்காது.

அதே சமயம் சாதாரண கதை வடிவமான திருவிடந்தை வராகமூர்த்திக்கு நான்கு வேளை பூஜையும் தவறாது நடக்கும்.

ஏனெனில் திருவிடந்தை ஒரு சுத்தமான ஊர். எந்தப் பழிச் சொல்லுக்கும் ஆளாகாத ஊர் பாபகாரியங்கள் நடக்காத ஊர்.

வெள்ளிக்கிழமை மாலைவேளைகளில் சன்னதி வருகே நான்கு வேதமும் மாறி மாறி முழங்கும். வேறு என்னவேலை இருந்தாலும் வெள்ளிக்கிழமை மாலை ஊர் கோயில் வாசலில் கூடும்.

குழந்தைகளும் பெரியவர்களுமாய் நூற்றிநாற்பது தலைகள் கூடுமிடத்தில் வெறுங்கையோடு திருப்பி அனுப்புவதா? வீட்டிற்கு ஒரு வாரம் அக்கார வடிசல் முழங்கால் உயர வெங்கல உருளி நிறைய கடச்கட செய்து விநியோகம் நடக்கும்.

அக்கார வடிசலால் கூட்டமா கூட்டம் கூடியதால் அக்கார வடிசலா என்று பிரித்துப் பார்க்க முடியாது.

இலவசமாய் கிடைத்த இனிப்பை கடவுள் பெயர் சொல்லி உண்டு விட்டு கடற்காற்று வாங்கிய படியே திருவிடந்தை கிராமத்து மக்கள் பேசிக்கொண்டு போவார்கள். காய்ந்த தென்னை ஓலையை இறுக முடிந்து அதில் தீயிட்டுக் கொளுத்தி கோயிலிலிருந்து

கிளம்பிப் போவார்கள். வீடு சேர அந்த வெளிச்சம் போதும்.

இருட்டில் கும்பலாய் அப்படிப் போவது சந்தோஷமாய் இருக்கும்.

இப்போது அந்த சந்தோஷமெல்லாம் அடித்துக் கொண்டு போகப் போகிறது.

கோயில் மூர்த்திக்கு கல்திரை எழுப்பிவிட்டு எதற்கு பூஜை செய்வது? பூஜையில்லாக் கோயிலில் யார் வருவார்கள்? வந்து என்ன செய்வார்கள்?

இந்த காளிங்கராயன் சொல்வது எவ்வளவு நிஜம். திருவிடந்தையை குறிவைத்து யவனர்கள் வரப்போகிறார்களாம். அல்லது தெற்கேயிருந்து வடக்கே போகும்போது திருவிடந்தையையும் அழித்துவிட்டுப் போவார்களாம்.

மதுரையை யவனர்கள் தாக்கியபோதும் சண்டை போடத் துணிவில்லாத பல பேர் மலைப் பகுதிகளுக்குப் போய் குடியேறி விட்டார்கள். கற்பாறைகளாலும் மரத்தாலும் வீடுகள் கட்டிக்கொண்டு,ஏரிக்கருகேயும், அருவிக்கருகேயும் தங்கிவிட்டார்கள்.

கொசு, குளிர்ஜுரம், காட்டெருமை, மதயானை, சிறுத்தை, புலி எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வாழ்ந்தார்கள்.

அந்தக் காடுகள் பக்கம் யவனர்கள் போகவேயில்லை. மதுரை நகரில் பாதி அந்த மலையில்தான் இருக்கிறது என்று தெரிந்தும் பின்தொடர்ந்து போய் விரட்டவில்லை.

ஆனால், வெகுநாளாய் பூட்டிக்கிடந்த வீடுகளுக்கு தீ வைத்தார்கள். நிலைப்படியை இடித்து தாக்கிப்போட்டு விட்டு வளைவாக வேறு வாசலைப் போட்டுக் கட்டி தங்கள் படைவீரர்களை குடிவைத்தார்கள்.



காடுகளில் ஒளிந்து கொண்டவர்கள் ஐந்து ஆறு வருடங்களுக்குப் பிறகு மெல்ல நகருக்கு விறகுச்சுமை ஆட்கள் போல வந்து, தங்கள் வீடுகளில் வேறு ஆட்கள் இருப்பதைப் பார்த்து விம்மிவிம்மி அழுதார்கள். பெண்டுகள் அந்த வீட்டுக்குள்ளே போய், அங்குள்ள பெண்களைப் பார்த்து இடித்துப் போட்ட நிலைப்படியை எடுத்துப் போக வரம் கேட்டார்கள். அவர்கள் கொடுத்தவுடன், நெஞ்சாரத் தழுவிக்கொண்டு, எடுத்து வந்தார்கள்.

வேறு மொழி, வேறு கலாச்சாரம், வேறு கடவுள் உள்ளே புகுந்து ஆட்சி செய்தவுடன் பல ஜனங்களுக்கு சித்தப்பிரம்மை ஏற்பட்டுவிட்டது. கண்முன்னே கசையடி தோலுரிப்பை, தூக்குத்தண்டனைகளைப் பார்த்துவிட்டு சில பெண்கள் சதா அழுது கொண்டிருந்தார்கள். அழுது அழுது செத்துப் போனார்கள்.

ஜாதிகள் மறந்து போயின. சடங்குகள் மறந்து போயின. கோயில்களுக்குப் போய் என்ன செய்வதென்று தெரியவில்லை.

இந்த அந்நியர்கள் போகமாட்டார்கள். பல்லவர்கள் வந்து ஆண்டது போல், சோழர்கள் உள்ளே புகுந்து கொடி பறக்கவிட்டது போல், களப்பிரர்கள் கருப்புப் பதாகையை தொங்கவிட்டது போல், வேறு மொழி பேசக் கூடாது என்று உத்தரவிட்டது போல், யவனர்கள் ஆட்சியிலும் புதிய புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

ஊரில் திருவிழாக்கள் கொண்டாடி பல வருடங்களாயின. எதற்காக கூட்டம் கூடினாலும் யவனர்கள் பயந்தார்கள். குதிரைகளில் விரைந்து வந்து சவுக்கால் அடித்துக் கலைத்தார்கள்.

இந்த திருவிடந்தை அவ்விதம் ஆகப் போகிறதா? நினைக்கவே பயமாக இருந்தது. அப்படி யவனர்கள் படையெடுத்து வந்தால் ஒளிந்து கொள்ள காடுகள் கிடையாது. அருகே மலைகள் கிடையாது.

வயல் தாண்டி ஏரி,ஏரி தாண்டி வயல்,எல்லா இடமும் விளை நிலம். மழை நின்று பெய்தால் மூன்று போகம் நெல்லும், துவரையும், கரும்பும், காராமணியும் மாறி மாறிப் போடலாம். பத்து வருட வெற்றிலைக்கொடி ஒரு பனை உயரத்திற்கு பரந்து கிடக்கும். சற்று அடர்த்தியான இடம் மாந்தோப்பு மட்டுமே. அந்தத் தோப்பிலும் ஒருவர் இருவர் ஒளியலாமே தவிர ஒரு ஊர் மொத்தமும் ஒளிய முடியாது.

இந்த தமிழ் தேசம், தமிழ் பேசாத மாற்றரசர்களால் பந்தாடப்பட்டு வெகு நாளாயிற்று. அதுவும் இந்த தொண்டை மண்டலத்தில் போர் என்று எதுவுமே நடந்ததேயில்லை. பெண்டுகளையும் பிள்ளைகளையும் யாரும் வெட்டிக் கொன்றதில்லை.

சோழர்கள் ஆண்டாலும், பாண்டியர்கள் ஆண்டாலும் தொண்டை மண்டலம் அப்படி ஆண்டவர்களை வரவேற்று உபசரித்திருக்கிறது.

இந்த ஊர் பெயர் திருவிடந்தை. இதுவொரு வைணவஸ்தலம் என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது மன்னருக்கு வரியாக நெல்வண்டிகள் அனுப்பப்பட்டன. கிராமங்களிலுள்ள நெல் வண்டிகளை குறுநில மன்னர்கள் வாங்கிக் கொண்டு, அவித்து அரிசியாக்கி, அந்த அரிசிகளை இறுகப் பின்னிய பனைக்கூடைகளில் போட்டு, தஞ்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அல்லது அந்த அரிசியை படைவீரர்களுக்குக் கொடுத்து, தஞ்சையின் எல்லைகளை காவல் காத்தார்கள்.

ஆட்சி செய்த அரசர்களுக்கு கைகட்டி சேவகம் செய்தார்கள். இந்த குறுநில மன்னர்கள் இந்த கிராமங்களிலிருந்து இவ்வளவு வரி வசூலித்துக் கொள்ளலாம் என்று தமிழகத்தை ஆண்டவர்கள் வரையறை செய்வார்கள்.



பருப்பு வகைகளை சுத்தம் செய்து தஞ்சைக்கு அனுப்பச் சொல்வார்கள். வெல்லப்பாகு எல்லாக் காலங்களிலும் கேட்டுக் கொண்டிருப்பார்கள். கரும்பு போடு கட்டாயப்படுத்துவார்கள்.

உங்கள் உணவிற்கு ஒரு பகுதி நெல் போட்டுக் கொள்ளுங்கள். எங்கள் வசதிக்கு கரும்பு, துவரையும், உளுந்தும், காராமணியும் பயிர் செய்து மாதம் தவறாமல் அனுப்புங்கள் என்று கட்டளையிடுவார்கள்.

அப்படி தஞ்சையை நோக்கி சுமை அனுப்பினால் சோழர்கள் சந்தோஷமாகி விடுவார்கள். சுமை எடுத்துப் போனவரை நன்கு உபசரிப்பார்கள். வேறு எங்கிருந்தோ சிறியவிதைகள் கொடுத்து,சபைக்கு நல்கொடை கொடுத்து அங்குள்ள கோயில் குளம் பற்றி விசாரித்து அவைகளை சீர் செய்யவும் தனியே பொற்காசுகள் வழங்குவார்கள்.

துவரைக்கும், உளுந்துக்கும் விலை என்று காசு தராது வேறுவிதமாய் படியளப்பார்கள்.

''வராக மூர்த்தி எவ்வளவு உயரம்? வரலக்ஷ்மியின் தோள் அகலம் என்ன? திருப்பாதம் எவ்வளவு பெரிது? ஆதி சேஷருக்கு கவசமுண்டா? கண்களில் மாணிக்கம் பதித்தால் நன்றாக இருக்காதா? வெள்ளிக்கிழமை மட்டும் ஊர் கூடி வேதம் சொல்கிறீர்களா? மற்ற நாட்களில் என்ன செய்கிறீர்கள்? வேளாளர்களுக்கு கோயில்களில் என்ன உரிமை? அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்களா?

சதயத்திருவிழாவின் போதும் தைமாதப் பண்டிகையின் போதும் கோயிலில் வேளாளர்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும், அவர்களே நேரடியாய் சோறு பொங்கி திருவிடந்தை பெருமாளுக்கு அமுது படையல் செய்ய வேண்டும்.

அதே போல், கிருஷ்ணரின் ஜென்ம நட்சத்திரத்தின் போது யாதவர்களை வைத்து உரியடி உற்சவம் நடத்த வேண்டும். அன்றைக்கு அவர்களுக்கு முதல் மரியாதை. முதல் தீர்த்தம் வழங்கப்பட வேண்டும்.

பௌர்ணமி பூஜைகள் சிறப்பாக நடைபெறட்டும். கூட்டு பூஜையை ஒரு நாளும் கைவிடாதீர்கள்.

ராசராசரின் பிறந்த நாளான சதயத் திருவிழாவிற்கு உங்கள் ஊருக்கு அருகேயிருக்கும் பரதவர்களும் பங்கேற்க வேண்டும். அன்று ஒரு படகிற்கு ஒரு காசு வீதம் வரிவசூல் செய்ய வேண்டும். அப்படி கிடைத்த பணத்தில் பரதவர்களுக்காக பூஜை செய்து அவர்களுக்கு கோயில் பிரசாதங்கள் விநியோகம் செய்ய வேண்டும்.

விதம் விதமாய் கட்டளை வரும். கட்டளைகளைத் தாங்கி ஓலை வரும். அந்த ஓலை ஒரு மூங்கில் கூடையில் அடைக்கப்பட்டு, அரக்கு ஊற்றி முத்திரையிடப்பட்டிருக்கும் அதன் மீது பட்டுத்துணி சுற்றப்பட்டிருக்கும். அந்தப் பட்டுத்துணி உருளையை மான்தோல் பையில் போட்டு அந்த தோல்பையை முதுகில் சுமந்தபடி போர்வீரர்கள் வருவார்கள்.

வேளாளர்கள் அவர்களிடம் பேசி உறுதி செய்து கொண்டு ப்ரும்மதேய சபைக்கு அழைத்து வருவார்கள்.

எல்லோரும் கூடியிருக்க, அந்த மான்தோல் பையிலிருந்து அந்த பட்டுத்துணி உருளை மிகுந்த மரியாதையோடு எடுத்துக் கொடுக்கப்படும். அந்த துணிச்சுருளைப் பார்த்து சோழ அரசனே வந்தது போல் திருவிடந்தை மக்கள் தலைக்கு மேல் கைகூப்புவார்கள். அரசனின் ஓலைக்கு மாலை சார்த்துவார்கள் வழியெல்லாம் பூத்தூவி கோயிலுக்கு எடுத்துப் போவார்கள்

கொண்டு வந்த போர் வீரர்களுக்கும் மாலையணிவிப்பார்கள். குலப்பெண்கள் அவர்கள் காலில் ஜலமூற்றி குடிக்க மோர் தருவார்கள்.



கோயில் தாஸிகள் அந்தப் போர் வீரர்களின் கழுத்திலும், மார்பிலும் சந்தனம் பூசி, நெற்றியில் திலகமிடுவார்கள்.

அந்தணர்கள் மந்திர அட்சதை தெளிப்பார்கள்.

தேவரடியார்கள் நடனமாடிக் கொண்டு போக திருவிடந்தை கிராமத்து இளைஞர்கள் போர் வீரர்களுக்கு முன்பு சிலம்பம் சுற்றி பாதம் பணிந்து மறுபடியும் எதிரி விளையாடுவார்கள்.

சிறுபறை முழங்க எக்காளம் ஊத, சோழ மன்னர்களை வாழ்த்தியபடி எல்லோரும் கோயிலுக்குப் போவார்கள்.

சிறுபிள்ளைகள் ஓலை கொண்டு வந்த வீரர்களை தொட்டுத் தொட்டுப் பார்ப்பார்கள்.

ஓலை கொண்டு வந்த வீரர்கள் அதிகம் பேசாது முறைப்போடு இருப்பார்கள்.

ஓலைக்குழல் ஸ்வாமி பாதத்தில் வைத்து பூஜை செய்யப்படும். பிறகு மெல்ல பிரிக்கப்படும்.

அரசனின் கட்டளைகள் எல்லோருக்கும் புரியும்படி உரக்க படிக்கப்படும்.

''அரசனின் கட்டளைகள் இன்னின்னவாக இருக்கிறது. இதை ஊர்சபை ஏற்று நடத்துவதில் ஆட்சேபணை உண்டா?'' கேட்கப்படும் சில சமயம் ஆட்சேபணை தெரிவிக்கப்படும். அது விவாதிக்கப்படும்.

அரசன் கட்டளையை நிறைவேற்றுவதில் சிரமங்கள் இருந்தால் அது வாய்மொழியாகவும் எழுத்தாகவும் தெரிவிக்கப்படும்.

''திருவிடந்தையில் வேளாளர்கள் அதிகம். யாதவர்கள் குறைவு. அதிலும் ஆட்டிடையர்கள் அறவே இல்லை.

எனவே, கோயிலில் நெய்விளக்கு ஏற்ற மூன்று கலம் நெல்லுக்கு உழக்கு நெய் விலை கொடுத்து வாங்குகிறோம் மன்னர் அருள் கூர்ந்து திருவிடந்தைக்கு ஆடுகளோடு ஆட்டிடையர்களை அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.''

''இவ்விதமாகவே தோல் தைப்பாருக்கும் திருவான்மியூர் போய் வர வேண்டியிருக்கிறது.''

''திருவிடந்தை ஏரிப்பாசனம் நிறைந்துப் பாசனமுள்ள பூமி. நீர் இறைக்க, தோல்பைகள் தேவைப்படுகின்றன. எனவே மன்னர் பெருமான் தோல் தைப்பாரையும் அனுப்பி வைக்க வேண்டும்.''

சதயத்திருநாளில் பரதவர்கள் சிறப்பிக்கப்பட்டார்கள். திருவிடந்தை கிராமம் கோலாகலமாய் கொண்டாடியது.

மன்னர் ஆணையிட்டபடி உளுந்தும் துவரையும், அரிசியும் வெல்லமும் அனுப்புகிறோம் உலர்ந்த மீன்கூடைகள் தனியே வருகின்றன என்று பதில் அனுப்புவார்கள்.

தானியங்கள் போய் சேர்ந்த மறுமாதமே பொற்கொல்லர்கள் வருவார்கள். தோல் தையற்காரர்கள் வருவார்கள். மரத்தச்சர்கள் வருவார்கள். ஆட்டிடையர்களும் நீர்பாசன அதிகாரியோடு கட்டிடக்கலைஞர்களும் வருவார்கள்.

ஒரு வருடம் தங்கி ஏரியை ஆழப் படுத்தி திருவிடந்தையிலிருந்து திருவான்மியூர் வரை கால்வாய் வெட்டி கால்வாயின் இரண்டு பக்கமும் நிலம் சமன் செய்து ஆடுகள் மடக்கிப் போட்டு உரமேற்றி புல் வளர்த்து புல்லைப் புரட்டிப்போட்டு கீரைகள் தெளித்து விற்றகீரைபோக மீந்ததை மாடுகள் மேயவிட்டு நல்ல



மழைக்காலத்தில் நாற்பது எருதுகள் பூட்டி உழுது போட வெறும் கருவேலங்காடுகள் நன்செய் நிலமாகும்.

அத்தனை செலவும் மன்னர் திருவிடந்தைக்கு அளித்த கொடையாகும்.

ராசராசரின் மகன் ராசேந்திரசோழன் கடல்வழியே மல்லைக்கு வந்து கடல் மல்லையிலிருந்து குதிரை ஏறி திருவிடந்தைக்கு வந்தார்.

ஊர் திக்குமுக்காடிப் போயிற்று.

''இதுவரை எந்த மன்னரும் இங்கு வந்ததில்லை, இந்த கடற்கரையோர கிராமத்திற்கு இந்த சிறிய கோயிலுக்கு எந்த சக்ரவர்த்தியும் வந்ததில்லை. நீங்கள் வந்திருக்கிறீர்கள் மன்னா இதன் நினைவாக ஏதேனும் செய்யுங்கள்.'',

மன்னர் தான் எழுப்புவாரா? கோபுரம் கட்டுவாரா? இல்லை தான் ஊரில் வந்து கால் அலம்பிய இடத்தில் வசந்த மண்டபம் கட்டுவாரா? உற்சவ மூர்த்தி செய்து தருவாரா? அல்லது எடைக்கு எடை கனமுள்ள பெரும் விளக்கு ஏற்றுவாரா?

மன்னர் சில நொடிகள் யோசித்தார்.

''திருவிடந்தை வராகருக்கு இந்த ஊரை தேவதானமாகக் கொடுத்தோம். இங்கு விளையும் பயிர்களை விற்று அதில் வரும் காசில் மூன்றில் ஒரு பகுதியை கோயிலுக்குத் தர வேண்டும் கோயில் பராமரிப்பை ப்ரும்மதேயசபையும் கிராமத்தின் பராமரிப்பை ஊராரும் கவனித்துக் கொள்ள வேண்டும் பயிர் வளர்த்தல் வேளாளர் கடன் அறம் வளர்த்தல் அந்தணர் கடன் இருவரும் ஒற்றுமையாக இருந்து பரம்பரை பரம்பரை

யாக திருவிடந்தை பெருமாளுக்கு சேவை செய்ய வேண்டும்.''

''இவ்வூர் சந்திரசூரியர் உள்ளமட்டும் எந்த அரசுக்கும் வரிசெலுத்த வேண்டிய அவசியமில்லை. இந்த ஊர் சபையினரும் ஊராரும் தங்களைத் தாங்களே நிர்வாகம் செய்து கொண்டு அறம் வளர்க்க வேண்டும் மீறி இவ்வூரில் வருல் வருவிக்கிறவன் இந்தக் கட்டளைக்கு குத்தகம் செய்கிறவன் காசிதேசத்தில் காராம் பசுவை வெட்டிக்கொன்ற பாவத்திற்கு ஈடான பாவம் செய்தவனாவான்.

ஊர் திகைத்தது. அன்பில் அதிர்ந்து போய் உட்கார்ந்தது.

எப்பேர்ப்பட்ட கருணை. எப்பேர்ப்பட்ட ஞாபகச் சின்னம் எப்பேர்ப்பட்ட கொடை.

''மன்னரே...திருவிடந்தை கிராமத்து பரதவரோடு கடல்மல்லையில் கப்பலேறி கிழக்கே வெகுதூரம் காம் போரும் வரை நீங்கள் மேற்கொள்ளும் பயணம் வெற்றியாகட்டும் இதற்காக காலையும் மாலையும் யதுர், ரிக், சாம வேதங்கள் நாள் தவறாது சொல்லப்படும். இரவு நன்கு இருட்டியதும் மூன்று அகல் விளக்குகள் வைத்து உங்கள் வெற்றிக்காக அதர்வண வேதம் சொல்லப்படும். நீங்கள் வெற்றியோடு தஞ்சையில் கால்வைத்தீர்கள் என்று எங்களுக்குத் தெரியும் வரை இதை திருவிடந்தை செய்யும்.''

''ஒருவேளை இறைவன் கட்டளையாக போரில் அரசன் ஊறுதைபடைவானாயின் வானுலகம் சேர்வானாயின் வேதம் சொன்ன பதினாறு பேரும் வடக்கிருந்து உயிர் நீப்போம். இது திருவிடந்தை பெருமான் திருவடி மீது சத்தியம்... சத்தியம்...''



இப்போது மன்னன் அதிர்ந்தான். அந்த அந்தணர்களை நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான்.

வேளாளர்கள் உணர்ச்சிவசப்பட்டு வாய்திறக்க முயன்றபோது தடுத்து நிறுத்தினான். ''எனக்கு இது போதும் இந்த ப்ரும்ம சபையை வேளாளர்கள் போற்றி வரவேண்டும். இந்த ஊரில் எல்லா நிலமும் கோயில் நிலம். ஒவ்வொரு தானியமும் கோயிலுக்குச் சொந்தம். விற்றுக் கிடைக்கும் ஒவ்வொரு பொன்னும் கோயிலின் நலனுக்கே செலவழிக்க வேண்டும். சிவன் துணையிருப்பான். மறுபடியும் சந்திப்போம்.''

அரசன் சாமி கும்பிட்டு கோயிலை வலம் வந்து. வேளாளர்கள் புடைசூழ நிலங்களைப் பார்வையிட்டு, பரதவப் பெண்களுக்கு விளைநிலம் தானமளித்து எருது பூட்டிய வண்டிகளை கொடையாக கொடுத்து திருவிடந்தை பரதவ இளைஞர்களோடு கடல் மல்லைக்குப் பயணமாகி அங்கிருந்து கடல் கடந்தான்.

திருவிடந்தை என்கிற நன்செய் கிராமம் ஏரிப்பாசனத்தால் செழிப்பான அந்த விளைநிலம் தேவதானமாயிற்று. ப்ரும்மதேவ தலைவர்கள் 'தேவகன்மிகள்' என்கிற பட்டத்துடன் கோயில் அதிகாரிகளானார்கள்.

ஊரார் எனப்படும் வேளாளரை கலந்து ஆலோசித்து ப்ரும்ம சபை ஒவ்வொரு முடிவையும் எடுத்தது.

ஒரு நாழிகை கூட தாமதமில்லாமல மன்னருக்காக தினசரி வேதபாராயணம் நடந்தது.

அந்தணர்கள் நாள் பார்த்துக் கொடுக்க வேளாளர்கள் விதை விதைத்தார்கள். பிறை பார்த்துச் சொல்ல. உரம் போட்டார்கள் நாற்று பிடுங்கி நட்டார்கள்.

பரதவப் பெண்களுக்கு அரிசி தானமாக வழங்கப்பட்டது.

27911
43401

முற்றிய ஆடுகளை மலிவு விலைக்குக் கொடுத்தார்கள்.

மழைக்காலத்தில் கடற்கரைக்கு அருகே வசிக்காமல், ஊர் தோப்புகளில் அவர்களை குடியேற வைத்தார்கள். அழுத்தமான குடிசைகள் போட்டுக்கொள்ள தென்னங் கீற்றுகள் கொடுத்தார்கள.

வெற்றியோடு கப்பற்படை கடல்மல்லைக்குத் திரும்பி வந்துவிட்டது என்று கேள்விப்பட்டு போட்டது போட்ட படி திருவிடந்தை மொத்தமும் கூடிற்று.

மன்னர் தரையிறங்கினார். திருவிடந்தை ஊர்ஜனங்களை அடையாளங்கண்டு கைகூப்பினார்.

மன்னரைப் பார்த்து வேளாளர்கள் விம்மிவிம்மி அழுதார்கள்.

அந்தணர்கள் இடைவிடாது காயத்ரீ ஜபம் சொல்லி மன்னர் மீதும் மன்னரின் படைகள் மீதும் நீர் தெளித்துக் கொண்டே இருந்தார்கள்.

''ஒரு நாள்கூட வேதம் ஓதுவது நிற்கவில்லை ஐயா'' அந்தணர்களை வேளாளர்கள் பாராட்டினார்கள்.

''ஒரு சிறிய குறை கூட இல்லை. நல்ல உழைப்பு. நல்ல விளைச்சல். விற்று கண்ட முதல் மொத்தமும் இறைவனுக்கு. திருவிடந்தை வேளாளர்கள் சத்தியவான்கள்'' அந்தணர்கள் வேளாளர்களைப்பாராட்டினார்கள்.

''உடன் பிறந்த சகோதரர்கள் கூட அத்தனை அக்கறையாக இருக்க மாட்டார்கள். அத்தனை பிரியம் கொள்ளை அன்பு. சொல்லும் செயலும் மகாகருணை'' பரதவப் பெண்கள் பாராட்டினார்கள்.

''நல்ல வெய்யில், கடுமையான புழுக்கம். கடலில் துள்ளலே இல்லை. ஆயினும் சேரி முழுவதையும் கிளம்பு



கிளம்பு என்று விரட்டி மாந்தோப்பில் குடிவைத்தார்கள். ஓலை வேய்ந்து கூரை கொடுத்தார்கள்.''

குடிபெயர்ந்த இரண்டாம் நாள் பேய் மழை. சூறைக் காற்று. மூன்று அலைகளில் குப்பம் முழுகிப்போயிற்று. பாறைக்கற்கள் வைத்த படகுகள் மட்டும் தப்பித்தன. மற்றவை புரண்டு உடைந்தன.

ஆறு நாட்கள் இடைவிடாத மழை பனிரெண்டு வேளை சோறும் கறியும் திருவிடந்தை கிராமம்தான் தந்தது. ஒரு நாய்க்குட்டிக்குக் கூட காயமில்லை. ஊர் நாறக்கூடாதென்று உலர் மீன்களை நாங்களே கடலில் சேர்த்து விட்டோம். அந்தணர்களுக்கு வேளாளர்களுக்கு எங்கள் புருஷர்கள் நன்றி சொல்லியே ஆக வேண்டும்.''

படையெடுத்து திரும்பிய பரதவர்கள் நன்றி செலுத்த முன்வந்தார்கள்.

''நன்றியா... திருவிடந்தை பெருமாளுக்குச் சொல். பழைய காலத்தில் பூமாதேவியைக் காப்பாற்றியது போல் திருவிடந்தை கிராமத்தைத் தன் பேரருளால் காப்பாற்றினார். பலர் கனவில் தோன்றி பரதவர்களை ஊருக்கு அழைக்குமாறு எச்சரித்தார்.

தூரக்கிழக்கு தேசத்தில் கொள்ளையடித்த பொன்னும், முத்தும், மரகதமும், பவளமணிமாலைகளும் திருவிடந்தை பெருமாளுக்கு காணிக்கையாயின.

அரசனும் அற்புதமான நகைகள் கொடுத்தான். நெற்றிச் சுட்டியும் வைர அட்டிகையும், தங்க ஒட்டியாணமும் பெரிய மரகதக்கல் பதித்த வெள்ளிப் பூணூலும் கடல் மல்லையில் இருந்தபடியே கொடுத்துவிட்டு தஞ்சையை நோக்கிப் பயணமானார்கள்.

எல்லா நகைகளும் அணிந்து திருவிடந்தை வராக மூர்த்தி ஒளிவீசும் தேகத்தினராய் காட்சியளித்தார்.

மயிலை திருஅல்லிக்கேணி வணிகர்களும், திருவெற்றியூர் முதலிகளும், திருமுல்லைவாயில் திருவான்மியூர் வேளாளர்களும் காஞ்சியிலிருந்து விசேஷமான அந்தணர்களும் விஷயம் கேள்விப்பட்டு, வராகரை தரிசித்துப் போனார்கள்.

திருவிடந்தை கிராமம் பெருமையால் பூரித்து மக்கள் செல்வம் பல்கிப் பெருக, நன்செய் நிலங்கள் அதிகரித்துக் கொண்டே போயிற்று

சோழர்கள் காலம் போய் பாண்டியர்கள் காலம் வந்த போது அதன் வளமைக்கு எத்தக் குறையும் இல்லாமலிருந்தது.

இருநூறு வருடகாலம் பாண்டியர்கள் ஆட்சி கனிக்கும் போது சகோதரச் சண்டையில் பாண்டியநாடு தத்தளித்த போது யவனர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

அந்த முரட்டுத்தனம், அந்தப்பாலைவனக் கொடூரம் மக்களை அதிர்ச்சியடைய வைத்தது.

முக்கிய பட்டினங்கள் அழிந்து போயின. திருவிடந்தை, திருமயிலை, திருவான்மியூர் போன்ற கிராமங்கள் அழிவுக்காக பயத்தோடு காத்திருந்தன.

அந்த பயம் இந்த காளிங்கராயனால் அதிகரித்தது. அமைதியான கிராமம் சலசலத்தது.

## 5

''என்னடா செய்து கொண்டிருக்கிறார்கள் இந்த கொண்டையில் பூவைத்த சீமான்கள்''காளிங்கராயன் சத்தம் போட்டு மிரட்டினான்.



திருவிடந்தை கிராமத்தினர். பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும் தன் அலட்சியத்தை வெளிப்படுத்த வேண்டியே உரக்கக் கூவினான்.

அவன் என்ன கேட்டாலும் பதில் சொல்வதற்கு அவன் குழுவில் ஒரு அசட்டு ஆள் இருந்தான்.

''அவர்கள் என்னமோ பேசிக் கொண்டிருக்கிறார்கள் எசமான்.'' அந்த அசட்டு ஆள் பணிவாக பதில் சொன்னான்.

''யாராவது வேவு ஆள் வைத்து அவர்கள் என்ன பேசுகிறார்களென்று தெரிந்து கொள்ளக்கூடாதா? ஒரு மிகப்பெரிய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியைப்போல பேசினான்.

''அவர்கள் நமக்கு வேவு ஆள் வைத்திருக்கிறார்கள் எசமான்.''

''யாரது நமக்கு வேவு ஆள் வைப்பது?

''இந்த பன்னாடை உளறுகிறான் அவர்கள் ஒரு ஆளும் வைக்கவில்லை. இந்த ஊர் கோயில் தாஸியை நமக்காக சமைக்கச் சொல்லி தானியம் கொடுத்திருக்கிறார்கள். கோயிலின் தெற்கு மூலையில் நமக்காக தளிகை நடக்கிறது. தாயும் மகளும் சமைத்துக்கொண்டிருக்கிறார்கள்.' வேறொருவன் பதில் சொன்னான்.

''நான் கோயிலுக்கு வெளியே போனால் எங்கே என்று கேட்கிறார்கள். சாப்பிட்டுவிட்டுப் போகலாம் தளிகை ஆகிவிட்டது என்று மடக்குகிறார்கள். ஏகப்பட்ட காய்கள் போட்டு கூட்டு கொதித்துக் கொண்டிருக்கிறது. குடிப்பதற்கு எலுமிச்சை ரசம் தயாராகிக் கொண்டிருக்கிறது. கோவைக்காய் பொரியல் மிளகும் சீரகமும் போட்டு செய்திருக்கிறார்கள். கஞ்சி வடித்த சோறு,

கஞ்சி வடிக்காத சோறு என்று இரண்டு வகை தயாராகி இருக்கிறது. கஞ்சி வடித்த சோறு கூட்டோடு கலந்து சாப்பிடுவதற்கு, கஞ்சி வடிக்காத சோறு தயிரோடு சாப்பிடுவதற்கு. நான் சகலமும் வேவு பார்த்து வந்து விட்டேன்'' கோமாளியானவன் சொல்ல, காளிங்கராயன் சட்டென்று கோபமாகி, குதிரைச் சவுக்கால் அவனை சுளீரென்று அடித்தான்.

அந்த கோமாளிவீரன் அடிதாங்கி பழக்கமில்லாதவன். வலியை பொறுத்துக்கொள்ள முடியாதவன். பதினைந்து நாள் குறை பிரசவமாக பிறந்தவன். பிறந்து ஒரு வருடம் எண்ணெய் தடவிய வாழையிலையில் அழுது அழுது கிடந்தவன் ஆரோக்கியமில்லாதவன்.

அதர்மங்கள் இருக்கும் தேசத்தில் குறைப்பிரசவங்கள் அதிகமிருக்கும். அப்படிக் குறைப்பிரசவமாய் பிறந்து பிறகு உயிர் பிழைத்தவர்கள் மனம் அல்லது உடம்பு குறையோடு தான் இருப்பார்கள். எதையும் முழுமையாய் செய்யும் திறனற்று இருப்பார்கள். தெளிவாய் சிந்திக்கும் வகையற்று இருப்பார்கள்.

அதே நேரம் இந்த குறைப்பிரசவக் காரர்களின் குயுக்தி சொல்லி மாளாது.

அவர்கள் மனசு ஒரு பாம்பைப் போல உள்ளுணர்வு அடிப்படையில் செயல்படும் வெகு தொலைவிலுள்ளது அவர்களுக்கு தெளிவாய் கேட்கும் மனிதர்களின் முகத்தை உற்றுப்பார்த்து எடைபோடத் தெரியும். வாசனையை வைத்துக் கொண்டு பலவிஷயங்கள் சொல்லிவிட முடியும் அவர்கள் புலன்கள் தாக்கலாக இருக்கும். ஆனால் வேகமாக செயல்பட முடியாது அவர்களின் புரிந்து கொள்ளுதல் தெளிவாக இருக்கும். ஆனால் பிறருக்கு தங்களை புரியவைக்க முடியாது.



ஒரு படையில் ஒரு ஆள் இப்படி இருந்தால் போதும் அந்தப்படை மெல்ல மெல்ல பலவீனமடைந்து விடும்.

உடம்பால் முடியாத அவர்கள் ஒரு பொய்யை உண்மை போல் பேசுவார்கள். ஒரு பொய்யை ஒன்றுமே யில்லையென்று மறைப்பார்கள் தொடர்ந்து பலபொய் களை ஞாபகம் வைத்து கோர்வையாய் பேசுவார்கள்.

குணசீலம் என்று குறைப்பிரசவமாய் பிறந்த அந்த இளைஞன் அந்த கிராமத்தில் அந்த நேரத்தில் ஏதேனும் ஒரு விதமாய் தன் கைவரிசையைக் காட்ட ஆசைப் பட்டான்.

குறுகலான உடம்பு குள்ளமான உருவம் குதிரை களை அவனால் நெடுந்தூரம் ஓட்டிக் கொண்டு போக முடியாது. எதிரிப்படைகளோடு தாக்கிப் போராட முடியாது.

ஆனால் ஓடுகிற குதிரையில் கரணம் அடிக்க முடியும் ஒரு மூங்கில் கழியை ஊன்றி ஓடுகிற குதிரை மீது ஏறவோ இறங்கவோ முடியும் ஒரு குதிரையிலிருந்து மற்றொரு குதிரைக்குத்தாவ முடியும். தீப்பந்தங்களை கையில் சுழற்றியபடி குதிரையில் நின்று சவாரி செய்ய முடியும்.

இவையெல்லாம் கலைக்குதவாதவை. குழந்தைகளை சந்தோஷப்படுத்தவும் பெண்களை பரவசப்படுத்தவுமே உதவி செய்பவை. இந்தக் கூத்துகளால் எதிரிப்படையில் எதுவும் நடக்காது. எடுத்தவுடனேயே இம்மாதிரி ஆட்கள் பலமாக தாக்கப்படுவார்கள்.

குணசீலம் என்கிற அந்த குறைபிரசவக்காரன் கோயிலிலிருந்து வெளியேறி, கிராமத்திற்குள் நுழைந்து, யார் வீட்டிலாவது குதிரை இருக்கிறதா என்று கேட் டான்.

அவள் வீடுவீடாய் ஏறி அலைவதை நாச்சி பார்த்துக் கொண்டே இருந்தாள்.

பருப்பு வறுத்து, தேங்காயுடன் தண்ணீர் விட்டு, மிளகாய் கூட்டியதும் துவையல் தயாராகிவிடும். இன்றும் நாளையும் துவையல் நன்றாக இருக்கும். தயிர் சோறோடு நன்கு கூட்டு சேரும்.

இந்த துவையல் செய்து முடித்துவிட்டால் பதினாறு பேருக்கு உணவு தயார். இலைகளுக்கு வேளாளர் தெருவிற்குப் போய் வர வேண்டும். குடிநீருக்காக புதிய மண்கலன்கள் வாங்கிவர வேண்டும்.

வந்த வீரர்கள் எல்லோரும் பித்தளைக் குவளை வைத்திருக்கிறார்கள் ஆயினும் புதிய மண்கலன்கள் கொடுப்பதுதான் முறை.

ஊருக்கு வந்த அத்தனை வீரர்களும் அமைதியாக இருக்க, இந்தக் குறும்பன் மட்டும் மேலும் கீழும் அலைகிறான். எடுத்தவுடனேயே மார்பகங்களை உற்றுப் பார்க்கிறான்.

எப்போதும் காமத்தோடு இருப்பவனால் இறைமையாக இயங்க முடியாது. பெண்ணாசை அதிகமுள்ளவனுக்கு போகத்தில் திருப்தி கிட்டாது.

இந்தக் கோயிலின் தாஸி என்று அறிமுகப்படுத்திக் கொண்டதும், இந்த படைவீரர்களின் பார்வையே சரியில்லாமல் போய்விட்டது.

இப்பொழுதெல்லாம் கோயில் தேவரடியார்களை முரட்டுத்தனமாய் நடத்துகிறார்கள். ஒட்டுமொத்தமாய் கூட்டிப்போய் அந்தப்புரத்தில் அடைத்து வைக்கிறார்கள்.

தாஸி என்பவள் நித்திய சுமங்கலி. அவள் கடவுளின் பாவை. அவளுக்கு புருஷனென்று யாருமில்லை. ஆனால் புருஷனாக யாரும் இருக்கலாம்.



புருஷனென்று யாருமில்லாமல், மனச்சோர்வு அடைந்தவர்களை அவ்வப்போது அழைத்து பேசிப்பாடி உற்சாகமூட்டலாம்.

எப்போதும் விசேஷ நாட்களில் பெரிய முற்றத்தில் ஆண்களுக்கு நடுவே நடனமாடலாம்.

யுத்தத்தாலோ நீண்ட நெடும் பயணத்தாலோ வீடு விட்டு வெகு நாட்கள் பிரிந்திருந்த ஆற்றாமை தணிக்க, அன்பு செய்யலாம் அவசியமெனில் கூடவும் செய்யலாம்.

ஆனால் தேவரடியார்களுக்கு கோயில் முக்கியம், கோயில் பராமரிப்பு முக்கியம். கோயிலைப் பெருக்கி சுத்தம் செய்வது, கோலமிடுவது, கருவறை சுவர்களுக்குப் பூச, மஞ்சளும் சந்தனமும் பச்சிலையும் அரைத்துத் தருவது, மூலவருக்கும் உற்சவருக்கும் எடுப்பாய் உடைகள் தைத்துத் தருவது போன்ற உதவிகளை தேவரடியார்கள் கவனமாய் செய்து வர வேண்டும்.

அப்படி செய்து வர ஊர் விளைநிலம் தானமாக வழங்கியிருக்கிறது. அந்த விளைநிலத்தை ஒரு வேளாளர் குத்தகை எடுத்துக் கொண்டிருக்கிறார். ஏரிப்பாசனமுள்ள அந்த அருமையான நிலத்தில் அவர் குடும்பம் சிரமப்பட்டு உழைக்கிறது. மூன்றில் ஒரு பங்கு கோயிலுக்கு. இன்னொரு பங்கு வேளாளருக்கு ஒரு பங்கு தனக்கு என்று பிரித்துக் கொள்கிறாள்.

இது தவிர, கோயிலில் எப்போது நடனமாடினாலும் பொற்காசு தருகிறார்கள். இது தவிர, திருமண வீடுகளுக்குப் போய் தாலி கோர்த்துக் கொடுத்து, ஆண்களுக்கு சந்தனம் பூசினால் நிறையவே வாரி வழங்குகிறார்கள்

இதுவும் தவிர வயசுப் பெண்களுக்கு அலங்காரம் செய்யவும் கூடல் பற்றி சொல்லிக் கொடுக்கவும் தாஸியைக் கூப்பிடுகிறார்கள்.

திருவிடந்தை மக்கள் தாஸிகளை அவமானப்படுத்துவதேயில்லை. இழிவாய் ஒருசொல் கூட சொல்லுவதில்லை.

''உன் தாய் சொல்லிக் கொடுத்து, ஆறு குழந்தைகள் பெற்றேன். மூத்தது என் மகள். நாளை திருமணம் இவளுக்கு தலைவாரி பூ வைத்து திருமணமென்றால் என்னவென்று சொல்லிக்கொடு. ஆண்களின் காமத்தை எதிர்கொள்வது எப்படியென்று அறிவுறுத்து.

''உன் தாய் எனக்கு போதித்தது இன்னமும் மறக்கவில்லை அவள் சொன்னதையே என் பிள்ளைக்கும் சொல்லலாம். ஆனால், தாஸி சொல்வது போலாகுமா? இது குறித்து என் மகள் என்னிடம் கேள்வி கேட்பாளா? கேட்டால் நன்றாக இருக்குமா?

''உன்னிடம் கேட்பாள். நீ சொல்லிக் கொடு. உனக்கு புதிய கூரையும் நாலுகழஞ்சு பொன்னும் தருகிறேன்.''

''எங்கள் பெண்ணைப் பார்க்க மாப்பிள்ளையின் தோழர்கள் ஒட்டுமொத்தமாய் வருவார்கள் நீதான் முன்னே போய் அவர்களை அழைக்க வேண்டும். பெயர் குலம் கோத்திரமெல்லாம் விசாரிக்க வேண்டும். வட்டமாய் உட்காரவைத்து வெற்றிலைப்பாக்கு, சந்தனம் கொடுத்து உபசரிக்க வேண்டும். அத்தனை ஆண்களைக் கண்டால் எங்களுக்கு கைகால்கள் உதறும். பேசி சமாளிக்க உன் உதவி வேண்டும்.''

''இது உன் வீடு. இவன் உன் மகன். அன்பும் பொறுப்புமாய் நடந்து கொள்'' கைபிடித்துக் கொண்டு பெண்கள் பேசுவார்கள்.

ஆனால் அந்நியர் படையெடுப்பிற்குப்பிறகு தாஸியை வாடி போடி என்று பேசுவது அதிகமாகிவிட்டது.

திருவிடந்தைக்கு வந்த ஒரு அந்தணன் அப்படிப் பேச



நரசிம்மப்பட்டர் சிம்மமாய் கர்ஜித்து அவனை அடக்கினார்.

அம்மாவின் அம்மா, திருவிடந்தைக்கு முதல் தாஸியாக வந்தாள். ராஜேந்திரசோழன் காலத்திலேயே பத்துப் பதினைந்து தாஸிகள் வந்து குடியேறினார்கள். இந்தக் கோயிலில் கூட்டம் அதிகமில்லாததால் காஞ்சிபுரத்திற்கும், திருமயிலைக்கும் திருஅல்லிக்கேணிக்கும் குடிபெயர்ந்தார்கள்.

மயிலையும், திருஅல்லிக்கேணியும் நெரிசலான கிராமங்கள். எண்ணெய் செட்டிகளும், துணி விற்பவர்களும் நெசவாளர்களும், இரும்புப் பாத்திரங்கள் செய்பவர்களும், பொற்கொல்லர்களும் மயிலையில் அதிகமிருந்தார்கள். நல்ல தையல்காரர்கள் இருந்தார்கள்.

மற்ற ஊர்களிலிருந்து பணக்காரப் பெண்கள் மயிலையில் வந்து தங்கி கடல் நீராடி செங்கழுநீர் ஓடையில் குளித்து துணி வாங்கி அங்கேயே தைக்கக் கொடுப்பார்கள். இடுப்புப் பாவாடையும், மார்க்கச்சும் புதுமையான முறையில் தைத்துத் தருவார்கள். மேலே போர்த்திக் கொள்ளும் ஆடையில் தங்கத் தகடுகள், வெள்ளித் தகடுகள் வைத்து தைத்துத்தரப்படும்.

மார்பு முழுவதும் நிறைந்த வேலைப்பாடான நகைகள் செய்து தரப்படும். வெளியூரிலிருந்து மயிலை நோக்கி தாஸிகள் வருவது இதனால் அதிகமாக இருந்தது.

விலை குறைப்பதற்காகவும் வேலைப்பாடுகள் சிறப்பாக இருப்பதற்காகவும் பொற்கொல்லர்களை, தையற்கலைஞர்களை தங்குமிடத்திற்கு அழைத்து தாஸிகள் சீராட்டுவது வழக்கம். சந்தோஷப்படுத்துவது நடக்கும்.

தாஸிகள் அழகாக இருந்தால் ஆள்மேல் ஆளனுப்பி வியாபாரிகள் வருவார்கள். பகல் முழுவதுமோ இரவு முழுவதுமோ தங்கிவிட்டுப் போவார்கள்.

ஆனாலும் இந்த தாஸியை யாரும் இழிவு படுத்திவிட முடியாது. அவனைக் கேவலமாகப் பேசவோ பலாத்காரம் செய்யவோ முடியாது தாஸி முடியாது என்று சொன்னால் முடியாதுதான். எந்தக் காரணமுமின்றி ஒரு தாஸி சந்தோஷப்படுத்த இயலாது என்று சொல்லி விடலாம்.

எந்த தாஸியும் ஏமாற்றமாட்டான். ஏமாற்ற வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. அவன் எல்லோருக்கும் பிரியமானவனாய் இருக்க அவன் மீது எல்லோரும் பிரியமானவராய் இருந்தார்கள்.

''எப்போதாவது எங்கேயாவது குலப்பெண்கள் வந்து அழுவார்கள்.'' என் புருஷன் வீட்டிற்கு வரவே மாட்டேன் என்கிறான். என் தந்தை எனக்குப் போட்ட நகைகளை, உன்னிடம் கொடுத்து விட்டு, உன்னிட கதியென்று இருக்கிறான். நீ சற்று எடுத்துச் சொல்லக்கூடாதா?''

மயிலையில் ஒரு அந்தணரின் மனைவி இப்படிச் சொல்ல, அந்த ஊர் தாஸி கடும் சீற்றமடைந்தான்.

அந்தணரின் மனைவியை திண்ணை இருட்டில் ஒண்டிக் கொள்ளச் சொல்லி விட்டு அந்தணனை ஆள் விட்டு அழைத்தான். வாசலில் நிற்க வைத்து கடுமையாக ஏசினான்.

''உன்னிடம் யாரோ அடகு வைத்த நகைகளென்று சொன்னாயே... இவை அடகு வைத்த நகைகளா இல்லை அன்பு மனைவியின் சொத்தா??

''மனிதர் பயமேயில்லாமல் இருக்க வேண்டிய இடம் தாஸி வீடு. இங்கு வந்து ஏன் பொய் சொல்கிறாய்? பொய் சொல்லி விட்டு ஏன் பயப்படுகிறாய்?''

''இதோ உன் மனைவியின் நகைகள். இவைகளை தயவு செய்து எடுத்துக் கொண்டு போ. மனதாலும் நீ வர வேண்டாம். மயிலையில் எந்த தாஸியின் வீட்டிற்கும் நீ போக முடியாது.''



நகை நிறைந்த துணிப்பையை அந்த அந்தணன் மீது தூக்கி எறிந்தான். அந்த அந்தணனின் மனைவி மயிலை சிவன் சன்னதியில் அந்த தாஸிக்காக நெடுநாள் நெய் விளக்கு போட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தத் தாஸியை மயிலையில் மற்ற அந்தணர்கள் மிக மரியாதையாய் நடத்தினார்கள்.

திருவெற்றியூரிலுள்ள ஒரு தாஸி வீட்டிற்கு பத்து வயது மகன் கண் தெரியாத தகப்பனை கைபிடித்து கூட்டி வருவான். தகப்பனார் தமிழ் புலவர். நன்றும் நடையில் காவடிச் சிந்தும் குறவஞ்சியும் ஆலாபனையோடு கூடிய கதைப் பாடல்களும் எழுதக் கூடியவர்.

வெறும் நாட்டியமாக இல்லாமல் அலுங்கலும் குலுங்கலும் ஆரவாரமும் காட்டாமல் மகாபாரதக் காட்சிகளை பெரிய புராணக்கதைகளை கவிதை நடையில் எழுதித்தந்தார்.

தாயும் மகனுமாய் ஆரம்பித்த இந்த நாட்டிய நாடகத்திற்கு பலபேர் பொருளுதவி செய்தார்கள். திருமலை திருப்பதியிலிருந்து ஒரு வைத்தியரை வரச் சொல்லி அவர் புலவரின் கண்ணை பரிசோதித்து விட்டு நிச்சயம் பார்வை கிடைக்குமென்று உறுதி கூற பச்சிலைகள் போய் பறித்து வருவதாய் விளக்கம் சொல்ல மாட்டுவண்டியோடும், கோவேறு கழுதைகளோடும் மூன்று குதிரையாட்களை தாஸி அனுப்பினான்.

இதற்காக பல ஊர் மிராசுதாரர்களிடம் பிரியமாய் இருந்தான்.

ஏழு நடனப் பெண்கள் பங்கேற்கும் கர்ணன் கொடை அர்ஜுனன் தபம் த்ரௌபதி வஸ்திராபரணம் பிள்ளைக்கனி நாடகம் திருநீலகண்ட குயவர் நாட்டியம் என்று பல்வேறு விஷயங்கள் தயாராயின.

நாட்டிய நாடகம் பார்த்துவிட்டு மக்கள் கதறி விட்டார்கள். மிகப் பெரிய வேத வித்பன்னர்கள் எல்லாம், அந்த திருவெற்றியூர் தாஸிக்கு திருநீறு வழங்கி மங்கள அட்சதை போட்டு இவளுள் செல்வி. நன்னெறிப்பாவை என்றெல்லாம் பட்டம் கொடுத்தார்கள். அழகிய வெள்ளிப் பிரம்பை அவள் தாய்க்கு கொடுத்து 'தலைக்கோலி' என்றழைத்தார்கள்.

தொடர்ந்து மூன்று வருட வைத்தியத்தில் புலவருக்கு பார்வை திரும்பியது.

புலவர் தனக்குப் பார்வை கொடுத்த தாஸியை கண்ணாரப் பார்த்துவிட்டு வடக்கு நோக்கி பயணமானார்.

அவரது மனைவியையும் தமிழ்ப் புலமை மிக்க ஒரே மகனையும் தாஸிக்கு அடைக்கலமாகக் கொடுத்தார்.

தந்தைவிட்ட பணியை மகன் தொடர்ந்தான். தேவி பாகவதம் அரிச்சந்திர புராணம் கம்பநாட்டாரின் இராமாயணம் என்று நாட்டிய நாடகங்கள் அமைத்துக் கொடுத்தான்.

அந்த திருவெற்றியூர் பெண்கள் தொண்டை நாடு சோழநாடு. பாண்டியநாடு என்று பயணம் செய்தார்கள்.

அங்குள்ள பெண்களுக்கு இந்த நாட்டிய முறையை சொல்லிக் கொடுத்தார்கள்.

தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்று நிருபித்து வந்தார்கள்.

அவர்களை தாஸிகள் என்று எவரும் எந்த ஊரிலும் இழிவுபடுத்தவேயில்லை. நாட்டியப் பெண்களென்று கேவலப்படுத்தவேயில்லை. வேடர்களோ கள்வர்களோ மடக்கவேயில்லை.



அந்த தாஸிப் பெண்கள் கள்வரின் விஷஜுரத்திற்கு, மருந்து அரைத்துக் கொடுத்ததும் மலையில் ஏறிப்போய் வேடவப் பெண்ணுக்கு பிரசவம் பார்த்ததும் தனிக்கதை.

அந்த தலைக்கோலி மதுரையில் தனக்கு மக்களால் போடப்பட்ட சந்திரப்பிரபை சூரியப்பிரபை இரண்டையும் திருவிடந்தை திருமகனுக்கு காணிக்கையாக்கினாள்.

அந்த செப்புக்கல் பிரபைகள் இப்போதும் தாயாரின் தலையில் மின்னுகின்றன.

ஆனால், இதெல்லாம் பழங்கதைகள் மெல்ல மெல்ல சமூகத்தில் அயோக்கியத்தனம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆண்டு அடக்குவதற்கு திறமையான மன்னர் இல்லாத காரணத்தால், மென்மையான மனமுடைய மந்திரிகள் இல்லாத காரணத்தால் அதிகாரிகள் திமிர் பிடித்து அலைவது இயல்பாயிற்று.

அடக்க அரசனில்லாது போனால் அதிகாரிக்கு தானே அரசன் என்று மமதை வந்துவிடும். மக்களின் தொண்டன் என்பது மறந்து விடும்.

அதிகாரிகள் அலட்டலாய் நடந்து கொண்டால் அவனுக்குக் கீழுள்ள வேலைக்காரர்கள் கேவலமாய் நடந்து கொள்வார்கள். மக்கள் மீது எரிந்து விழத் துவங்குவார்கள்.

ஆரம்பத்தில் மக்களுக்கு இந்த எரிச்சல் புரியாது. மிரளுவார்கள். புரிந்த பிறகு முறைப்பார்கள். எதிர்த்து பேச்சில் பதிலடி தருவார்கள். உபசரிக்காமல் உதறி விட்டுப் போவார்கள்.

இங்கேயும் இந்த காளிங்கராயன் குழுவும் ஒரு மாதிரி அவமானப்பட்டுத்தான் திரும்பும் போலிருக்கிறது.

அம்மா மோர் கொடுக்கப்போனபோது உன் மகன் அழகாக இருக்கிறானே அவன் யாருக்குப் பிறந்தான் என்று கேட்டார்களாம்

இது அநாகரிகமான கேள்வி. தாஸியின் வாழ்க்கை ஊரறிந்த விஷயம். தகப்பனைப்பற்றி யாரும் கேட்கவே மாட்டார்கள். தாயைப் பற்றி ஆவலோடு விசாரிப்பார்கள்.

"இன்னாரின் மகனா நீ... உன் தாய் மிக அழகாக பதிகம் பாடுவாள். திருவாசகத்தில் தானும் உருகி பிறரையும் உருகவைப்பாள். உனக்கு திருவாசகம் பாடமுண்டா? ஒரு பொழுதும் திருவாசகத்தை விடாதே. மனனம் செய். தமிழ் மாணவர்களை அழைத்து உன் சொத்தால் படியெடுத்து வை. அதற்காக நீ செய்யும் செலவு உனக்கு சிவ பதவியை கிடைக்கச் செய்யும். தமிழையும் நமது தெய்வீக பாடல்களையும் நீங்கள்தான் போற்றிப் பாதுகாக்க வேண்டும்."

"அந்தணர்கள் எப்படி கட்டுக்கோப்பாக வாழ்ந்து எப்படி தங்கள் அருமறைகளைக் காப்பாற்றுகிறார்களோ அப்படியே நாம் நமது தமிழ் வேதங்களை காப்பாற்றியாக வேண்டும்."

தொண்டை நாட்டு தாஸிகளுக்கு எழுதப்படிக்கத் தெரியும். தஞ்சாவூர் தாஸிகளைப் போல அவர்கள் நாட்டிய இலக்கணத்தில் கவனம் செலுத்தாமல் கதைக் கூத்துக்கள் நடத்துவதில் பிரபலமானவர்கள்.

தஞ்சாவூர் ஆட்டக்காரிகளின் பார்வையில் கதைக் கூத்து சற்று மட்டமென்று வர்ணிக்கப்பட்டாலும் இந்த கதைக்கூத்துக்கு மிகப்பெரிய ரசிகர் கூட்டம் இருந்தது.

தஞ்சையில் நாட்டியமாடும் போது பல புதிய உத்திகள் அதில் புகுத்தப்பட்டன மதில்சுவர் ஓரம் மேடை



அமைத்து இடது புறமும் வலதுபுறமும் தடுப்பு ஏற்படுத்தி எதிரே மட்டும் ஜனங்களை உட்காரச் செய்து மேடையை முற்றிலும் இருட்டாக்கி மெல்ல மெல்ல தீப்பந்தங்களை எரியவிட்டு ஒளி பரவப்பரவ வாத்திய முழக்கங்களை அதிகமாக்கி சட்டென்று நிறுத்தி ஒளியைக் குறைத்து. "அதோ இவன்தான் அரிச்சந்திரன் பொய்யே பேசாத மன்னன் பொய் சொல்லமாட்டேன் பொய் சொல்ல மாட்டேன் என்ற காரணத்தால் சக்ரவர்த்தியான அரிச்சந்திரன் இப்போது சுடுகாட்டு வெட்டியானாக வேலை செய்கிறான். இவன் கதை இப்போது சொல்லப்படும்." புலவர் குரல் உரத்து ஒலிக்க மேடையில் அங்கங்கே சிதை எரிவதுபோல் காட்டப்படும்.

சுடுகாட்டில் சிவ நடனம் நடைபெறும் டமருக சப்தம் சொல்லப்படும். அரிச்சந்திரன் கதைக்கு நடுவே இலக்கணம் பிறழாத ஒரு பரதநாட்டியம் நடத்தப்படும்.

மகாஜனங்கள் பல நாட்கள் பழியாய் கிடந்து நாட்டிய நாடகம் பார்த்தார்கள். ஊர்விட்டு ஊர் வரை காவலுக்கு வந்தார்கள்.

குதிரை கொடுத்தார்கள். யானை கொடுத்தார்கள். மாடுகள் கொடுத்தார்கள். பை பையாய் பொற்காசுகள் கொடுத்தார்கள்.

பாட்டு எழுதிய புலவர்களை உடன் அழைத்துப் போனாலும் ஊரில் பாராட்டு தாஸிகளுக்குத்தான் அதிகமிருந்தது.

அவள் நாட்டியமும் மட்டுமல்லாமல் அவள் சிரிப்பும் பேச்சும் மக்களை அதிகம் கவர்ந்தன.

அவளைச் சுற்றி எப்போதும் ஒரு கும்பல்வாய்பிளந்து வேடிக்கை பார்த்திருந்தது. தங்கிய இடத்தில் எப்போதும் கூட்டமிருந்தது.

தாஸி என்பவள் சந்தோஷமாக இருந்தாள். பிறரை சந்தோஷப்படுத்தினாள். அவளுக்கென்று ஒரு தர்மநெறி இருந்தது அவள் அதை மீறவில்லை மீன்பவர்களை அருகே சேர்க்கவில்லை.

''என் பெண் யாருக்குப் பிறந்தாள் என்பது இருக்கட்டும் நீ யாருக்குப் பிறந்தாய் என்பதை யாரறிவார்? உன் தாய் சொல்லித்தானே தெரியும் நீ அண்ணனுக்குப் பிறந்திருக்கலாம் தம்பிக்குப் பிறந்திருக்கலாம். நீ அப்பாவிற்குப் பிறந்திருக்கலாம். உன் அப்பாவின் அப்பாவுக்கும் பிறந்திருக்கலாம். ஒரே இரவில் ஒன்பது பேரைக் கூடினாலும் எவரால் கரு உற்பத்தியாயிற்று என்று ஏற்ற பெண் பிள்ளைக்குத்தான் தெரியும்.

வயிற்றிலிறங்கிய பூச்சிக்குத் தெரியாது. நீ வெறும் பூச்சி. இந்த பரம்பரைப் பேச்சு இங்கு வேண்டாம். விருந்தினர் என்பதால் இத்தோடு விடுகிறேன் இல்லையெனில் இன்னும் இழுக்காகப் பேச என்னால் முடியும்.

''உன் அப்பன் உன் அம்மையை சீராடிக்கொண்டிருந்த போது உன் அம்மை அரசனை நினைத்துக் கொண்டிருந்தால் உன் முகம் அரசனைப்போல இருக்கும். பட்டுப் பூச்சியின் சிறகு, கூட்டுப்புழு கடைசியாய் பார்த்த நிறத்தை ஒத்தது.

''இப்பொழுது சொல் நீ உன் தந்தையைப் போல் இருக்கிறாயா...இல்லை மதுரை மன்னனைப் போல் இருக்கிறாயா?'' குழப்பிவிட்டு வந்து விடுவாள்.

தாஸிக்கு பேசி ஜெயிக்க யாரும் கற்றுத்தர வேண்டியதில்லை. பேச்சும் கூத்தும் அவள் பரம்பரைச் சொத்து.

இந்த காளிங்கராயன் வருகை சின்னச் சின்ன விஷயங்களை வளர்க்க ஆரம்பித்து விட்டது. இது பெரிதாகாமல் அந்த வராக மூர்த்தி தான் காப்பாற்ற வேண்டும்.



சமையல் முடிந்துவிட்டது. ப்ரும்ம சபைக்கு ஒரு வார்த்தை சொல்லியனுப்பவேண்டும். அவர்கள் பரிமாறச் சொன்னபிறகு விருந்தாளியாய் வந்த பதினாறு பேருக்கும் பரிமாற வேண்டும்.

வீரர்கள் பலபேர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் வெறுமே கண்மூடி உட்கார்ந்திருக்கிறார்கள்.

நாச்சி வாசல் நோக்கிப் போக. நான்கு அந்தணர்களும் இரண்டு வேளாளர்களும், கோயிலுக்குள் நுழைந்தார்கள். நாச்சி எதிர்ப்படுவதைப் பார்த்ததும் அப்படியே பின் வாங்கினார்கள்.

''நடுவே நின்ற நரசிம்மபட்டர் ரகசியக் குரலில் பேசினார். நீ ஒரு உதவி செய்ய வேண்டும் நாச்சி. இந்த காளிங்கராயன் உண்மையானவன் தானா என்பதை கொஞ்சம் சல்லாபித்து தெரிந்து கொள்ளவேண்டும்.''

அவனும் அவரும் பேசுவதை புதர் மறைவில் குத்திட்டு உட்கார்ந்திருந்த குணசீலம் கூர்ந்து கவனித்தான். உதடுகள் அசைவை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன பேசுகிறார்களென்று அனுமானித்தான்.

குறைப் பிரசவத்தில் பிறந்து உடல் வலிவு இல்லாதவர்களுக்கு வேறுசில வலிமைகளை இயற்கை கொடுக்கும். அவைகளில் இரண்டு கூர்மையான செவி, கூர்ந்த மதி.

குணசீலனுக்கு தொலைவிலிருந்தாலும் அவர்கள் பேச்சு புரிந்து விட்டது. அவன் சந்தோஷமானான்.

நாச்சியைப் பார்த்தவுடனே அவளைத்தொடவேண்டும் என்ற ஆசை அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. அதைத்தீர்த்துக் கொள்ள முடியும் என்று இப்போது தோன்றுகிறது.

அதையும் தவிர காளிங்கராயன் இந்த ஊர் சந்தேகப்படத்துவங்கி விட்டது என்பது சந்தோஷமான விஷயம்.

இனி குணசீலத்தை காளிங்கராயன் மதித்தே ஆகவேண்டும் கலந்து பேசியே ஆகவேண்டும்.

காளிங்கராயன் உண்மையில் யாரென்பது ஊருக்குத் தெரிவதற்கு முன்னால் தனக்குத் தெரிந்தாக வேண்டும்.

கடல் மல்லை துறை முகத்தில் குதிரை மீது ஏறி வித்தை செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று வந்த இடத்தில்காளிங்கராயன் கைதட்டி ஒரு பொன் கொடுத்து என் படையில் சேர்ந்துவிடு என்று கம்பீரமாகக் கட்டளையிட்டான்.

படை என்றதும் நாற்பதாயிரம் பேர் ஐம்பதாயிரம் பேர் என்று எதிர்பார்த்திருந்து, பத்து தூங்குமூஞ்சிகளாக ஒரு குழுவைப் பார்த்ததும் ச்சே... என்று போய்விட்டது

''பத்துபேர் தானே...இது ஒரு படையா என்று பார்க்கிறாயா? பத்து பத்து பேராக பல்வேறு திக்கிலே ரகசியமாக இருக்கிறார்கள். இப்படி ரகசியமாக இருக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது.''

''மதுரையில் ஆட்சி செய்யும் அந்நியரின் வேவுப் படைகள் பாண்டிய நாடு, தொண்டை நாடு, சோழநாடு என்று சுற்றிக் கொண்டிருக்கிறது. அவர்கள் தெருப் பாடகர்களாகவும், பரதேசிகளாகவும் அலைகிறார்கள்.

''எனவே பெரியபடை இல்லையே என்று வருத்தப் படாதே. நீ சாதாரண ஆளல்ல. ஐயாயிரம் பேருள்ள படைக்கு நீ தலைவன். உன் படையோடு உன்னைச் சேர்க்கும் வரை என்னோடு பல ஊர்களுக்கு நீபயணப்பட வேண்டியிருக்கும் சில முக்கியமான விஷயங்களை கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

அரசியலில் உண்மையும் சொல்ல வேண்டும். உண்மைக்குப் புறம்பாகவும் சொல்ல வேண்டும். எல்லாம் அறிந்து மௌனமாய் எனக்கு நீ துணை செய்யவேண்டும்.



என்னுடைய மற்ற ஆட்களில் உன்னை, பாண்டிய அரசரிடமிருந்து தூதுவந்ததாய் நீ நடிக்க வேண்டும். காயல் பட்டினத்திற்கு வருவதாய் பொய் சொல்ல வேண்டும். காயல் பட்டினம் போயிருக்கிறாயா? இல்லையா? அதனாலென்ன... எல்லாம் தெரியும் என்பது போல் மௌனமாய் இரு. உன்னை யாரும் சந்தேகப்பட மாட்டார்கள்.

உன்னைஅரசரின் அந்தரங்க ஒற்றன் என்று அறிமுகப் படுத்துவேன். உன்னுடைய சம்பளம் ஒரு நாளைக்கு ஒரு பொன். உனக்கு இரண்டு வேளை உணவளிப்பது என் பொறுப்பு.

''படையிலுள்ள அனைவருக்கும் உயர் ஜாதிக்குதிரையும் கேடயமும் வாள் படையும் வாங்கப் போகிறேன். திருவான்மியூரில் குதிரைகளும் திருமயிலையில் ஆயுதங்களும் வாங்கப்படும்.

திருவிடந்தை என்ற ஊர் மன்னருக்கு வரிபாக்கி வைத்திருக்கிறது. அதை வசூலித்துக்கொண்டு தொடர்ந்து பயணப்படலாம். நமது முதல் இலக்கு திருவிடந்தை.

காளிங்கராயன் வாள் உருவி வடக்கு நோக்கி காட்டினான்.

வீரர்கள் சரியென்று தலையசைத்தார்கள்.

சுடுகாட்டில் தகனம் முடிந்து திரும்பவர்கள் போல் தலையை தொங்கப்போட்டுக் கொண்டு காளிங்கராயன் முன்னே நடந்து போனான்

அந்தப்படைவீரர்கள்பத்துபேரில் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமான பொய்யை காளிங்கராயன் சொல்லியிருப்பதை வெகு எளிதில் குணசீலம் கண்டுபிடித்தான்.

இந்த நிருவிடத்தை ப்ரும்மதேய சபையும் ஏதோ கண்டு பிடித்துவிட்டது. காளிங்கராயனை சந்தேகப்படுகிறது. சோறு போட்டு துரத்திவிடப் போகிறது.

ஆனால் நான் இருக்கும் இந்தப் படை தோற்காது. தோற்றால் நமக்கு பிழைப்பு கிடையாது.

காளிங்கராயன் போன்ற திருடர்களோடு இருப்பது ஒரு அனுபவம். பின்னால் தனித்துத் திருட இந்த அனுபவம் நிச்சயம் உதவும்.

எத்தனை நாளைக்கு குதிரையில் காணமடித்து சம்பாதித்துக் கொண்டிருக்க முடியும்?

குணசீலம் என்கிற அந்த பாம்பு விறுவிறுப்பாயிற்று. புதர் வழியே நெளிந்தோடியது. கோயிலின் பின்பக்கம் நுழைந்து காளிங்கராயனுக்கு அருகே போய் அமர்ந்து கொண்டது

காளிங்கராயன் திடுக்கிட்டு என்னவென்று கேட்டான்.

''சபை வருகிறது''

' எங்கே?''

''இங்கே?''

''எதற்கு?''

''நம் மீது சந்தேகம்''

''என்ன சந்தேகம்?''

''மதுரைக்கு மன்னரேயில்லை. மன்னர் அனுப்பிய ஆளுக்கு ஏன் சோறு போட வேண்டும்?''

''முத்திரை மோதிரம் காட்டினேனே...''

''குப்பையில போடுங்கள்

''அப்படியா...வேறென்ன விஷயம்''



''அந்த தாளியை உங்களோடு பேசவைத்து உங்களைப் பற்றிய செய்திகளை உங்களிடமிருந்தே பிடுங்கத் திட்டம்''

''என்னைப் பற்றிய செய்திகளை நீ மட்டும்தான் தவறாகச் சொல்லமுடியும்''

''நான் சொல்ல மாட்டேன்.''

''நல்லது உனது கூலியை இனத்திற்கு இரண்டு கழஞ்சாக உயர்த்தியிருக்கிறேன்.''

''நன்றி. அதுமட்டும் போதாது. எனக்கு ஒரு பெட்டைக் குதிரை வேண்டும் ''

''உனக்கு மட்டும் குதிரை வாங்கிக் கொடுத்தால் மற்றவர்கள் சினந்து கொள்வார்கள். எனவே நீயே எங்கேனும் சம்பாதித்ததாய் நாடகமாடு. இந்தா. இருபது பொன்'' அருகே வைத்திருந்த தலைப்பாகைக்குள் கைவிட்டு பொற்காசுகள் எடுத்துக் கொடுத்தான்.

''நான் இருக்கிறேன். இனி எந்த பயமும் வேண்டாம்.'' குணசீலம் வாக்கு கொடுத்தான்,

''நம்மை பிரிக்கப்பார்ப்பார்கள். அவசியமெனில் பிரிந்து செயலாற்றுவோம்.'' ''எனக்கு ஒரே ஒரு கேள்வி. பாண்டியமன்னன் எங்கிருக்கிறார்?''

''யாருக்குத் தெரியும்?'' காளிங்கராயன் பதில் சொன்னான்.

''அப்போது உங்கள் தனிப்படையின் நோக்கமென்ன?

''குணசீலா... பலவர்கள் உள்ளே நுழைந்து விட்டார்கள். இனி வடக்கே இருந்து அலை அலையாய் உள்ளே வருவார்கள். தங்கள் ஆட்சியை விஸ்தரிப்பார்கள். இந்த பரதகண்டம் முழுவதும் அவர்கள் சொல்வது தான் நடக்கும். அவர்கள் ஆட்சிதான் நிலைக்

கும். ஆனாலும் தெற்கே திருநெல்வேலிச் சீமைக்குவர இன்னும் நாற்பது ஐம்பது ஆண்டு காலமாகும். தொண்டை நாட்டில் காசு கொள்ளையடித்து திருநெல்வேலிச்சீமைக்கு போய்விடப் போகிறேன். எனக்கு அறுபது அகவை ஆகிவிட்டது. உற்றார் உறவினர் எவருமில்லை. இதுவரை கையேந்தி வாழ்ந்ததில்லை. இனியும் வாழக்கூடாது அப்படி வாழாதிருக்க படைபலமும் பணபலமும் தேவைப்படுகிறது. யவனர் கொள்ளையடிக்காத கிராமங்களை நாம் கொள்ளையடித்துப் போகலாம்.

நம்மைப் பின்தொடர எவருக்கும் தைரியமில்லை. நம்மை தண்டிக்க இங்கு எந்த அரசனுமில்லை.''

''ஊரை கொளுத்திவிட்டு கொள்ளையடிக்க வேண்டியதுதானே...சோற்றுக்கு உட்கார்ந்திருக்கிறீர்களே...''

''ஊரைக் கொளுத்தினால் கரியும் சாம்பலும் மிஞ்சும் சில தாலிக்கொடிகளும் கங்கணங்களும்தான் கைக்கு கிடைக்கும். முலைகள் மறைய பெண்கள் நகைபோட்டுக் கொண்டிருந்த காலம் இப்போது இல்லை. யவனருக்கு பயந்து எந்த கிராமமும் தன் செல்வத்தை வெளியே காட்டுவதில்லை. அரிசி பருப்புகளைக் கூட பதுக்கி வைக்கிறார்கள். எல்லோர் வீட்டிலும் நிலவறை தோண்டி வைத்திருக்கிறார்கள்,

''சவுக்காலடித்து இவர்களிடம் காசு வாங்க முடியாது. பாண்டிய மன்னர் பெயர் சொல்லி உள்ளே புகுந்து யவனர்கள் பற்றி அதிகம் பயமுறுத்தி அவர்கள் சித்ரவதையை விதம்விதமாக விவரித்து அவர்களுக்குள்ளே அபிப்ராயபேதம் ஏற்படுத்தி கோவில் சொத்துக்கள் எங்கேஇருக்கிறது என்று தெரிந்து அவைகளை ஒட்டுமொத்தமாய் அள்ளிக் கொண்டு போக வேண்டும்.

''வராக மூர்த்தியின் சிலையைப் பார்த்தாயா...எவ்வளவு உயரம். இந்த வராக மூர்த்திக்கு இடுப்புவரை வேட்-



டியைப்போல் தங்கக் கவசம் போடப்பட்டிருக்கிறது. பலநூறு மன்னர்களால் ஏகப்பட்ட நகைகள் தானம் தரப்பட்டிருக்கின்றன. இந்த கிராமத்திலுள்ள வெகு சிலருக்கே இந்த நகைகள் பற்றி தெரியும். இது பரம்பரை ரகசியம்'''

''அதையும் தவிர இது கதைச்சிற்பம். எனவே சிற்பத்தின் பாதத்தில் தங்கத் தகட்டில் யந்திரம் எழுதி புதைத்திருப்பார்கள்.

அது புதைத்த இடத்தில் வைரவைடூரியங்கள் போட்டிருப்பார்கள். அதையும் நாம் இரவோடு இரவாக தோண்டிப் பார்க்க வேண்டும்.''

''தெரிந்தால் வெட்டிப் போடுவார்களே...''

''தெரியாது செய்ய கல்திரை எழுப்பப் போகிறேன்.''

''புரிகிறது வைரவைடூரியங்களைக் கொள்ளையடித்து என்னலாபம்? வாங்குவதற்கு எந்த அரசன் இருக்கிறான்?'

''ஏன்... யவனர்கள் இருக்கிறார்களே... யவனர்கள் இந்த தேசத்தில் நுழைந்ததற்கு என்ன காரணமென்று நினைக்கிறாய்? அவர்களுக்கு விலையுயர்ந்த கற்கள் மீது மிகுந்த ஆசையுண்டு. போட்டி போட்டுக் கொண்டு வாங்குவார்கள். மாணிக்கக் கற்களை கொடுத்து யவனர்களின் நட்பு சம்பாதிப்பதோடு மட்டுமல்லாமல் படைபலமும் சம்பாதிப்பேன்.''

''தெற்கே தாமிரபரணிக்கரையில் கோட்டைக் கட்டிக் கொண்டு சிற்றரசனாய் வாழ்வேன். அரசனாக பிறக்கவில்லை; அதனாலென்ன அரசனாக இறப்பேன். இன்னும் இருபத்தி ஏழு வருடம் உயிரோடு இருப்பேன் என்று சொல்கிறார்கள். அறுபத்தியோராவது வயதில் அரசனாவேன் என்று ஜாதகக் குறிப்பு சொல்கிறது. குடந்தை துர்க்கை கோவில் பூசாரியும் ஆவேசம் வந்து அதையே சொன்னான்.''

''வாலிப வயதிலிருந்து நிறைய ஊர் சுற்றியாகிவிட்டது. சோழதேசம் பாண்டிய தேசம் தொண்டை மண்டலம் என்று பல்வேறு இடங்களில் வாழ்ந்தாகி விட்டது. எனக்கென்று ஒரு கோட்டை எனக்கென்று ஒரு கூட்டம், எனக்கென்று ஒரு கொடி. என் கொடியின் சின்னம் என்ன தெரியுமா? வராகம் என் கோட்டையின் பெயர் என்ன தெரியுமா? கரும்பன்றிக்கோட்டை என் வம்சத்தின் பெயர் என்ன தெரியுமா? வராக வம்சம்.''

''எதற்கு அருவருப்பான பிராணியை சின்னமாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

''யாரும் உறவு கொண்டாடி வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான்.'' காளிங்கராயன் வாய்விட்டுச் சிரித்தான். ''தனித்துத் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான்'' தொடர்ந்து சொன்னான்.

''இந்த ஊரில் தமிழ் தேசத்தில் எதற்கும் தத்துவமாய் அர்த்தம் சொல்லிக் கொள்ள முடியும் பத்து தமிழ் புலவர்களுக்கு கறிசோறு போட்டு விதவிதமாய் யோசிக்க வைத்து வராகம் தான் உலகத்திலேயே மிக உன்னதமான பிராணி என்று விவரிக்க முடியும்.''

''சோறு போட ஆளில்லாமல் தமிழ்ப் புலவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். கோயில்களை கொள்ளையடித்துப் போகும் போது கூடவே பத்து தமிழ்ப் புலவர் குடும்பங்களையும் கூட்டிப் போக எண்ணம்.''

''ஆயிரம் பசுக்கள் இரண்டாயிரம் எருமைகள் நிறைய ஆடுகள். பத்துப்பதினைந்து யானைகள் சில அந்தணர்கள் என்று ஒரு பெரிய கும்பலே என்னோடு திருநெல்வேலிச் சீமை நோக்கி வரும். அங்கு ஆற்றங்கரையோர நிலங்களை ஆக்கிரமித்து அங்கே மக்களை குடி வைத்து வராக மாநகரம் அமைப்பேன்.''



குணசீலா...முத்திரை மோதிரம் கூட செய்து வைத்திருக்கிறேன். இன்னும் ஒரு வருடத்தில் சோழர் ஆட்சிபோல் பாண்டியர் ஆட்சி போல் சேரர்களின் சரித்திரம் போல் வராக ஆட்சி மீளிரும் அவர்களின் சரித்திரம் ஆரம்பமாகும்.

''இப்போதைக்கு பலவர்களின் கீழ் இருப்பினும் ஒரு காலகட்டத்தில் வராகர்கள் தனித்த உரிமைபெறுவார்கள். தமிழ் பேசும் இடங்களிலெல்லாம் தங்கள் கொடியை பறக்க விடுவார்கள் என் மாலை எருக்கமாலை என் மரம் ஆலமரம் என்று மெய்கீர்த்தியை புகழ்பாடலை நானே எழுதியிருக்கிறேன் கேட்கிறாயா?''

குணசீலம் வேண்டாம் என்று தலையசைத்து விட்டான். ''இதை நியாயமான முறையில் பெறலாமே... ஏன் கோவிலை கொள்ளையடிக்க வேண்டும்?''

''எந்தக் குலம் நியாயமான முறையில் ஆட்சிக்கு வந்திருக்கிறது? எந்த வம்சம் தர்மத்திற்கு உட்பட்டு ராஜ்ஜியம் ஸ்தாபித்தது? சோழர்கள் பல்லவர்களை எப்படி ஏமாற்றினார்கள் எப்படி ஆட்சி அமைத்தார்கள் என்று மக்களுக்கு மறந்து போயிருக்கலாம் என்னைப் போன்ற சரித்திரம் படித்தவர்களுக்கு மறக்காது.''

''அரசியலின் அடித்தளமே சூழ்ச்சிதான். ஆட்சி பிடித்தலின் அடிப்படையே வஞ்சனைதான்.''

''ஆட்சியைப் பிடிக்க முதல் விஷயம் பணபலம். இரண்டாவது படைபலம்.''

''குணசீலா... மிக முரட்டுத்தனமான படைக்கு நீ தலைவனாகப் போகிறாய் என்பதை மனதில் வைத்துக் கொள்.''

''என்னைப் புரிந்து விட்டதல்லவா... எனக்கு உதவி செய். என்னோடு துணை இரு. என் திட்டங்கள் தெரிந்த

உனக்கு இனி வேறு மார்க்கங்களில்லை. என்னோடு இருந்துதான் ஆக வேண்டும். நீ நகர்ந்தால் உன் சிறிய உடம்பு துண்டாடப்பட்டு ஒரு பானையில் போடப்பட்டு கடல் சுறாக்களுக்கு இரையாகப் போடப்படும். எரிக்கப் படாத உன் உடம்பைத் தேடி நீ திருவிடந்தை கடற்கரையில் இடையறாது அலைவாய்.''

குணசீலம் அதை அலட்சியம் செய்தான். ''நாம் வெற்றி பெறுவோம் மன்னரே...'' என்று கைகூப்பி வணங்கினான்.

அவன் உடனடி பணிவு கண்டு காளிங்கராயன் இடி போல் சிரித்தான்.

வெளியே தயங்கி திட்டங்கள் போட்டு திருவிடந்தை ஊர் குழு தானி நாச்சியை தயார் செய்த குழு காளிங்கராயனை நோக்கி வந்தது.

''உணவு சித்தமாகிவிட்டது. பரிமாறலாமா...?'' நரசிம்மபட்டர் கேட்டார்.

''முதலில் பேசலாம், அமரும். பேசிப் புரிந்து கொள்ளலாம். எல்லோரையும் அமரச் சொல்லும்.''

''உங்களுக்கு பசிக்குமே...''

''என் பசி முப்பது வருடப்பசி. அதற்கு உம்மாலோ, உங்களூராலோ சோறு போடமுடியாது.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''பாண்டிய மன்னரை மறுபடியும் மதுரைக்கு அரியணை ஏறுகிற பசி. தமிழ் பேசும் இடமெல்லாம் மீன் கொடியை பறக்க விடுகிற பசி.''

''யார் பாண்டிய மன்னர் என்று தெரியாத நிலையில், ஆறேழு பேர் தங்களை பாண்டியவம்சம் என்று சொல்லிக் கொள்ளும் காலகட்டத்தில் நீங்கள் யாரை மன்னராக...''



உரத்துப்பேசிய நரசிம்மபட்டரை காளிங்கராயன் இடைமறித்தான்.

அது என் கவலை. நான் யாரை கை காட்டுகிறேனோ, அவர்தான பாண்டியமன்னர். பாண்டியரின் இளைவம்சம் தான். பத்து வயதிலிருந்து என்னை அரச சபைக்கு அர்ப்பணித்துக் கொண்டவன். நீங்கள் உங்கள் முடிவைச் சொல்ல எத்தனை நாளாகும்?''

''எங்கள் சபையில் மூன்று பேர் வெளியூருக்குப் போயிருக்கிறார்கள். வேளாளரில் முக்கியமான இருவர். விதை நெல் தேடியும் வேர்க்கடலை வித்துக்காகவும் திரு அண்ணாமலை போயிருக்கிறார்கள். அவர்கள் வர நாட்களாகும். அதுவரை இருந்து சாப்பிட்டு...''

காளிங்கராயன் அவர் பேச்சு முடிக்கும்முன் எழுந்தான்.

''காலையில் நீராகாரம் அருந்தினோம். அதுபோதும். பதினைந்து நாள் தாமதிக்க எனக்கு உத்தரவில்லை. இன்று மாலைக்குள் இரண்டாயிரம் பொற்காசுகள். இருபது வீரர்கள் தேவை.''

''எங்களிடம் அவ்வளவு இல்லையே...''

''எவ்வளவு இருக்கிறது?''

''அவர்கள் வந்த பிறகுதான் கலந்து ஆலோசித்து சொல்ல வேண்டும்.''

''கொடுக்க மனமில்லை என்று இதற்கு அர்த்தம். பாண்டிய மன்னரை மதிக்கவில்லையென்றுதான் இதற்குப் பொருள். இங்கே அரசரின் ஆணை செல்லுபடியாகாது. அந்தணர்களின் கர்வம்தான் ஆளுமை செய்கிறது என்ற நிலை.

தவறு உங்கள் மீதல்ல. நீங்கள் வெற்றுத்தலைகள். யவனர்களின் கொடுமை உங்களுக்குத் தெரியவில்லை.

அவர்களை தடுத்து நிறுத்த வேண்டிய கட்டாயம் உங்களுக்குப் புரியவில்லை. பாண்டிய மன்னருக்கு உதவி மறுக்கின்ற நீங்கள் யவனர்களிடம் எப்படி காசு சேர்ப்பீர்கள் என்று நினைத்துப் பார்க்கவே சிரிப்பு வருகிறது.

அந்தணர்களின் பொறுமை, வைராக்கியம் தேசமறிந்த விஷயம். ஆனால், இங்கிருக்கிற எந்த அந்தணனும், யவனர்கள் செய்யும் சித்ரவதையை கற்பனை செய்துகூட பார்த்திருக்கமாட்டான்.

ஐயா, வேளானரே...அந்தணருக்குத்தான் அறிவில்லை. அரச விசுவாசம் மிகுந்த உங்களுக்கு எங்கே போயிற்று புத்தி? அரசனுக்குச் செய்ய வேண்டிய கடமையை அந்தணன் செய்யாமலிருக்கலாம். வேளாளன் விலகி இருக்கலாமா?''

''யார் அரசன் என்பதில் உங்களுக்கு சிக்கலிருக்கலாம். ஆனால், பாண்டியர்கள்தான் தமிழகத்தின் அரசர்கள் என்பதில் சந்தேகமுண்டா? அல்லது மதுரையில் ஆட்சி செய்யும் யவனர்களையே மன்னர்களாக ஏற்றுக்கொண்டு விட்டீர்களா?

யவனர்கள் சமணர்களில்லை. கோயில்களை வெறுமே தாழிட்டு வைத்திருப்பவர்களில்லை. கலைச் சின்னங்கள் என்று பாதுகாத்து வைக்கிறவர்களில்லை. யவனர்கள் உள்ளே நுழைந்தால் முதலில் உங்கள் எல்லோர் தலையும் மொட்டையடிக்கப்படும். பிறகு உங்களை வைத்தே உங்களூர் கோயில்கள் இடிக்கப்படும்.

சிவன் சொத்தோ, விஷ்ணுவின் செல்வமோ ஒரு இழை தங்கம் கூட விட்டு வைக்க இல்லாமல், ஒரு வெள்ளி உத்திரணி கூட, தக்க வைத்துக் கொள்ளப்படாமல் எல்லாம் அவர்கள் காலடியில் கொட்டப்படவேண்டும். பிறகு யவனர்கள் உங்களூர் பெண்டுகளை தேர்வு செய்வார்கள். சிறிய பெண் குழந்தைகளை விட்டுவைக்காமல், பின்னால் ஆகுமென்று அழைத்துப் போவார்கள்.



அந்தணர்களே...நான் இங்கு வந்தது பொற்காசுகளுக்கு மட்டுமல்ல. இந்தக் கோயிலைப் பாதுகாப்பதும் பாண்டிய வம்சத்தைச் சார்ந்த என் கடமை.

இன்னும் மூன்றுதான் அவகாசம் தருகிறேன். வெளியூர் போனவர்களை விரைந்து கூட்டி வாருங்கள். எனக்கு சில பெண்டுகளையும் ஆட்களையும் உதவிக்கு கொடுங்கள். இந்த கருவறையைச் சுற்றி என் கையாலேயே கல்திரை எழுப்புகிறேன்.

வராகமூர்த்தியின் சிலை மிக அழகாக இருக்கிறது. இந்த கல்திரைக்கு வெளியே வேறு சிலை வைத்து பூஜை செய்யுங்கள். சில தங்க நாணயங்களை அதைச்சுற்றி போட்டு வையுங்கள். புதிய சிலை யவனர்களால் உடைக்கப்பட்டாலும் பழைய சிலை உருக்குலையாமல் இருக்கும்.

யவனர்களால் அவர்கள் பாலைவனத்தை விட்டு வெகுநாள் இங்கு இருக்க முடியாது. அவர்கள் தங்கள் பட்டணத்திற்குப் போகவே, தங்கள் பெண்டு பிள்ளைகளைப் பார்க்கவே ஏக்கமாய் இருப்பவர்கள்.

அதையும் தவிர பாண்டிய மன்னர் மிகப்பெரும் படையை திரட்டிக் கொண்டிருக்கிறார். சிங்கள அரசின் துணையோடு ஆறு லட்சம் வீரர்களோடு மதுரையில் பிரவேசிப்பார். வரும் சித்திரை வைகாசி மாதம் கடுங்கோடைக் காலத்தில் இந்தப்படையெடுப்பு நடக்கும்.

காசு தருகிறீர்களோ இல்லையோ கல்திரை வேலைகள் நடந்தேயாக வேண்டும்.

'தேவையில்லை'' நரசிம்மபட்டர் கடுகடுத்தார்.

''ஏன்?''

''வாழும் மக்கள்... வணங்கும் மூர்த்தியை மறைப்பது தவறு''

''வாழும் மக்களா... வணங்கும் மூர்த்தியா...எல்லாம் சிதறும்.'' காளிங்கராயன் கர்ஜித்தான்.

''அதுவே விதியெனில் தடுப்பதற்கு யாராலாகும்? கல்திரை கூடாது.''

''எல்லா ஊரிலும் இது நடந்திருக்கிறது''

''இந்த ஊரில் அது நடக்காது. கல்திரை தேவையில்லை.''

''இதைச் சொல்ல உமக்கென்ன அதிகாரம்?''

''கல்திரை எழுப்ப உமக்கென்ன அதிகாரம்?''

''நான் பாண்டிய நாட்டு அதிகாரி''

''தலையில்லாத போது வாலாடக்கூடாது. மன்னரை அறிந்தவர்கள் இங்கு உண்டு. உம்மை அறிந்தவர் இங்கு எவருமில்லை''

''என் மீது சந்தேகமா?''

''ஒரு சிறிய கிராமத்திற்குள் நுழைந்து இரண்டு வேளை சோறு தான் கேட்பார்கள். இரண்டாயிரம் பொன் கேட்கிற அதிகாரியை இப்போதுதான் பார்க்கிறேன்.''

''அந்தணரே உம்மிடம் காசில்லாமல் இருக்கலாம். ஊரிடம் காசில்லாது இருக்கலாம். ஆனால் இந்த வராக மூர்த்தியிடம் கூடவா செல்வமில்லை. மன்னர்கள் கோயிலுக்குக் கொடுத்ததைத்தான் மன்னருக்காகக் கேட்கிறேன். அதுவும் மன்னரின் சுகத்திற்காக கேட்கவில்லை. மக்களின் நலனுக்காக கேட்கிறேன். வெறுமே நகைகளை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்?



அவற்றை அரசாங்கத்திடம் கொடுங்கள். அரசு போரிட்டு ஜெயித்து மறுபடி வராகமூர்த்திக்கு வட்டியோடு திருப்பித்தரும்.

இன்னும் மூன்று தினங்கள் உங்களுக்கு அவகாசம் தருகிறேன்.

''எல்லாம் இருக்க ஏன் திருவிடந்தை?'' வேறு யாரோ ஒரு அந்தணர் பதறினார்.

''நானும் என்னைச் சார்ந்தவர்களும் திருவிடந்தைக்கு வந்திருக்கிறோம். என்னைப் போல பலர் பல வேறு கிராமங்களுக்குப் போயிருக்கிறார்கள். திருவிடந்தை மட்டும் எனக்கு தரப்படவில்லை திருவெற்றியூர் வரை நான் போய் பொருள் திரட்ட வேண்டிய வேலை எனக்குண்டு தயவு செய்து இறைநற்றுத்தவனை போல் இருக்காமல் புரிந்து கொண்டு ஒன்று கூடி பேசி முடிவெடுங்கள் கல்திரை வேலை நாளைகாலை ஆரம்பமாகும் அதற்கு முன்பு நம் இறைவனுக்கு நகைகளை அணிவியுங்கள் கண்ணாரப் பார்த்து விடுவோம்.

மீறி தடுப்போர் எவரையும் நான் என் ஆட்கள் கொண்டு தாக்குவேன் அவசியமெனில் வெட்டியும் வீசுவேன் அரசாங்கப் பணிக்கு இடையூறு செய்வது அரச நிந்தனை. எங்களுக்கு உணவு வேண்டாம் நீங்கள் கலைந்து போகலாம். வேளாளர்களையும் கோயிலுக்கு வெளியே விரட்டுங்கள் என் அனுமதியின்றி யாரும் கோயிலுக்கு உள்ளே வரக்கூடாது''

அங்கே சரசரவென்று ஒரு உஷ்ணம் பரவியது.

அந்தணர்கள் கோபத்துடன் வெளியேற வேளாளர்கள் அவர்களைப் பின்தொடர காளி நாச்சி மட்டும் அங்கு தாயாரோடு நின்று கொண்டிருந்தான்.

ஏதோ யோசித்துக் கொண்டிருந்த காளிங்கராயன் அருகே வந்தான்.

''உணவு பரிமாறட்டுமா?'' என்று மெல்லிய குரலில் கேட்டான்.

காளிங்கராயன் அவனை உற்றுப் பார்த்தான் சரி யென்று சொன்னான்.

கோயில் மண்டபத்தில் இலைகள் போடப்பட்டன. நீர் தெளிக்கப்பட்டது.

# 6

கடற்கரைச் சாலையை விட்டு ஒதுங்கி ஆடிய பொற்பாதம் சிதம்பரம் நோக்கி நடந்தான். வழியே பல கோயில்களில் கல்திரை எழுப்பப்பட்டிருந்தது. தெற்கிலிருந்து வருகிறான் என்றதும் ஊர் அவனை சூழ்ந்து கொண்டு விசாரித்தது.

''ஏதேனும் தொந்தரவு உண்டா? காயல்பட்டினம் துறைமுகமாயிற்றே... யவனர்கள் வந்திருக்கிறார்களா? தஞ்சை மாநகரம் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாம் சோழர்கள் சாம்ராஜ்யத்தை இருநூறு வருடங்கள் முன்பு பாண்டியர்கள் வேரறுத்தார்களல்லவா, ஒரு கல்லும் நில்லாதுடைத்து கோவேறு கழுதை வைத்து உழுது பேய்கடுகு விதைத்தார்களல்லவா, ஒரு ஊர் அழிந்துபோக வேண்டும் என்று நீர்நிலைகளை தகர்த்தார்களல்லவா ஆநிரைகளை கொன்றார்களல்லவா அதன் பலன் இப்போது அனுபவிக்கிறார்கள்.''



''கோயிலை விட்டு விட்டு ஊரிலுள்ள எல்லா கட்டிடங்களையும் தகர்த்து விடு என்று அன்று பாண்டியர்கள் சொன்னார்கள் இன்று யவனர்களால்கோயில்கள்மட்டுமே தகர்க்கப்படுகின்றன. மூர்த்திகள் புரட்டி உடைக்கப் படுகின்றன. அமைச்சர்கள் வீடும் புலவர்கள் வீடும் யவனர்களால் கைப்பற்றப்படுகின்றன. மதுரையிலும் சிராப்பள்ளியிலும் இனி யவனர்கள் ஆட்சி தான். அவர்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.''

''அந்நியர் படையெடுப்பு நமக்குப் புதியதல்ல தம்பி. ஒய்சாளர்களை சாளுக்கியர்களை ராஷ்ட்ரகூடர்களை இந்த மண் சந்தித்திருக்கிறது அடிவாங்கி அழுதிருக்கிறது.

நமது பெண்கள் பலவந்தப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். நமது வீரர்கள் கசையால் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். எதிர்த்துப் பேசிய வீரனை துடிக்கத்துடிக்க கழுவிலேற்றிக் கொன்றிருக்கிறார்கள். சிரச்சேதம் செய்திருக்கிறார்கள்.''

''ஆனால்எதிர்க்காதவர்கள் தண்டிக்கப்பட்டதில்லை. யவனர்களுக்கு எதிர்க்காமல் வணங்குபவர்களைப் பிடிக்கவில்லை. அதிகம் வணங்குபவனையும் அடித்துத் துன்புறுத்துகிறார்கள். யவனர்களிடமிருந்து தப்பிக்க, யவனர்கள் கண்ணில் படாமலிருப்பது தான் வழி. ஆள் நடமாட்டமேயில்லாத மலையடிவாரங்களிலெல்லாம் மதுரை மக்கள் குடிசைபோட்டு தங்கியிருக்கிறார்கள். வேலி போட்டு சேரி அமைக்கிறார்கள். தப்பித்துப் போவதற்காக மலைப்பாதைகள் செம்மையாக போடப்பட்டிருக்கின்றன.''

''மதுரை மக்கள் அடிப்பட்ட மிருகங்களைப் போல சிதறியோடி ஒளிந்து வாழ்கின்றனர். தஞ்சை மக்களுக்கு ஒளியக்கூட இடமில்லை. இங்கே இந்த மேல் திசைநோக்கி

வடகிழக்காய் யவனர்கள் நடந்து வரக்கூடும். சிதம்பரம் தாண்டி தொண்டை தேசத்தில் நுழையக்கூடும்.

யவனர்களுக்கு அவசரமேயில்லை. இந்த தேசத்தில் எதிர்ப்பே இருக்காது என்று நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். அனுபவித்து கொள்ளையடிக்கிறார்கள். நிலங்களின் செழிப்பைப் பார்த்து வியக்கிறார்கள். ஆற்றில் மழைநீர் வந்ததும் உடுத்திய உடுப்போடு பாய்ந்து மீன் பிடிக்கிறார்கள். வெகு நிச்சயமாய் இங்கு வருவார்கள் என்று தெரிந்து தான் எல்லாக் கோவில்களையும் கருவறையை கல்திரை எழுப்பி மூடி விட்டோம். உற்சவ விக்ரகங்களை, துணி சுற்றி தலைமேல் வைத்துக்கொண்டு அந்நியர்கள் கண்படாதவாறு வேறு ஊர்களுக்கு நகர்ந்து கொண்டிருக்கிறோம். ஸ்ரீரங்கநாதன் ஒரு முப்பது வருட காலமாய் யாத்திரை செய்து கொண்டிருக்கிறார். தெற்கே போய் தெற்கிலிருந்து வடக்கே போய், வடக்கிலிருந்து மீண்டும் தெற்கு வந்து எப்படி ஸ்ரீரங்கம் சேருவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

''யவனர்களுக்கு உற்சவவிக்ரஹங்களென்றால்மிகவும் வியப்பு. எப்படி இவ்வளவு நுணுக்கமாய் செய்கிறோமென்று மடியில் போட்டுக்கொண்டு புரட்டிப் புரட்டி ஆராய்கிறார்கள். உலர்ந்தபுல்லில் அவைகளை பொதித்து அவர்களின் பெண்டு பிள்ளைகளுக்குக் காட்ட வடக்கு நோக்கி எடுத்துச் செல்லுகிறார்கள்.''

''நமக்கு வரம் தரும் விக்ரஹமாக இருப்பது அவர்களுக்கு விளையாட்டு பொம்மையாக இருக்கிறது. வழி நெடுக எல்லா ஊர்களிலும் மூலவர்களை மறைத்து உற்சவர்களை கிணற்றுக்குள் இறக்கிவிடுகிறார்கள். நகைகளெல்லாம் கோயில் அதிகாரிகளின் வீட்டிலோ அல்லது வயல் வெளியிலோ புதைக்கப்பட்டிருக்கின்றன. இனி யவனர்களுக்கு தொண்டை நாட்டில் கொள்ளையடிப்பதற்கு எதுவுமில்லை, உடைப்பதற்கு துவார



பாலகர்களைத் தவிர, வேறெதுவும் கிடைக்கப் போவதில்லை.

''ஆனால், தம்பி இதுவும் தவறு. யவனர்கள் நமது தந்திரத்தை புரிந்து கொண்டால் அடித்துப் பின்னி விடுவார்கள். என்ன வந்தாலும் விதியே என்று எதிர்கொள்ள வேண்டியது தான்''

''பசி தூக்கம் மறந்து உற்சவ மூர்த்திகளை தலையில் தூக்கி, ஊர் ஊராய் அலைகிற இளைஞர்களை நினைத்தால் தான் பாவமாக இருக்கிறது. இந்த யவனர் படையெடுப்பில் இன்னொரு முக்கியமான விஷயம், இதுவரை யார் இங்கு படையெடுத்தாலும் இந்த அந்தணர்கள் காயப்படாது ஒதுங்கிக் கொள்வர்.''

''ஜெயித்த அரசனுக்கருகே கும்பலாகப் போய் ஜெய விஜயீ பவ'' என்று வாழ்த்துவார்கள். எந்த அரசன் என்பது முக்கியமில்லை எந்த நாடு என்பது முக்கியமில்லை. எங்களுக்கு எங்கள் மொழி முக்கியம். அந்த மொழியில் எழுதப்பட்ட வேதங்கள் முக்கியம் என்று எல்லாக் கலவரத்திலும் ஒதுங்கிக் கொள்வார்கள்.

''சாளுக்கியனோ, ஒய்சாளனோ இவர்கள் சன்மானம் வாங்கி வந்து விடுவார்கள். இந்த முறை அந்த வித்தை பலிக்கவில்லை.''

''மதுரைகல்தானிடம் பதினாறுபேர் கும்பலாகப் போய் 'ஜெய விஜயீ பவ' என்று சொல்லியிருக்கிறார்கள். மதுரை கல்தான் நடு மன்றத்தில் அவர்களை நிறுத்தி யானையின் வாலை தீப்பந்தத்தால் கொளுத்தி விட்டான். நெருப்புப்பட்ட யானை பதினாறு பேரையும் மிதித்துக் கொன்றுவிட்டது. கல்தானின் ஆட்கள் 'ஜெய விஜயீபவ' என்று கத்தினார்கள். அதற்குப் பிறகு மதுரையில் ஒரு அந்தணர் கூட இல்லை. எங்கு போனார்கள் என்று கூட தெரியவில்லை. சிதம்பரத்திற்கும் அந்த நிலைமை

வரலாம். தற்போதைக்கு பிரச்சனைகள் அதிகமில்லாத இடம் குமரி முனை அதற்குப் பிறகு கடற்கரையோர தொண்டை மண்டலம்.

"கடற்கரையருகே மிகப் பெரிய பட்டினங்கள் ஏதுமில்லை. மதுரை போலவும் எதுவுமில்லை. வளமான கிராமங்கள் எதுவும் இல்லை. எனவே கடற்கரையோரமாகவே தொண்டை மண்டலம் போவது நல்லது வழியில் தென்பட்ட எல்லா கோயில்களிலும் இங்கு அனுசரிக்கும் முறையையே மேற்கொள்ளச் சொல்லுங்கள்."

"கல்திரை எழுப்பி மூலவரை மறைத்து உற்சவ விக்ரஹத்தை கேணியில் போட்டுவிடச் சொல்லுங்கள். அந்நியர் ஆட்சி அகன்றதும் நாம் கோயில்களை புதுப்பித்துக் கொள்ளலாம்."

"அந்நியர் ஆட்சி அகலுமா நண்பரே..." ஆடிய பொற்பாதம் வேதனையோடு கேட்டான்.

"வெகு நிச்சயம் அகலும் பாலை வனப்பொட்டலாக இருந்தாலும் அவர்கள் தங்கள் ஊரை மிகவும் நேசிக்கிறவர்கள். பெண்டுபிள்ளைவிட்டு கொள்ளையடிக்க" வந்திருக்கிறவர்கள். மறுபடியும் பெண்டுபிள்ளை பார்க்க கொள்ளையடித்த பொருளோடு போய்விடுவார்கள். அதிகாரிகளாக நம்மவர்களை நியமிக்கத்துவங்கி விட்டார்கள்."

"ஆமாம். யவனர்கள் உள்ளே நுழைந்து முப்பத்திரண்டு வருடங்களாகி விட்டன. ஒவ்வொரு அசைவிற்கும் வடக்கேயிருந்து வரும் அவர்களின் அரசர்களின் தூதர்களைக் கண்டு பயப்படவேண்டியிருக்கிறது இங்கே வந்து வெற்றிபெற்ற தளபதிகளை வெறுமே உல்லாசமாக வந்த தூதர்கள் மிரட்டுகிறார்கள். வேரூன்றுவதற்கு முன்பே அவர்களுக்குள் குழப்பம் வந்துவிட்டது. சலிப்பு ஏற்பட்டுவிட்டது. இங்கே நடந்த கொள்ளையில் இந்த



தளபதிகளுக்கு பெரிய பங்கு எதுவுமில்லை. சேர தேசத்து அழகிய பெண்களை தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. எதிர்த்து அரசனிடம் பேசியதற்கு சிலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள், சிலருக்கு வேறு இடங்களில் கொள்ளையடிக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது."

"ஆனால் மதுரையில் அற்புதமான பொக்கிஷங்கள் தங்களை விட்டுப் போய்விட்டது என்பதால், இந்த யவனவீரர்கள் குடித்தும் கவராடியும் கிடைத்த பெண்களோடு இருந்தும் வாழ்கிறார்கள்."

"வந்தவர்கள் கிழவர்களாகி விட்டார்கள். அடுத்த தலைமுறை இளைஞர்களை வீணே அலட்டிக் கொள்ளாதே என்று அறிவுறுத்துகிறார்கள். இதுவரை நடந்த மோசமான பாதிப்பு இனி ஏற்பட வழியில்லை. இருந்தாலும் நாம் கவனமாக இருக்கவேண்டும் மறுபடி சொல்கிறேன் எல்லாக் கோயிலிலும் கல்திரை முக்கியம்."

"நிச்சயம் சொல்கிறேன்" ஆடிய பொற்பாதம் கை கூப்பினான்.

"தில்லைவாழ் அந்தணர்கள் ஒரு கைச்சாற்று தரவேண்டும் நான் வெறும் மாயிலட்டி வணிகன். என் பேச்சு அந்தணர் சபை ஏறுமா என்று தெரியாது. தில்லைவாழ் அந்தணர்கள் இப்படி செய்திருக்கிறார்களென்று தெரிந்தால் மற்றவர்களும் முனைவார்கள். நான் வரும் வழியில்கூட யவனர்களை கூண்டோடு அழிப்பேன் என்று ஒரு வைத்தியக்காரன் சபதம் செய்தான்."

தில்லையில் வசிக்கும் அந்தணர்கள் எல்லாக் கோயில்களுக்கும் பொது வேண்டுகோளாய் ஒரு ஓலை எழுதி ஆடியபொற்பாதத்திடம் கொடுத்தார்கள்.

ஆடியபொற்பாதம் கையில் வாங்கிக் கொண்டு கண்ணில் ஒற்றிக்கொண்டான்.

"தில்லை மூவாயிரவர்கள் சைவர்களாயிற்றே... அவர்கள் பேச்சை நாம் கேட்க வேண்டுமா வைஷ்ணவர்கள் முகம் திருப்பிக் கொள்ளலாம்" ஆடியபொற்பாதம் கவலையோடு பேசினான்.

"பாண்டியர்கள் வைஷ்ணவ விரும்பிகள் அவர்கள் கோயிலைப் பாதுகாப்பார்கள் என்று மெத்தனமாக இருக்க வேண்டாம் வைஷ்ணவர்களுக்கும் இதமாக எடுத்துச் சொல்லுங்கள்."

"சோழர்கள் சைவத்தை ஆதரித்தார்கள். பாண்டியர்கள் வைணவத்தை ஆதரித்தார்கள்."

"இதுவரை போட்டுக் கொண்டிருந்த சண்டைகள் போதும். இங்கு எல்லாம் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன. யவனர்கள் உள்ளேவரக் காரணமே நமது ஒற்றுமையின்மைதான். நமக்குள் ஒற்றுமை முக்கியமென்று சொல்லுங்கள்."

ஆடியபொற்பாதம் தில்லையம்பலத்தை வணங்கி கோயிலை சுற்றிக்கொண்டு வடகிழக்கு நோக்கி நகர்ந்தான்.

வழியே பல்வேறு கோயில்களில் தில்லை அந்தணர்கள் சொன்னதை விளக்கிச் சொன்னான்.

"என்ன கல்திரை..." ஒரு ஊரில் அலுத்துக் கொண்டார்கள். யவனர்களை நன்கு புரிந்து கொள்ளாமல் அலட்டினார்கள்.

"இங்கே வந்திருக்கிற அந்நியர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியவில்லை. அவன் பல நதி நீர்கள் பார்த்தவன் பல நாகரீகங்களைக் கண்டவன், பல்லாயிரக் கணக்கான கல்தொலைவில் குளிர் வெப்பம் பார்க்காமல் பயணம் செய்தவன் அசைக்க முடியாத இறை நம்பிக்கையுடையவன், வேறு எந்த மதத்தையும் வேறு மதத்தின் எந்தக் கொள்கையையும் ஏற்றுக் கொள்ள மறுப்பவன்.



உருவ வழிபாட்டை மிகக்கடுமையாக எதிர்க்கிறார்கள் அலுத்துக் கொண்டவனுக்கு ஆடியபொற்பாதம் விளக்கிச் சொன்னான்.

"உருவ வழிபாடு அத்தனை இழிவானதா?" வேறு ஒருவர் கேட்டார்.

"உருவமாகதங்களைகொண்டுள்ளவரை அருவத்தைவழிபட முடியாது அதேதனாலொரு அந்தணர்விளக்கம்தந்தார்."

"ஆடியபொற்பாதம் என்று கூப்பிட்டால் உங்களுக்கு உங்கள் முகம் ஞாபகம் வருகிறதல்லவா அப்பொழுது நீங்கள் உங்களை உருவமாகத்தான் கொண்டிருக்கிறீர்கள். ஆத்மனாக இல்லை. உங்களை நீங்கள் உருவமாகக் கொண்டிருக்கிற பொழுது கடவுள் என்பதை அருவமாக கற்பிதம் செய்து கொள்ள முடியாது. ஏதேனும் ஒரு லிங்கத்தை ஒரு அடையாளத்தை கடவுளென்று மனம் பற்றிக் கொள்ளும்."

"நாம் சற்று மேலே நகர்ந்து அவர்களை கடவுளை மனித ரூபமாக்கி, கதைகள் புனைந்து அவருக்கு கல்யாண குணங்களை ஏற்படுத்திக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்

"கடவுள் அருவமென்று நமக்குத் தெரியும். நமது வேதங்கள் அப்படித்தான் சொல்லுகின்றன. உருவமும் உண்டு என்று நமது மறைகள் சொல்லுகின்றன. அவன் நமக்காக உருவம் கொண்டான். நம்மை கரையேற்ற ரூபமெடுத்தான் என்று பேசுகின்றன.

"கடவுள் ரூபமா அரூபமா? கடவுளுக்கு உருவம் உண்டா இல்லையா?" ஆடியபொற்பாதம் கேட்டான்.

"இரண்டும்தான்"

"அதெப்படி ஒரே விஷயத்திற்கு இரண்டு குணம் இருக்க முடியும்"

''நீரில் நெருப்பிருக்கிறது நெருப்பில் நீர் இருக்கிறது''

''புரிகிறது உருவம் வைத்து வழிபடுவதற்கு ஒரு நல்ல காரணம் சொல்லுங்கள்.''

''ஒரு பெண் குழந்தை ஒரு மரபொம்மையை தன்னுடைய குழந்தை என்று கொண்டாடி அதற்கு சட்டை வைத்து திலகமிட்டு பூச்சூட்டி மகிழ்கிறது. அதற்கு பொம்மை மிக முக்கியம். அவசியம் வேண்டும். சற்று வயது வந்தவுடன் தான் விளையாடிய பொம்மையை தன் தங்கைக்கோ தம்பிக்கோ கொடுத்துவிட்டு தன்னினும் சிறிய அந்த குழந்தைகளுக்கு எப்படிப் பொட்டு வைப்பது எப்படி உடை அணிவித்து விளையாடுவது என்று சொல்லித்தருகிறது. இங்கு பொம்மை முக்கியமாகவுமில்லை, முக்கியமில்லாமலும் இல்லை.''

''அந்தப் பெண் குழந்தைக்கு பருவம் வந்தவுடன் திருமணம் நடந்து புருஷனுடன் கூடி அவளே உண்மையான தாயாகிற பொழுது உயிருள்ள குழந்தையைப் பெற்ற பிறகு பொம்மை அவசியமில்லாமல் போகிறது. இப்போது பொம்மை மீது விருப்பமில்லை வெறுப்புமில்லை. அவளுக்கு பொம்மை தேவையுமில்லை.''

''இந்த மரபொம்மைக்கா தாயாக இருந்தோம். இந்த மரபொம்மையா குழந்தை என்று நினைத்தோம். அவளுக்கு சிரிப்பு வருகிறது. ஆனால், மரபொம்மையை தன் மகவாக நினைத்துக் கொண்டிருக்கிற இன்னொரு குழந்தையைப் பார்த்தபோது எதிர்ப்பேதுமில்லை, மாறாய் இது நியாயம் தானே என்கிற அன்பு பொங்குகிறது. ஆதரவு பெருகுகிறது.''

''இதுதான் உருவ வழிபாட்டின் சூட்சமம். எல்லா பக்தர்களும் சாதாரண பெண்குழந்தைதான். பேதமை நிறைந்த பெண் குழந்தைதான். உன்னுடைய மனக் குழந்தை வளர்ந்து பெரியவளாகி இறைத்தன்மையோடு உனக்குத் திருமணம் நடக்க அந்த இறைத் தன்மைக்கும்



உன்மனசுக்கும் கூடல்ஏற்பட அங்கே பிறக்கின்ற குழந்தை தான் ஞானம்''

''உனக்கு ஞானம் பிறந்துவிட்டால், கோவில் குளம், பூஜை ஹோமம், பாடல் ஆடல் எதுவும் முக்கியமில்லை. தொழுகை அவசியமில்லை. ஆச்சார்யர்களும் வைதீகர்களும், பூசாரிகளும் தேவையேயில்லை.''

''உருவ வழிபாடு நம்மை உருவமற்ற இடத்திற்கு அழைத்துச் செல்லுகிறது. இந்த வழிதான் உன்னதம் எடுத்தவுடன் உருவமற்ற வீரியத்தை எவரும் உணரமுடியாது. அது கடவுள் தன்மை பற்றி குழப்பமான இடத்திற்கு கொண்டு போய்ச் சேர்க்கும்.''

''இந்த பரத கண்ட நாகரீகத்திற்கு இன்னொருவர் சொல்லிக் கொடுத்து அறிய வேண்டிய தத்துவ விஷயம் எதுவுமில்லை. தத்துவத்தில் தெளிந்த தேசமிது. இதில் குறை சொல்ல எதுவுமேயில்லை.''

''ஆனால் நாம் ஏன் தோற்றுப் போனோம் ஐயன்? ஏன் அந்நியரிடம் அடிபட்டு அழிந்து போகிறோம்?''

அந்த அந்தணர் அதற்கு பதில் சொன்னார். ''ஒரு நாகரீகம் உச்சக்கட்டத்தை எட்டி விட்டது. இனி சரிவு தான். மிகத்தொன்மையான மதம். அதன் தொன்மை காரணமாகவே கலகலக்க ஆரம்பிக்கிறது. வீடுகள் பாழடைந்தால் பாம்புகள் வருவது இயல்பு. மறுபடி சரி செய்ய வேண்டும். அஸ்திவாரத்தை கலைக்காமல் வேறு கட்டிடம் விரைவில் எழுப்பப்பட வேண்டும்.

''விரைவில் என்பது எவ்வளவு விரைவில் ஐயன்...'' ஆடிய பொற்பாதம் ஆவலோடு கேட்டான்.

அந்தணர் கண் மூடிச்சிரித்தார். ''குறைந்தபட்சம் எழுநூறு ஆண்டுகள்.''

''ஐயன்...'' ஆடிய பொற்பாதம் திகைத்தான்.

"ஆமாம் தம்பி, சில மாறுதல்கள் நிகழ இவ்வளவு காலம் தேவைப்படுகிறது"

"ஐயன், அதுவரை ...?"

"நமக்கு இருண்ட காலம் தான். நாம் செய்த பல தவறுகளுக்கு நம் மக்களுக்கு நாம் இழைத்த கொடுமைகளுக்கு ஜாதிபேதம் காட்டிய அற்பத்தனங்களுக்கு தீண்டாமை சொல்லி விரட்டிய பாவத்திற்கு பெண்களை வதைத்த கொடுமைக்கு, நமக்கு இப்போது கிடைத்த அந்நியர் வரவு என்கிற தண்டனையை ஏற்றாக வேண்டும். வேறு வழியில்லை. இது இறைவன் விதித்த தண்டனை இயற்கை அனுப்பிய கட்டளை."

ஆடிய பொற்பாதம் தளர்ந்து அந்த அந்தணரைப் பிரிந்து மிகச் சோகமாய் நடந்தான். அவனுக்கு துணையாய் வந்த அந்தணர் சொந்த ஊர் திரும்பினார்.

"கல்திரை எழுப்பினால் முடிந்துவிட்டதா? சகலத்தையும் காப்பாற்றி விடலாமா? ஒரு முட்டாள் பார்ப்பனம் சொன்னதை என்னிடம் வந்து சொல்கிறாயா? நான் ஒரு கதை சொல்கிறேன் கேள், கல்திரை எழுப்பிய கோயிலில் யவனர்கள் உள்ளே புகுந்த கதை சொல்கிறேன் கேள்." இரும்பு போல உடம்பு கொண்ட ஒரு அகமுடையார் வீரன் கண்ணில் ஜலம் தளும்பப் பேசினான்

"இரண்டாயிரம் குதிரை வீரர்களுடன் யவனர்படை கோயிலில் நுழைந்தது. அந்த யவனர் படையில் தமிழர்களும் இருந்தார்கள்".

"எங்கே இது நடந்தது?" ஆடியபொற்பாதம் மறித்துக் கேட்டான்."

"வேலூருக்கருகே வெட்டுவாளம் என்று கிராமம். அந்த கிராமத்திற்கருகே பள்ளி கொண்ட புரம் என்று ஒரு சிறிய இடம். அங்கே ஸ்ரீரங்கநாதர் கோயில் இருக்



கிறது. கோயில் மிகச்சிறப்பு வாய்ந்தது. மிகத் தொன்மையானது கோயிலில் கல்திரை எழுப்பப்பட்டிருந்தது.

"அதாவது இரண்டாள் உயரத்திற்கு கல்திரை எழுப்பி மேற் கூரையிலிருந்து ஒரு முழங்கை நீளத்திற்கு இடைவெளி விட்டிருந்தது. கருவறையில் காற்று போவதற்கும் தீபம் எரிவதற்கும் அந்த வசதி செய்யப்பட்டிருந்தது."

"யவனனுக்கு கல்திரை பற்றி யாரோ சொல்லியிருக்கக் கூடும். என்ன...இது என்ன? என்று யவனர் கேட்க ஒரு ஆள் இறந்து போய் விட்டான். அவனை புதைத்திருக்கிறோம் என்று ஊரார் பதில் சொன்னார்கள். யவன தளபதி தானே சோதித்துப் பார்க்க விரும்பினான். ஏணி போட்டு ஏறி உள்ளே பார்த்தான்.

"உள்ளே முறைபோட்டு காவலிருந்த அகமுடைய வீரன் யவனன் எட்டிப்பார்ப்பது தெரிந்து, விளக்குகளை அணைத்துவிட்டு, கும்மிருட்டாகி, படுத்துக் கொண்டான்."

"நீண்டவேல் கம்பை எடுத்து கலத்தில் படுத்தபடியே யவனன் குத்திப் பார்க்க, பலமுறை அந்த அகமுடைய வீரனுடைய உடம்பு குத்தப்பட்டது. அந்த வீரன் கத்தவில்லை, அசையவில்லை. அத்தனை குத்துக்களையும் வாங்கி இறந்து போனான். அவன் வலியில் கதறியிருந்தால் கல்திரை உடைக்கப்பட்டிருக்கும். ஏகப்பட்ட நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கும். அங்கே ரங்கநாதர் கல்திரையில் காப்பாற்றப்பட வில்லை. ஒரு அகமுடையாரால் காப்பாற்றப்பட்டார்."

"ஆடியபொற்பாதம் கை உயர்த்தி, அந்த வீரன் பேச்சை நிறுத்தினான்".

கதை சொன்ன வீரனோடு ஒரு குளத்திற்குப் போய் கரையில் மண்ணால் சிவலிங்கம் செய்து வாய்விட்டு பலங்

பதிகங்கள் பாடி கைகூப்பி சிவபுராணம் ஓதி அந்த சிவலிங்கத்திற்கு வில்வத்தால் பூஜை செய்து இறந்த வீரனின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு படையலிட்டு நிவேதனம் செய்தான்.

''ஐயா ஆடியபொற்பாதம் வாழ்க்கை விசித்திரமாக இருக்கிறது. அந்த பள்ளிகொண்ட பெருமானைக்காத்த வீரன் பிறப்பால் சைவன். எந்தக் கோவிலாக இருந்தாலென்ன...அதைக் காப்பது நம் கடமை என்று காவலுக்குப் போனவன். இன்று அவன் இறந்து பத்தாம் நாள். மார்க்கண்டேய முனிவரைப் போல காட்சியளிக்கின்ற நீங்கள் இந்த தியாகியின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு இங்கு மிக விமரிசையாய் படையலிட்டு விட்டீர்கள். அவன் மனக்கேதம் தீர்த்து கரையேற்றி விட்டீர்கள்.

''இந்த அன்பு. இந்த அக்கறை நம் மதத்தை நமக்கு மீட்டுத் தரும். நம் தேசத்தை அந்நியரிடமிருந்து காப்பற்றித் தரும்.'' அவன் ஆடிய பொற் பாதத்தை வணங்கினான்.

தொடர்ந்து பயணப்பட்ட ஆடியபொற்பாதம் மனது இருண்டு கிடந்தது.

## 7

''கல்திரையா...? திருவிடந்தையிலா...? ஒரு நாளும் நடக்காது. நான் வராகரை தரிசிக்காமல் உண்டதேயில்லை நம்முடைய பெருமானுக்குப் பெயர் நித்ய கல்யாணப் பெருமான். தினம் தினம் இவருக்கு திருமணம் நடக்க வேண்டும். தினம் தினம் அக்கார வடிசல் நைவேத்தியமாக வேண்டும். தினம் தினம் தீபதூப மரியாதைகள் நடக்க வேண்டும்.



''யவனன் இந்தப் பக்கம் வரமாட்டான். அப்படியே வந்தாலும் முன்பு போல் தாக்குவதில்லை. எதிர்த்தால் தண்டிக்கிறானே தவிர, எதிர்க்காதவரை ஹிம்ஸிப்பதில்லை. கொள்ளையடித்த தலைமுறை வடக்கே போய் விட்டது. இப்போதுள்ள யவனர் தலைமுறை அரசு நடத்தவும், ஆட்சி செய்யவும் ஆசைப்படுகிறார்கள்.''

''அதிகம் யாரையும் வதைத்துக் கொள்ளாமல் அரவணைத்துப் போக முயற்சிக்கிறார்கள். வரிவசூலில் கூட கெடுபிடி அதிகமில்லை. எனவே கல்திரை வேண்டாம்'' ஊரார் என்கிற வேளாளர்கள் கூவினார்கள்.

அவர்களை ப்ரம்மசபை சமாதானப் படுத்தியது.

''ஐயா நமது வராகருக்கு நிதமும் கல்யாணம் நடக்கும் கல்திரை எழுப்பி கோவிலை பாழுடைய செய்யப்போவதில்லை. வேறு ஒரு இடத்தில் வரலக்ஷ்மி சமேத வராகரை ஸ்தாபிதம் செய்யப் போகிறோம் அங்கு அவருக்கு நித்யப்படி பூஜை நடக்கும்.''

''இது ஏமாற்று வேலை. மூலவருக்கு நித்ய பூஜை செய்தேயாக வேண்டும். இல்லையெனில் ஊருக்கு கெடுதல் வரும். யவனரை வழிமடக்கி இங்கே கொண்டு வரும். ஊர் ரணகளமாகும். ஒரு நாள் கூட பூஜை நிற்கக் கூடாது.''

''நிற்காமல் நடக்கவேண்டும் என்றுதானே இந்தஊர் மொத்தமும் தேவதானமாக தரப்பட்டிருக்கிறது. இந்த ஊரில் விளையும் ஒவ்வொரு நெல்மணியும் வராகருக்குத்தானே அர்ப்பணிக்கப் பட்டிருக்கிறது. வராகருக்கு கல்திரை போட்டுவிட்டு, நெற்குவியலை வீட்டுக்கு எடுத்துப் போகலாம் என்று நினைக்கிறீர்களா? மறுபடி சொல்கிறேன். நம் ஊர் ஒரு தேவதான ஊர், கோவிலால் கோவிலுக்காக வாழும் ஊர். கல்திரை வேறு எங்கும் எழுப்பப்படலாம். இங்கல்ல'' வேளாளர்கள் வேகமாய் பேசினார்கள்.

"சிலைக்கு கல்திரை எழுப்பப்பட்டால் நகைகளை என்ன செய்வதாக உத்தேசம்? அது யார் வசமிருக்கும்? எவ்வளவு காலம்? பதினாறு முழக்கை நீளமுள்ள காசு மாலையை ஓரடி உயரமுள்ள புதிய சிலைக்கு எப்படிப் போடுவீர்கள்? வைரப் பதக்கத்தை யாருக்குப் பூட்டுவீர்கள்? வராகரே ஒரு அடியென்றால் தாயார் உயர மென்ன? வராகருக்கு வெள்ளிக் கவசமும், தாயாருக்கு தங்கக் கவசமும் செய்து வைத்திருக்கிறோமே. கவசத்தின் மார்பு முழுக்க கற்களால் இழைத்திருக்கிறோமே... அதை யார் வைத்துக்கொள்வார்?"

"ஐயன்மீர்... இறைவனுக்குப் பூட்டப்படாத நகைகள் கணக்கில் வராமல் போய்விடும். அடுத்த தலைமுறையில் மாயமாய் மறைந்து போய்விடும்."

"அது மட்டுமல்ல... வராகருக்கு படியளக்க வேண்டுமென்றே நான் நிலம் உழுகிறேன். அதற்காகவே பயிர் செய்கிறேன். அதற்காகவே கரும்பு நடுகிறேன். முன்னே ஒரு பொம்மையை வைத்து நாம் தின்னவா அக்கார வடிசல்...? எந்த ஊரில் பெருமாள் தினம் தினம் எனக்கு சேவை சாதிப்பாரோ, அங்கே நான் குடிபெயர்ந்து கொள்கிறேன். கல்திரை வைக்க முதல்கல் நீங்கள் எடுக்கும்போது, என் குடும்பம் தெருவில் இறங்கும். இந்த ஊர் எனக்கு அந்நியமாகும்." ஒரு வேளாளன் உரக்கக் கூவி பூமியிலடித்து சத்தியம் செய்தான்.

அவன் பேச்சுக்கு எதிர்பேச்சு பேசப்பட்டது.

"யவனர்கள் படையெடுத்துவந்தால் கோயில் மட்டும் நாசமல்ல. நம் ஊரே சிதிலமாகும். எல்லாம் அழிந்து போகும். யவனர்களை ஊருக்கு வரவழைப்பது கோயிலும் அதற்குள் இருக்கும் செல்வமும்தான். யவனர்கள் ஆட்களை அனுப்பிப் பார்ப்பார்கள். ரகசியமாய் விசாரிப்பார்கள். நாள் தவறாமல் கல்யாணம் நடக்கின்ற கோயிலென்றால் தினமும் ஒரு தடா அக்காரவடிசல்



நைவேத்தியம் நடக்கிறதென்றால், அந்தக் கோயில் திமிருடையதாகத்தான் இருக்கும் என்று கணக்குப் போடுவார்கள்."

"ஊர் தேவதானமாகக் கொடுக்கப்பட்டது. முந்நூறு வருடங்களுக்கு மேலாக தேவதானமாக இருந்து வந்திருக்கிற ஊர், அப்படியானால் சொத்து எவ்வளவு சேர்ந்திருக்கும் என்று கணக்குப் போடுவார்கள்."

"யவனனுக்கு கணக்குப் போடத் தெரியாவிட்டாலும், நம்மவர்கள் சொல்லித் தருவார்கள்."

"அதைவிட முக்கியம் ஒரு மூர்த்தி. பூஜையில்லாமல் கூட இருக்கலாம் சூனியமாகிவிடக் கூடாது. வராகர் சுதைச் சிற்பம் ஆயிரங்காலத்து சுதைச்சிற்பம். உப்புக் காற்றுக்கு பல இடங்களில் பொரிந்து போயிருக்கிறது. தைல பலத்தில் இருக்கிறது. ஒரு அடி கூட தாங்காது."

"பல்லாண்டு காலமாக நாம் காப்பாற்றிக் கொண்டு வரும் இந்த மூர்த்தியை தொடர்ந்து காப்பாற்றியாக வேண்டும். அதைக் காப்பாற்ற எது வேண்டுமானாலும் செய்யவேண்டும்."

"அந்த வேளாளர் இந்த கிராமத்தை விட்டு போவதென்றால் போய்க் கொள்ளட்டும். மனிதர் முக்கியமில்லை, சடங்கு முக்கியமில்லை, சம்பிரதாயம் முக்கியமில்லை. ஆச்சார அனுஷ்டானங்கள் முக்கியமில்லை. இந்த மூர்த்தி முக்கியம். பல பேர் தொட்டுத் தடவி இடைவிடாத தங்கள் மந்திர உச்சரிப்பால், இதை வலுவாக்கியிருக்கிறார்கள். அதைக் காப்பாற்ற வேண்டியது முக்கியம்."

"வலுவுள்ளது தன்னை காப்பாற்றிக் கொள்ளட்டுமே." ஒருவர் பேசினார்.

"ஆம். அது தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும். நீங்கள் உங்கள் சுத்தியால் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளவில்லையா? அதுபோல, என்னைக் கருவியாக்கி, அது தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்." நரசிம்மபட்டர் சொன்னார்.

"கடைசியாக என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?" ஒரு அந்தணர் கேட்டார்.

"கல்திரை எழுப்பப்படும். இது உறுதி."

"திருவிடந்தையென்ன... நரசிம்மபட்டரின் சர்வாதிகாரமான இடமா? குடவோலை முறைக்கு ஏற்பாடு செய்யுங்கள்."

"இல்லை எந்த முறைக்கும் ஏற்பாடு செய்ய முடியாது. நீங்கள் என்னை சர்வாதிகாரி என்று அழைத்தாலும் பரவாயில்லை. இது அவசரகாலம். நின்று நிதானித்துப் பேச முடியாது. நூறுபேரை கலந்து முடிவு செய்ய முடியாது. இன்று மாலை குருஹோரையில் கல்திரைக்கு முதல் கல் வைக்கப்படும். என் வீட்டுக் கொல்லையில் இருக்கிற, முழங்கை அகலமுள்ள சொறிகற்கள் பெயர்த்து எடுத்து வரப்பட்டு கல்திரை மூர்த்தியைச் சுற்றி எழுப்பப்படும். விருப்பமுள்ளோர் வேலைக்கு வரலாம்." நரசிம்மபட்டர் ஆணையிட்டார்.

வாய்க்கு வந்தபடி பேசி கிராமம் கலைந்தது.

சிலர் ஆதரித்தனர் சிலர் எதிர்த்தனர். ஆனால் பலபேருக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. திகைப்பும் வேதனையுமாய் இல்லம் திரும்பினார்கள்.

நரசிம்மபட்டர் இருபது ஆட்களை வைத்து, தன் வீட்டுக் கொல்லைப் புறத்திலிருந்த பருமனான சொறிகல்லை எடுத்துவந்து கோயில் மண்டபத்தில் அடுக்கினார். சாந்து குழைக்க ஏற்பாடு செய்தார்.



சுவர் எழுப்புவதற்காக அதிகம் அதிர்ச்சியில்லாமல் கருவறை விளிம்பில் அஸ்திவாரம் தோண்டச் செய்தார். தைலம் மினுக்கும் வராகர் மேனியில் சில நகைகளை மட்டும் வைத்து விட்டு மற்றவர்களை ஏரப் பெட்டியில் போட்டு பூட்டினார்.

பெட்டி அவர் வீட்டிற்குப் போயிற்று.

இதையனைத்தையும் காளிங்கராயனின் தனிப்படை ஆட்கள் அங்கங்கே நின்று கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

பத்து மணங்கு பொன் நகைகள் இருக்கும் பெட்டியை நடுவே கோல் கொடுத்து நான்குபேர் தூக்கிப்போக வேண்டியிருக்கிறது. இது தவிர, ஒருமணங்கு நகை வராகர் மேலே இருக்கும். இதைத்தவிர காணிக்கையாய் கொடுத்த தங்கக் காசுகளை உருக்கி செங்கல் செங்கல்லாக பதுக்கி வைத்திருக்கிறார்களாம். பஞ்சகாலங்களில் மட்டுமே உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று கட்டளையாம்.

ஒரு நகரத்தின் செழிப்பு இந்த சிறு கிராமத்தில் இருக்கிறது. அந்தணர்களும் வேளாளர்களும் கைகோர்த்து இந்த கிராமத்தை உயரத்தூக்கி விட்டார்கள். பரதவர்களுக்குக்கூட தனி கற்கோயில் இருக்கிறது.

ஏரியின் கரைகளை ஊர்காசில் கெட்டிப்படுத்தியிருக்கிறார்கள். கடல்மல்லையிலிருந்து கற்பலகை கொண்டு வந்து தரைமுழுவதும் கெட்டிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த பத்து மணங்கு பொன்னையும் கைப்பற்றினால் தெற்கே போய் ஒரு குறுநில மன்னனாக உட்கார்ந்து கொள்ள முடியும். ஒரு படை திரட்டினால் இன்னும் பத்துக் கோயில்களை நிச்சயமாய் கொள்ளையடிக்க முடியும்.

27911
4347 106

ஆனால் இந்த ஊர் கட்டுக்கோப்பாக இருக்கிறது. வேளாளர்கள் பார்ப்பனர்களுக்கு கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

பார்ப்பன சர்வாதிகாரம் நடக்கிறது. அவர்கள் ஒழுக்கமாக இருப்பதால் இந்த சர்வாதிகாரம் செல்லுபடியாகிறது. அவர்கள் புத்திசாலிகளாக இருப்பதால் எதிராளியின் எந்த தப்பிரமும் எடுபடாமல் போகிறது.

இந்த பார்ப்பனர்களுக்கும், வேளாளர்களும் சண்டை நடந்தால்தான் நல்லது. ஊர் இரண்டுபட்டால்தான் கூத்தாடிக்கும் கொண்டாட்டம். கொன்னையனுக்கும் கொண்டாட்டம்.

குணசீலனும் காளிங்கராயனும் தாழ்ந்தகுரலில் பேசிக் கொண்டார்கள்.

ஊருக்கு வெகு தொலைவே மலை கண்ணுக்கெட்டிய வரை பரந்த சமவெளி. பத்து கல் தொலைவில் ஒரு குதிரை வந்தாலும் மரம் ஏறி பார்த்துவிடுவார்கள். நகைகளை அப்புறப்படுத்தி விடுவார்கள். எந்த ஆபத்துமில்லாத நேரத்தில்கூட எல்லைக் காவல் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்த ஊர் ஒற்றுமையை குலைத்தால் தான் நமக்கு உபயோகமாக இருக்கும்.

அவர்கள் மல்லாக்க படுத்துக்கொண்டு கோயில் பற்றி யோசித்தார்கள்.

ஊர் முழுவதும் வெவ்வேறு கோணத்தில் அலை மோதிக் கொண்டிருக்க நாச்சி என்கிற அந்த தேவதாசி மனம் வெதும்பினாள்

எவ்வளவு நாள் கல்திரை? கல்திரையில் இடைவெளி விடுவார்களா? ஊர்ந்துபோய் சாமி கும்பிடலாமா? சந்திர சூரியர்கள் இருக்கும் வரை நிவேதனம் நடத்து



வோம் என்று சத்தியம் செய்திருக்கிறோமே? சத்தியத்தை மீறும்படி ஆகிவிடுமா? சரி. சத்தியத்தை மீறுவது சரியா?

தினமும் வராகர் முன்பு ஆடுவதற்குத்தானே. எனக்கு நிலம் தேவதானமாக தரப்பட்டது. இப்போது யார் முன்பு நடனமாடுவேன்? அப்படி நடனமாடாமல் எப்படி உணவு சாப்பிடுவேன்?

யவனர்கள் வரமாட்டார்கள் என்றுதான் தோன்றுகிறது. வந்தால் நகைகளைக் கொடுத்து விடுவோம். மூர்த்தியை எடுத்து விடாதே என்று கெஞ்சுவோம்.

வராகர் நெஞ்சு நிறைய பூமாலை நான் கட்டித்தருகிறேன். அந்த காளிங்கராயன் ஊரில் காலடி எடுத்து வைத்ததிலிருந்து இப்படியொரு குழப்பம் ஏற்பட்டு விட்டது. அவன் ஆட்கள் சொல்லுகிற கதையை கேட்கக் கேட்க, மயக்கம் வருகிறது.

மதுரை ஜனங்கள் எப்படியெல்லாம் வேதனைப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்க துக்கம் பொங்குகிறது. இத்தனை வேதனையை பார்த்துக்கொண்டு இறைவன் ஏன் ஏதும் செய்யாதிருக்கிறான் என்று புரியவில்லை,

இந்த திருவிடந்தையை என்ன செய்ய நினைத்திருக்கிறான் என்று கேட்கத் தோன்றுகிறது.

திருமங்கையாழ்வார் இந்த திருவிடந்தை வந்து பத்தும் பாட்டுகள் எழுதியிருக்கிறார். தன்னை செவிலித் தாயாய் உருவகப் படுத்திக் கொண்டு, தனக்கு மகள் இருப்பதுபோல கற்பனை செய்து திரு இட வெந்தை எந்தை பிரானே...என்ன செய்ய நினைத்திருக்கிறாய் என் மகளை அவள் உன்மீது மாறாத காதல் கொண்டிருக்கிறாள். உன்னையே நினைத்து உருகுகிறாள்' என்று ஏங்கி எழுதியிருக்கிறார்.

இங்கே மகள் என்பது மனம். தாய் என்பது புத்தி மனம் படுகிற வேதனையை புத்தி விலகிப்பார்த்து புலம்பு

கிறது இன்னும் இறைவன் உன்னை அணைத்து அடக்க வில்லையே என்று வருத்தப்படுகிறது.

இவ்வளவு அற்புதமாக ஊர். இவ்வளவு பாடல்கள் பாடப்பெற்ற ஊர். இத்தனை கட்டுக்கோப்பான ஊர் மிக மிக வளமான ஊர். வற்றாத நீர் நிலைகளுடைய ஊர். இந்த ஊரை என்ன செய்ய நினைத்திருக்கிறாய் திரு இட வெந்தை எந்தை பிரானே...

நாச்சி எழுந்து கோயில் நோக்கிப் போனாள்.

இடுப்பு உயர கல்திரை எழுந்து விட்டிருந்தது.

வராகரை நோக்கி கை கூப்பி அழுதாள்.

நினைவு தெரிந்த நாள் முதல் உன்னையே சுற்றி வந்தேனே... பருவம் எய்தினால் உன்னை மூன்று நாட்கள் பார்க்க முடியாது. என்னை பருவமே அடையாமல் செய் என்று வேண்டினேனே... என் கோரிக்கையை மறுத்து என்னை பருவமடையச் செய்தாய். எப்போது மூன்று நாட்களல்ல முற்றிலும் பார்க்க முடியாதபடி மூடிக்கொள்கிறாயே...

இந்த ஊர் தன்னையும் காப்பாற்ற முடியாமல், உன்னையும் காப்பாற்ற முடியாமல் பேரவஸ்தை பட்டுக் கொண்டிருக்கிறது எங்களை என்ன செய்ய நினைத்திருக்கிறாய் எம் பிரானே... கண்மூடி கைகூப்பி நின்றாள்.

காளிங்கராயன் அருகே வந்து மெல்ல கனைத்தான்

''உன் துக்கம் புரிகிறதம்மா. கவலைப்படாதே. வேலையைவிட்டு எடுத்து விடுவார்களோ என்றுதானே பயப்படுகிறாய் கோயிலே இல்லை. தாஸி மடம் எதற்கு என்று கேட்டுவிடுவார்களோ என்றுதானே அச்சப்படுகிறாய்.

இப்பொழுதெல்லாம் தாஸிகள் நல்ல பிழைப்பு தேடி நகரத்திற்குப் போய்விடுகிறார்கள் பெரிய வீடு



களில் தங்கி பிரபுக்கள் முன்பு நடனமாடுகிறார்கள், படைவீரர்களிடம் ஏகப்பட்ட காசு போட்டி போட்டுக் கொண்டு காசை வீசியெறிகிறார்கள். என்ன... நீ கொஞ்சம் அனுசரணையாக நடந்துகொள்ள வேண்டும் யவனர்கள் உன் மீது பிரியம் வைத்துவிட்டால் அந்த நகரத்தின் முக்கிய அதிகாரி நீதான்.

எனக்குத் தெரிந்து மதுரையில் நீதி மன்றமே தாஸி வீட்டில்தான் நடக்கிறது. அவள் மன்னித்தால் மன்னித்து விடுகிறார்கள் அவள் முறைத்தால் கூடுதல் தண்டனை கொடுக்கிறார்கள்

எப்போதெல்லாம் வீரர்கள் ஆட்சி செய்கிறார்களோ அப்போதெல்லாம் தாஸிகளுக்குத் தான் மரியாதை எங்கெல்லாம் சர்வாதிகாரம் நடக்கிறதோ அங்கெல்லாம் தாஸிகளுக்கு கொண்டாட்டம் என்னோடு தென் திசைக்கு வந்துவிடுகிறாயா?''

''இல்லை நான் திருவிடந்தை எம்மானுக்கு ஆட்பட்டவள்.''

''யாரது எம்மான்? நரசிம்மபட்டரா?''

''இல்லை. நான் இவரைச் சொன்னேன்.''

''இது கல் சுவர். உன்னை சந்தோஷப்படுத்துவது யார்? யாருக்கு இணங்கி நீ வாழ்கிறாய்?''

''எந்த மனிதருக்கும் நான் இணங்கியதில்லை.''

''வளமான வாலிபத்தை விரயம் செய்து விட்டாயே இப்போதும் மோசமில்லை. உடனடியாக இருநூறு பொன் தருகிறேன். இன்னும் இரண்டு நாளுக்குள் என்னூறு பொன் தருகிறேன் என்னோடு இருந்து விடு என் தனிப்படைக்கு பாட்டுப்பாடி அபிநயம் பிடித்து வெற்றிலை கொடுத்து விளையமாய் நடந்துகொள். மிகப் பெரிய பங்கு ஒன்று உனக்குத்தர ஏற்பாடு செய்கிறேன்.''

''எதிலிருந்து பங்கு?''

''இந்த ஊர் தரும் பொன்னிலிருந்துதான்.''

''அது அரசருக்குத் தரும் பொன் இல்லையா? அது அரசருக்கு தரும் பொன்தான். இப்பொழுது எடுத்துக் கொண்டு பின்னால் கொடுத்துவிடலாம்.''

எல்லோருக்கும் உணவு பரிமாறி நிமிர்ந்து ஆயிரவன் மாணிக்கம் நாச்சியின் தாயார் 'கோவிந்தா கோவிந்தா' என்று கூவினாள். உணவுக்கெதிரே உட்கார்ந்திருந்த வீரர்களும் அதே விதமாய் கூவினார்கள். சாப்பிட உணவில் கை வைத்தார்கள். ஆயிரவன் மாணிக்கம் மெல்ல கையைத் தட்டினாள். சோற்றில் கை வைத்த வீரர்கள் நிமிர்ந்து பார்த்தார்கள். ''ஒருவேளை ஒரே ஒரு வேளை எங்களூர் கோயிலில் உணவு உண்டாலும் அந்த நன்றியை எவரும் மறக்க மாட்டார்கள். நீங்களும் மறக்கலாகாது. மனிதர்களுக்கு தீங்கு செய்யலாம் ஊருக்கு இடையூறு விளைவிக்கலாம். ஆனால் ஒரு பொழுதும் திருவிடந்தை வராக மூர்த்திக்கு இடையூறு செய்து விடாதீர்கள். வராகராக இருந்தாலும் மெல்லிய புன்சிரிப்போடு இருக்கிற எங்கள் பெருமாள் கோபமடைந்தால், மிக மோசமான விளைவுகள் தருவார். இதை நான் கண் கூடாக பகர் வாழ்க்கையில் பார்த்திருக்கிறேன். வராகர் கருணை மூர்த்தி அவருக்கு எதிராக யார் இயங்ினாலும் அந்த கருணை மூர்த்தி கோபாவேசம் கொள்வார். எனவே உணவு உண்ணும் முன் அவருக்கு எந்தத் தீங்கும் இழைக்க மாட்டோம் என்று சங்கல்பம் செய்து கொண்டு உணவு எடுத்துக் கொள்ளுங்கள் கோவிந்தா கோவிந்தா' என்று மறுபடி கூறினாள்.

இந்த முறை எந்த வீரர்களும் கூவவில்லை. அங்குள்ள எவனுக்கோ அவள் பேச்சு வலிக்க வைத்திருக்கவேண்டும்'

''உங்கள் திருவிடந்தை வராகருக்கு நாங்கள்



ஏனம்மா துரோகம் செய்யப் போகிறோம். எங்கள், அதிகாரி கேட்பதெல்லாம் இருபது ஆட்கள் இரண்டாயிரம் பொன் அதுவும் எங்களுக்காக அல்லவே பாண்டிய மன்னருக்காகத்தானே கேட்கிறோம்.''

நாச்சியின் தாயார் சிரித்துக்கொண்டாள் ''நீங்கள் கேட்பதோ அவர்கள் கொடுப்பதோ எதைப் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது நான் சொல்ல விரும்புவதெல்லாம் ஊர் பணத்தைக்கூட கொள்ளையடிக்கலாம். ஊரிலுறையும் தெய்வத்தின் சிறுநகை கூட உங்களுக்கு பேராபத்தை விளைவிக்கும்.''

''நிறுத்தம்மா என்ன பேசுகிறாய் நீ'' காளிங்கராயன் சீறினான். எங்களை ஏதோ கொள்ளைக்காரன் போல் பேசுகிறாயே? நாங்களென்ன வராகர் நகைகளுக்காகவா வந்திருக்கிறோம். அல்லது திருவிடந்தையை கொள்ளையடிக்க வேண்டுமென்ற எண்ணமா? 'திருவிடந்தையை கொள்ளையடிக்க எத்தனை நேரமாகும்? சொடக்கு நேரத்தில் திருவிடந்தையை அழித்து. இங்குள்ளவர்களை வெட்டிச் சாய்த்து விட்டு கொள்ளையடித்துப் போக முடியும். வலது கையை இடது கையே குத்திக்கொள்ளுமா? நான்வேறு நீங்கள் வேறா, பேசாமல் பரிமாறு'' அதட்டினான்.

ஆயிரவன் மாணிக்கம், கையால் வாய் பொத்தி சரியென்று தலையசைத்து மீண்டும் கூட்டுப் பரிமாறினாள். அவனுக்குத் தெரிந்து விட்டது தான் என்ன செய்ய வேண்டுமோ அதை அங்கு செய்து விட்டோம் என்று புரிந்து விட்டது. அவர்கள் உண்டு முடித்தார்கள். மேல் துணிகளை விரித்து தலைக்கு செங்கற்கள் வைத்து அந்த கோவிலின் மண்டபத்தில் படுத்து தூங்கினார்கள்.

குணசீலம் மட்டும் கோவிலின் பின் வழியே வெளியேறினான். வேலிக் காத்தான் செடிகளை சுற்றிக்

கொண்டு ஊருக்குள் நுழைந்தான். அவன் மடியில் இருபது பொற்காசுகள் இருந்தன. ஊருக்குள்ளுள்ள வாலிபர்களை அருகே அழைத்தான். பரதவர் குடியிருப்பில் குதிரைகள் கிடைக்குமா? வேளாளர்களிடம் எனக்காகச் சொல்லி ஒரு பொட்டை குதிரை வாங்கித் தரமுடியுமா? என்னிடம் பத்து கழஞ்சுகள் இருக்கின்றன. பத்து கழஞ்சுக்கு நல்லதாய் ஒரு குதிரை எனக்கு தேவைப்படுகிறது. அவனை அந்தணச் சிறுவர்கள் வேளார்களிடம் அழைத்துப் போனார்கள்.

அங்கே அவனுக்கு பதினைந்து கழஞ்சில் ஒரு நல்ல குதிரை கிடைத்தது. அவன் குதிரை ஏறி ஊரை வலம் வந்தான், வேகமாக உதறி தெற்கு நோக்கி கடல் மல்லை துறைமுகத்தை நோக்கி குதிரையை வேகமாகச் செலுத்தினான். எங்கே என்று அந்தணச் சிறுவர்கள் கேட்ட போது குதிரையை ஓட்டப் பழக்கிக் கொண்டு வருகிறேன் என்று உரக்கக் கூறினான். அவன் போகிற வேகத்தை பார்த்தால் ஓட்டப் பழகுபவன் போல் தெரியவில்லை. யாரோ அடித்துத் துரத்துவது போல் கடும் வேகத்தில் குதிரையை மல்லையை நோக்கி செலுத்தினான்.

பாத்திரங்களை எடுத்துக் கொண்டு நாச்சியும் அவன் தாயாரும் வீடு நோக்கிப் புறப்பட்டார்கள். கோவில் கதவை ஒருக்களித்து சாத்தி வைத்தார்கள். கதவு சாத்தப்பட்டதும் காளிங்கராயன் பளிச்சென்று எழுந்தான். அவன் படை வீரர்கள் உண்ட களைப்பால் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

''பேடிகள்...யுத்த நேரத்தில் எப்படித் தூங்கிறார்கள் பார்'' அலுத்துக் கொண்டான் காளிங்கராயன் வேகமாக கர்ப்பகக் கிரகம் நோக்கி நடந்தான்.

கல்திரை மார்புயரம் எழுப்பப்பட்டிருந்தது. தாண்டி உள்ளே குதித்தான். திரைச்சீலையை அகற்றினான்.



வராகருடைய நகைகளை அருகே போய் பரிசோதித்தான் சிறிய அகல் விளக்கால் வைரங்களையும் மாணிக்க கற்களையும் மெல்லப் புரட்டிப் பார்த்தான். சுதைக்கு கீழே விரல் வைத்து எண்ணெயை வழித்து எவ்விதமாக ஒட்டப்பட்டிருக்கிறது என்று பரிசோதித்தான்.

ஏதோ மறந்து போனவள் போல நாச்சி உள்ளே நுழைந்தாள். நாச்சி நுழைவதைப் பார்த்துவிட்டு புரண்டு படுத்த ஒரு வீரன் சட்டென்று தலை தூக்கினான். அருகே காளிங்கராயன் இல்லை. குணசீலம் இல்லை. நாச்சி வந்து கொண்டிருக்கிறாள் எழுந்து உட்கார்ந்தான்.'' என்னம்மா என்ன வேண்டும்?'' என்று உட்கார்ந்தபடியே கேட்டான்.

காளிங்கராயனுக்கு அது கேட்டது. மறுபடி எகிறிக் குதித்து கல்திரையைத்தாண்டி கருவறைமண்டபத்திற்குள் வந்து தூணுக்குப் பின்னே ஒளிந்து கொண்டான்.

''ஒரு பாத்திரம் விட்டு விட்டேன்''. நாச்சி எழுந்து கேட்டவனுக்கு பதில் சொன்னாள்.

''இங்கு ஒரு பாத்திரமும் இல்லையே'' அவள் வந்து முன்னும் பின்னும் அலைந்து தேட அந்த வீரன் கை விரித்தான்

''எங்கே காளிங்கராயன்?''

கோவிலுக்கு பின்பக்கம் போயிருக்கிறார் என்ன வேண்டும்.''

''பின்பக்கமா காளிங்கராயரிடம் சற்று பேசலாம் என்று வந்தேன்'' என்று சொல்லி விட்டு மறுபடியும் வெளியே போனாள். காளிங்கராயனுக்கு வியர்த்தது. நாச்சி வெளியேறும் வரை காத்திருந்தான். கல்தூணிலிருந்து நகர்ந்து வந்து அந்த வீரன் முதுகில் மெல்ல தட்டினான்.

''நல்லது மிக அற்புதமாக அவனை அப்புறப்படுத்தினாய் என்னை கலைப்படுத்தினாய்'' என்று பாராட்டினான். தலைப் பாகையிலிருந்து ஒரு கழுஞ்சு பொன் எடுத்து அவன் கைகளில் போட்டான்.

''நான் உங்கள் சேவகன் உங்களை எச்சரிப்பது உங்களுக்கு துணையாயிருப்பது என் கடமையல்லவா.''

''சரி இருக்கட்டும் இன்னொன்றும் நீ செய்ய வேண்டும். இங்குள்ள நகைகள் அற்புதமானவை. ஆனால் இந்த நகைகள் மட்டும் நமக்குப் போதாது இதைப்போல பல மடங்கு விலை உயர்ந்த நகைகள் நரசிம்மபட்டர் தன் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போய் விட்டார். நரசிம்மபட்டர் வீட்டில் அந்த நகைப் பெட்டி எங்கேயிருக்கிறது என்றும் நாம் கண்காணிக்க வேண்டும்.

''குணசீலம் எங்கே?''

''அவன் குதிரை வாங்கப் போயிருக்கிறான் என்று தோன்றுகிறது.''

''அப்படியா... சரி நீயும் நானும் இதில் ஒன்று சேர்ந்து கொள்வோம். குணசீலனைத் தவிர்த்து விடுவோம்.''

''ஏன் ஐயா?'' குணசீலனை ஏன் தவிர்க்கிறீர்கள்?''

''எனக்கு லேசாய் குணசீலம் மீது ஒரு சந்தேகமிருக்கிறது. எந்த நேரமும் நம்மை அவன் காட்டிக் கொடுப்பானோ என்ற பயம் இருக்கிறது. அவனுக்கு அரசனாக வேண்டுமென்ற ஆசை இருக்கிறது.

''குணசீலம் யாரிடம் நம்மை காட்டிக் கொடுப்பான் ஐயா.''

அந்தப் படைவீரன் மெல்லக் கேட்டான்.



''குணசீலம் யவனர்களிடம் நம்மைக் காட்டிக் கொடுக்கலாம். நாம் கொள்ளையடித்து திருநெல்வேலி போவதற்குள் நம்மைப் பற்றி யவனர்களிடம் சொல்லி நம்மை மடக்கிக் கொன்று போடலாம். ஆயிரம் யவன வீரர்கள் நம்மை கொண்டால் நாம் அடிபட்டுச் சாவதைத் தவிர வேறு என்ன வழி. காளிங்கராயன் கவலையோடு பேசினான்.

''அப்படியானால் கொள்ளையடித்துவிட்டு ஜாக்கிரதையாக திருநெல்வேலிப் பக்கம் போக என்ன உபாயம் வைத்திருக்கிறீர்கள்.

'இங்குள்ள பரதவர்களை நான் முதலில் ஸ்நேகம் செய்யப் போகிறேன். அவர்களிடம் மரக்கலம் கேட்கப் போகிறேன், கடல் மல்லையிலிருந்து ஒரு மரக்கலம் இங்கு வந்த பிறகு அந்த மரக்கலத்தில் கொள்ளையடித்த பொருட்களோடு ஏறி, நேரே குமரிமுனை அடைந்து குமரி முனையிலிருந்து தாமிரபரணி கரைக்கு போய்விடுவேன். நடுவே எந்த கள்வர் பயமும் இருக்காது.''

''இது நல்ல உத்தியாக தோன்றுகிறது ஐயா. ஆனால் பரதவர்கள் ஏன் என்று கேட்காமல் நமக்கு உதவி செய்வார்களா?''

''பரதவர்கள் நிலரை பெரும் பொருள் கொடுத்து நாம் மடக்கிக் கொள்ள வேண்டும்'' காளிங்கராயன் பதில் சொன்னான்.

''ஐயா பரதவர்களிடம் நான் போய் பேசிப் பார்க்கட்டுமா

''நல்லது போய் பேசிப்பார்-நான் நரசிம்ம பட்டரிடம் போய் பேசுகிறேன்.

அந்த வீரனை அனுப்பிவிட்டு நரசிம்ம பட்டரின் வீடு நோக்கி காளிங்கராயன் நடக்கத் துவங்கினான்.

அந்த வீரன் பரதவர் குடில் நோக்கிப் போனதும் காளிங்கராயன் நரசிம்ம பட்டர் வீடு போகாமல் வேறு பக்கம் திரும்பி மறுபடியும் கோவிலுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டான். அங்குள்ள இன்னொரு ஆளை உலுக்கி எழுப்பினான்.

"என்ன உறக்கம் எழுந்திரு"

"ஐயா என்ன செய்ய வேண்டும்' கட்டளை இடுங்கள்"

"ப்ஹூம், முதலில் தூக்கத்தை துறக்கக் கற்றுக் கொள். பிறகு கட்டளை காதில் தானாக விழும்."

"என்ன சொல்கிறீர்கள் ஐயா."

"குணசீலம் குதிரை வாங்க போவதாய் கடல்மல்லை பக்கம் போயிருக்கிறான். இங்குள்ள வேறொரு படை வீரன் பரதவர் பக்கம் மரக்கலம் வேண்டுமென்று போயிருக்கிறான், இவர்கள் இருவர் மீதும் எனக்கு பலத்த சந்தேகமிருக்கிறது. அவர்கள் எப்போதும் தூங்காமல் விழிப்பாக இருக்கிறார்கள். மற்றவர்களைப் போல அமைதியான முகம், குணம் இவர்களிடம் இல்லை. இவர்கள் மீது எனக்கு சந்தேகமாக இருக்கிறது."

"எனக்கும் அந்த சந்தேகம் உண்டய்யா" அந்த படைவீரன் அப்பாவித்தனமாய் தனக்கும் ஏதோ தெரியும் என்பது போல் சொன்னான்.

"நீ. கெட்டிக்காரன். அதனால்தான் உனக்கும் சந்தேகம் வந்திருக்கிறது. நாம் விழிப்போடு இருக்க வேண்டாமா? நீ போய் நரசிம்ம பட்டரின் வீட்டில், எங்கே அந்த நகைப்பெட்டியை வைத்திருக்கிறார்கள் என்பதை கண்டுபிடித்து வா. எப்படிப் போவாய்? எப்படிச் செய்வாய்? என்பதை உனக்கு மட்டும் ரகசியமாக வைத்துக் கொள். என்னிடம்கூட சொல்ல வேண்டாம்.



நகைப்பெட்டி இருக்கும் இடம் மட்டும் தெரிந்து கொண்டு விட்டால் இரவோடு இரவாக நகைப்பெட்டியை நாம் கடத்திக் கொண்டு போய் விட லாம்."

அந்த வீரன் சற்று பயந்தான் தயங்கினான் பிறகு சரியென்று தலையசைத்தான் இறங்கி கோவில் விட்டு வெளியே போனான்.

காளிங்கராயன் போன்ற அரசியல்வாதிகள் அவனது அணுக்கத்தொண்டர்களை, அவன் படை வீரர்களை ஒருக்காலும் ஒரு விஷயத்திலும் நம்புவதேயில்லை.

இந்த தாஸி நாச்சி மட்டும் உதவி செய்தால் அவள் தாயார் ஆயிரவல்மாணிக்கம் உதவி செய்தால் வெகு நிச்சயமாக அந்த கோவில் நகைப் பெட்டியை நரசிம்ம பட்டர் வீட்டிலிருந்து எளிதில் கொள்ளையடித்து விடலாம் தடுத்தால் நரசிம்மபட்டரை வெட்டிப்போடலாம். அந்தணர்கள் குரல் கொடுப்பதற்குள் குத்திக் கொல்லலாம் விடிவதற்குள் நகைப்பெட்டியை எடுத்துக்கொண்டு கடல் மல்லை துறைமுகமோ அல்லது எதிர்ப்புறமாக திருவெற்றியூரோ போய்விடலாம் கடல் மல்லை பக்கமாக ஒரு மரக்கலத்தை அனுப்பி விடவேண்டியது குணசீலனை காஞ்சிபுரம் பக்கமாக குதிரையை விரட்டிக் கொண்டு போகும்படி செய்யவேண்டியது இவர்கள் இருவரும் போன திக்கில்லாமல் நேரே தெற்கே போகாமல் வடக்கே திருவெற்றியூர் வழியாக நாம் நகைகளோடு நகர்ந்துவிட வேண்டியது என்றுதிட்டமிட்டான்.

மாலை நேரம் வந்தது அந்தணர்களோடு நாச்சி கோவிலுக்குள் நுழைந்தாள் மீண்டும் கல்திரையை உயர்த்தும் வேலை துவங்கியது அந்த இரவுக்குள்ளாக அற்புதமான அந்த வராக மூர்த்தியைச்சுற்றி கல்லால் சுவர் கட்டி மறைத்தார்கள் நடுவே ஒரே ஒரு கல் இடைவெளி மட்டும் வைத்தார் அந்த கல் இடைவெளியின்

மூலம் தீபத்தில் மின்ரிந்து கொண்டிருந்த வராகமூர்த்
தியை எல்லோரும் கண்ணில் நீர் வழிய தரிசித்தார்கள்.

என் அப்பனே என் அப்பனே, என்ன செய்ய நினைத்
துக் கொண்டிருக்கிறாய் எங்கள் இருவிடத்தையென்று
நெஞ்சிலடித்துக் கொண்டு கதறினார்கள் தலைமேல் கை
வைத்துக் கோவிந்தா கோவிந்தா என்று கூவினார்கள்.
கடைசியாக அந்த துவாரமும் அடைக்கப்பட்டது.
நாச்சி மூர்ச்சையாகி விழுந்தாள் பல அந்தணர்கள்
அரற்றிக் கொண்டு திரும்பினார்கள் நரசிம்மபட்டர்
வாடிய முகத்தோடு காளிங்கராயன் அருகே வந்தார்.
இருநூறு பொன் கொடுக்க சம்மதம் இரண்டாயிரம்
பொன் இல்லை. இருபது வீரர்கள் கேட்டீர்கள். எங்
களால் ஒரு வீரர்கூட கொடுக்க இயலாது. எங்களில்
வேளாளரும், அந்தணரும் உண்டே தவிர மறவர்கள்
இல்லை, பரதவர்களிடம் நீங்களே போய்க் கேளுங்கள்.
காசுக்கு ஆசைப்பட்டு அல்லது கடன் என்று கருதி
எவரேனும் பரதவர்கள் வந்தால் அவர்களை அழைத்துப்
போவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை, பரதவர்கள்
எங்களை வந்து கலக்க உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்
என்று சொல்லிவிடுகிறோம். மற்றபடிக்கு இதற்கு மேல்
இந்த ஊர் எதுவும் செய்யாது'' என்று தன் இறுதி
முடிவை தெரிவித்தார்.

''நல்லது உங்களுடைய அன்புக்கு நன்றி. இந்த இரு
நூறு பொன் எனக்குத் தேவையில்லை. ஆனால் யவனர்
கள் வருகை இங்கு உறுதிப் பட்டுவிட்டது என்பதை
மட்டும் தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்.''

''சந்தோஷம் யவனர்கள் வருகையைப் பற்றி நீங்
களும் நானும் விவாதிக்க ஒன்றுமில்லை. அவர்கள் வருவ
தாயின் வந்துகொள்ளட்டும். கொள்ளை அடிப்பதாயின்
இறைவன் சித்தம். எங்களால் அதைத் தடுக்க இயலாது.
தடுப்பதற்கு நீங்கள் உதவ மாட்டீர்கள் என்று எங்
களுக்குத் தெரியும். இத்தோடு இந்தப் பேச்சை நிறுத்திக்



கொள்வோம். நாளைக் காலை நீங்கள் ஊருக்கு கிளம்ப
சித்தமாயிருங்கள்.'' நரசிம்மபட்டர் வெளியே போனார்.
காளிங்கராயன் பல் கடித்துக் கொண்டான்.

கடல் மல்லைக்கு குதிரை வாங்கப் போன குண
சீலனுக்கு சற்று தாமதமாகலாம். ஆனால் கடற்கரையில்
பரதவரைக் கூட்டிவரப் போனவனுக்கு இவ்வளவு நேரம்
ஏன்? காளிங்கராயனுக்கு சந்தேகம் வந்தது. இருட்டட்டும்
என்று காத்திருந்தான். மாலை மயங்கி இருள் சூழ.
காளிங்கராயன் தன் குதிரை ஏறி கடற்கரை போனான்.
அங்கே அவன் ஆள் குடித்து விட்டு படுத்திருப்பது தெரிந்
தது. பரதவர்கள். இரண்டு அந்தணர்களோடு பேசிக்
கொண்டிருந்தார்கள். காளிங்கராயனிடம் கால் பொன்
கூடக் கொடுக்காமல் துரத்தி அனுப்புங்கள் என்று கூவிக்
கொண்டிருந்தார்கள். ''மரக்கலம் கேட்கிறானையா?
எதற்காக பத்துபேருக்கு மரக்கலம்? இவர்கள் வேறுஏதோ
திட்டமிட்டிருக்கிறார்கள். இங்கே கட்டுமரம் தவிர வேறு
எந்த கலமும் வராது. இது பாறை மிகுந்த இடம் என்று
சொல்லி நாங்கள் இவனை திருப்பி விட்டோம். எதற்கும்
உங்களிடம் தகவல் சொல்ல வேண்டும் என்பதற்காக
உபசரிப்பது போல் கள் கொடுத்து படுக்க வைத்திருக்
கிறோம். இவன் எழுந்திருக்க இரண்டு நாளாகும்.
நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள். இவனைக் கடலில்
உயிரோடு தூக்கி எறிந்து விடுகிறோம்.'' என்று கை
காட்டிப் பேசினார்கள்.

காளிங்கராயனுக்கு நிலைமை கைமீறிப் போவது புரிந்
தது. அவன் ஊருக்குள் திரும்பாமல், சோலைக்குள்
புகுந்து குதிரையை கட்டிவிட்டு யோசித்தான். நடந்த
படி கோவிலுக்குப் போனான்.

அங்குள்ள ஆட்களைத் தொலைவிலிருந்து கைதட்டி
அழைத்தான். கோவில் மண்டபத்திலிருந்த ஆட்கள்
சோலைக்குள் புகுந்தார்கள். அவரிடம் அடிக்குரலில்
இன்று இரவு கொள்ளை அடிக்கப் போவதாய் தெரிவித்து

கவனமாக இருக்கச் சொன்னான். அவர்கள் பயங்கலந்த பார்வையோடு இன்னும் உள்ளே சோலையின் நடுப்பகுதியில் பதுங்கிக் கொண்டார்கள்.

நடு நிசியில் ஒரு ஆளை அனுப்பி நரசிம்மபட்டர் வீட்டைச் சுற்றிப் பார்த்து வரச் சொன்னான். அந்த ஆள் வேகமாகத் திரும்பி வந்தான்.

"பலத்த காவல் இருக்கிறது ஐயா. ஒன்றும் செய்ய முடியாது. ஆறேழு அந்தணர்கள் நீண்ட தடிகளோடு மந்திரம் சொல்லியபடி சுற்றி வருகிறார்கள். அவர்களுக்கு துணையாய் உருவிய வாட்களோடு வேளாளர்கள் நிற்கிறார்கள். நாம் இந்த ஊர் விட்டுப் போகும் வரை அவர்கள் காவல் பலமாகத்தான் இருக்கும். இங்கு நாம் இருக்கும் வரை நம்மீது அவர்களுக்கு சந்தேகம் இருக்கும். இங்கு கொள்ளை அடிப்பது என்பது இயலாதது. ஆயிரம் ஆட்கள் திரட்டி வந்தால் ஒரு வேளை இந்த மொத்த கிராமத்தையும் சூறையாடி நகைகளையும் கொள்ளையடிக்கலாம். அதுவரை இந்த விஷயம் இயலாத ஒன்று அந்த வீரன் படபடப்பாய் பேச, காளிங்கராயனுக்கு இது சரியென்று பட்டது.

காளிங்கராயன் என்ன செய்வதென்று யோசனை செய்கையில் தொலைவே குதிரை வரும் சப்தம் கேட்டது. ஆட்கள் பதுங்கிக் கொண்டார்கள். குத்தீட்டிகளை இறுக்கிக் கொண்டார்கள் தொலைவில் வரும் குதிரையை உற்றுப் பார்த்தார்கள். வந்தது குணசீலம் என்று தெரிந்து விட்டது. மெல்ல பறவை போல் குரல் கொடுத்தார்கள். குணசீலனும் பதிலுக்குக் குரல் கொடுத்தான். குதிரையைவிட்டு இறங்கி தோப்புக்குள் அதை பிடித்தபடி நடந்து வந்தான்.

"எங்கே போய்விட்டாய் இத்தனை நேரம்? காளிங்கராயன் சீற... அவன் ஸ்ஸ் என்று வாயில் விரல் வைத்து அதட்டினான். தேவையில்லாமல் கூச்சலிடாதீர்கள். நான் வேவு பார்க்கப்போயிருந்தேன். பரதவர்களிடம் மரக்கலம் வேண்டுமென்று நீங்கள் கேட்டது கடல்மல்லை வரை வந்து



விட்டது. இப்படி ஒரு முட்டாள் தனத்தை செய்யலாமா? மரக்கலம் வேண்டுமென்று கேட்க இப்படி ஒரு கடைந்தெடுத்த முட்டாளையா அனுப்புவீர்கள். நாங்கள் நிறைய நகைகள் எடுத்துப்போகப் போகிறோம் என்று அவன் பரதவர்களிடம் மரக்கலம் விலை பேசியிருக்கிறான் இது ஒன்று போதாதா. நம்மைக் காட்டிக் கொடுக்க நாளை காலை இந்த அந்தணர்கள் நம்மை அடித்துப் போடும்முன் இங்கிருந்து நகர்ந்து விட வேண்டும்.

அவன் சொல்ல காளிங்கராயன் கவலையானான்.

"இப்பொழுதென்னசெய்வது?" என்றுகுணசீலனைக் கேட்டான்

"இங்கிருந்து மிக மரியாதையாக வணக்கத்தோடு விடைபெற வேண்டியது கட்டாயம்."

"பிறகு இந்த நகைகளை விட்டு விட்டா? காளிங்கராயன் ஆதங்கமாய் கேட்டான்."

"நாளை அல்லது நாளை மறுநாள் நாம் யவனர் போல உள்ளே வருவோம், யவனர்கள் வேஷத்தில் வருவோம். யவனர்களுடைய பாஷையை பேசுவோம். யவனர்களுடைய தோற்றத்தை கொள்வோம் யவனர்களைப் போல் உள்ளே நுழைந்து இரவு நேரத்தில் கொள்ளையடித்து அந்தப் பெட்டியை தூக்கிக் கொண்டு போய்விடுவோம் அதுதான் நமக்கு ஒரே வழி."

அவன் சொல்ல, காளிங்கராயன் அத்திட்டத்தை யோசித்தான். அப்போது கோவில் கதவு திறக்கும் ஓசை கேட்டது. எல்லோரும் கோயில் இருந்த திக்கை உற்றுப் பார்த்தார்கள்.

சுளுந்து ஏற்றிக் கொண்டு தன்னை முற்றிலும் போர்த்துக் கொண்டு ஒரு உருவம் கோவிலுக்குள் நுழைய எல்லோரும் திகைத்தார்கள். இரண்டு ஆட்களை காளிங்கராயன் அனுப்பினான். அவர்கள் கோவில் கதவருகே சென்றார்கள்.

உடனே வரச்சொல்லி பறவை ஒலி எழுப்பினார்கள். காளிங்கராயனும், குணசீலனும் குதிரையில் ஏறிக்கொள்ள

மற்ற ஆட்கள்பின்னே ஓடி வர கோயில் வரையைச்சுற்றிக் கொண்டார்கள். கதவு விரியத் திறந்தது. கருவறைக்கு அருகே கையில் சுளுந்தோடு தாஸி நாச்சி நின்றிருந்தாள்.

நாச்சிக்கும் அவர்களுக்கும் இடையே நூறு தப்படி தொலைவு இருந்தது. சட்டென்று காளிங்கராயன் புத்தி வேலை செய்தது. ''குணசீலா ஒரு தூணுக்குப் பின் ஒளிந்து கொள். எப்படியேனும் அந்த கல்திரை நடுவே உள்ள கல்லை அசைத்து உள்ளே தள்ளிவிடு. உள்ளே நுழைந்து நகைகள் கொஞ்சம் எடுத்து வெளியே வா. பிறகு நான் செய்கிற நாடகத்தைப் பார்.''

குணசீலம் காளிங்கராயன் சொன்னதை உடனே புரிந்து கொண்டான். அவன் தாஸியை கைதட்டி அருகே அழைக்க. அவன் ஒரு தூண் பின்னே ஒளிந்து கொண்டான். தாஸி நாச்சி அந்த தூணைக் கடந்ததும் இருளில் நகர்ந்து கருவறைக்குப் போனான்.

தாஸி நாச்சியின் கையிலிருந்த சுளுந்தை காளிங்கராயன் வெடுக்கென்று பிடுங்கி, தரையிலடித்து அணைத்தான்.

''என்னடி. இந்த இருளில் வராக மூர்த்தியின் நகைகளைத் திருட வந்தாயா? கல்திரையைத்தான் எழுப்பி விட்டார்களே நகைகளைக் காணோமென்று யார் பார்க்கப் போகிறார்கள் என்று நினைத்தாயா? இத்தனை நாள் இந்த ஊரின் சோற்றைத் தின்று விட்டு, இந்த ஊருக்கே துரோகம் செய்கிறாயே உனக்கு வெட்கமா இல்லை.இந்த அழகில் உனது தாயார் எங்களைப்பார்த்து உபதேசம் செய்கிறார்கள். உபதேசம் சொல்லும் போதே நினைத்தேன். உங்களுக்குள்ளே ஏதோ திட்டம் இருக்கிறதென்று வா மடியைக்காட்டு'' என்று அவளை பலவந்தப் படுத்தினான்.

தாஸி நாச்சி. அவனிடமிருந்து தப்பிப்பதற்காக அவன் கையை உதறிக் கொண்டு இடது பக்கம் ஓடினாள். காளிங்கராயன் ஆட்களால் தடுக்கப்பட்டாள் வலது. பக்கம் ஓடினாள். காளிங்கராயன் ஆட்களால் தடுக்கப் பட்டாள். நேரே கருவறையை நோக்கி ஓடினாள். கருவறையின் உள்ளே கல்திரையில் ஒரு கல் நகர்ந்திருந்தது உள்ளுக்குள் தீபம் உயர்ந்திருந்தது. சந்து வழியே நாச்சி எட்டிப் பார்த்தாள். அங்கு குணசீலம் அந்த வராகரின் நகைகளை வேகமாக கழற்றிக் கொண்டிருந்தான். கத்தியை வைத்து பாதங்களிலுள்ள கவசங்களைப்



பெயர்க்க முயன்று கொண்டிருந்தான். நாச்சி உரத்த குரலில் கத்த அவளை காளிங்கராயனும், அவனது ஆட்களும் அழுத்திக் கொண்டார்கள் சந்து வழியே குணசீலம் வெளியே வந்தான். நாச்சியின் மடியில் நகைகளைப் போட்டான்.

ஆட்கள் வந்து சேதி சொன்னதும், கோவிலில் அரவம் பெரிதாவதைக் கேட்டு அந்தணர்களும், வேளாளர்களும் ஆயுதங்களோடு உள்ளே ஓடிவந்தார்கள். விளக்குகள் ஏற்றப்பட்டன. தீவட்டிகள் கொளுத்தப்பட்டன. வெளிச்சம் பரவியது.

''என்ன நடந்தது? நரசிம்ம பட்டர் அதட்டலாகக் கேட்டார்.

''நான் இந்தப் பெண்ணை. திருவிடந்தை தாசியை நாச்சி என்று அழைக்கப்படும் மறைபேர் மாணிக்கத்தை கைது செய்திருக்கிறேன்''

''நீங்கள் யார் அவளைக் கைது செய்ய?'' ஒரு வேளாளன் கேட்டான்.

''நான் இந்த பாண்டிய நாட்டின் அதிகாரி. பாண்டிய நாடு எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் என் அதிகாரம் செல்லும்.''

''இவள் என்ன குற்றம் செய்தாள். நீங்கள் கைது செய்வதற்கு?''

''திருவிடந்தை எம்பிரான் வராகமூர்த்தியின் நகைகளை தாஸி திருட முயற்சித்தாள்.''

''இருக்காளும் இருக்காது'' இன்னொரு அந்தணர் சீற்றத்துடன் பேசினார்.

''நீர் வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்தீர். நானும் என் ஆட்களும் கோவிலைச் சுற்றி பாதுகாத்துக் கொண்டிருந்தோம். இவள் கோவிலுக்குள் நுழைந்து உள்ளுக்குள்ளிருக்கும் கற்களைப் பெயர்த்து உள்ளே நுழைந்து வராகருடைய நகைகளைப் பெயர்த்தெடுத்து இங்கு வந்திருக்கிறாள். இது நடந்ததை என் ஆள் கண்ணால் பார்த்திருக்கிறான்.

''யாரது...?''

''குணசீலம்.''

''தாஸி நாச்சிக்கு கோவில் நகையைத் திருட வேண்டிய அவசியமே இல்லையே.''

''அவளுடைய அவசியம் பற்றி எனக்கு அக்கறை இல்லை. திருடியதை கண்ணால் பார்த்தோம். நாளை காலை விசாரணை.''

''இல்லை, உமது விசாரணையை நாங்கள் ஒத்துக் கொள்வதில்லை. உமக்கும் இந்த ஊருக்கும் சம்பந்தம் இல்லை. இந்த ஊரில் வேளாளர்கள் இருக்கிறார்கள். வேளாளர்களுடைய கூட்டோடு இந்த சபை நாச்சியை விசாரிக்கும். நீங்கள் நாச்சியை விட்டு விட்டுப்போகலாம்.

''ஒருக்காலும் முடியாது. பாண்டியன் தேசத்தில் எல்லா சபைகளும் இந்த அதிகாரிக்குள் அடக்கம். மீறினால்...?''

மீறினால்?'' அந்தணர் சீற்றத்தோடு கேட்டார்.

''இங்கு ரணகளம் நடக்கும்'' காளிங்கராயன் வாள் உருவினான். மற்றவர்களும் மடமடவென்று வாளும் வேலும் உயர்த்தினார்கள்.

கூட்டம் திகைத்து நின்றது.

யுத்தமா? பேச்சா? என்று அந்தணர்கள் யோசித்தார்கள்,

நாளை காலை பேசிக் கொள்வோம் என்று கோவிலை விட்டு வெளியே வந்தார்கள்.

தாஸி நாச்சி காளிங்கராயனின் பாதுகாப்பில் கொட்ட கொட்ட உட்கார்ந்திருந்தாள்.

விடிந்தது.

மறுபடியும் ஊர் கூடியது.

தாஸி நாச்சியை தனியே விசாரிக்க வேண்டுமென்று நரசிம்ம பட்டர் அவளை நந்தவனத்துக்கு அழைத்துப் போனார் மொத்த விபரமும் கேட்டார்.

''நல்லது. காளிங்கராயனுக்கு காசு வேண்டும். அதற்காக அவன் அல்லாடுகிறான். என்ன செய்தாலும் இந்த கிராமத்தில் இருந்து காசு பெயரப்போவதில்லை என்று அவனுக்குத் தெரிந்து விட்டது. ஆகவே குழப்பம் ஏற்படுத்துகிறான். அவன் குழப்பத்தில் நாம் பலியாகி விடக் கூடாது. நீ குற்றத்தை ஒப்புக்கொள்'' என்று சொன்னார்.

தாஸி நாச்சி அழ, ''கவலைப்படாதே'' என்று சமாதானப் படுத்தினார் ''

ஊர் கூட, தாஸி நாச்சி தான் கல்தகர்த்தி திருவிடந்தை எம்பிரான் வராக மூர்த்தியின் நகைகளைத் திருட முயற்சித்தாய் மெல்லிய குரலில் கூறினாள்.

ஊர் திகைத்தது திரும்பி நரசிம்ம பட்டரை பார்த்தது. நரசிம்மபட்டர் மெல்ல தலையசைத்து தன் சொல்லியபடிதான் நடக்கிறது. என்பதாய் சைகை செய்தார்.



ஊர் மௌனமாக இப்போது காளிங்கராயனைப் பார்த்தது.

இருநூறு பொன் தாஸி நாச்சி என்கிற மறைப்பேர் பெரிய மாணிக்கத்திற்கு நான் அபராதம் விதிக்கிறேன். இந்த அபராதப்பணம் பாண்டிய மன்னனிடம் சேர்க்கப்படும்'' என்று காளிங்கராயன் உரத்துக் கூறினான்.

தாஸிநாச்சி தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை சொன்னாள்.

ஊரார் எனப்படும் வேளாளர்களை நோக்கினான். வேளாளர்கள் இந்த விஷயத்தை எப்படி எடுத்துக் கொள்வது என்று திகைத்தார்கள்.

தாஸி நாச்சிக்கு உதவ தயாராக இருந்தார்கள். ஆனால் தாஸிக்கு பதிலாய் தாங்கள் அபராதம் கட்டுவது சரியோ என்று தனியே கூடி யோசித்தார்கள்.

தாஸி நாச்சிக்காய் அப்படிச் செய்வது தவறு தாஸியோடு பிணைப்பு ஏற்பட்டுவிடும் என்று அஞ்சினார்கள்.

தாஸியிடம் அடமானம் வைக்க என்ன இருக்கிறதென்று பார்த்தார்கள். நிலமிருந்தது ஆனால் இது தாஸியின் நிலமல்லவே இது தேவதானமாக தாஸிக்கு கொடுக்கப்பட்ட நிலமாயிற்றே. கடவுளுடைய நிலத்தை நாம் காசு கொடுத்து வாங்க முடியுமா? நாம் காசு கொடுத்து வாங்கினால் அது நம் நிலமாகுமா? அல்லது வராகருக்குச் சொந்தமாகுமா? வராகருக்குச் சொந்தமாக வராகருக்கு இருக்க வேண்டிய நிலத்தை நாம் எப்படி வாங்குவது? என்று யோசித்தார்கள்? எப்படி உதவுவது என்று தெரியாமல் தயங்கினார்கள்.

அந்தணர்களும் நாச்சிக்கு எப்படி உதவுவது என்று யோசித்தார்கள். அந்தணர்களிடம் பொற் கழஞ்சுகள் இல்லை. இறைவனுடைய நகையும், இறைவனுடைய சுரகம் தங்கள் வீட்டில் இருப்பதால் அவர்கள் பொற் கழஞ்சுகளை வைத்துக் கொள்வதேயில்லை.

எல்லாம் பொருட்களாகவே இருந்தன. நெல் இருந்தது. துணி இருந்தது. பாத்திரங்கள் இருந்தன ஆனால் பொற்காசுகள் அவர்கள் வைத்துக் கொள்வதில்லை. கோவில்காசு இருக்குமிடத்தில் தன்காசு என்று ஒன்று இருந்தால் சந்தேகம் வரும் என்பதால், அவர்கள் வீட்டிற்குள் காசே கொண்டு வரமாட்டார்கள்.

இருநூறு பொற்கழஞ்சுகள் எப்படி? எப்படிக்

கொடுப்பது? எல்லோரும் யோசித்தார்கள். நரசிம்ம பட்டர் தீவிரமாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். மெல்ல தலையை நிமிர்த்தி வேளாளர்களைப் பார்த்தார்.

"இந்த சங்கடம் என்னவென்பது எனக்குத் தெளிவாகப் புரிகிறது. இதை தீர்க்கும் வழி ஒன்றுதான். நாச்சி என்கிற மறைப்பேர் பெரியமாணிக்கத்தின் நிலத்தை தேவதானமாக கொடுக்கப்பட்ட நிலத்தை ப்ரும்ம சபை என்று அழைக்கப்படும் இந்த அந்தணர் சபை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளும். இருநூறு கழஞ்சு பொன்னுக்கு அவளுடைய நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்படும். ஆனால் ப்ரும்ம சபையில் இருநூறு கழஞ்சு பொன் இல்லை. எனவே ப்ரும்ம சபை தன்வசம் வைத்திருக்கிற நகைகளை காலம் காலமாக பாதுகாத்து வந்த வராகருக்குப் போட்டு அழகும் பார்த்த அதனுடைய சொந்த பொறுப்பிலுள்ள நகைகளை, வேறு யாரும் தானமாக கொடுக்காமல் இந்த சபையே வராகருக்கு செய்தளித்த நகைகளை விற்க முன் வந்திருக்கிறது. இந்த நகைகளை ஊரார் எனப்படும் வேளாளர்கள் வாங்கிக் கொள்ளட்டும். வாங்கிக் கொண்டு அவர்களிடமிருந்து இருநூறு பொன் கழஞ்சுகள் பெறலாம். அந்தக் காசை வைத்துக் கொண்டு தாஸியின் நிலம் வாங்கப்படும்."

ப்ரும்மசபை ஏழுவிதமான நகைகளை ஊரார் என்கிற வேளாளருக்கு இருநூறு கழஞ்சுகளுக்கு விற்றது. வேளாளர் நகைகளை வாங்கி தலைமேல் வைத்துக் கொண்டு தங்களிடம் பத்திரப் படுத்தினார்கள் இருநூறு கழஞ்சு பொன் கொண்டு வந்து கொடுத்தார்கள். அந்தப் பொன்னை நாச்சி மறைப்பேர் பெரியமாணிக்கத்திற்கு ப்ரும்மசபை வழங்கியது ஒரு ஓலையில் தனக்கு இந்த ஊர் தேவதானமாக அளிக்கப்பட்ட நிலங்களையெல்லாம் தன் தாயும் தானும் அனுபவித்த எல்லா பாத்தியத்தையும் விட்டு விட்டு ப்ருமசபைக்கு விற்றுவிடுவதாக கைச்சாத்துப் போட்டு நாச்சி கொடுத்தாள். இருநூறு பொன் எடுத்துக் கொண்டு போய் காளிங்கராயன் முன்னே வைத்தாள்.

காளிங்கராயன் உற்றுப் பார்த்தான். ஊரும் சபையும் ஒன்றுகூடி இந்தத் தாஸியை மிகச் சாமர்த்தியமாய் தப்புவித்து விட்டது. ஆனால் இதில் ஒரு லாபம் நரசிம்ம பட்டர் முன் அறையில்தான் இந்த நகைப்பெட்டி இருக்கிறது. அந்த நகைப்பெட்டியில் இருந்துதான் ஏழுவித



மான நகைகள் கொண்டுவரப்பட்டன. இந்த நகைகளை இன்று இரவு அல்லது நாளை இரவு அல்லது நாளை மறுநாள் இரவு உள்ளுக்குள் யவனர் போல் புகுந்து கொள்ளையடித்து விட முடியும் ஆகவே இப்போது இந்த இருநூறு பொன் கழஞ்சு போதும்.

மெல்ல பொன் கழஞ்சுகளை எடுத்துக் கொண்டு அவனும் அவன் வீரர்களும் குதிரை ஏறினார்கள். திருமயிலைக்குப் போவதாய் சொல்லி வடக்கு திசை நோக்கி நகர்ந்தார்கள் ஊர் நிம்மதிப் பெருமூச்சு விட்டது வேளாளர்கள் தங்களுடைய தாங்கள் வாங்கிய அந்த நகைகளைத் திரும்ப ப்ரும்மசபைக்குக் கொடுத்தார்கள்

"அம்மா உன் நிலத்தை நீயே மறுபடி உழுது பயிர் செய்து கொள்ளலாம் நம்மைப் பிடித்த சனியன் போய் விட்டது இதற்காக இந்த ஊர்கூடி உன்னை முன்னிட்டு தன்னையும் காப்பாற்றிக் கொண்டது' நரசிம்மபட்டர் மிருதுவாகக் கூறினார்.

"இல்லை ஐயா எனக்கு இனியும் இந்த ஊரில் இருக்க விருப்பமில்லை. ஏதோ ஒரு மனத்திரை விழுந்துவிட்டது. இங்கு ஒரு வேளாளர் கல்திரை எழுப்பினால் நான் இனி இங்கிருக்க மாட்டேன் என்று தரையடித்து சத்தியம் செய்தாரே அதைப் போல் தான் எனக்கும் தோன்றுகிறது எந்த ஊரில் கல்திரை எழுப்பாது கடவுளின் தரிசனம் தினமும் கிடைக்கிறதோ அந்த ஊருக்கு நான் பயணப்படப் போகிறேன். அந்த ஊரில் நின்று தாஸியாக சேவை செய்து வருவேன் ஐயா தாங்களும் இங்குள்ள வேளாளர்களும் எனக்கு செய்த உதவியை என் உயிர் இருக்கும் வரையிலும் மறக்க மாட்டேன். இதோ கடைசி கடைசியாய் அந்த கல்சந்து அடைக்கும் முன்னர். அந்த இடத்தில் நின்று என் எம்பெருமானைப் பார்த்து, என் வராக மூர்த்தியைப் பார்த்து நான் நடனமாடி விட்டுப் போகிறேன்.

எல்லோரும் சூழ்ந்திருக்க அந்த சந்தின் வழியே வராகரைப் பார்த்தபடி அவள் மெல்ல நின்ற இடத்திலேயே அபிநயம் பிடித்துப் பாடினாள்.

"எங்ஙனே என்ன செய்ய நினைத்திருக்கிறாய் எம்பெருமானே" என்று பத்து பாசுரங்களும் தழுதழுத்த குரலோடு பாடினாள்,

ஊரும் அவள் விம்மலுக்கு சேர்ந்து அழுதது. தாஸி நாச்சி தலைச் சுமையாய் சில உடைகளை அணைத்துக் கொண்டு தென் மேற்கே உள்ள காஞ்சி மாநகரம் நோக்கி

மெல்ல நடந்தான் கூடவே அவன் தாயும் பயணப்பட்டாள்.

தாஸி நாச்சி ஊர் விட்டுப் போன சில மணி நேரத்திற்குள் பரதவர் குடியிலிருந்து சில இளைஞர்கள் ஓடி வந்தார்கள். அங்கே குடித்துவிட்டு படுத்துக்கிடக்கிற காளிங்கராயனுடைய ஆள் ஏதோதோ சொல்லுகிறான் என்று கவலைப்பட்டார்கள். அவனை கயிறு கட்டி இழுத்து வந்தார்கள். வேளாளர்கள் அவன் கன்னத்தில் அடித்துக் கேட்க "காளிங்கராயன் வெகு சீக்கிரம் நகைகளைக் கொள்ளை அடிக்க இங்கு வருவான். எங்கே நகைகள் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அவன் தெரிந்து கொண்டு விட்டான் நகைகளை கடத்த மரக்கலம் வாங்க முயற்சிக்கிறான்."

ஊர் சுறுசுறுப்பானது கோபமடைந்தது.

தாஸிநாச்சியை கூப்பிட்டுக் கொள்ளலாம் காளிங்கராயனைப் பின்தொடர்ந்துபோய் குத்திக்கொன்று இருநூறு பொன் கழஞ்சுகளையும் வாங்கி விடலாம் என்று சொன்னது ஆனால் நரசிம்மபட்டர் தடுத்துவிட்டார்.

"தாஸிநாச்சியை எப்போது வேண்டுமானாலும் நாம் அழைத்துக் கொள்ளலாம் காளிங்கராயனைப் பின் தொடர்ந்து போவது நல்லதல்ல அதை விட முக்கியமான வேலை இங்குள்ள நகைகளை என் வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி வேறு எங்கேனும் ஓரிடத்தில் பத்திரமாக வைப்பது அப்படி பாத்திரமாக வைக்கப்பட்ட இடம் வெகு சிலருக்கே தெரிந்திருப்பது"

இனி என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள்.

"யோசியுங்கள்" என்று சொன்னார்.

ஊரில் வேளாளர்கள் மூவரும் அந்தணர்கள்மூவருமாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் அந்த ஆறுபேரும் தனியே போய் கலந்து ஆலோசித்தார்கள் நகைப்பெட்டியை தோள்சுமையாக முன்னால் மூன்றுவேளாளர்களும் தூக்கிக் கொள்ள ஊர்விட்டு ஒதுக்குப் புறமாய் எங்கோ இருளில் நடந்து போனார்கள். அந்த நகைகள் எங்கே புதைக்கப்பட்டன என்று இன்றுவரை யாருக்கும் தெரியவே இல்லை

ஆனால் தாஸி நாச்சியின் கல்வெட்டு மட்டும் அந்த ஊரில் மிகத் தெளிவாக மிக அழகாக எழுதப்பட்டிருக்கிறது. ஒரு தாஸிக்காக வேளாளர்களும், அந்தணர்களும் ஒன்று சேர்ந்து அபராதம் செலுத்தி இருக்கிறார்



கள். அந்த தாஸியும் இப்பேர்ப்பட்ட அற்புதமான ஆட்களும் நிறைந்த திருவிடந்தை ஊருக்கு கடைசிவரை யவனர்கள் வரவேயில்லை

கல்திரை எழுப்பப்பட்டு வராகமூர்த்தி உள்ளே அற்புதமாய் தவக்கோலத்தில் இருந்தார். வெளியே ஒரு சிறிய வராகமூர்த்தி வைக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டு வந்தது. யவனர்களுடைய ஆட்சி முடிந்ததும், கல்திரை அகற்றப்பட்டு உள்ளுக்குள் இருந்த கதைக்கு மறுபடியும் பூஜை செய்யத் தொடங்கினார்கள்.

இதற்கு முந்நூறு வருடங்கள் ஆயின.

கல்திரை எழுப்புங்கள். கல்திரை எழுப்புங்கள். எல்லா ஊர் கோவிலிலும் மூலவருக்கு முன் கல்திரை எழுப்புங்கள் என்று ஆடிய பொற்பாதம் என்ற அந்த இளைஞன் வழியெல்லாம் பிரச்சாரம் செய்து கொண்டு போனான்.

திருவெற்றியூர் தாண்டி தெலுங்கர்கள் வாழும் தேசத்திற்கு உள்ளே போகும்போது, அங்கே நாச்சி என்கிற மறைப்பேர் பெரியமாணிக்கத்தை சந்தித்தான் மொத்த விபரத்தையும் அவள் கதையாய் சொல்ல காது கொடுத்துக் கேட்டாள்.

"கல்திரை எழுப்பினால் போதாதைய்யா யவனர்களிடமிருந்து நமது மூர்த்திகளைக் காப்பாற்ற கல்திரை எழுப்பலாம். நம்மவர்களிடமிருந்து நம்முடைய கோவில் சொத்துக்களை எப்படி காப்பாற்றுவது வெறும் கல்திரை உதவாது" என்று வேதனையோடு நாச்சி ஆடிய பொற்பாதத்திடம் சொன்னாள். ஆடியபொற்பாதமும் நாச்சியும் இளைஞனும் வடக்கே நகர்ந்தார்கள். எதிரே மிகப்பெரும் படையோடு ஹரிகரன் புக்கன் என்ற மன்னர்கள் தெற்கு நோக்கி வருவதைப் பார்த்து நேரே போய் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள். மதுரையிலும் சிராப்பள்ளியிலும் தொண்டை மண்டலத்திலும் தஞ்சையிலும் யவனர்களுடைய ஆட்சியைப் பற்றி அந்த ஹரிகரன் புக்கனிடம் முறையிட்டார்கள். அந்தப் படை அவர்களையும் அழைத்துக் கொண்டு தெற்கு நோக்கி யவனர்களிடமிருந்து பாண்டிய தேசத்தை விடுவிப்பதற்காக வீராவேசத்துடன் நகர்ந்து போயிற்று.

மதுரையையும், தஞ்சையையும், சிராப்பள்ளியையும் அது போர் செய்து வாள் முனையில் மீட்டது. உக்கிரமான போர்கள் பல நடந்தன. ஆயினும் வடக்கே

இருந்து அலை அலையாய் வந்தவயவனர்களை அவர்களால் முற்றிலும் தடுத்து நிறுத்த முடியவில்லை' யவனர்கள் ஆட்சி முந்நூறு வருடங்களாய் தொடர்ந்து வந்தது. கல்திரைகள் இன்னும் உயர்த்திக் கட்டப்பட்டன. பழுது பார்க்கப்பட்டன. பெரிய கப்பல்களில் வெள்ளை வெளேரென்று தோல் கொண்ட பரங்கியர்கள் குமரி முனையிலும் சேர தேசத்துக் கரையிலும் சென்னைப் பட்டினத்திலும் வந்து இறங்கினார்கள். மெல்ல மெல்ல ஊடுருவினார்கள். அவர்கள் யவனர்களிடமிருந்து இந்த தேசத்தைக் கைப்பற்றி தங்களுடைய கொடியைப் பறக்க விட்டார்கள். இதற்கு மொத்தமாய் நானூறு வருடங்கள் ஆயின. அதற்குப் பிறகு அந்த பரங்கியர் ஆட்சியில் கல்திரைகள் அகற்றப்பட்டன.

கல்திரைகள் அகற்றப்பட்டதோ, கோவில்கள் காப்பாற்றப்பட்டதோ, திருவிடந்தை அந்தணர்களுக்கோ, வேளாளர்களுக்கோ, நாச்சிக்கோ, ஆடியபொற்பாதத்துக்கோ காளிங்கராய உடையாருக்கோ தெரியாது

காலம் மிக பிரமாண்டமானது. எல்லாவற்றையும் விழுங்கி விடக்கூடியது. எல்லாக் கவலைகளையும் எல்லாக் கலாச்சாரத்தையும், எல்லா மதத்தையும் விழுங்கி நிற்பது.

அந்த காலம் மாறி மாறி, மாறி மாறி தன் விளையாட்டை நடத்திக் கொண்டிருக்கிறது. கவலைகள் தோன்றி, அழிந்து இங்கு உலாவிக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு கவலை. ஒவ்வொரு நேரம் யுத்தத்திற்கு ஒவ்வொரு காரணம். ஆனால் இடைவிடாமல் எதன் பொருட்டோ இந்த தேசத்தில் யுத்தம் நடந்து கொண்டேயிருக்கிறது அப்படி நடந்த ஒரு யுத்தத்தின் சாட்சியாய் இன்றைக்கும் திருவிடந்தையில் நாச்சி என்கிற மறைப்பேர் பெரியமாணிக்கம் இருநூறு கழஞ்சு அபராதம் கொடுத்த கல்வெட்டு இன்னும் இருக்கிறது அந்த கல்வெட்டு இதோ இங்கே இதன் மொழியிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது

**திருவிடந்தை கல்வெட்டு**

1. ஸ்ரீ கோமாறபன்மா திருப்புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 10
2. பத்தாவது துலா நாயற்று பூர்வ பக்ஷத்து பிரதமையும் ஞாயிற்றுக் கிழமையும் பெற்ற சோதி ஆன ஜெயம்



3. கொண்ட சோழ மண்டலத்து ஆமூர் கோட்டத்துப் படுவூர் நாட்டுத் திருவிடந்தை ஆன அகரர்குர் நல்லூர் எம்பெருமான் தேவரடியாரில்.
4. ஆயிரவன் மாணிக்கத்தின் மகள் நாச்சி ஆன பிள்ளை மறைப்பேர் மாணிக்கத்துக்கு இவ்வூர் ஊரவர் இவ்வூர் சபையார்.
5. பக்கல் கொண்டுடைய காணியாய் இவளுக்கு விற்று இவள் கொண்டுடைய காணி இவளை உடையார் வீரபாண்டியக்
6. காளிங்கராயர் தெண்டம் நிச்சயித்த பணத்துக்கு இவள் கொள்விரரானதோ என்று கூற கொள்வார் இல்லாதபடியாலே நாட்டாரும்.
7. ஊரவரும் முதலியான நீங்களே கொள்ளக் கடவீரோ என்று சபையாரைச் சொல்ல இவர்களும் எங்களுக்குகொள்ளமு
8. தலில்லை என்று சொல்ல உங்களுக்கு முதலில்லை ஆகில் திருநாமத்துக்கு காணி ஆகக் கொள்ளுங்கள் என்று கானதிற்கு நாட்டா.
9. ரும் ஊராரும் சொல்லுகையாலே தானம் ஆக இருந்து திரு ஆபரணத்தை விற்று சபையா ஊரவர்க்குவிற்ற சாதனப்படி
10. பணம் இருநூறும் கொடுத்து திருநாமத்துக்காணி ஆகி கொண்ட நிலம் மூன்று வேலியும் கொண்டோம் தானதாரோம் பணியால் இவை

11 கோயில் கணக்கு நித்த கலியாணப்பிரியன் எழுத்து.

தேவரடியாள் பெயர் : நாச்சி என்கிற பிள்ளை மறைப்பேர் மாணிக்கம்

தாயார் பெயர் : ஆயிரவன் மாணிக்கம்

இக்கோயிலில் நாச்சி தேவரடியாளாகப் பணியாற்றி வருவதற்காக ஊரார் என்ற குழு சபையார் என்ற குழுவிடமிருந்து நிலம் பெற்று ஊதிய நிலமாக அளிக்கின்றனர். ஏதோ ஒருகாரணத்திற்காக நாச்சியை வீரபாண்டிய காளிங்கராய என்ற அதிகாரி தண்டம் விதிக்கின்றார் (200 பணம்) இதனை அவளால் கட்ட இயலவில்லை. எனவே அவள் தனக்கு தானமாக கொடுத்த நிலத்தை ஏலத்தில் விற்க முன் வருகிறாள். இந்த நிலத்தை வாங்க எவரும் முன் வரவில்லை. எனவே ஊராரும், நாட்டாரும் சபையாரிடம் நீங்களே நிலத்தை வாங்கிக்கொண்டு பணம் கட்டுங்கள் என்கின்றனர். சபையார் எங்களிடமும் பணம் இல்லை என்று கூறவே கோயில் நிர்வாகிக்கும் உண்ணாழிகையாரிடம் இருந்து பெற்று கட்டுங்கள் என்று கூறுகின்றனர் உண்ணாழிகையார் தாங்கள் கோயிலுக்காக பெற்ற கடவுளின் ஆபரணங்களை ஊராருக்கு கொடுத்து இருநூறு பணம் வாங்கி இந்த தெண்டத்தை கொடுக்கின்றனர்.

சென்னையிலிருந்து மகாபலிபுரம் போகும் போது உங்கள் வலதுபக்கம் திருவிடந்தை நித்யகல்யாணப் பெருமாள் என்ற பெயர் பலகை வரும். பலகையை தாண்டினால் ஒரு பெரிய குளம் வரும். குளத்தை தாண்டினால் ஒரு வீதி போகும். வீதியின் இரண்டு பக்கமும் வீடுகள் இருக்கும். வீடுகள் தாண்ட ஒரு கோயில் தென்படும். அந்த கோயில்தான், தானி நாச்சி என்கிற மறைப்பேர் பெரிய மாணிக்கம் நடனமாடிய கோயில். அங்கு எங்கோதான் நகைகள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. நித்ய கல்யாணப் பெருமாளின் நகைகளை அந்தப் பெருமான் என்று எடுத்துப் போட்டுக் கொள்வார் என்றுதான் தெரியவில்லை.

அந்தப் பக்கம் போகிறவர்கள் நகைகளை மறந்து விட்டு, நித்ய கல்யாணப் பெருமாளை வராகமூர்த்தியை இருளை தொடையில் தூக்கி வைத்திருக்கும் எந்தையை எம்பெருமானை போய் தரிசித்துவிட்டு வாருங்கள்.

—முற்றும்—

27911
4327106